இயல் - மூன்று

குமரியில் கிறிஸ்தவ இதழ்களின் சமுதாயப் பணிகள்

III. முன்னுரை

1. சமுதாயம்

2. **இதழ்கள் :**

i. தேசோபகாரி

ii. அருட்பணி மலர்

iii. ஏழையின் குமுறல்

iv. விடியலை நோக்கி

v. வருகையின் தூதன்

vi. சுவிசேஷ நண்பன்

vii. மறைநெறி

viii. யுகச் சிற்பி

ix. இளந்தளிர்

x. தென் ஒலி

xi. அருங்கொடை

xii. நம் வாழ்வு

xiii. விண்ணரசு

xiv. திருச்சபையில் புதுமலர்ச்சி

xv. சமுதாயச் சிந்தனை

xvi. உண்மை ஒலி

xvii. வைரம்

xviii. பள்ளத்தாக்கின் லீலி

3. குழந்தைகள்

i. சிறார் பணிக்குழுவின் நோக்கங்கள்

ii. அமைப்புகளும் திட்டங்களும்

iii. குழு உணர்வை வளர்த்தல்

iv. நட்புறவை வளர்த்தல்

v. நற்பண்புகளை வளர்த்தல்

vi. வளரும் மழலைப் பருவம்

vii. குழந்தைகளோடு நல்லுறவு

viii. பயன்தரும் பொழுது போக்குகள்

ix. பழ மொழிகள்

x. புது மொழிகள்

xi. பொன் மொழிகள்

xii. இறை மொழி

xiii. நகைச் சுவைத் துணுக்குகள்

xiv. விடுகதைகள்

xv. பொது அறிவு

xvi. கவிதைகள்.

4. சிறியோர்

i. பள்ளத்தாக்கின் லீலியின் சிறார் பணிகள்

ii. சூதாடுவதும் குடிப்பதும்

iii. பாவத்தின் சம்பளம் மரணம்

iv. பள்ளத்தாக்கின் லீலியின் சமுதாயப் பணிகள்

v. நெய்யூர் மருத்துவ மனையில் பணி

vi. இசை வழிஊழியம்

vii. பள்ளத்தாக்கின் லீலி ஜெபக்குழு ஊழியம்

viii. ஆன்மீக வாழ்வு

ix. கர்த்தரின் மேல் நம்பிக்கை

x. ஜெபத்தின் மகிமை

xi. நாவினால் பாவம் செய்தல்

5. இளைஞர்கள்

i. வாழ்வியல் பிரச்சினைகள்

ii. புரட்சி சிந்தனைகள்

iii. நம்பிக்கையற்ற நிலை

iv. சமூக சேவை மையங்கள்

v. வெற்றிக்கு முன்னோடி முயற்சியே

vi. வெளிநாட்டு வேலை வாய்ப்புகள்

vii. வேலையின்மையும் இளைஞர்களும்

viii. தேசம் காக்கும் போர்ப்படை

ix. இளைஞர்களும் மத நல்லிணக்கமும்

x. மதுவும் இளைஞர்களும்

xi. இளைஞர்களும் புரட்சியும்

xii. இளைஞர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்

xiii. சுதந்திர இந்தியாவில் இளைஞர்களின் பணி

xiv. 2000 – ஆம் ஆண்டின் சவால்களும் இளைஞர்களும்

xv. இளைஞர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகள்.

xvi. இளைஞர்களின் வல்லமையும் வலிமையும்

xvii. பங்குப் பேரவையில் இளைஞர்கள்

xviii. இளைஞர்களின் விபரீதத் - தேடல்கள்

6. பெண்கள்

i. புதிய ஏற்பாட்டின் முதல் பெண் பிரசங்கி

ii. பெண்களின் நற் பண்புகள்

iii. குடும்பப் பெண்களிடம் தீய பண்புகள்

iv. குடும்பமும், குடும்பப் பெண்களும்

v. திருச்சபை வளர்ச்சியில் பெண்கள்

vi. பெண் சிசுக் கொலை

vii. சமயங்களில் பெண்களின் நிலை

viii. இல்லத்தரசிக்கு

ix. பெண்ணடிமைத்தனம்

x. சமூகத்தில் பெண்களும் எதிர்கால நடவடிக்கைகளும்

xi. மாதர் விடுதலை

xii. மகளிருக்கு இட ஒதுக்கீடு

xiii. காஷ்மீரில் திருமணமான பெண்களின் அவல நிலை.

xiv. இலக்கியத்தில் பெண்களின் மதிப்பு

xv. மத வாதமும் பெண்களும்

xvi. குமரியில் பெண்களின் எழுச்சி

xvii. விவிலியத்தின் அடிப்படையில் பெண் விடுதலை

xviii. பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள்

xix பெண்களின் மீது வன்முறைகள்

xx. வரதட்சணை தீ

xxi. பெண்களும் விளம்பரங்களும்

xxii. பெண்ணுரிமையும் கிறிஸ்தவமும்

xxiii. திருச்சபை சார்ந்த மகளிர் மேம்பாடு

xxiv. பெண்மையின் பேராற்றல்

xxv. மகளிர் மேம்பாட்டு மன்றம்

xxvi. அழகிப் போட்டிகள்.

xxvii. இளம் பெண்களின் இன்றைய பிரச்சினைகள்

7. முதியோர்.

i. முதியோர் மனநிலை

ii. முதுமை நலத் திட்டங்கள்

iii. முதியோரை மகிழ்ச்சிப்படுத்துதல்

iv. முதியோர் இல்லம்

v. முதியோருக்கு எச்சரிக்கை

vi. முதியோர் அனுபவமும் திறமையும்

8. விதவைகள்

i. விதவைகள் நலத்திட்டம்

ii. குமரியில் விதவைகள் நிலை

iii. ஆதரவற்ற விதவைகள் நல்வாழ்வு

iv. விதவைகள் மறுமணம்

9. ஆன்மீகச் செய்திகள்

i. தொழுகையும் வாழ்க்கையும்

ii. திருமறை சார்ந்த கிறிஸ்தவத் தொழுகை

iii. அருளுரையும் இறையாட்சியும்

iv. ஆன்மீகக் கிறிஸ்தவம்

v. பரிசுத்த ஆவியின் எழுப்புதல்

vi. அருட்பணியும் திருச்சபையும்

vii. பாவ மன்னிப்பு

viii. பிரசித்தம் செய்தல்

ix. ஆவியில் அனலடைதல்

x. ஜெபம்

xi. மறைவான பாவங்கள்

xii. சிலுவையின் சிறப்பு

xiii. தேவன் ஆபிரகாமைச் சோதித்தல்

xiv. இயேசு கிறிஸ்துவின் வருகை

xv. இறையேசு

xvi. நற்செய்திப் பணி

xvii. இயேசுவின் உயிர்ப்பு

xviii. இறையன்பும் இயேசு கற்றுத்தந்த ஜெபமும்

xix. இறை அனுபவமும் இறைத் தந்தை அனுபவமும்.

10. சாதி வெறி

i. அரசியலில் சாதிகளும் மதங்களும்

ii. சாதீய அரசியல்

iii. ஜாதி வெறி

iv. தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள்

v. வகுப்பு வாதம்

vi. கிறிஸ்தவத்தில் வகுப்பு வாதம்

vii. சாதீயக் – கொடுமைகள்

11. மத வெறி

i. சமயப் போதை

ii. மத வெறி பாவம்

iii. மதம் பிடித்த அரசியல்

iv. கறுப்பு தினம்

v. மதவெறிக்கு உயிர்ப்பலி

vi. சிறுபான்மையினருக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ்

vii. மதச் சார்பின்மை

viii. மதவாத சக்திகள்

ix. மதம் மனித நேயத்தைக் கெடுத்தல்

x. மனித நேயமே மதம்.

12. தீவிரவாதம்

i. விமானப் பயணிகள் கடத்தல்

ii. கிறிஸ்தவர்களுக்கெதிரான வன்முறை

iii. நடிகர் ராஜ்குமார் கடத்தலும் வீரப்பனும்

iv. ராஜீவ் காந்தி படுகொலை

v. குளச்சல் துப்பாக்கிச் சூடு

vi. பஞ்சாபில் பயங்கரவாதமும் தீவிரவாதமும்

vii. கோவை குண்டு வெடிப்பு

viii. தீவிரவாதிகளின் வெறிச்செயல்.

13. நல்லொழுக்கம்

i. புகைப்பிடிப்பவர்கள்

ii. எய்ட்சைவிடக் கொடியது புகை

iii. அதிகமாக சிகரெட் புகைத்த கிறிஸ்தவர்.

iv. மாணவரும் போதையும்

v. மது மருந்தா ? விருந்தா

vi. போதைப் பழக்கம்

vii. மதுவின் தீமை

viii. அரசின் மதுவிலக்குக் கொள்கை

ix. போதையும் சமுதாயப் பாதிப்புக்களும்

x. தமிழ் நாடு மது ஒழிப்பு இயக்கம்

xi. கள்ளச்சாராயம் ஒழிப்பு

xii. மது அடிமை விடுதலை பெறும் வழி

xiii. இளைஞர் வாழ்வில் போதை

14. பாலியல் பலாத்காரம்

i. சிறுமியர் பாலியல் பலாத்காரம்

ii. பாலியல் இம்சைகள் - உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

iii. ராஜ்கோட்டில் கன்னியர்கள் மீது பாலியல் பலாத்காரம்

iv. மகாராஷ்டிராவுக்கு பெண்கள் கடத்தல்

v. பத்மினியின் சோகக் கதை

vi. கொலைகளும் கற்பழிப்புக்களும்

15. விபச்சாரம்

i. விபச் சாரத்தைக் கட்டுபடுத்திய பொது மக்கள்

ii. விபச்சாரமும் மண விலக்கும்

16. பல்வகைச் செய்திகள்

i. இறை பக்தி

ii. இறை நம்பிக்கையும் மூட நம்பிக்கையும்

iii. பல தெய்வ வழிபாட்டு முறை

iv. பல் சமய நம்பிக்கை

v. பன்மை நிலை

17. வருமானத்தைப் பெருக்குதல்

i. தேனீ வளர்ப்பு

ii. குமரியில் தொழில் வளர்ச்சி

iii. வேளாண்மைத் தொழில்

iv. சிறு தொழில்கள்

v. சொட்டு நீலம் தயாரிக்கும் முறை

vi. முந்திரிப் பருப்பின் மதிப்பு

vii. ஊன முற்றோர் தொழில்கள்

viii. தொழிற்கல்வி

18. தேவையற்ற செலவுகளைத் தவிர்த்தல்

i. சிக்கனம்

ii. மாதச் செலவுகள்

19. கொடிய நோய்கள்

i. காச நோய்

ii. எய்ட்சு

iii. யானைக் கால் நோய்

iv. தொழு நோய்

v. புற்று நோய்

20. வரதட்சனை

i. மாமியார் கொடுமை

ii. வரதட்சணைக் கொலைகள்

iii. வரதட்சணை - சிக்கல்களும் தீர்வுகளும்

தொகுப்புரை-

III. முன்னுரை :

சமயத்தைப் பரப்புவதற்காகவும், வாணிகம் செய்வதற்காகவும், மேலை நாட்டினர் இந்தியாவிற்கு வந்தனர். அதன் பயனாக விளைந்த நன்மைகள் சிலவற்றுள் குறிப்பிடத்தக்கது இதழியல் ஆகும். இந்நூற்றாண்டு அடைந்து கொண்டிருக்கும் உலகியல் முன்னேற்றம் செய்தி – தகவல் தொடர்புகளின் அடிப்படையில் பிறந்ததாகும். இந்தியாவில் தகவல் தொடர்பினை ஏற்படுத்தி வளர்த்தவர்கள் மேலைக் கிறிஸ்தவர்களே. கிறிஸ்தவ இதழ்களின் தோற்றத்தினால் சமயம், சமுதாய மறுமலர்ச்சி போன்ற துறைகளில் நம் நாடு பயன்பெற்றது. அவர்கள் இதழ்களின் வாயிலாக இயேசு கிறிஸ்துவின் இறைச் செய்தியைப் பரப்பினர். இதனால் தமிழ் நாட்டினர் குறிப்பாக குமரி மாவட்டத்து மக்கள் கிறிஸ்தவ சமயத்தைப்

பின்பற்றினர். இவ்வாறு கிறிஸ்தவத்தைப் பின்பற்றிய மக்கள், அச்சமயத்தின் கண் பற்றுறுதி கொண்டவராக விளங்கவும், கிறிஸ்தவ சமயம் மேலும் வளர்ச்சியடையவும் இதழ்களைப் பயன்படுத்தினர். இதழ்களின் வழி மக்கள் சமய அறிவைப் பெற்றனர். அச்சுக்கலையில் வளர்ச்சியை ஏற்படுத்திய கிறிஸ்தவ இதழ்கள் இலக்கிய வளர்ச்சியிலும், சமுதாயப் பணிகளிலும் நாட்டம் செலுத்தின. இதழ்களின் வழி சிறுகதை, தொடர்கதை, கட்டுரைகள், கவிதைகள், செய்தித் துணுக்குகள் முதலானவற்றை வெளியிட்டனர். கிறிஸ்தவர்கள் கல்வி நிலையங்களை நிறுவி, கல்விப் பணியைச் செய்து வருகின்றனர். இதழ்களின் வாயிலாக கல்விப் பணியையும், சமுதாயப் பணியையும் செய்து வருகின்றனர். குமரியில் கிறிஸ்தவ இதழ்களின் சமுதாயப் பணிகள்' என்னும் இவ்வியல், குமரி மாவட்ட மக்களிடம் கிறிஸ்தவ இதழ்கள் ஆற்றிவரும் சமுதாயப் பணிகளை விளக்கமாகவும் ஆராய்வதாக அமைகின்றது.

1. சமுதாயம் :

குமரியில் கிறிஸ்தவ இதழ்களின் சமுதாயப் பணிகளை ஆராய்வதற்கு முன்னர் சமுதாய விளக்கம் இன்றியமையாததாகின்றது. 'சமுதாயம் ' என்னும் சொல்லிற்கு "மக்கள் திரள்" என்னும் பொருளினைத் தமிழ் பேரகராதியும்"[1] அருஞ்சொற்களஞ்சியமும்"[2] தெரிவிக்கின்றன. "சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் இணைந்து செயல்பட்டு வாழும் மக்கள் கூட்டத்தினையே சமுதாயம்"[3] என்பர். மானிடவியலார், "பன்னெடுங்காலம் ஒன்றாகக் கூடி வாழ்ந்தும், தொழில்

புரிந்தும் வாழும் மக்கள் கூட்டத்தை சமுதாயம் என்று குறிப்பிடுவது உண்டு"[4]. மக்கள் திரள் குறிப்பிட்ட நலன்களுக்காகக் கூடி வாழும் இயல்பினைக் கொண்டிருக்கிறது. அத்தகைய கூட்டு வாழ்க்கையின் பயனாக பொதுவான மரபுகள், மதிப்புகள், மனித உறவுகள் முதலியன மலர்கின்றன. இவையாவும் சூழலுக்குத் தக்கவாறு மாறுபடும் தன்மையுடையன. இந்த வேறுபாடுகளுக்கிடையில் இச்சமூகம் நிறுவனத்தின் பல்வேறு குடும்பங்கள், கல்வி நிலையங்கள், அரசியல் அமைப்புகள் யாவும் இணைந்து இயங்குகின்ற பொழுது சில அடிப்படைப் பண்புகள் அவற்றினிடையே வெளிப்படுகின்றன. இவற்றை நிலைக்களன்களாகக் கொண்டு விளங்குகின்ற மக்கள் கூட்டத்தினை சமூகவியலார், சமுதாயம் என்று குறிப்பிடுகின்றனர்"[5]. "ஒரே விதமான எண்ணங்களை உடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து அதன் காரணமாகப் பொதுவான நோக்கங்களை அடைவதற்காகச் சேர்ந்து முயல்கின்ற போது சமுதாயம் உருவாகின்றது என்று கிட்டிங்ஸ் என்னும் அறிஞர் கருதுகின்றார்"[6]. இந்த அடிப்படையில் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களின் சமுதாயப் பணிகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

2. இதழ்கள் :

குமரி மாவட்டத்தில் இருபதாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட கிறிஸ்தவ இதழ்கள் சமயப்பணியோடு சமுதாயப் பணியையும் ஆற்றி வருகின்றன. மேலும் நாட்டில் நடை பெறும் வன்முறைகளுக்கு எதிராக இவ்விதழ்கள் குரல் கொடுத்து வருகின்றன. ஆய்வுக்கு

எடுத்துக்கொள்ளப்பட்ட பதினெட்டு இதழ்கள் மட்டும் சமுதாய நோக்கில் ஆராயப்பட்டு இவ்விதழ்களின் முக்கியத்துவமும் அவற்றின் தாக்கங்களும் இங்கு விளக்கப்படுகின்றன.

i. தேசோபகாரி :

இவ்விதழில் பேராயர் கடிதம், 'ஆசிரியர் பக்கம்' என்னும் தலைப்பில் தலையங்கம், தியானபீடம், கட்டுரைகள், கவிதை அரங்கம், தேவைகள், துணுக்குச் செய்திகள், முழு இரவு ஜெபம், மருத்துவப் பகுதி, வேத அறிவுப் போட்டி, வேத வினா, பேராயச் செய்திகள், நினைவு அஞ்சலி, அருளுரை மேடை, குமரி மறை மண்டிலம், இளைஞர் திருப்பணிக்குழுச் செய்திகள், வாழ்த்து, பாராட்டுச் செய்திகள், ஆதீனப் பெண்கள் ஐக்கிய சங்கம், வருடாந்திர விற்பனை விழா, இசையுடன் கூடிய பாடல், சிறுகதைகள், குட்டிக் கதைகள், 'பூவும் பிஞ்சும்' என்னும் தலைப்பில் சிறுவருக்கான செய்திகள் ஆகியன பரவலாகக் காணப்படுகின்றன. கன்னியாகுமரி மறை மாவட்டத்தின் மாதாந்தர வெளியீடான இவ்விதழில் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன.

கொடிய நோய்கள், முதியோர் நலம் பேணல், பெண்கள் நலம், பாலியல் பலாத்காரம், இறை பக்தியைப் போற்றல், மதுவெதிர்ப்பு, மதவெறி, சாதி வெறிகளைச் சாடல், புகை எதிர்ப்பு, தீவிரவாதம், வன்முறையெதிர்ப்பு, தலித்விடுதலை, வரதட்சணையெதிர்ப்பு, மலைப் பகுதிகளில் சமுதாயப் பணிகள், செலவினங்களைத் தவிர்த்தல், சிக்கனம், சுற்றுச்சூழல் - இயற்கைப்

பாதுகாப்பு, சிறுவர் நலம் என்ற அடிப்படைகளில் 'தேசோபகாரி' இதழின் சமூகத் தாக்கம் (Social Impact) அமைந்திருக்கின்றது.

ii. அருட்பணி மலர் :

குமரி அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக் குழுவின் மாத வெளியீடான இவ்விதழில் பேராயர் கடிதம், ஆசிரியர் மடல், பொதுச் செயலாளர் அறிக்கை, தேவைகள், நன்றி கூறுதல், அறிவிப்பு, அருளுரை, சென்னைப்பணித்தளச் செய்திகள், அத்தியட்சாதீன சுவிசேஷ ஜெபக்குழு நூலகம், அன்புள்ள தம்பிக்கு, வேதவினா விடை, தினசரி வேத வாசிப்பும் ஜெப வேண்டுகோள்களும், வேண்டுகோள், உலகச்செய்திகள், செய்திகள் ஆகிய பகுதிகள் உள்ளடக்கங்களாக அமைந்துள்ளன. இவ்விதழ் கட்டுரைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. கதைகளும் கவிதைகளும் அதிகம் இவ்விதழில் இடம் பெறவில்லை.

அருட்பணி மையங்கள், மிஷனெரி ஒருவரைப்பற்றிய செய்தி, பணித்தளச் செய்திகள், கவிதைகள், திருச்சபைகளின் அருட்பணிகள், அனுபவசாட்சி ஆகியன இவ்விதழின் உள்ளடக்கச் செய்திகளின் போக்குகளாகும்.

மிஷனெரிகளின் பாதையில் மலை ஊழியம் - கல்வராயன் மலைப் பகுதியிலுள்ள மக்களின் அவலநிலை, பேதைப் பொருள் எதிர்ப்பு, இட ஒதுக்கீடு, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி, திருச்சபையில் மறுமலர்ச்சி, மலைப்பகுதிகளில் கல்விப்பணி, முதியோர் மருத்துவ அருட்பணியாக்கம், அருட்பணியில் திருச்சபை, 21–ஆம் நூற்றாண்டில் நம்பணி,

உயிர்த்தெழுதலின் வல்லமை, மதவெறியைச் சாடல் என்ற அடிப்படைகளில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் அமைந்துள்ளன.

iii. ஏழையின் குமுறல் :

இவ்விதழில் சிறுகதைகள், கவிதைகள், உலக நிகழ்வுகள், நாட்டு நடப்புச் செய்திகள், அக்கா வைத்தியம், அரசியல் மேடை, உண்மை நிகழ்ச்சி, உங்களுக்குத் தெரியுமா ? என்னும் தலைப்பில் பொது அறிவுச் செய்திகள், கட்டுரைகள் ஆகியன உள்ளடக்கப் பகுதிகளாக அமைந்துள்ளன. தொடர் கதைக்கும் இவ்விதழ் முக்கியத்துவம் கொடுத்து வந்திருப்பதைக் காணலாம். சான்றாக 1995 - இல் ரெஜி எழுதிய 'வேடதாரிகள்' என்னும் தொடர்கதையை இவ்விதழ் வெளியிட்டிருப்பதைக் குறிப்பிடலாம். கவிதைகள், சிறுகதைகள், தொடர்கதை, கட்டுரைகள் ஆகியன சம அளவில் இடம் பெற்றுள்ளன.

மகாகவி பாரதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் போன்ற முற்போக்குச் சிந்தனைக் கவிஞர்களைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகளையும், திருக்குறள் திறனாய்வுக் கட்டுரைகளையும் இவ்விதழ் வெளியிட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

மதுவெதிர்ப்பு, கற்பழிப்பு - பெண்களின் குமுறல், பெண்கள், மீனவர் பிரச்சினை பற்றிய ஆய்வுக் கட்டுரை, சாதிவெறி, பாலியல் பலாத்காரம், வீதி நாடகங்கள், திரைப்பட விமர்சனம், 'உண்மை நிகழ்ச்சி' என்ற தலைப்பில் குமரியில் நடைபெற்று வருகின்ற வரதட்சணைக் கொலைகள், கொடுமைகள் பற்றிய உண்மைச் சம்பவங்களை இதழ்தோறும் வெளியிடல், குமரியில் சுகாதாரச் சீர்கேடு, குடிநீர் வசதியின்மை,

பள்ளிகளில் பரிதாபம் போன்ற சமுதாய அவலங்களை வெளியிடல், விபச்சாரம், பாலியல் பலாத்காரம், சிறுமியர் பலவந்தம். புகைப் பழக்கம், சாதி – வெறிக்கு எதிர்ப்பு, கற்பழிப்பு, மதவெறியைச் சாடல். மத நல்லிணக்கம், விதவைகள் துயர், தொழில் வளத்தைப் பெருக்கி வாழ்க்கையை வளப்படுத்துதல், இளைஞர்களின் வேலையின்மை, குழந்தைத் தொழிலாளர்கள் பிரச்சினை, பெண்கள் கேலிவதைக் கொடுமைக்கு ஆட்படுதல், தீவிரவாத எதிர்ப்பு, எய்ட்ஸ் முதலான கொடிய நோய்கள், தீண்டாமைக் கொடுமை என்ற அடிப்படைகளில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் அமைந்துள்ளன.

iv. விடியலை நோக்கி :

இவ்விதழ் சமய, சமுதாய, அரசியல் சீரமைப்பு இதழாகும். முற்போக்குச் சிந்தனை கொண்ட குருக்களால் ஊக்குவிக்கப்பட்டு, அதே நோக்குடைய பொது நிலையினரால் நடத்தப்படும் பத்திரிகையாகும். இவ்விதழின் ஆசிரியர் பகுதியில் நிகழ்காலப் பிரச்சினைகள், சவால்கள், இடது சாரிச் சார்புநிலை ஆகியன விவாதிக்கப்படுகின்றன. இவ்விதழின் உள்ளடக்கப் பகுதியில் சமுதாய விடுதலைக்கான முயற்சி, புதிய பொருளாதாரக் கொள்கை எதிர்ப்பு, ஜெபக் கூட்டங்கள், குருசடி, நவ நாட்களின் வளர்ச்சி ஆகியன ஆரோக்கியமான ஆன்மீகம் இல்லை என்பதை எடுத்துக் காட்டுதல், கேள்வி – பதில், பொது விவாத மேடை, கவிதைகள், இறையரசு இயக்கச் செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், 'நேருக்குநேர் ' என்னும் தலைப்பில் தலையங்கம், சிறுகதைகள், அலசல், பேட்டி. நூல் அறிமுகம் ஆகியன இடம் பெற்றுள்ளன. தொடர் கதைகளையும் இவ்விதழ்

வெளியிட்டிருக்கின்றது. சான்றாக 1991 - இல் சிரஞ்சீவி எழுதிய 'சிலுவையின் அருகினிலே' என்னும் தொடர்கதையைக் குறிப்பிடலாம்.

இவ்விதழ் கட்டுரைகளுக்கும் சிறப்புக் கட்டுரைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கருத்துக்களை உணர்த்தியுள்ளது.

V. வருகையின் தூதன் :

இவ்விதழில் கிறிஸ்தவ இறையியல் செய்திகளே மிகுதியாக இடம் பெற்றுள்ளன. ஜெபத்துக்கு முதலிடம் கொடு, தேவனுக்காகப் போராடு, உன் ஆத்துமா தேவனையே தேடட்டும், போதகர் ஆவியில் அனல் அடைந்தால் சபை புத்துயிர் பெறுவது உறுதி, திருமறையும் மனம் திரும்புவதும், விசுவாசத்தை வளர்ப்பது, பாவத்துக்குத் தேவ தண்டனை, பரிசுத்தமும் - பாடுகளும், பயனுள்ள விசுவாசம், மன்னித்தல் முன்னேறிச் செல்ல வழிவகுக்கின்றது. மனம் திரும்பாத பாவிகளைவிட உயிர்ப்பிக்கப்படாத கிறிஸ்தவர்களே பெரிய குற்றவாளிகள், ஆண்டவரின் வருகையும் பரிசுத்தமும் அமைதியான ஆராதனை, ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை, மன்றாடுதல், கீழ்ப்படிதல், பயனுள்ள மன்றாட்டு ஜெபம், இணைந்த ஜெபத்தின் வல்லமை, மீட்பின் இரகசியம் தாழ்மையாகும், இயேசுவை ஆண்டவர் என்பது தான் சுவிசேஷம், மறைவான பாவங்கள் முதலான செய்திகள் இவ்விதழின் உள்ளடக்கப் பொருள்களாகும்.

புகை, மது போன்றவற்றையும் இவ்விதழ் சாடியுள்ளது. மிக நீண்ட கட்டுரைகளுக்கு இவ்விதழ் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இந்த அடிப்படையில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

vi. சுவிசேஷ நண்பன் :

இவ்விதழில் 'ஆசிரியரின் அன்பின் வாழ்த்துக்கள் ' என்னும் தலைப்பில் தலையங்கம் இடம் பெற்றுள்ளது. 'தெரிந்து கொள்ளுங்கள் ' என்னும் தலைப்பில் பொது அறிவுச் செய்திகள் வெளியாகியுள்ளது. மரண அறிவிப்பு, சிறுவா் இல்லம், பணித்தளச் செய்திகள், சாட்சிகள், இந்தியச் செய்திகள், உலகச் செய்திகள் ஆகியன இவ்விதழின் உள்ளடக்கப் பொருள்களாகும். ஊழிய அறிக்கை, வேத அறிவுப் போட்டி, நடப்புச் செய்திகள் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன. இறையியல் மாத இதழாகும். கவிதைகளும் இடம் பெற்றிருப்பினும் கட்டுரைகளுக்கே இவ்விதழ் முக்கியத்துவம் அளித்திருப்பதைக் காணலாம்.

இயேசு கிறிஸ்துவின் வருகையின் நோக்கங்கள், பாவமும் பரிகாரமும், ஆவியின் கனிகள், விசுவாசம், இயேசு உலக இரட்சகா், கன்வென்ஷன் கூட்டங்களும், சபை நாள் ஆராதனையும், சிலுவையின் சிறப்பு, உயிா்த்தெழுதல், ஜெபம், நிருபங்களில் கிறிஸ்துவின் பிறப்பு, பாவியின் மனந்திரும்புதலாகிய ஆத்தும இரட்சிப்பு, தேவனுடைய வீட்டில் பரிசுத்தம் தேவை என்ற சமய – ஆன்மீகச் சிந்தனைகளின் அடிப்படைகளில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

vii. மறைநெறி :

மானுட சிந்தனைக்கு அப்பாற்பட்ட தெய்வீக இரகசியங்களைச் சுமந்து வருவதும், சத்தியத்திற்குள் வழி – நடத்துவதும், ஆவிக்குரிய பாதையைச் சரியாகக் காட்டுவதும் இவ்விதழின் நோக்கமாகும்.

பாவத்தைக் கண்டித்து உணர்த்துதல், சத்தியத்தைச் சொல்லுதல், பரிசுத்த வாக்கு, ஜெபம், ஊழியம், சிறு கதைகள், சாட்சிப்பக்கம், 'எதிரொலி' என்னும் தலைப்பில் வாசகர் கருத்துக்கள், 'பரதேசியின் பக்கம் ' என்னும் தலைப்பில் தலையங்கங்கள் ஆகியன இவ்விதழின் உள்ளடக்கச் செய்திகளாகும். இவ்விதழ் கட்டுரை வடிவில் கருத்துக்களை உணர்த்துவதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

இவ்விதழில் இடம்பெற்றுள்ள 'தேடி வாசியுங்கள் ' என்னும் பகுதி வேதத்தின் மகத்துவங்களையும் அதிசயங்களையும் அறிந்து கொள்ள உதவுகின்றது. அபிஷேகத்தின் அவசியம், தேவ பக்தி, பாவத்தின் கேடு, பழி வாங்கும் எண்ணம், இரட்சிப்பின் இரகசியம், பொருளாசை இன்மை எனச் சமயச் சிந்தனைகளின் அடிப்படையிலும், புகை, விபச்சாரத்தைச் சாடுதல், வறுமையொழிப்பு எனச் சமூகச் சிந்தனைகளின் அடிப்படையிலும் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

viii. யுகச் சிற்பி :

இவ்விதழ் இளைஞர், மாணாக்கர் நலனைப் பேணும் இதழாகும். இவ்விதழில் 'கலைக் கூடத்திலிருந்து வரைகிறேன் ' என்னும் தலைப்பில் தலையங்கம், உங்களோடு, 'உங்கள் சிந்தனைக்கு' என்னும் தலைப்புகளில் ஆசிரியர் உரை, கட்டுரைகள், அரசியல் செய்திகள், கவிதைகள், சிரிப்புகள், பேட்டிகள், மாணவர் பக்கம், சிறுகதைகள், திரைப்பட – விமர்சனங்கள், சிற்பியின் பதில்கள், இளைஞர் இயக்கச் செய்திகள் ஆகியன உள்ளடக்கப்

பொருள்களாக உள்ளன. கட்டுரைகளுக்கும், கவிதைகளுக்கும் இவ்விதழ் சம அளவில் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

இளைஞர் நலம், போதை, புகை, மது எதிர்ப்பு, மதுவினால் இன்றைய இளைஞர்கள் சீரழிவதைச் சாடுதல், பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள், இளைஞர் பிரச்சினைகள், சாதி வெறியைச் சாடல், இன்றைய இளைஞர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள், இன்றைய பெண்களின் நிலை, மதவெறியைச் சாடல், வரதட்சணைக் கொடுமைகளை எடுத்துக் காட்டல், 2000–ஆம் ஆண்டின் சவால்களும் இளைஞர்களும் என்ற அடிப்படைகளில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் அமைந்துள்ளன.

ix. இளந்தளிர் :

கோட்டாறு மறை மாவட்டச் சிறார் - பணிக்குழுத் தொடர்பு இதழான இவ்விதழில் தலையங்கம், சிறார்களுக்கு நல்லொழுக்கம் போதித்தல், தொடர் கட்டுரை, கட்டுரைகள், பாலர் சபை, சிறுவழி இயக்கச் செய்திகள், அன்பியம் பற்றிய செய்திகள், விடுகதைகள், மூளைக்கு வேலை, பொன்மொழிகள், பழமொழிகள், புது மொழிகள், இறை மொழிகள், சிறுவர்களுக்கான சிறுகதைகள், கவிதைகள், பொது அறிவுச் செய்திகள், விளையாட்டுக்கள், உரையாடல்கள், குறு நாடகம், நேர்மை, சாலை விதிகள், தூய்மை, கடவுள் நம்பிக்கை ஆகியனவற்றைச் சிறுவர்களுக்குப் போதித்தல், சிறுவர்களுக்குத் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும் ஊட்டுதல் ஆகியன உள்ளடக்கப் பொருள்களாக இடம் பெற்றுள்ளன. இந்த

உள்ளடக்கப் பொருள்களின் அடிப்படையில் இவ்விதழின் சமுதாயத்தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

கட்டுரைகளுக்கும் துணுக்குச் செய்திகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

X. தென் ஒலி :

இவ்விதழ் பொது நிலையினரின் பெருமைகளை வெளிப்படுத்தும் கோட்டாறு மறை மாவட்ட இதழாகும். பொது நிலையினரின் பெருமைகளைப் பேணுதலும் அவர்களின் தலைமைத்துவத்தை வளர்த்தலும் இவ்விதழின் தனிச் சிறப்பாகும். கோட்டாறு மறை மாவட்டத்தையும் அதன் திருச்சபையின் ஆட்சியாளர்களின் புகைப்படங்களையும் முன் அட்டையில் போட வேண்டும் என்பதை மாற்றி பொது நிலையினரின் புகைப்படங்களை வெளியிட்டு புதிய பண்பாடு படைத்தது இவ்விதழின் சாதனையாகும். மறைமாவட்ட மக்களின் விவாத அரங்கமாக விளங்கி மறை மாவட்டப் பள்ளிகள், ஆணைக் குழுக்கள், மார்னிங் ஸ்டார் கல்லூரி, திரு விழாக்கள், பங்குகள் ஆகியனவற்றைக் கடுமையாக விமர்சனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விதழில் இடம் பெற்றுள்ள ஏக்தா யாத்ரா, மகாமகம், பட்ஜெட், தேர்தல், வளைகுடாப் போர், பெண்விடுதலை முதலான உள்ளடக்கச் செய்திகள் பொது நிலையினரின் வளர்ச்சியில் இவ்விதழ் கொண்டுள்ள பொறுப்புணர்ச்சியைக் காட்டுவதாகும்.

நூல் அறிமுகம், நூல் மதிப்புரை, கவிதைச் சோலை, திருச்சபை வரலாறு, உலகத் திருச்சபைகள், உடல் நலம், அதிசயம் ஆனால் உண்மை,

சிந்திக்கச் சில செய்திகள், சிறுகதைகள், பொன் மொழிகள், தென்னவன் பதில்கள், ஆன்மீக விமர்சனம், விவிலியப்புதிர், வினாடிவினா, பொது அறிவு,'எதிரொலி' என்னும் தலைப்பில் வாசகர் கடிதங்கள், உலக நாடுகளின் பிரச்சனை, தொடர் கட்டுரைகள், அறிவுப்புதிர், 'அறிவுக்கு ஆயிரம்' என்னும் தலைப்பில் அறிவியல் செய்திகள், தொடர் கதைகள், பணிக்குழு பணிகள், மறைமாவட்டச் செய்திகள், கவிதைப் பூங்கா ஆகியன இவ்விதழின் உள்ளடக்கச் செய்திகளாகும். இவ்விதழ் கட்டுரைகளுக்கும் தொடர் கட்டுரைகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

நவீன மனிதனின் ஆன்மீகமும் அருள்வாழ்வும், தீவிரவாத எதிர்ப்பு, எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைப் போக்குதல், பொது நிலையினரின் கடமையையும் உரிமையையும் பேணுதல், வரதட்சணை எதிர்ப்புபங்குப் பேரவையில் இளைஞர்களை ஈடுபடுத்துதல், பெண்மையின் உணர்வுகளைப் போற்றுதல், போதையை எதிர்த்தல், பெண்ணுக்குச் சமவுரிமை, சுயதொழில் வளர்ச்சி, தலித் கிறிஸ்தவர்களின் உரிமைக்குக் குரல் கொடுத்தல், சாதிக் கலவரங்களைச் சாடல், பெண்கள் மீதான வன்முறைகளைச் சாடல், கிறிஸ்தவக் கன்னியர்களின் கற்பழிப்பினை வன்மையாகச் சாடுதல், மதுவினை எதிர்த்தல், இறையாட்சிக்கு வித்தாக அமையும் பங்கேற்பு அமைப்புக்கள் என்ற அடிப்படைகளில் இவ்விதழின் சமுதாயத்தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

xi. அருங்கொடை :

அருங்கொடைஓர்மறுமலர்ச்சி இயக்க வெளியீடாகும். அருங்கொடை இயக்கம் இரண்டு இல்லறவாசிகளால் அமெரிக்காவிலுள்ள துக்கென் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்ட- தாகும். திருச்சபையில் புதிய பெந்தேகோஸ்தே அனுபவம் வளர வேண்டும் என்று அவர்கள் உருக்கமாக வேண்டிக் கொண்டனர்.

"இந்த அனுபவத்தைப்பெற்ற மற்றவர்களும் பிறரோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்கினர். இவ்வாறு இப்பகிர்வு உலகம் முழுவதும் பரவலாயிற்று, இன்று உலகின் அனைத்துப் பகுதிகளிலும் தூய ஆவி மறுமலர்ச்சி இயக்கம் இயங்கி வருகின்றது. திரு. பினு எஞ்சினியரும் அவரது மனைவியும் அமெரிக்காவில் தாங்கள் பெற்ற அனுபவத்தை 1772-ல் பம்பாயில் பிறருக்குப் பகிர்ந்தளித்தனர். அவர்களோடு ஓர் இயேசு சபைக் குழுவும் சேர்ந்து, இந்தியா முழுவதிலும் இதைப்பரப்பக் காரணமாயிருந்தனர். பம்பாயிலிருந்து ஒரு குழு இந்தியாவின் பல இடங்களுக்கும் சென்று இதைப் பரப்பினர். தமிழகத்தில் முதலில் ஆங்கிலச் செபக்குழுக்களுக்குப் பரவியது. பிறகு சென்னையில் தமிழ்க்குழுக்களில் செயலாற்றத் தொடங்கியது. தந்தை ஏ.ஜே. தம்புராஜ், மு. வல்தாரிசு, தந்தை சவரிமுத்து, தந்தை நெடுங்காட் போன்றவர்கள் தமிழகத்திலும் குமரி மாவட்டத்திலும் அருங்கொடை இயக்கத்தை நிறுவக் காரணமாயிருந்தனர்.

ஜெபத்தில் மறுமலர்ச்சி, விவிலியத்தைப் படித்துத் தியானித்து முழுமையாகப் புரிந்து கொள்வதில் மறுமலர்ச்சி. திருவருட்சாதன வாழ்வில் மறுமலர்ச்சி, குடும்ப வாழ்வில் மறுமலர்ச்சி, விசுவாச வாழ்வில் மறுமலர்ச்சி, சமுதாயப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து நீதி, நேர்மை, விடுதலை

நிலை நாட்டுவதில் ஒரு புதிய கண்ணோட்டத்தையும் கொடுத்து, புதிய அணுகு முறையைப் பின்பற்றி சமுதாய விழிப்புணர்ச்சியில் மறுமலர்ச்சியையும் கொடுத்துத் கத்தோலிக்கத் திருச்சபைகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது இவ்வியக்கத்தின் சாதனையாகும்.

இயேசு கற்றுத்தந்த ஜெபத்தின் வழி விசுவாசத்தை ஆள்மயமாக்கல், இயேசு கற்றுத்தந்த ஜெபம் வழி தியானம், ஆசனம்-காற்று-மூச்சு-ஆவி, நியமம் காட்டும் பத்துக் கட்டளைகள், பஞ்ச பூதங்களும் அதன் ஆவிகளும், இயேசு கற்றுத்தந்த ஜெபம் வழி ஆளுமை முழுமையாக்கம், ஆவியின் அனுபவம், தீமை செய்தவர்களை மன்னித்தல், பொழியப்பட்ட இறையன்பும் இயேசு கற்றுத்தந்த ஜெபமும், உள்முகச் சிந்தனையுள்ள பிரசன்னம், ஆன்ம வாழ்வைக் கண்டுணர சுயம் பற்றிய கோட்பாடு, ஜெப ஆன்மீகம், 21 – ஆம் நூற்றாண்டிற்கான ஆன்மீகம், ஜெபத்தின் பார்வையில் ஜென்மப் பாவம், ஆவித்தளம், விடுதலை இறையியல், மனம் திரும்பல், ஜெபம் வழி புத்தொழிப்பெறல், இயேசு கற்றுத் தந்த ஜெபமும் கொடைகளும், ஜெபமும் மீட்பும், விசுவாசத்தின் நம்பிக்கை, இறையனுபவங்களும், இறைத் தந்தை அனுபவங்களும் ஆகியன இவ்விதழின் உள்ளடக்கப் பொருளாகும்.

நீண்ட கட்டுரைகளுக்கு இவ்விதழ் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. சமயம் சார்ந்த இந்த உள்ளடக்கச் செய்திகளின் அடிப்படையில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

xii. நம்வாழ்வு:

இது தமிழக ஆயர் பேரவை வெளியிடும் தமிழகக் கத்தோலிக்க வார இதழாகும். "இவ்விதழில் 'ஆசிரியர் போனாவிலிருந்து' என்னும் தலைப்பில் தலையங்கம், உடலா ? மனமா? என்னும் தலைப்பில் உளவியல் செய்திகள், அமலாவின் பதில்கள், சிறுகதைகள், மினிக் கதைகள், திருச்சபைச் செய்திகள், உலகத் திருச்சபைச் செய்திகள், தொடர் கட்டுரைகள், ஞாயிறு சிந்தனை, ஆன்மீகச் செய்திகள், கட்டுரைகள், 'நடந்தவை' என்னும் தலைப்பில் நடப்புச் செய்திகள், கவிதை மலர்கள், புதுக் கவிதைகள், துணுக்குச் செய்திகள், அமுத மொழி, 'இளைய நிலா' என்னும் தலைப்பில் இளைஞர்களுக்கான செய்திகள், விவிலியப் புதிர் போட்டி ஆகியன உள்ளடக்கப் பொருள்களாக இடம் பெற்றுள்ளன"[7].

கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள், தொடர் கட்டுரைகள் ஆகியனவற்றிற்கு இவ்விதழ் முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றது.

கிறிஸ்தவர்கள் மீது தொடரும் தாக்குதல்கள், கன்னியர்கள் மீது பாலியல் பலாத்காரம், வன்முறை, தீவிரவாத எதிர்ப்பு, விபச்சாரத்தைச் சாடல், இலக்கியத் திறனாய்வு கட்டுரைகள், தொழிற்கல்வி, முதியோர், திருப்பலியில் நற்கருணை மன்றாட்டுகள், திருவழிபாடு, இளம் பெண்களின் - இன்றைய பிரச்சனைகள், போதைப்பொருள்கள் எதிர்ப்பு, பெண்களும் விடுதலையும், குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை, மதுஎதிர்ப்பு, போதைப் பொருள் - மதுவுக்கு அடிமையானவர் விடுதலை பெறும் வழி மதவாதத்திற்கு எதிராகப் பெண்கள், இந்துத்தீவிரவாதிகளின் வெறிச் செயலைச் சாடுதல், கேலிவதைகளை சாடி இளைஞர்களுக்கு நல்வழி

காட்டுதல், தீவரமாகும் மதவாதம், திரைப்படங்களில் இந்துத்துவத் திணிப்பு, தலித் கிறிஸ்தவர்இட ஒதுக்கீடு, புகைப்பழக்கத்திற்கு எதிர்ப்பு, வளரும் மாதச் செலவுகளைத் தவிர்த்து சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது, கொடிய நோய்கள் என்ற அடிப்படைகளில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் வெளிப்படுகின்றன.

தொடர் கதைகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வந்திருப்பதைக் காணலாம். 1992 – இல் செல்வி. சந்தியாவின் 'விலங்கிலிருந்து விடுதலை' 1993 – இல் டேவிட் சித்தையாவின் 'குத்தகை மலர்கள்' , எஸ். பி. பிருந்தாவின் 'கொலை கொலையாம் காரணமாம் ' முதலான தொடர் - கதைகளை வெளியிட்டு வந்திருப்பது சுட்டத்தக்கதாகும்.

'சகிப்புத் தன்மையை' இவ்விதழ் தொடர் கட்டுரை மூலம் வலியுறுத்தி வந்திருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

xiii. விண்ணரசு :

'மனந்திறந்து எழுதுகிறேன் ' என்னும் தலைப்பில் தலையங்கம், தொடர் கட்டுரைகள், கட்டுரைகள், துணுக்குகள், கவிதைகள், சிறுகதைகள், நூல் மதிப்புரை, கடிதங்கள் - கருத்துக்கள் - விமர்சனங்கள், வாசகர் கடிதங்கள், கடவுள் பக்கம், கேளுங்கள் பதில் கொடுக்கப்படும், பெரிய அண்ணாவின் கடிதம், திருமறைப் போட்டி ஆகியன உள்ளடக்கச் செய்திகளாக இடம் பெற்றுள்ளன. பல்சமய நம்பிக்கைக் கொண்ட மக்கள்

அனைவரும் கடவுளின் பிள்ளைகளே என்னும் கருத்தினை' இவ்விதழ் வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

'விண்ணரசு' இதழ் விண்ணரசு இயக்கத்தின் சார்பாக திருச்சபை – சமூகத் தலைவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி அளித்தல், ஏழை மாணவர், நலிவுற்றோர் நல்வாழ்வு திட்டம், வீடற்றோருக்கு வீட்டு வசதி அமைத்துக் கொடுத்தல், கிராமத் திருச்சபை நூலகங்களைத் தோற்றுவித்தல், வளர்த்தல், பராமரித்தல், கிறிஸ்தவ இலக்கிய வெளியீடுகளையும் படைப்பாளர்களையும் பாராட்டுதல், மகளிர் மேம்பாட்டு மன்றங்கள், சிறுதொழில், சிறு கடன் வசதிகள், சிறு சேமிப்புத் திட்டம், விதவைகள் நல்வாழ்வுத் திட்டம், பொது நிலையினருக்கு இறையியல் கல்வி, கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் - அமைத்துக் கொடுத்து இறையியல் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், சமய உரையாடல் - பொதுப் பிரார்த்தனை ஆகியவை மூலமாக மத நல்லிணக்கத்தை வளர்த்தல், சமய – சமுதாயப் பணிகளை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கட்டுரை வடிவிலான செய்திகளுக்கே விண்ணரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

"சாதி சமய மொழி எல்லைகளைக் கடந்து இறையாட்சியை இந்நிலவுலகில் கொண்டு வரப் பாடுபடுதல், மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தி நெறிப்படுத்தும் வளர்ச்சிப் பணித் திட்டங்களில் சீராகவும் நிதானமாகவும் ஈடுபடல், சமயங்களைத் தூய்மையான வழியில் கற்றும் கற்பித்தும், உரையாடல் மூலம் சமயங்களுக்கிடையே உறவையும் உலக நேயத்தையும் வளர்த்தல், மனித வாழ்வை மேம்படுத்தும் சமயம்

சார்ந்த – சமயம் சாராத அனைத்துத் துறைகளிலும் ஈடுபட்டு ஒருமைப்பாட்டையும் மனித – நேயத்தையும் வளர்த்தல். விண்ணரசு மறு உலகிலோ மறு வாழ்விலோ என்றில்லாமல் இவ்வுலகில் இருக்கின்றதென்னும் கோட்பாட்டை ஆராய்ந்தறிதல் - அறிவித்தல், மனித மேம்பாட்டிற்குத் தடையாக இருக்கும், சாதி, சமய, அரசியல், பொருளாதாரச் சீர்கேடுகளை அகற்றப்பாடுபடல், அணு ஆயுதம், இராணுவம் அற்ற உலகப் பேரரசு உருவாகவும், நீதியும் அமைதியும் தழைத்தோங்கவும் உலக மக்களை ஆயத்தப்படுத்துதல்"[8] முதலியன விண்ணரசு இதழின் இயக்கக் கொள்கைளும் நோக்கங்களும் ஆகும்.

இசுரேல் செல்வ நாயகம் 'அயோத்தியப் பிரச்சினை' என்னும் பொருள் குறித்தும், அருள் திரு. ஜி. இராஜா மணி 'பன்மை நிலையும் சமய சுதந்திரமும்' என்னும் பொருள் - குறித்தும் தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளனர். ஏழ்மையை ஒழிப்பது, மதவெறியைச் சாடுவது, மதக் கலவரங்களைத் தவிர்க்க வழிகாட்டுவது, பிற சமயத்தவர்களோடு நட்புறவு கொள்ளுவது, தலித் கிறிஸ்தவர்களின் நலம் பேணல், மனித நேயத்தை வளர்ப்பது – விதவைகள் நலம், கிறிஸ்தவத்தின் மறு பக்கத்தை (நிறைகள், குறைகள்) அலசி ஆராய்ந்து வெளிப்படுத்துவது, வன்முறைகள், தீவிரவாதங்களை எதிர்ப்பது, சாதியை மறுப்பது, மகளிர் மேம்பாட்டு மன்றம், ஆதரவற்ற விதவைகள் நல்வாழ்வு, இளைஞர்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்வது, வரதட்சணைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது ஊனமுற்றோருக்கான தொழில்களை வளர்த்து ஊக்குவிப்பது, ஒரிறை கோட்பாட்டை நிறுவ முயல்வது என்ற அடிப்படைகளில் விண்ணரசு

இதழ்களின் சமய – சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

xiv. திருச்சபையில் புதுமலர்ச்சி :

இது தென்னிந்தியத் திருச்சபைச் சீர்திருத்தத்திற்கான மக்கள் இயக்க இதழாகும். அமைதி, நீதி, நல்லிணக்கம் என்பதே குறிக்கோளாகக் கொண்டு இவ்விதழ் வெளிவந்தது. திருச்சபை மக்கள் இயக்கமாக மலர வேண்டும் என்பதே இவ்விதழின் நோக்கமாகும்.

இவ்விதழில் 'ஆசிரியர் பக்கம் ' என்னும் தலைப்பில் தலையங்கம் வெளிவந்துள்ளது. 'நீங்களும் கேட்கலாம் '. என்னும் பகுதியில் தமிழ் நாடு இறையியல் கல்லூரி முதல்வர் அருள்திரு . அறிவர் கார், வாசகர் கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ளார். கட்டுரைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. கட்டுரைகளுக்கே இவ்விதழ் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

பாலர் திருச்சபைப் பண்புறுதிக் கல்வி, நற்செய்திப் பணியில் திருச்சபைகள் தலித் மக்கள் மீதான வன்கொடுமைகள் எதிர்ப்பு, குமரி வாழ் மக்கள் அனைவருக்கும் உரிய தரிசனத் திருப்பணி 2000 திட்டம், ஆன்மீகத்தின் பரிமாணங்கள், தலித் விடுதலைக்கான இறையியல் திருச்சபை சார்ந்த மகளிர் மேம்பாடு, திருச்சபைப்பணிகள், உரிமைக்கோரும் உறவு, மிஸ்பா ஆலோசனை திருப்பணி, வட்டாரப் பெண்கள் அமைப்பு மூலம் கள்ளச்சாராயம் ஒழிப்பு, தென்னிந்தியத் திருச்சபையும் சபைப்பிரிவினையும், தமிழ்நாடு மது ஒழிப்பு இயக்கம், பெண்மையின் பேராற்றல், பெண்மையைப்

போற்றுதல் என்னும் அடிப்படைகளில் இவ்விதழின் சமய - சமுதாயத் தாக்கங்கள் வெளிப்படுகின்றன.

XV. சமுதாயச் சிந்தனை:

தென்னிந்தியத் திருச்சபை பொன்விழா ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்த 1996 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இவ்விதழ் தோன்றியது. கிறிஸ்தவ இதழ் ஒன்றின் பெயர் சமுதாயச் சிந்தனை என்று அமைந்திருப்பது மனங்கொள்ளத் தக்கதாகும். இவ்விதழில் கட்டுரைகள் மட்டுமே மிகுந்த முக்கியத்துவத்துடன் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதழ் கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வு மன்ற வெளியீடாகும்.

ஆன்மீகக் கிறிஸ்தவம், கிறிஸ்தவர்களின் மூடநம்பிக்கை, ஏசாயாவின் சமுதாயப்பார்வையும் பிற்கால கிறிஸ்தவ இறையியலாளர்களின் தடுமாற்றமும், கம்பியூட்டர் இறையியல், குமரி தந்தை நேசமணி வரலாறு, திருச்சபை வரலாறு, இனவேறுபாடு, பேராய முக்கியப் புள்ளிகள், குமரி -- பேராயத்தேர்தல், சட்ட திருத்த உத்தரவு படையல் தொழில், குமரியில் தொழில் வளர்ச்சி, குமரி ஆதீனம் அன்றும், இன்றும், பேராய பட்ஜெட், கிறிஸ்தவ மிஷனெரியின் வரலாறு, மதவாத எதிர்ப்பு, கிறிஸ்தவ மந்திரவாதிகளைச் சாடல், கொலைகள், கற்பழிப்புகளைச் சாடல், தீண்டாமை ஒழிப்பிற்காக நாராயணகுரு நடத்திய போராட்டங்கள், வேலுத் தம்பி தளவாயின் கிறிஸ்தவ விரோதம், பெண்ணுரிமையும், கிறிஸ்தவமும், இறையாட்சி, திருமணச்சடங்குகள், கிறிஸ்தவர்களின் சமூகச் சிந்தனை என்ற

அடிப்படைகளில் இவ்விதழின் சமய, சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

xvi. உண்மை ஒலி :

தலைவர் உரை, அருள் உரை, மருத்துவம், மூலிகை – மருத்துவம், சிறுவர் பகுதி, வேதவினா, முதியோர் இல்லம், மாதர் பகுதி, விசுவாசம், இளைஞர்களுக்கு, சிந்திப்போமா, யோகாசனம், மாதர் பகுதி, எபிரெயர் வரலாறு, சமூக நீதி காத்தல், தலையங்கம், கடிதங்கள், கல்லூரிக் கல்வி, குமரிப் பேராய நிறுவனங்கள், குமரி மாவட்டத்தில் சமுதாய மாற்றம், மணமகன் - மணமகள் தேவை, வாழ்த்துக்கள், பேராய மாமன்ற கூட்டம், பேராயர் தேர்தல், குமரிப் பேராயமும் நீதி மன்ற வழக்குகளும் ஆகியன இவ்விதழின் உள்ளடக்கப் பகுதிகளாகும்.

இவ்விதழ் கன்னியாகுமரி சி. எஸ். ஐ . கிறிஸ்தவ நலச் சங்க வெளியீடாகும்.

சிறுகதைகள், தொடர் கதைகள், கவிதைகள் ஆகியன இவ்விதழில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கட்டுரைகளுக்கே இவ்விதழ் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதும் மனங்கொள்ளத்தக்க செய்தியாகும்.

சிறுபான்மையினரின் 'உரிமை, கிறிஸ்தவ வரலாற்றில் மின்னும் தாரகைகள், குமரி மாவட்டத்தில் சமுதாய மாற்றம், மஞ்சள்காமாலை, யானைக்கால் போன்ற கொடிய நோய்கள், போதைப்பொருள்கள் எதிர்ப்பு, தெய்வங்களும் வழிபாடுகளும் உலக கடவுள்களும், குழந்தைகளைத்

தாக்கும் கொடிய நோய்களும் அவற்றிற்கான தடுப்பூசி முறைகளும், மாதர் பகுதியில் சமையல், வீட்டுக் குறிப்புகள், வேளாண்மைத் தொழில்கள், சுய தொழில் வளர்ச்சி, வருமானத்தைப் பெருக்குதல், இளைஞர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகள், முதியோர் பராமரிப்பு என்ற அடிப்படையில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

xvii. வைரம் :

இது சமூகச் சிந்தனையாளர் மற்றும் சாதனையாளர்களின் இரு மாத இதழாகும். இவ்விதழில் 'உங்கள் தீர்ப்பு' என்னும் தலைப்பில் வாசகர் கடிதங்கள், 'வணக்கம்' என்னும் தலைப்பில் தலையங்கம், 'தகவல்கள் ' என்னும் பகுதியில் அரசியல் சமுதாயச் பொருளாதாரச் செய்திகள், சிறப்புக் கட்டுரைகள், தொடர் கட்டுரைகள், மகளிர் தினக் கட்டுரைகள், சாதனையாளர் பற்றியக் கட்டுரைகள், சிறுகதைகள், போட்டிகள், கவிதைகள் ஆகியன உள்ளடக்கப் பொருளாக இடம் பெற்றுள்ளன. இவ்விதழ் 1995 – இல் சே. பாலகிருஷ்ணன் எழுதிய 'முகம் ' என்னும் தொடர் கதையை இவ்விதழ் வெளியிட்டிருப்பது இதற்குத் தக்க சான்றாகும்.

சிறப்புக் கட்டுரைகளுக்கும் தொடர் கதைகளுக்கும், கட்டுரைகளுக்குமே இவ்விதழ் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் காணலாம்.

திருமணமான காஷ்மீர் பெண்களின் அவல நிலை, மாதர் விடுதலை, பெண்களுக்கான எதிர்கால நடவடிக்கைகள், மகளிருக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு, கொடிய நோய்கள், இளைஞர் சமூகச் சேவை மையம்,

இளைஞர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், முதியோர் பணிகள், விதவைகள் மறுமணம், போதைப் பொருட்கள் எதிர்ப்பு, சாதி வெறி, மதவெறிகளைச் சாடல், தீவிரவாதத்தை எதிர்த்தல், தாழ்த்தப்பட்டோர் நலம் பேணல், வரதட்சணை எதிர்ப்பு, தேவையற்ற செலவீனங்களைத் தவிர்த்தல், வருமானம் ஈட்டும் தொழில்கள் என்ற அடிப்படைகளில் இவ்விதழின் சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

xviii. பள்ளத்தாக்கின் லீலி :

மாத ஜெபக் குறிப்புக்கள், நெய்யூர் புற்று நோய் மருத்துவ மனை நோயாளிகளுக்கு உணவு கொடுத்து உதவுபவர்கள், திருமண நிதி, நினைவு நிதி, பொருத்தனை நிதி, புற்று நோயாளிகளுக்கு இலவசப் படுக்கை, ஜெபக் குழு, இசைக்குழு பற்றிய செய்திகள், ஆசிரியர் கடிதம், கவிதைகள், காட்லின் பிளஸ்ஸி & பிளஸ்ஸோ வேத அறிவுப்போட்டி, அன்னலதா வேத அறிவுப் போட்டி, எபக்ட் லீலி வேத அறிவுப் போட்டி, நாட்டு நடப்புச் செய்திகள், உலகச் செய்திகள், அருள்திரு. எபனேசர் ஞாபகார்த்த வேத அறிவுப்போட்டி, செல்வி. எஸ். சாந்தி ஞாபகார்த்த லீலி, சரோன் வேத அறிவுப் போட்டி, திருசைலம் ஞாபகார்த்த லீலி குறுக்கெழுத்துப் போட்டி, ஞா. பிராங்களின் கோபினாத்தின் சிறுவர்களுக்கான சிறுகதைகள், பள்ளத்தாக்கின் லீலி, திறனாய்வுத் தேர்தல் (பொது அறிவுச் செய்திகள்), உத்தம பக்தர்கள் ஆகியன உள்ளடக்கச் செய்திகளாக இடம் பெற்றுள்ளன.

இவ்விதழ் போட்டிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது. காச நோயாளிகளுக்குப் பள்ளத்தாக்கின் லீலி மூலம் செய்யப்படும் உதவியும் அருட்பணியும், உத்தம பக்தர்கள் வரிசையில் மேலை நாட்டுக்

கிறிஸ்தவ தொண்டர்கள் அறிமுகம் மலைப்பகுதிகளில் பள்ளத்தாக்கின் லீலி ஊழியம், மலைச் சாதி பெண்கள் திருமணத்திற்கு உதவுதல், இளைஞர்களுக்கு அறிவுரை, ஆன்மீக வாழ்வு, ஆண்டவனின் வழி வாழ்வு, அன்பு வழி வாழ்வு, அற வழி வாழ்வு, பொது அறிவுப் போட்டி, ஜெப செய்திகள், உடையார் விளைத் தொழுநோயாளிகளின் பணி என்ற அடிப்படைகளிலும் சிறுவர்களுக்கான நல்லொழுக்கத்தையும், நன்னெறிகளையும் கொடுத்தல் என்ற அடிப்படையிலும் இவ்விதழின் சமய – சமுதாயத் தாக்கங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

3. குழந்தைகள் :

'குழந்தையே மனிதனின் தந்தை' என்பது ஆன்றோர் வாக்கு. எல்லா மனிதர்களும் தொடக்கத்தில் குழந்தைகளாக இருந்தவர்களே. பெரும்பான்மைக் குழந்தைப் பருவ அனுபவங்கள் ஒரு மனிதனுடைய ஆளுமையில் ஏற்படுத்தும் தாக்கம் அம்மனிதனுடைய வாழ்நாள் முழுவதும் தொடரும் என்பது உளவியலார் கண்டறிந்த உண்மையாகும். குழந்தைகளுக்கு நல்ல அனுபவங்களை உருவாக்கித் தருவது பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் தலையாய கடமையாகும். கோட்டாறு திருச்சபைச் சமூகமும் இக்கடமையை நிறைவேற்றும் நோக்கத்துடன் தான் குழந்தைகள், சிறியோர், சிறுவர், சிறுமியர்க்கென்று சிறார் பணிக்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அவ்வியக்கத்தின் தொடர்பு இதழே 'இளந்தளிர்' ஆகும்.

i. சிறார் பணிக்குழுவின் நோக்கங்கள் :

1. சிறுவர், சிறுமியரை ஒருங்கிணைத்து, குழுக்களை உருவாக்கி அவர்கள் வயது, இயல்புகளுக்கேற்றப்படி ஒருங்கிணைந்த பயிற்சியைத் தருவது.

2. குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வையும், தெளிவையும் பெரியவர் - பெற்றோர், ஆசிரியர்களிடம் ஏற்படுத்துவது குழந்தைகளுக்காக மறைக்கல்வி, வழிபாடுகள் முதலிய பல செயல் திட்டங்கள் கோட்டாறு மறை மாவட்டத்தில் உள்ளன. எனினும் அவை பெரும்பாலும் பெரியவர்களின் மனநிலையிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன. அவை குழந்தைகளின் பங்கேற்பை ஓரளவு அதிகப்படுத்தினாலும், முழு அளவில் அவர்களின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் தொடரவில்லை. குழந்தைகள் சிறாருக்கென்று தனிப்பட்ட ஒரு சிந்தனை அமைப்பு முறை உள்ளது. அது பெரியவர்களுடைய சிந்தனையிலிருந்து வேறுபட்டதாகும். பெரியோர்களும், பெற்றோர்களும் பல நேரங்களில் இதை புரிந்துக் கொள்வதில்லை. இதன் விளைவாகக் குடும்பங்களிலும் பங்கு அளவிலும் குழந்தைகள், சிறாருக்கென்று தனிப்பட்ட திட்டங்கள் உருவாகவில்லை. ஆகவே பெரியோர்களுக்கும் பெற்றோர்களுக்கும் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வு ஊட்டுவது இன்றைய கட்டாயத் தேவை ஆகும். குழந்தைகள், உளவியல், அவர்களைப் புரிந்துக் கொள்ளும் முறை இவை பற்றிய கருத்தமர்வுகளைத் திட்டமிட்டுக் கோட்டாறு மறைமாவட்டத்திலுள்ள பங்குகளில் நடத்திச் சிறார்களின்

நலனைப் பேணுவதற்குச் சிறார் பணிக்குழு திட்டம் உதவி வருகின்றது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 'இளந்தளிர் ' இதழையும் பயன்படுத்தி வருகின்றது.

ii. அமைப்புகளும் திட்டங்களும் :

"பங்கு அல்லது பள்ளி அளவில் இந்தப் பணிக்குழு சிறாரை அவர்களின் வயது வரம்பை அடிப்படையாக வைத்து இரு குழுக்களாக வழி நடத்துகின்றது. பத்து வயது வரை உள்ள சிறார் பாலர் சபை அல்லது அதைப் போன்ற வேறு சபையில் சேருகின்றனர். 11 முதல் 13 வயது வரையுள்ளவர்கள் சிறுவழி இயக்கம் அல்லது அதையொத்த வேறு சபைகளில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். இந்த வயதுக்குட்பட்ட சிறார் வேறு எந்தச் சபையில் இருந்தாலும் பணிக்குழு அவர்களையும் ஒருங்கிணைத்து வயதிற்கேற்ற பயிற்சியைத் தருகின்றது. பங்கு அளவில் பணிக்குழுவின் கிளை ஒன்று ஆர்வமுள்ள பெரியவர்களைக் கொண்டு அனைத்து பங்குகளிலும் தொடங்கப்பட்டுள்ளது. சிறாருக்கான பயிற்சியை இக்குழு கண்காணிக்கின்றது. சிறார் மீது ஏவப்படும் வன்முறைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கப்படுகின்றது. குழந்தைத் தொழிலாளர்கள், பல்வேறு காரணங்களால் படிப்பைக் கைவிட்ட சிறார்களின் நலனைப் பேணவும், குழந்தைகளுக்கான பயனுள்ள புதிய திட்டங்களையும் இவ்வமைப்பு கொண்டிருக்கின்றது"[9].

மறை மாவட்ட அளவில் பாலர் சபை, சிறு வழி இயக்கம் என்ற இருக் குழுக்களாகவே செயல்பட்டு வருகின்றது. மறைமாவட்ட முழு நேரப்

பணியாளரின் வழி காட்டுதலிலும், மறை மாவட்ட அருட்பணிச் செயலரின் கண்காணிப்பிலும் மறைமாவட்டக் குழு இயங்கி வருகின்றது. பங்கு அல்லது பள்ளியிலுள்ள குழுக்களின் வழிகாட்டிகளும் நிர்வாகிகளும் இதன் உறுப்பினர்கள் ஆவர். மாதம் ஒரு முறை இக்குழு கூடுகின்றது. முளகுமூடு மறைமாவட்டத்தில் மட்டும் இரு மாதங்களுக்கொருமுறை கூடுகின்றது. மறைமாவட்ட அளவில் சிறாருக்கான ஒரு நூல் நிலையம், சிறாரின் முழுப் பயிற்சிக்கான துணைக் கருவிகள், பெற்றோர் - பெரியோருக்கு விழிப்புணர்வு தருவதற்கேற்ற பயிற்சிக் கருவிகள் முதலியனவற்றை உருவாக்கி உள்ளனர்.

iii. குழு உணர்வை வளர்த்தல் :

ஆதிகாலக் குழு உணர்வும் கூட்டு வாழ்க்கையும் காலப் போக்கில் மங்கிப் போனது. ஆதிகாலத்தில் மக்கள் குழுக்களாக இணைந்து செயல்பட்ட நிலையில் அனைவரும் பகிர்ந்து கொண்டும், ஒருவரையொருவர் பேணியும், மதித்தும் சம உரிமையோடும் அமைதியான வாழ்க்கையை நடத்தினர். இன்று தன்னலம், பேராசை போன்ற தீய சக்திகள் தலைதூக்கியுள்ளன. அடுத்தவர் நலனில் ஆர்வம் காட்டுவதில்லை. பிறருடைய உணர்வுகளை மதித்து அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை. நான் - எனது என்ற அகந்தையும் தன்னலமும் மேலோங்கியதன் விளைவாக எங்கும் எதிலும் போட்டியும், பொறாமையும் ஏற்பட்டு, சண்டை சச்சரவுகளும் - கொலை கொள்ளைகளும், வெடிகுண்டு வெடிப்புப் போன்ற வன்முறைக் கலாச்சாரங்களும் சர்வ சாதாரணமாகி

விட்டன. மக்களின் அமைதிக்கும் குந்தகம் ஏற்பட்டுள்ளது. அணு ஆயுதத்தினால் இவ்வுலகம் அழிந்து விடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லும் வகையில் - 'இளந்தளிர்' இதழ்,

"இக்கொடிய நிலையினை மாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு உண்டு. எனவே சிறார்களின் பிஞ்சு உள்ளங்களில் குழு உணர்வை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். பிறரை மதிக்கவும், பிறர் மீது அக்கரைக் கொண்டு வாழவும், பிறர் தேவைகளை நிறைவு செய்யவும், பிறர் மீது நம்பிக்கைக் கொண்டு இணைந்து வாழவும் வேண்டிய நல்ல சிந்தனைகளை நம் உள்ளங்களில் ஆவியானவர் எழுப்புகிறார். அதனைக் கண்டு கொள்ளவும் அவற்றை மழுங்கடித்து விடாமல் செயல்படவும் எப்போதும் ஆவியானவர் காட்டும் நல்லவழி நடத்தலில் நடக்கவும் - குழந்தைகளைப் பக்குவப்படுத்த வேண்டியது நம் கடமை. அனைத்துலகத் திருச்சபையானது ஆவியின் நல்ல நோக்கத்தைப் புரிந்து நாமும் குழந்தைகளும் சிறார்களும் ஆவியின் வழி நடத்துதலிலே செயல்பட்டு புத்துலகு படைக்க முழு மூச்சுடன் உழைக்க வேண்டும். புதிய அன்புச் சமூகங்களாக வாழ வழி காட்ட வேண்டும் "[10]. எனச் சுட்டிக்காட்டி இருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். உலக அமைதியைப் பேணவும், வன்முறை, தீவிரவாதம், வெடிகுண்டு – அணு ஆயுதங்களை ஒழிக்கவும் சிறுவர், குழந்தைகள் உள்ளங்களில் நற் சிந்தனைகளை விதைக்க வேண்டும் என 'இளந்தளிர் ' எடுத்துக்காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

iv. நட்புறவை வளர்த்தல் :

'இளந்தளிர் ' இதழில் எம். எஸ். லூர்து எழுதியுள்ள "பகைமையை மறப்போம் - நட்புறவை வளர்ப்போம்"[11] என்னும் நாடகம், குழந்தைகள் பகைமையை மறந்து நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது.

v. நற்பண்புகளை வளர்த்தல் :

குழந்தைகளுக்கு நற்பண்புகளைக் கற்றுக் கொடுக்கும் பணியில் இளந்தளிர் பெரும் பங்கு வகிக்கின்றது. இதனை "அன்புறவு, தியாகம், தாராளமனம், பகைவரையும் மன்னித்தல், ஏற்றுக் கொள்ளுதல், நட்புறவை வளர்த்தல், பகிர்தல் முதலிய பண்பு நலன்கள் நம்மை அழகு செய்ய வேண்டும். கடமையுணர்வோடு இத்தகையப்பண்புகளை நம் குழந்தைகளில் உருவாக்க இளந்தளிர், அரும்பும் மலர்கள், கூட்டங்கள் நடத்த வழி காட்டுகின்றன"[12]. என்னும் இளந்தளிர் ஆசிரியர் உரையினால் தெரியலாம். இளந்தளிர் செப்டம்பர் - அக்டோபர் 1998 இதழில் "பிறர் உரிமையை மதித்தலும், பிறர் சுதந்திரத்தைப் பேணுதலும், பகிர்தல், குழுவில் ஒருமைப்பாட்டு உணர்வை உருவாக்குதல், பிறரை மன்னித்தல், நன்றி சொல்லல், நன்றி உணர்வில் வாழ்தல், குழுவில் ஒருவரையொருவர் பாராட்டுதல், வீட்டில் பாராட்டுப் பெறுதல் "[13] போன்ற நற்பண்புகளைக் குழந்தைகள் பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திச் செய்திகள் வெளியாகியிருப்பதும் சுட்டத்தக்கதாகும்.

vi. வளரும் மழலைப் பருவம் :

வளரும் மழலைப் பருவத்தின் இயல்பு குறித்து பணி. இரா. மேரிஜாண் 'வளரும் மழலை' என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரை வளரும் மழலைப் பருவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. "பிறப்பிலிருந்து 12 அல்லது 13 வயது வரை உள்ள பருவம் பொதுவாகக் குழந்தைப் பருவம் என அழைக்கப்படுகிறது. இதில் முதல் ஐந்து ஆண்டுகள் பாலப் பருவம் எனப்படுகிறது. முறையான கல்வி இந்தப் பருவத்தில் நடை பெறுவதில்லை. இருப்பினும் பெற்றோர், உறவினர் இவர்களிடமிருந்து பலவற்றைக் குழந்தைகள் இப்பருவத்திலும் கற்றுக் கொள்கின்றனர். 6 முதல் 8 வயது வரை முன் பிள்ளைப் பருவம் எனவும் 9 முதல் 12 – 13 வயது வரை பின் பிள்ளைப் பருவம் எனவும் வழங்கப்படுகிறது. 6 வயது முதல் 12 வயது வரையுள்ள இந்தப் பருவம் தான் 'சிறுவம்' எனப்படுகிறது. இப்பருவத்துக் குழந்தைகளே சிறுவர், சிறுமியர்"[14] என்பது குறிப்பிடத்தக்கதாகும். மனித வாழ்க்கையில் குழந்தைப் பருவம் மிக முக்கியமான பருவம் ஆகும். இப்பருவத்தில் ஏற்படும் அனுபவங்களும் அவை ஏற்படுத்தும் தாக்கங்களும் மனிதனின் ஆளுமையை வடிவமைக்கின்றன என்னும், இவ் அனுபவங்கள் நின்று நிலைத்து வாழ் நாள் முழுவதும் தொடர்கின்றன என்றும் உளவியலார் கருதுகின்றனர்.

இப்பருவம் வளர்ச்சியின் பருவமாகும். உடலும் உள்ளமும் ஒருங்கே வளர்ச்சி காண்பதால் சிந்தனைத்திறன், செயல்திறன் ஆகியவை வளர்கின்றன. ஒழுக்க நெறி பற்றிய கண்ணோட்டத்திலும் வேகமான வளர்ச்சி காணும் பருவம் இக்குழந்தைப் பருவமே ஆகும். இரண்டாவதாக

இச்சிறுவப் பருவம் முறையான கல்வி கற்பதற்கும் மிகப் பொருத்தமான பருவம் ஆகும். மூன்றாவதாக இச்சிறு பருவக் குழந்தைகள் - சமூகப் பண்பாட்டுக் கூறுகளையும் உள்வாங்கிக் கொள்கின்றன.

"குழந்தைப் பருவம் என்பது (12 வயது வரை) மிக முக்கியமான பருவம். வேகமான வளர்ச்சியின் பருவம். முழு மனிதனுடைய வளர்ச்சி நிலைகளில் ஏறக்குறைய பாதியளவு இக்குழந்தைப் பருவத்திலேயே நிகழ்கிறது. சிந்தனை, செயல் திறன், குண நலன் முதலியவற்றோடு உடலிலும் வேகமான மாற்றங்களும் வளர்ச்சியும் இப்பருவத்தில் நிகழ்கின்றன. ஆகவே இப்பருவத்தில் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய பயிற்சிகளும் கல்வியும் முக்கியத்துவம் பெறுகின்றன"[15]. குழந்தைப் பருவத்தின் இத்தேவைகளை அறிந்து இளந்தளிர் இதழ் தனது சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றது.

vii. குழந்தைகளோடு நல்லுறவு:

ஒவ்வொரு மனிதனின் ஆளுமையும் அவரின் குழந்தைப் பருவ நிகழ்வுகளின் பிரதிபலிப்பே ஆகும். குழந்தைப் பருவம் நன்றாக இருந்தால் இளமைப் பருவமும், முதுமைப் பருவமும் நன்றாக இருக்கும். இவைகளையெல்லாம் நன்குணர்ந்தவரே அருட்பணியாளர் இரா. மேரி ஜாண் ஆவார். சிறார் பணிக்குழுவைத் தொடங்கி அவரே முதல் செயலாளராகவும் பணியாற்றினார். கோட்டாறு மறைமாவட்டத்தில் இருபத்தி ஒன்றாவது பணிக்குழு சிறார் பணிக்குழு ஆகும். இதன் தலையாய நோக்கங்களில் ஒன்று குழந்தைகளோடு நல்லுறவினை உருவாக்குவதாகும். இதனை

மனங்கொண்டு இளந்தளிர் இதழில் அருட்பணி பிரான்சிஸ் சேவியர் 'குழந்தைகளோடு நல்லுறவு' உருவாக என்னும் தொடர் கட்டுரையினை எழுதியுள்ளார்.

குழந்தைகள் நலனில் அக்கரையுள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள் வழிகாட்டிகள் அனைவருக்கும் இத்தொடர் கட்டுரை பயனுள்ளதாகும். அத்தொடர் கட்டுரையில்

"குழந்தைகள் முக்கியமானவர்கள் எனக் கருதுங்கள்,
குழந்தைகளின் கற்பனைகளை உணர்வுப் பூர்வமாக செவிமடுங்கள்,
மதிப்புக் கொடுத்து அழையுங்கள் "[16]. எனவும்,
"பெயர் சொல்லி அழையுங்கள், ஒருவரைப் பற்றி முழு விபரம்
தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள், புதிய இடங்களுக்குக்
குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள்"[17] எனவும்,
"குழந்தைகள் நம்பத்தக்கவர்கள் என எண்ணுங்கள்,
எளிமையான கேள்விகள் கேளுங்கள், தவறு செய்த
குழந்தைகளைத் தேடிச் செல்லுங்கள்"[18] எனவும்

குழந்தைகளோடு நட்புறவு உருவாக ஏற்ற வழிகளைக் கட்டுரையாளர் சுட்டிக்காட்டி இருப்பது மிகவும் பயனுள்ள தகவல்கள் ஆகும்.

"சில நேரங்களில் குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே மனத் தாங்கல்கள் ஏதாவது ஏற்பட்டு விடலாம் அல்லது குழந்தைகள் ஏதாவது தவறு செய்ய அதை நீங்கள் பார்த்து விடலாம். அல்லது உங்களுக்குத் தெரிய வரலாம். இந்த நிலையில் குழந்தைகள் உங்களைத் தேடி வரமாட்டார்கள். உங்களைத் தவிர்ப்பார்கள். அவர்களிடம் குற்றப் பழி

உணர்வு மேலோங்கி நிற்கும். அச்சம் ஏற்பட்டிருக்கும் இச்சூழலில் அவர்கள் சிறியவர்கள் தானே, வேண்டுமென்றால் என்னை நாடிவரட்டும். வந்து விளக்கம் தரட்டும் என்று காத்திராமல் நாமே அவர்களைத் தேடிச் சென்று குழந்தைகளுக்குப் பிடித்தமான சூழ்நிலையை உருவாக்கி அவர்களோடு உறவு கொள்ளும் போது காணாமல் போன ஆட்டைத் தேடிச் சென்ற நல்லாயன் இயேசுவாக அவர்கள் பார்வையில் மதிப்புப் பெறுவீர்கள்".[19] என்னும் கருத்து குழந்தைகள் நலனில் அக்கரையுள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், வழிகாட்டிகள் ஆகிய அனைவருக்கும் ஏற்புடையதாகும்.

viii. பயன்தரும் பொழுது போக்குகள் :

இவ்வுலகில் மனிதன் எப்பொழுதும் இயந்திரமாகவே செயல்பட விரும்புவதில்லை. இடையிடையே தன்மனத்திற்கு மகிழ்ச்சி தரக்கூடிய பொழுது போக்குகளை நிறைவேற்ற விரும்புவது இயல்பே. அந்த வகையில் சிறுவர்கள் கோடை விடுமுறை- நாட்களைப் பயனுள்ள வழியில் செலவிட வேண்டும் என்பதற்கும் இளந்தளிர் வழிகாட்டுகின்றது.

"அஞ்சல் தலைகளைச் சேகரித்தல், வண்ண வண்ண

அஞ்சல் தலைகளைத் துண்டு துண்டாக வெட்டி

வாழ்த்து மடல் தயார் செய்தல், பல நாட்டு நாணயங்களைச் சேகரித்தல், நாணயத்தைக் கொண்டு மாலை செய்தல், பூச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுதல், தோட்ட வேலை செய்தல், அஞ்சல் கவர் தயாரித்தல், பாசி-மணி கோர்த்தல், ஓவியம் வரைதல், இசைகற்றல், வண்ணத் துணிகளிலும் காகிதங்களிலும் பூக்கள் செய்தல், பாடல், ஆர்மோனியம்,

வீணை, தம்பூரா, தபேலா, வயலின் போன்ற இசைக்கருவிகளை இசைக்கப்பழகுதல், புதுக்கவிதை, மரபுக்கவிதைகளில் பயிற்சிபெறல், பள்ளி-நூல் நிலையம் அல்லது ஊரக நூல் நிலையம் சென்று உறுப்பினராகி நல்ல அறிவுக்கான புத்தகங்களைத் தேடிப்படித்து அறிவைப் பெறுதல், தொலைக் காட்சிகளில் சிறுவருக்கான நிகழ்ச்சிகள், வினாடிவினா, காண்போம்-கற்போம் போன்ற அறிவிற்கான நிகழ்ச்சிகளைக் கண்டு தெளிவு பெறுதல், இலட்சியத் தெளிவு தரும் கதைகள், நிகழ்ச்சிகள் ஆகியனவற்றைப் பார்த்தல், கால்பந்து, பூப்பந்து, ஹாக்கி, சடுகுடு, சில்லு, கேரம் போர்டு, செக்கர் போன்ற விளையாட்டுக்களில் நாள்தோறும் ஈடுபட்டுப் பயிற்சி பெறுதல் நலம் தரும். 'ஓடி விளையாடு-பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்றார் பாரதியார். இத்தகைய விளையாட்டுக்கள் சுறுசுறுப்பைக் கொடுக்கும். தேகம் நலம் பெறும். கூடி விளையாடி உறவையும் உடலையும் பலப்படுத்தலாம். பல வண்ணச் சுண்ணங்களைப் பயன்படுத்தி பல வகை வண்ணக் கோலங்கள் வரைதல், கோல ஆல்பம் தயாரித்தல், பல பத்திரிகைகளில் கோலம் வருவதைக்கண்டு பயிற்சிபெறல், பரதநாட்டியம் கற்றுக்கொள்ளுதல், பலவகையான நடனங்களைப் பயிலுதல், உடல், உள்ள நல வாழ்வு தொடர்பான இயற்கை வைத்தியம், கருத்தரங்குகளில் பங்கேற்றல், பொது அறிவு சம்மந்தமானதும், விவிலிய சம்பந்தமானதும் ஆன கருத்தரங்குகளில் பங்கேற்றல், சிறு கதைகள், நகைச் சுவைத் துணுக்குகள், நாடகம் எழுதிப் பழகுதல், காய்களில் வண்ணம் பூசி அச்சடித்தல், உடைந்த வளையல்களைச் சேர்த்து வைத்து அவைகளை மாலையாகக் கோர்த்தல், பல பத்திரிகைகளிலிருந்து வெட்டப்பட்ட படங்களைத் தனி ஆல்பம் ஆக்கலாம்"[20]. என இளந்தளிர் இதழ் குழந்தைகளுக்குப் பயன்தரும் பொழுது

போக்குகளைப் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

ix. பழமொழிகள் :

பழமொழிகள் வாழ்க்கையின் அனுபவ மொழிகளாகும். பயன் தரும் பழமொழிகளையும் இளந்தளிர் இதழ் வெளியிட்டிருக்கின்றது. இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் பழமொழிகளைக் குறிப்பிடலாம்.

1. "மருண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய் "[21]
2. "பங்கு வைத்துத் தின்றால் பலன் உண்டு"
3. "சுத்தம் சுகம் தரும்"
4. "ஐஸ் சாப்பிடுவது உடல் நலக் கேடு"[22]

இத்தகைய பழமொழிகள் குழந்தைகளுக்கு நல்ல அறிவுரைகளாகவும் அமைந்திருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

x. புதுமொழிகள் :

குழந்தைகளின் வாழ்க்கைக்குப் பயன்படும் பயனுள்ள புதுமையான புதுமொழிகளையும் இளந்தளிர் வெளியிட்டிருப்பது சிந்தனைக்குரியதாகும். இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் புது மொழிகளையும் குறிப்பிடலாம்.

1. "சுற்றுப்புறத் தூய்மை சுகம் தரும் வாய்மை"
2. "அன்பியத்தில் கூடுவோம் அன்போடு வாழுவோம்"[23]
3. "அளவோடு உண்டு வளமோடு வாழ்வோம"
4. "மரங்களை வளர்ப்போம், மழைதனைப் பெறுவோம்"[24].

xi. பொன்மொழிகள் :

குழந்தைகளுக்கு அறிவூட்டி நல்வழிப்படுத்தும் பொன்மொழிகளையும் இளந்தளிர் இதழ் வெளியிட்டிருக்கின்றது. இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் பொன்மொழிகளையும் குறிப்பிடலாம்.

1. "ஒழுக்கக் கல்வி உத்தமர்களை உருவாக்கும்".
2. "அருளைத் தேடுமுன் அன்பைத் தேடு"
3. "ஜெபமே வாழ்வுக்கு வழி"
4. " கூடிச் ஜெபிப்போம், ஒன்றுபட்டு வாழ்வோம்"[25]
5. " வழக்கம் என்றாலும் ஒழுக்கமின்றேல் மாற்றம் கண்டுபிடி"
6. "யாதும் ஊரே யாவரும் கேளீர் "[26]

இவ்வாறு ஓழுக்கக் கல்வி, அருள், அன்பு, ஜெபம், வழக்கம், ஒற்றுமை, ஆகியன குறித்த பயனுள்ள பொன்மொழிகளைக் குழந்தைகளின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோலப் பதியும் வகையில் இளந்தளிர் வெளியிட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

xii. இறைமொழி :

'இளந்தளிர்' இதழ் குழந்தைகளின் உள்ளத்தைத் தொடும் வகையில் 'இறைமொழி' களையும் வெளியிட்டிருக்கின்றது. இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் இறைமொழிகளைக் குறிப்பிடலாம்.

1. நீங்கள் கடவுள் பண்படுத்தும் தோட்டம் (1 கொரி : 3 :9 அ) "

2. "அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். (மத் : 5 : 9) "[27]

xiii. நகைச்சுவைத் துணுக்குகள் :

'இளந்தளிர்' இதழ் சிறு குழந்தைகளுக்கான நகைச் சுவைத் துணுக்குகளையும் வெளியிட்டிருக்கின்றது. இதற்குச் சான்றாக பின்வரும் நகைச் சுவைத்துணுக்கைக் குறிப்பிடலாம்.

கேள்வி : "போலீஸ்காரர் ஒருவர் திருட்டைப் பிடிக்க பைக்கில் விரைகிறார். முதலில் ஒரு கள்ளச் சாராயக் கடையையும் பக்கத்தில் களவு செய்த கும்பலையும் கண்டார். முதலில் எதைப் பிடிப்பார்".

பதில் : "பைக்கில் பிரேக்கைப் பிடிப்பார்"[28]

xiv. விடுகதைகள் :

சிறு குழந்தைகளைப் பெரிதும் கவரக்கூடியவைகளில் ஒன்று விடுகதைகள் ஆகும். விடுகதைகளையும் இளந்தளிர் வெளியிட்டிருப்பது சுட்டத்தக்கதாகும். சிறுகுழந்தைகளின் சிந்தனைத் திறனைத் தூண்டும் வகையில் இவ்விடுகதைகள் உள்ளன. சான்றுகளாகப் பின்வரும் விடுகதைகளைக் குறிப்பிடலாம்.

1. "பார்த்தால் பார்க்கும், சிரித்தால் சிரிக்கும், போட்டால் உடையும் அது என்ன ?"

2. "கணக்கில்லாப் பிள்ளைகளைக் கழுத்தில் சுற்றி சுமக்கும் தாய். யார் அவர் ?"[29]

(கண்ணாடி, தென்னை மரம்.)

3. "யானை படுக்க நிழல்உண்டு, கடுகு மடிக்க இடமில்லை அது என்ன ?"

4. "காலிருக்கும் ஆனால் நடக்க முடியாது, கையிருக்கும் ஆனால் எதையும் பிடிக்க முடியாது அது என்ன ?"

5. "ஆடும் வீட்டிற்குள் அச்சமின்றிப் பிள்ளைகள் அது என்ன ?"

6. "நரம்பைத் தொட்டால் சத்தமிடுவான் - அவன் யார்? "[30]

(நிலா காலம், தூக்கணாங் குருவிக்கூடு, வயல் விதைகள், வீணை)

XV. பொது அறிவு:

இளந்தளிர் இதழ் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் பொது அறிவுத் திறனைத் தூண்டி வளர்க்கும் வகையில் 'அறிவுக்கு' என்னும் தலைப்பில் பொது அறிவுத் தொடர்பான 'வினாடி – வினா விடைகளை'யும் வெளியிட்டிருக்கின்றது. இதற்குச் சான்றாகப் பின்வரும் 'வினாடி – வினா – விடைப்' பகுதியைக் குறிப்பிடலாம்.

அறிவுக்கு :

1. ஔவையார் இயற்றிய பிரபலமான நூல் எது ?
2. ஜவஹர்லால் நேருவை மக்கள் இப்படியும் அழைத்தார்கள்?
3. உலகிலேயே மிகவும் நீளமான மலைத் தொடர் யாது ?
4. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள உலகப் புகழ் பெற்ற மலைச் சிகரம் யாது ?
5. இருண்ட கண்டம் என்ற பெயர் பெற்றக் கண்டம் ?
6. உயிரினங்கள் உயிர் வாழத் தேவையான வாயு எது ?
7. ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்தியப் பெண்?

விடைகள் :

1. ஆத்தி சூடி
2. ஆசிய ஜோதி
3. ஆண்டீஸ்
4. ஆல்ப்ஸ்
5. ஆப்பிரிக்கா
6. ஆக்ஸிஜன்
7. ஆரதிகுப்தா "[31]

xvi. கவிதைகள் :

சிறுவர் மற்றும் சிறு குழந்தைகள் எளிதில் மனங்கொள்ளும் வகையில் எளிய நடையில் குழந்தைகளுக்கான சிறு சிறு கவிதைகளையும் இளந்தளிர்

வெளியிட்டிருக்கின்றது. சேமிக்கும் பண்பு, கபடமற்ற உள்ளம், நன்றியறிதல், பகிர்ந்து உண்ணும் மனம், பிறர்க்கு உதவும் பழக்கம், அன்பு செலுத்துதல் போன்ற நற்பண்புகளைக் கற்றுத் தரும் வகையில் இக்கவிதைகளின் வெளியீட்டுப் பொருட்கள் இடம் பெற்றுள்ளன. இதற்கு சான்றாகப் பின்வரும் கவிதைகளைக் குறிப்பிடலாம்.

"கற்றுக்கொள் நீ கற்றுக் கொள்
உற்றுப் பார்த்துக் கற்றுக் கொள் !
 உலகை பார்த்துக் கற்றுக் கொள்
 தேவையானதை மட்டும் எடுத்துக் கொள்
தேனீக்களிடமிருந்து கற்றுக் கொள்
சேமிக்கும் பண்பைக் கற்றுக் கொள்
 புறாவிடம் இருந்து கற்றுக் கொள்
 கபடமற்ற உள்ளத்தைக் கற்றுக் கொள்
நாயைப் பார்த்துக் கற்றுக் கொள்
நன்றியுடன் இருக்கக் கவிதை கற்றுக் கொள்
 காகத்திடம் இருந்து கற்றுக் கொள்
 பகிரும் மனதைக் கற்றுக் கொள்
ஆல் போல் வளர்ந்திடும் மரத்தைப் பார்த்து
பிறருக்கு உதவும் பழக்கத்தைக் கற்றுக் கொள்
 நாமெப்போதும் நல்லவற்றை
 நாளும் கற்றிட வேண்டாம் ?"[32]

- எல். கலா.

கவிஞர் எல். கலா இக்கவிதையில் தேனீக்களிடமிருந்து சேமிக்கும் பழக்கத்தையும், புறாவிடம் இருந்து கபடமற்ற உள்ளத்தையும், நாயிடமிருந்து நன்றியையும், காகத்திடமிருந்து பகிரும் மனத்தையும், ஆலமரத்திடமிருந்து பிறருக்கு உதவும் பழக்கத்தையும், குழந்தைகள் கற்றுக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகள் நாள்தோறும் நல்லனவற்றையே கற்றுக் கொள்ள வேண்டுமெனக் கவிஞர் குறிப்பிடுவது சிந்திக்கத் தக்கதாகும். குழந்தைகளுக்கு நன்கு பிடித்ததும் அறிமுகமானதுமான தேனீ, புறா, நாய், காகம், ஆலமரம் ஆகியனவற்றை சுட்டிக்காட்டி கவிதையில் கவிஞர் குழந்தைகளுக்கான பண்புகளை வலியுறுத்திக் கூறியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அன்பு:

'அன்பு அனைத்திலும் மேலானது' என்பதை வலியுறுத்தி 'அகரவரிசையில்' என்ற இக்கவிதையை ஒய். எம். அந்தோணியம்மாள் என்ற கவிஞர் எழுதியுள்ளார்.

"அன்பு அனைத்திற்கும் மேலானது
ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்
இறைவன் நம் எல்லோருக்கும் தந்தை
ஈரம் இறைவன் தம் அருட்கொடையே
உறவுகள் ஒன்றி வளர்வது உயர்வு
ஊனங்கள் ஒழிக்கப்படுதலே வாழ்வு

எல்லோர்க்கும் சமத்துவம் சம உரிமை

ஏற்றத்தாழ்வு மாற்றுசல் நம் பெருமை

ஐயர் கன்னியர் ஒளி பெற்ற விவேகிகள்

ஒன்றிணைவோம் நாமும் இறைத் தந்தையில்

ஓதும் கருப்பொருள் இதுவே இவ்வாண்டு

அவ்வுண்மை உணர்வோம் ஒன்றிணைவோம்"[33].

இக்கவிதையில் கவிஞர், குழந்தைகளுக்கு அன்பு, ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர், இறைவன் நம் எல்லோருக்கும் தந்தை, ஈரம், இறைவனின் அருட்கொடை, உறவுகள் ஒன்றிணைவது, ஊனங்கள் ஒழிப்பு, சமத்துவ மேன்மை, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைப் படைத்தல் முதலான சமய – சமுதாயச் சிந்தனைகளைப் பக்குவமாகப் போதிக்கின்றார். என்பது மனங்கொள்ளத்தக்க உண்மையாகும்.

4. சிறியோர் :

வளர்ந்துவிட்ட நிலையில், குழந்தைகள் சிறியோர்களாக வளர்ந்து வரும் போது, அவர்களின் உள்ளம் மற்றும் உடல் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அவர்களின் பொது அறிவுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் திறனாய்வுத் தேர்வுகளையும் கிறிஸ்தவ இதழ்கள் நடத்தி அவற்றைச் செய்திகளாக வெளியிட்டுள்ளன. இந்த வகையில் "பள்ளத்தாக்கின் லீலி", என்னும் இதழ் செய்து வருகின்ற சிறுவர்களுக்கான சமுதாயப் பணிகள் குறிப்பிடத்தக்கதாகும்.

i. பள்ளத்தாக்கின் லீலியின் சிறார் பணிகள் :

பாவச் சேறு நிறைந்த இவ்வுலகத்தில் சிறியோர்களாகிய பிள்ளைகள் சிக்கி அமிழ்ந்து விடாதபடி கரைசேர்க்கும் ஓடமாக இப்பத்திரிகை விளங்கி வருகின்றது. "பள்ளத்தாக்கின் லீலி குழந்தைகளுக்காக நடத்தப்படும் ஒரு பத்திரிகை. சிறு பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே இயேசு சுவாமியை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு நல்வாழ்வில் நடந்து வருங்காலத் திருச்சபையின் தூண்களாக மாற வேண்டும் என்ற எண்ணத்தோடு அரிய பெரிய கருத்துக்களை அள்ளி வழங்கும் அமுதமாக இப்பத்திரிகை இயங்குகின்றது. ஆவிக்குரிய சிறுகதைகளை பிரசுரித்து ஆவியின் கனிகளைப் பெற்று வாழ உதவி செய்கிறது. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் ஏற்பட வழி வகுக்கிறது"[34].

சிறியோர்களாகிய பிள்ளைகளை கிறிஸ்தவ வேதத்தோடு இணைய வைக்கும் ஒரு கருவியாகக் 'பள்ளத்தாக்கின் லீலி' செயல்பட்டு வருகின்றது. இதற்காகவே வேத வினாக்கள் பற்றிய பல்வேறு போட்டிகளை நடத்தி வருகின்றது. சங்கீதம் தொடர்ந்து சொல்லும் போட்டி, மனப்பாட வசனப் போட்டி போன்ற போட்டிகளையும் நடத்தி வருகின்றது.

ii. சூதாடுவதும் குடிப்பதும் :

சூதாடுவதும் குடிப்பதும் மிகவும் கெட்ட பழக்கமாகும். அப்பழக்கம் கொலை முதலிய கொடிய செயல்களுக்கும் வித்தாக அமைகின்றது. இதனைப் பள்ளத்தாக்கின் லீலி பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

"மாணிக்கம் - சாந்தி தம்பதியினரின் ஒரே மகன் ராஜா. அந்தியூர் என்னும் கிராமத்தில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். சிறு பருவத்திலிருந்தே வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் ஆலயம் செல்வதிலும், வேத பாட வகுப்புகளில் கலந்து கொள்வதிலும் உற்சாகமாகப் பங்கேற்ற ராஜா பட்டணத்தில் கல்லூரியல் படிக்கும் போது, கெட்ட குணமுடைய நண்பர்களோடு சேர்ந்து சூதாடல், குடித்தல், திரைப்படம் பார்த்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுகின்றான். பெற்றோர்கள் தங்கள் சொத்துக்களையெல்லாம் விற்று ஒரே மகனாகிய ராஜாவை நன்றாக வாழ வைக்க விரும்பினர். ஆனால் ராஜா தன் பெற்றோர்களுக்குத் துரோகம் செய்தவனாக வாழ்ந்து வந்தான். ஒரு நாள் குடிப் போதையில் சூதாடிய ராஜாவின் நண்பர்களுக்குள் வாக்குவாதமும், சண்டையும் ஏற்பட்டு இராஜாவின் நண்பர்களில் ஒருவனை கொலை செய்து விடுகின்றனர். நிரபராதியான ராஜா போலீசாரால் கைது செய்யப்பட்டு தண்டனைகளை அனுபவிக்கின்றான். இந்நிலையில் இராஜா மனந்திருந்தி "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப் படுத்துவாய்" (சங்கீதம் 50 : 15) என்று வேதத்தை உச்சரிக்கின்றான். உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்த போலீசார் ராஜாவை விடுதலை செய்கின்றனர்"[35].

வேதம் வாசிப்பதும் ஜெபிப்பதுமே நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் எனவும், குடிப் பழக்கத்தையும், சூதாட்டத்தையும் சிறியோர் எப்போதும் விரும்பிக் கற்றுக் கொள்ளக் கூடாது என்றும் இக்கதை வாயிலாகப் பள்ளத்தாக்கின் லீலி உணர்த்துவதை காணலாம். இறை நம்பிக்கை

எப்போதும் வீண் போவதில்லை என்பதைப் பள்ளத்தாக்கின் லீலி இதழ் அழுத்தமாகப் பல கதைகளில் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

iii. பாவத்தின் சம்பளம் மரணம் :

"செட்டிக் குளம் என்னும் சிற்றூரில் மாசில்லா மணி என்னும் பெரிய பணக்காரர் வாழ்ந்து வந்தார். மாசில்லாமணியின் தந்தை பரம்பரை பணக்காரர். சிறந்த தர்ம சிந்தனையாளர். ஆனால் மாசில்லாமணி ஏழை – எளியோருக்கு கொடுக்க வேண்டும் என்ற குணம் படைத்தவர் இல்லை. தன்னல மிக்கவர். ஊர் மக்களைக் கொடுமைப்படுத்தி கொத்தடிமைகளாக நடத்தி வந்தார். அம்மக்களின் உழைப்பைச் சுரண்டி இலாபம் சம்பாதித்தார். ஆலயச் சொத்தையும் அபகரித்துக் கொண்டார். வேதநாயகம் பிள்ளை என்னும் போதகர் மாசில்லாமணியின் இச்செயல்பாடுகளை அறிந்து அவற்றைக் களைந்து மாசில்லாமணியைக் கிறிஸ்துவுக்குள் மாற்ற வேண்டும் என முடிவு செய்தார். அவர் மாசில்லாமணிக்காக இயேசுவிடம் இரவும், பகலும் பிரார்த்தனை செய்தார். ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களை மாசில்லா மணியிடம் குத்தகைக்கு விடாமல், ஊர் மக்களைக் கொண்டு பயிரிட்டு சபை வளர்ச்சிக்காகப் பயன்படுத்தினார். இதனால் மாசில்லாமணி அடியாட்களைக் கொண்டு போதகர் வேதநாயகம் பிள்ளையைத் தாக்கினார். ஊர் மக்கள் போதகரை காப்பாற்றினர். பாதிரியார் வேதநாயகம் பிள்ளை இன்னும் சாகவில்லை என்பதைக் கேள்விப்பட்டு நிறைய குடித்துவிட்டு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பாதிரியார் இருந்த வீட்டை நோக்கிச் சென்றார் மாசில்லாமணி. வழியில்

ஆற்றைக் கடக்கும் போது ஆற்றில் விழுந்து விட்டார். போதையில் இருந்தமையால் அவரால் நீந்த முடியவில்லை. அவர் உயிரை விட்டார் "[36].

'பாவத்தின் சம்பளம் மரணம் ' என்ற வேத வாக்குரைப்பின்படி, மாசில்லாமணி தான் செய்த பாவத்தின் பலனாக மரணம் அடைந்தார். எனவே நாம் பாவத்திலிருந்து விலகிக் கடவுளுக்குக் கீழ்படிதலே நன்மையான வாழ்வைத் தரும் என்பதை பள்ளத்தாக்கின் லீலி இக்கதை வாயிலாகச் சிறியோர்களுக்கு உணர்த்துகின்றது.

iv. பள்ளத்தாக்கின் லீலியின் சமுதாயப் பணிகள் :

1983–இல் தொடங்கப்பட்ட பள்ளத்தாக்கின் லீலியின் சமுதாயப் பணிகள் குழந்தைகள், சிறியோர் மத்தியில் தொடங்கப்பட்டதாகும். வேத வசனங்களைக் கற்றுக் கொள்ளப் பள்ளத்தாக்கின் லீலி பத்திரிகை மூலமாக வினாக்கள் கொடுக்கப்பட்டு, அந்த வினாக்களுக்குரிய விடைகளைப் படித்துக் கொள்ளவும், இறுதியில் வெற்றி பெறும் சிறியோர்களுக்கும், பள்ளிப் பிள்ளைகளுக்கும் வேத புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டு வருகின்றன.

பதினைந்து ஆண்டுகளில் ஆயிரக் கணக்கான வேத புத்தகங்களை சிறியோர்களுக்கு கொடுக்க நூற்றுக்கணக்கான குடும்பங்கள் முன்வந்தன. இதனால் ஆத்துமாக்கள் ஆரோக்கியப்படுத்திக் கொள்ளப்பட்டன. வருடாந்தர கன்வென்ஷன் கூட்டங்கள் மூலமாக பல ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும், பலர் கொடிய நோய்களிலிருந்து விடுதலை பெறவும், சாத்தான் கட்டுகளிலிருந்து

விடுவிக்கப் பெறவும், பல இளைஞர்கள் கர்த்தருக்குள் தம்மை ஒப்புக் கொடுக்கவும், 'பள்ளத்தாக்கின் லீலி' ஊழியம் காரணமாக அமைந்திருந்தது.

"1992–ஆம் ஆண்டிலிருந்து 'பள்ளத்தாக்கின் லீலி'யின் சமுதாயப் பணிகள் மிகவும் பயனுள்ளதாகவும் வித்தியாசமாகவும் அமைந்தன. புற்று நோயாளிகள் மத்தியிலும், தொழு நோயாளிகள் மத்தியிலும், மலை வாழ் மக்கள் மத்தியிலும் உதவி செய்யவும் ஜெபிக்கவும்"[37] இவ்விதழ் தனது பணிப்பரப்பை விரிவுபடுத்தியது.

இவ்விதழின் சார்பாக அனைத்துச் செவ்வாய் கிழமைகளிலும் நெய்யூர் புற்றுநோய் மருத்துவ மனையிலும், அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் பென்சாம் மருத்துவ மனையிலும் மாலை ஐந்தரை மணி முதல் இரவு எட்டரை மணிவரையிலும் ஒவ்வொரு வாரமும் ஜெப ஊழியம் செய்யப்பட்டு வருகின்றது. இதில் நண்பர்களும், சிறுவர்களும், சிறுமிகளும், பெண்களும் பெருந்திரளாகப் பங்கேற்று வருகின்றனர். அவர்கள் நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்குப் பல்வேறு நிலைகளில் பொருளுதவியும் செய்து வருகின்றனர். இதனால் மருத்துவ ஊழியத்தை பள்ளத்தாக்கின் லீலி முறையாகவும், ஒழுங்காகவும் செய்து வருவது பயனுள்ள சமுதாயப் பணியாகும் என்பது புலனாகும். தொடர்ந்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் சகோதரர் வீரேந்திர குமார் குடும்பத்தையும் சுவிசேஷப் பிரதி ஒலி ஊழியத்தில் சகோதரர் டேவிட் லிவிங்ஸ்டன் குடும்பத்தையும் தாங்குவதற்குப் பலர் உதவி செய்து வருகின்றனர். இதனால் பள்ளத்தாக்கின் லீலி இதழின் சமயப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. குழந்தைகளும், சிறியோர்களும்,

இளைஞர்களும் சமய ஒழுக்கம், வேத அறிவு, பொது அறிவு, குழு வாழ்க்கை, இறைபக்தி, நன்னெறி ஆகியவற்றைப் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

'பள்ளத்தாக்கின் லீலி' இதழின் சார்பாக ஏழைப் பெண்களுக்கு திருமண உதவியும் செய்யப்பட்டு வருகின்றது. இது மிகவும் பயனுள்ள சமுதாயப் பணி ஆகும். இப்பணித் திட்டத்திற்கு லீலியின் வாசகர்கள் தங்களால் முடிந்தவரை பொருளுதவி செய்து வருகின்றன என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும்.

இதுவரையில் கேன்சர் நோயாளிகளுக்கு மாதந்தோறும், 2000 ரூபாய் உதவி செய்ய சுமார் 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்திற்கு உதவி செய்ய 80 ஆயிரம் ரூபாயும் மலைவாழ் மக்கள் மத்தியில் டி.பி. நோயாளிகளுக்கு உதவி செய்ய 30 ஆயிரம் ரூபாயும், ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு உதவுவதற்காக 20 ஆயிரம் ரூபாயும் நிரந்தர நிதியாக பள்ளத்தாக்கின் லீலி வாசகர்களும் ஆதரவாளர்களும் நன்கொடையாகத் தந்துள்ளனர் என்பது மனங்கொள்ளத்தக்க செய்தியாகும். இந்த வகையில் இவ்விதழின் கேன்சர் நோயாளிகள் மருத்துவப்பணி, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியம், மலைவாழ் மக்களின் டி.பி. நோய் உதவித்திட்டம், ஏழைப் பெண்களின் நிதியுதவி திட்டம் போன்ற பயனுள்ள பல சமுதாயப் பணித்திட்டங்கள் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

v. நெய்யூர் மருத்துவ மனையில் பணி :

1997–ஆம் ஆண்டில் நெய்யூர் மருத்துவ மனையில் புற்று நோய்ப் பிரிவில் பத்து படுக்கைகளை இலவசமாக வழங்க 10 குடும்பங்கள் முன்வந்தன. இதனைத் தொடர்ந்து சுமார் 500 குடும்பங்கள் மாதந்தோறும் 10,000 நிதியாக வழங்கவும் முன் வந்துள்ளன. இதனால் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும், சிறியோர்களும் சிறப்பான முறையில் கவனிக்கப்பட்டு வருகின்றனர். இந்த உதவிகளினால் நெய்யூர் மருத்துவமனையின் புற்று நோயாளிகளுக்கு மாதந்தோறும் மொத்தம் 9,000 ரூபாய் உதவியாக பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் 'பள்ளத்தாக்கின் லீலி'. ஊழியர்கள் மற்றும் வாசகர்களின் ஊக்கமான ஜெபமும் உற்சாகமான நன்கொடைகளுமே ஆகும்.

vi. இசை வழி ஊழியம் :

குமரி மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் உள்ள மக்கள் அனைவரும் புற்று நோயாளிகள் மத்தியில் ஊழியத்தை அறிந்துக் கொள்ள திரு. டேவிட் லிவிங்ஸ்டன் தலைமையில் இசைவழி ஊழியக் குழு ஒன்று செயல்படுகிறது. இந்த ஊழியத்தின் வாயிலாக நெய்யூர் மருத்துவ மனையின் புற்று நோயாளிகளுக்கு ஆண்டுதோறும் 5000 ரூபாய் வருமானம் நிரந்தர நிதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

vii. பள்ளத்தாக்கின் லீலி ஜெபக்குழு ஊழியம் :

1997 – ஆம் ஆண்டிலிருந்து பள்ளத்தாக்கின் லீலி ஜெபக்குழு மூலமாக 'ஒவ்வொரு மாதமும் நெய்யூர் மருத்துவ மனையின் ஏழைப்புற்று நோயாளிகள் பத்து பேர் இலவசப் படுக்கை உதவி மூலமாக 9,000 ரூபாய் உதவி பெற்று வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் மற்ற ஏழைப் புற்று நோயாளிகள் இருபது பேர் 2000 ரூபாய் உதவி பெறுகிறார்கள். ஐந்து ஏழைப் பெண்கள் திருமணத்திற்காக ரூபாய் 38500 உதவி பெற்று திருமண வாழ்வில் ஈடுபட்டு குடும்ப வாழ்க்கை நடத்துகின்றார்கள். சேராப்பட்டு மலைவாழ் மக்கள் மத்தியில் காச நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 15 நோயாளிகள் மருத்துவம் செய்யப்பட ரூபாய் 20,000 பெற்று, சுகம் பெற்று கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தி வருகிறார்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் பணி செய்யும் சகோதரர் வீரேந்திர குமார் 1300 ரூபாய் உதவி பெற்று ஊழியம் செய்து வருகின்றார். உடையார் விளை தொழுநோயாளிகள் மத்தியில் ஏழை வெளிப்புற நோயாளிகள் மருத்துவ உதவியாக ரூபாய் 150 உதவிப் பெற்று வருகின்றார்கள். 1998 ஜனவரியிலிருந்து மாதந்தோறும் 500 ரூபாயாக உதவி உயர்த்தப்பட்டுள்ளது. சுவிசேஷப்பிரதி ஒலி ஊழியம் செய்யும் சகோதரர் டேவிட் லிவிங்ஸ்டன் மாத உதவி ரூபாய் 1200 பெற்று ஊழியம் செய்து வருகின்றார்"[38]. இந்த ஜெபக்குழுவில் அபிஷேகம் பெற்றவர்களும், இரட்சிக்கப்பட்டவர்களும் ஏராளமாக இணைந்துள்ளனர். பள்ளத்தாக்கின் லீலியின் இப்பணிகள் அனைத்து தரப்பு மக்களுக்கும் மிகுந்த பய ளையும் மகிழ்ச்சியையும் தந்திருக்கின்றது என்பது மனங்கொள்ளத்தக்க உண்மையாகும்.

viii. ஆன்மீக வாழ்வு:

சிறியோர்களுக்கு ஆன்மீக வாழ்வினைக் கற்றுக் கொடுப்பது லீலியின் சமய – சமுதாய நோக்கங்களில் தலையாய ஒன்றாகும். 'இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் ' (மத் 7 :13) என்பது விவிலிய வாக்கு. ஆவிக்குரிய வாழ்வில் பலபடி நிலைகளைத் தாண்டிவிட்ட உலகம் 'முற்றிலும் வெறுத்தல்' என்னும் சிந்தனையை இழந்துவிட்டது. 'பள்ளத்தாக்கின் லீலி' ஆன்மீக வாழ்வின் மூன்று படிநிலைகளைக் குழந்தைகளுக்கும் சிறியோர்களுக்கும் பெரியோர்களுக்கும் பயன் தரும் வகையில் எடுத்துக் காட்டி உள்ளது. "ஆண்டவரின் வழி வாழ்வு, அன்பு வழி வாழ்வு, இடுக்கமான வாசல் வழி வாழ்வு, அறவாழ்வு என்பன ஆன்மீக வாழ்வின் மூன்று அடிப்படைகளாகும். 'எப்படியும் வாழலாம் ' 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற போக்குகளைக் கொண்ட இரண்டு விதமான மக்கள் உலகில் வாழ்கின்றனர். எப்படியும் வாழலாம் என்பவர்கள் விசாலமான வழியில் செல்பவர்கள். இப்படி தான் வாழ வேண்டும் என்பவர்கள் இடுக்கமான வழியில் செல்பவர்கள். (மத் 7 : 13-14) இடுக்கமான வழி என்பது இறைவன் கட்டளைகளை காத்து நடக்கக் கற்றுத் தருகின்றது. இது ஜீவனுக்குள் நடத்தும் ஆண்டவர் கிறிஸ்துவின் வழியாகும். ஜெபம், தியானம் போன்றவை ஆண்டவரிடம் நம்மை நடத்துகின்றன. சிலுவை அணிவதற்கான, அழகு படுத்துவதற்கான சின்னம் என்பதைவிட, வாழ்க்கைத்தான் சிலுவை என்று மாற்றியமைக்கப்பட்டு செயல்படுவது நல்லது. ஆவிக்குரிய மனிதனாக விரும்புகிறவர்கள் தங்கள் சுயத்தைச் சிலுவையில் அறைய வேண்டும். சிலுவைப் பாதையில் வாழ்வோர் ஆண்டவரின் வழி வாழ்கின்ற மக்கள்

கலாத்தியா் (5 : 22-23) ஆகிய வசனங்களில் ஆவியின் கனிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் முக்கியமானது கொரிந்தியருக்கு பவுல் எழுதும் போது நம்பிக்கை, விசுவாசம், அன்பு இவை மூன்றிலும் அன்புதான் நிலைத்து நிற்கும் எனக்குறிப்பிட்டுள்ளார். உன் வாழ்க்கை கிறிஸ்துவின் சிந்தையும் சாயலும் கொண்டதாகக் காணப்பட வேண்டும். ஒருவன் உண்மையிலேயே ஆன்மீக வாழ்வில் இருப்பானேயென்றால் அவனிலிருந்து அறவாழ்வைப்பிரிக்க முடியாது"[39].

ஆதலால் இந்நூற்றாண்டில் கிறிஸ்தவா்களாக வாழும் ஆன்மீகக் கூட்டத்தார்கள், அறிவு வழியைத் தேடாமல் இடுக்கமான வாசல் வழியாக நுழைந்து ஆண்டவா் வழியில் சென்று அன்பையும், அறத்தையும் காக்க வேண்டும் என்பதை 'பள்ளத்தாக்கின் லீலி' சுட்டிக்காட்டுவது மனங்கொள்ளத்தக்கதாகும்.

ix. கா்த்தரின் மேல் நம்பிக்கை :

எச். எஸ். மகிபாராஜ் எழுதியுள்ள 'கா்த்தா் மேல் நம்பிக்கையாயிருங்கள்' என்னும் சிறுகதை, நமது வாழ்வில் புயல் போன்ற சோதனைகளும் எதிா்ப்புகளும் வந்தாலும் கா்த்தா் மேல் நம்பிக்கையாயிருக்கும் போது அவற்றை பனியைப் போல் மாற்றுகின்ற தேவனாக இயேசு கிறிஸ்து உள்ளாா் என்பதை உணா்த்துகின்றது. "இச்சிறுகதையில் வரும் நிவேதா கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்த அழகிய சிறுமியாவாள். நிவேதாவின் பள்ளி வாழ்க்கை அவளை ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்தியது. அவள் படித்த

கிறிஸ்தவப் பள்ளியில் நடைபெற்ற வேதபாட வகுப்புகளுக்கும் ஜெபக் கூட்டங்களுக்கும் தவறாமல் பங்கேற்றாள். அவள் கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக் கொள்ளத் தொடங்கினாள். அதை அவளுடைய பெற்றோர்கள் வெறுத்தனர். அவள் மருத்துவக் கல்லூரியில் பயின்ற போதும் கிறிஸ்தவப் பெண்களே நண்பர்களாக இருந்தனர். அவள் மருத்தவப் படிப்பை முடித்துத் தனியார் மருத்துவ மனையில் டாக்டராகப் பணியாற்றிய போது வேதாகமத்தைப் படித்தாள் என்பதற்காக அவளது மேலதிகாரி அவளை வேலையை விட்டு நீக்கி விட்டார். திடீரென ஒரு நாள் அவளுக்கு அரசாங்க மருத்துவமனையிலிருந்து வேலைக்கான உத்தரவு வந்தது. அரசாங்க மருத்துவமனையில் மருத்துவ வேலைகளோடு ஆண்டவரைப் பற்றியும் நிவேதா பிறருக்கு அறிவிக்கலானாள். அவளது வாழ்வு ஒளி பெற்று விளங்கியது"[40].

இந்தச் சிறுகதை சிறியோர்களுக்கும் குழந்தைகளுக்கும், நம்முடைய வழியை அறிந்திருப்பவர் கர்த்தர். நம்முடைய வழியைக் கர்த்தரிடம் ஒப்படைத்துவிட்டு அவர் மேல் நம்பிக்கையாக இருப்போமேயானால் அவர் நம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார். சாத்தான் பல சோதனைகளை ஏற்படுத்திப் பார்த்தாலும் நாம் கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக் கொண்டிருப்போமேயானால் நம்முடைய நம்பிக்கை ஒரு பொழுதும் வீண் போகாது என்பதைப் பக்குவமாக உணர்த்துவதைக் காணலாம்.

ஞா. பிராங்கிளின் கோபிநாத் சிறியோர்களை நல்வழிப்படுத்தும் பல சிறுகதைகளை லீலி இதழில் எழுதியுள்ளார். 'கவலை ஏன் ?' என்னும்

சிறுகதையில், "நடுக்கடலில் கப்பல் புயலால் அலைக்கழிக்கப்பட்டது. கப்பல் உடைந்து நொறுங்கியது. அநேகர் மூழ்கினர். ஒரு தகப்பனும் மகனும் ஒரு சிறு கழியைப் பிடித்து நீந்தினர். அச்சிறு கழி ஒருவரே பிடித்துக் கொள்ளத்தக்கதாய் இருந்தது. இருவர் அதனைப் பிடித்து நீந்த முடியாது". தகப்பன் சொன்னான் மகனே! நீ இதனைப் பிடித்துக் கொள், நான் நீந்திக் கரை சேர்ந்து உன்னை எப்படியும் மீட்பேன் என்று சொல்லிச் சென்றான். தகப்பன் தெய்வாதீனமாகக் கரை சேர்ந்தான். மீட்புப் படையினருக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டான். அவர்கள் ஒரு விசைப் படகில் விரைந்தனர். நாள் முழுவதும் தேடினர். இறுதியாக ஆழ்கடலில் வெகு தூரத்தில் ஒரு மிதப்புத் தெரிந்தது. அதன் பக்கம் சென்ற போது மகன் சாகும் தருவாயில் இருந்தான். கை மட்டும் கட்டையை உறுதியாகப் பற்றியிருந்தது. நம்பிக்கை இழந்து போனாயோ ? என்று விசைப் படகோட்டி கவலையுடன் கேட்டார். அதற்கு அவன் சொன்னான் என் தந்தை உயிரோடிருக்கிற வரையில் நான் ஏன் நம்பிக்கை இழக்கிறேன் என்றான்"[41].

இச்சிறு கதை சிறியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் உலகமாகிய ஆழியில் துன்புற்றுத் தவிக்கும் மக்களுக்கு நம் பரம பிதா இயேசு கிறிஸ்து இருக்கும் வரையில் பயம் கொள்ள வேண்டியதில்லை என்பதை உணர்த்துகின்றது. ஞா. பிராங்கிளின் எழுதிய 'அன்புத்தாய் ' என்னும் சிறுகதையில், "ஒரு கொலை காரன் தூக்கிலிடப்பட இருந்தான். அவனின் தாய் அலறுகின்றாள். கூப்பாடு போடுகிறாள். உச்சி – முடியைப் பிடுங்கி அலமறுகிறாள். சட்டத்தின் முன் அவள் எம்மாத்திரம் ? மகனின்

பிரேதத்தையாவது தரும்படி கேட்கிறாள். அதையும் கொடுக்க மறுக்கிறார்கள். கடைசியாக என் மகனின் பக்கத்தில் என்னை அடக்கம் செய்ய வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டு இறந்து விடுகின்றாள்."[42]

இந்தச் சிறுகதை சிறியோர்களுக்கு அன்பு மிக்க தாயை மட்டும் அடையாளம் காட்டவில்லை. இந்த அன்புமிக்க தாயைக் காட்டிலும் இனியர் இறைவனாகிய இயேசு கிறிஸ்து என்பதையும் சுட்டுகின்றது.

ஞா. பிராங்கிளின் கோபினாத் எழுதிய 'ஒரு முத்தம் ' என்னும் சிறுகதையில், "சிறைப் பறவையான ஒரு பெண், அவள் இம்முறை சிறைக்குச் செல்லும் போது சிறை வாசலில் நின்ற யாரோ ஒரு பெண் முத்தம் கொடுத்து அனுப்பினாள். ஏழு வயதில் தன் தாய் கொடுத்த முத்தத்திற்குப் பிறகு இப்பொழுது தான் அவளுக்கு முத்தம் கிடைத்திருக்கிறது. அது யார் கொடுத்த முத்தம் ? என் மீது அன்புள்ள அவள் யார்? என் மீது அன்பு காட்டுகிற ஒரு உயிர் இவ்வுலகில் உண்டா? இவ்வாறு சிந்தித்து அவள் அழுது புலம்ப ஆரம்பித்தாள். அவளுக்கு முத்தம் கொடுத்த தெய்வ ஊழியக்காரியான அந்தப் பெண் அவளைப் பற்றிச் சிறை அதிகாரியிடம் விசாரித்தாள். அவள் மிகப் பொல்லாதவள். கெட்ட நடத்தையுள்ளவள். ஆனால் இம்முறை மிகப் பெரிய மாற்றம் காணப்படுகிறது. எனக்கு முத்தமிட்டது யார்? என்று சொல்லிக் கொண்டே இருக்கிறாள் என்றார் சிறை அதிகாரி"[43]. இவ்வாறு இந்தச் சிறுகதையில் நற்செய்தித் தொண்டரான அந்த அம்மாள் அவளை நேரில் பார்த்து இயேசு உன்னை நேசிக்கிறார் என்றதும் அவள் வாழ்க்கையே மாறிவிட்டது. நெறி கெட்டவர்களையும் நன்னெறிப்படுத்தும் இயேசுவின் வல்லமையை இச்சிறுகதை எடுத்துக்காட்டுவது மனங்கொள்ளத்தக்கதாகும்.

x. செபத்தின் மகிமை :

திருமதி கிருபா ஜெயராஜ் 'செபத்தின் மகிமை' என்ற கட்டுரையில் குழந்தைகளும் சிறியோர்களும் இயேசு கிறிஸ்துவை வழிபட்டுச் செபிக்கும் முறையை விரிவாக விளக்கியுள்ளார். "கண்ணீரோடு செபிக்க வேண்டும் ; விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் ; தேவனின் சித்தத்திற்கு ஒப்பு கொடுத்து செபிக்க வேண்டும்; தாழ்த்தி செபிக்க வேண்டும் ; போராடி செபிக்க வேண்டும்; தனியாக செபிக்க வேண்டும்; ஒரு மனதாய் செபிக்க வேண்டும்; ஆவியில் நிரம்பி செபிக்க வேண்டும்; காத்திருந்து செபிக்க வேண்டும்; ஸ்தோத்திர பலியோடு செபிக்க வேண்டும்"[44]. என வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்த வழி முறைகள் செபத்தில் ஈடுபடும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். இத்தகைய பயனுள்ள செப முறைகளைச் சிறியோர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதியும் வகையில் எடுத்துக் காட்டியிருப்பது லீலி இதழின் தனித்தன்மையாகும்.

xi. நாவினால் பாவம் செய்தல் :

நாவானது சிறிய உறுப்பாக இருந்தாலும் அது தற்பெருமையானவைகளைப் பேசும். சிறிய நெருப்பானது மிகப் பெரிய காட்டையே கொளுத்தி விடுவது போல, தற்பெருமை பேசுதல் பல்வேறு துன்பங்களுக்கு வித்தாகிவிடும். நாவினை அடக்குவது மிகவும் அவசியம். இறைவனை நாவினால் துதிக்கும் மனிதர்கள், மனிதர்களை சபிக்கின்றனர். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்தே புறப்படுகிறது. சபித்தல்

நாவினால் பாவம் செய்வதாகும். இவ்வாறு நாவினால் செய்யும் பாவங்களைப் பள்ளத்தாக்கின் லீலி இதழ்,

"பொய் பேசுதல், புறங்கூறுதல், சண்டை போடுதல், பெருமையானவைகளைப் பேசுதல், பிறரைத் தூசித்தல் (சபித்தல்), பிறருக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி கூறுதல், வீணான வார்த்தைகளைப் பேசுதல், பிறரைப் பரியாசம் செய்தல், பிறர் மனம் புண்படும் படியாகப் பேசுதல்"[45] எனப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கின்றது. தமிழ் அற இலக்கியங்கள் வலியுறுத்தும் நீதிக் கருத்துக்கள் போல, இக்கருத்துக்கள் அமைந்திருப்பது நினையத்தக்கதாகும்.

இவ்வாறு 'பள்ளத்தாக்கின் லீலி' இதழ் சிறியோர்களுக்கு அறிவுறுத்தும் நோக்கில் ஜெபிக்கும் முறை, வேதங்களைக் கற்கும் முறை, கிறிஸ்தவ விசுவாசம், நாவினால் பாவம் செய்திருத்தல், நன்னடத்தைகளைக் கற்றுக் கொடுத்தல் போன்ற சமய – சமுதாயப் பணிகளையும், தொழு நோயாளிகள் புற்று நோயாளிகள் ஆகியோருக்குப் பல்வேறு உதவிகளையும், ஏழைப் பெண்களின் திருமணத் திட்டத்தையும் செவ்வனே ஆற்றி வருவது மனங்கொள்ளத்தக்கதாகும்.

5. இளைஞர்கள் :

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் இளைஞர்களின் எதிர்கால நலனில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருக்கின்றன. இளைஞர்களை நடக்க வேண்டிய வழிகளிலும் நடத்த வேண்டிய நெறிமுறைப்படியும்

நடத்தினால் அவர்கள் முதிர் வயதிலும் அதனைவிடாது பின்பற்றுவார்கள். சீராக வளர்க்கப்படும் இன்றைய இளைஞர்கள் வருங்காலச் சமுதாயத்தைக் கட்டமைக்கும் சிற்பிகள் ஆவர். இளைஞர்களின் உடல், உள்ளம், ஆத்துமா இவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஊக்குவிப்பது கல்வியாகும். அறிவு சுற்றம் காக்கும் கருவியாகும். இன்றைய இளைஞர்கள் சந்திக்க இருக்கும் எதிர்காலம், இன்றைய முதியோர்கள் நடந்து வந்த காலத்தை விட வேறுபட்டதாகும். சிக்கலான பிரச்சனைகளைக் கொண்டதாகும். 1950 –ஆம் ஆண்டிற்குப் பின் ஏற்பட்ட தீவிரமான துரிதமான அறிவியல் வளர்ச்சியினாலும், வளர்ந்து வரும் இன்றைய தகவல் தொழில் நுட்பங்களின் புதுமையினாலும் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பல்வேறு வசதிகளையும், விந்தைகளையும், புதுமைகளையும் மாற்றங்களையும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அறிவியல் - தொழில்நுட்ப வளர்ச்சியினால் விரும்பத்தக்கதும், தகாததுமான பல மாறுதல்களும் நிகழ்வுகளும் ஏற்பட்டுள்ளன. இன்றைய இளைஞர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, குடும்பம், சமுதாயம், அரசியல் போன்ற தளங்களில் பல்வேறு சவால்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டியுள்ளது. இன்றைய இளைஞர்களின் நிலையினையும் செயல்பாடுகளையும் 'தேசோபகாரி' இதழில் ஞா. ஞானசிரோமணி 'இளைஞர்களும் வாழ்வியல் பிரச்சினைகளும் ' என்ற கட்டுரையில், "நடைமுறையில் இன்றைய இளைஞர்களிடையே காணப்படும் குறிக்கோள் இல்லாத வாழ்க்கை, சோர்பு மனப்பான்மை, சோம்பேறித்தனம், விரக்தி, தோல்வி மனப்பான்மை, கோழைத்தனம், சுய சிந்தனை, சுய முயற்சி இல்லாத நிலை, ஆடம்பர – வாழ்வில் அபரிமிதமான இச்சை – கடின

உழைப்பை ஏளனம் செய்யும் தன்மை, போலி கௌரவம், எளிதில் வஞ்சிக்கப்படும் அவலநிலை, போதைப் பொருட்களுக்கும் மதுபானங்களுக்கும் எளிதில் அடிமையாகும் பயங்கர நிலை ஆகியவை அவர்கள் வாழ்வு வளம் பெறத் தடையாக உள்ளன. இத்தகைய கண்ணிகளிலிருந்து இளைஞர்கள் விடுதலை பெற வழி வகுக்கும் வாய்ப்புகளை இன்றைய தலைவர்களும் சிந்தனையாளர்களும் உருவாக்க வேண்டும். தடைகளை, தவறுகளைச் சுட்டிக்காட்டி விளைவுகளை எடுத்துக் கூறுவதில் தயக்கம் கூடாது"[46]. என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று இன்றைய இளைஞர்களின் போக்கினை ஒட்டு மொத்தமாகக் குறிப்பதாகவும் உண்மையானதாகவும் அமைந்திருக்கின்றது.

திருமறையிலுள்ள உத்தம இளைஞர்களான யோசேப்பு, யோசுவா, தானியேல், தீமோத்தேயு போன்றவர்களின் வாழ்க்கையை வலியுறுத்தி, அவர்களை முன் மாதிரியாக வைத்துப் போதகர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் அவர்கள் நடக்க வேண்டிய வழியில் நடத்த வேண்டும். இன்றைய இளைஞர்கள் சிகை அலங்காரத்திற்கும், உடை நவீனத்திற்கும் செலவிடும் நேரத்திலும் கவனத்திலும், பாதிக் கவனம் படிப்பில் செலுத்தினால் கூட வியத்தகு வெற்றியை அடையலாம். தாய் தந்தையின் கண்டிப்பான கண்ணியம் மிகுந்த அறிவுரைகளும், வீட்டில் பரிசுத்த வாழ்வுக்கு ஏதுவான அனுபவங்களும், ஆலயங்களில் பக்தி விருத்திக்கான ஆராதனை முறைகளும் இளைஞர்களின் அறிவையும் ஆற்றலையும் பண்பையும் வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

i. வாழ்வியல் பிரச்சினைகள் :

"இளைஞர்களின் வாழ்க்கையைப் பற்றித் 'தியோடர் விட்ஸ் '

குறிப்பிடும் போது 'அது தேடுகின்ற காலம் ' என்கிறார்.

நான் யார் ? வாழ்க்கையில் என்னுடைய இடம் என்ன?

என்று தேடும் காலமாகும் "[47].

இந்த வினாவிற்கு விடை கிடைக்கவில்லையென்றால் - யாராவது இளைஞர்களை நெறிப்படுத்தவில்லையென்றால் இளைஞர்கள் தவறான பாதையில் வாழ்க்கையை நடத்துகின்றார்கள் என்பது பொருளாகும். இன்றைய வளரும் இளைஞர்களிடம் புரட்சி சிந்தனை, போதைப் பொருட்களுக்கு அடிமையாகுதல், வெறுப்புணர்வு நிலை, நம்பிக்கையற்ற நிலை ஆகிய நான்கு போக்குகள் காணப்படுகின்றன"[48].

ii. புரட்சி சிந்தனைகள் :

இன்றைய இளைஞர்கள் சமுதாய அநீதிகளை எதிர்த்துப் புரட்சிகரமான சிந்தனைகளையும் கருத்துக்களையும் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவற்றை சமுதாயமும் பெரியோர்களும் ஏற்று அங்கீகரிப்பதில்லை. இதனை 'தேசோபகாரி' இதழ், "இளைஞர்கள் சமுதாயத்தில் அநீதிகளையும் கொடுமைகளையும் காணுகின்றனர். அதை எதிர்க்க ஆவல் கொள்கின்றனர். பொருளாதார முரண்பாடுகளையும், கடின வேலை செய்தாலும் முன்னேறாத நிலையையும் காணுகின்றனர். திருச்சபையை சீர் குலைக்க முயலும் தீய சக்திகளையும் திருமறைக்கு எதிரான போக்குகளையும் காணுகின்றனர். தனது குடும்பத்தில் நீதியாக வாழ்ந்த

முக்கியமானவர்களுக்கு திடீர் என்று சில அநீதிகள் இழைக்கப்படும் போது தங்கள் வாழ்க்கையில் விரக்தியடைந்து கடவுள் நம்பிக்கையற்றவர்களாகவும், தீவரவாதக் குழுக்களோடு இணைந்து தீவரவாதிகளாகவும் மாறும் நிலை ஏற்படுகின்றது"[49]. எனச் சுட்டிக் காட்டி இருக்கின்றது. இவ்வாறு விரக்தியடைந்த இளைஞர்களை அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்தும் காலமாக இக்காலம் உள்ளது. திருச்சபை இவர்களை முறையாகப் பயன்படுத்தும் போது நல்ல முறையில் உழைப்பார்கள். வாழ்க்கையில் பலன் அடைந்து சாட்சியான வாழ்க்கையை மேற்கொள்வர். திருச்சபையிலும் இதன் மூலம் முன்னேற்றத்தைக் கொண்டு வரலாம். சில இளைஞர்கள் வாழ்க்கையில் எந்த விதமான பொறுப்பையும் ஏற்காமல் அன்பைத் தேடி அலைந்து திரிகின்றனர். சிலர் பெற்றோரின் அதிகாரத்தை வெறுத்துக்கலகம் செய்து வீட்டைவிட்டு ஓடி விடுகின்றனர். இப்படிப்பட்டவர்களைத் திருச்சபைகள் அன்பு காட்டிப் பயன்படுத்த வேண்டும். 'திடப்படுத்தல் ' வகுப்புக்களில் உரையாடி அவர்களின் உண்மை நிலையை உணர்ந்து நெறிப்படுத்த வேண்டும்.

iii. நம்பிக்கையற்ற நிலை :

இன்றைய இளைஞர்கள் வாழ்க்கையில் நம்பிக்கை வறட்சி (Pessimist) கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். "வாழ்க்கையில் அர்த்தமில்லாமையும், நோக்கமில்லாமையும், தோல்விகளும் நம்பிக்கையற்ற நிலையைக் கொண்டு வருகின்றது. கிறிஸ்தவ சமயம் வாழ்க்கைக்கு பொருள் காண சாதாரண நிகழ்ச்சிகளிலும், ஏமாற்றுக்காரர்ப்

பிரசங்கிகளையும் நாடுகின்றனர். இவற்றின் மூலம் சில இளைஞர்களின் வாழ்க்கை அர்த்தமற்றுப் போகின்றது. கிறிஸ்தவம் நம்பிக்கை சார்ந்த சமயம், எனவே நம்பிக்கை இழந்தவருக்கு திருமறையும், கிறிஸ்துவும் நம்பிக்கையூட்டுவதாகும்"[50]. இக்காலத்தில் போதகர்களும் திருச்சபைத் தலைவர்களும் இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டுவோராக அமைந்தால் இளைஞர்கள் மீட்படைவர் என்பது உறுதி.

iv. சமூக சேவை மையங்கள் :

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் இளைஞர் சமூக சேவை மையங்களை அமைத்து இளைஞர்களுக்கு வழிகாட்டுவதிலும் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வருகின்றன. இதற்குச் சான்றாக 'வைரம்' இதழில் வெளியான பின்வரும் செய்தியைக் குறிப்பிடலாம்.

"குமரி மாவட்டம் அண்டு கோட்டில் சாதி, மத வேறுபாடின்றி சமூகப் பொருளாதார நிலைகளில் பின்தங்கியுள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரியும் நோக்கத்தில் இளைஞர் சமூக சேவை மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏழைகளுக்கு மருத்துவ சிகிச்சை, வசதியில்லாத மாணவ மாணவிகளுக்குத் தொடர்ந்து படிக்க உதவி செய்தல், எய்ட்ஸ் போன்ற நோய்கள் பற்றி விழிப்புணர்வு மையம் அமைத்தல், போதைப் பொருட்களால் உண்டாகும் தீமைகளைப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்துதல், இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுதல், மூட நம்பிக்கைகளைக் களைவதற்குப் பாடுபடுதல் போன்றப்பணிகளை ஆற்ற

இம்மையம் பாடுபட்டு வருகின்றது. எம். பி. ஹரிபிரசாத் தலைவராகவும், ஜி. சதிஷ் குமார் துணைத் தலைவராகவும், கெ. ஜெயக்குமார் செயலாளராகவும் பொறுப்பேற்றுள்ளனர்[51].

இவ்வாறு குமரி மாவட்டத்தில் பல இளைஞர் சமூக சேவை மையங்களில் மக்கள் பணியாற்றி வருவது, இளைஞர்களின் சமுதாயப்பணியின் நாட்டத்தையும் செயல்பாடுகளையும் தெளிவுபடுத்துகின்றது.

V. வெற்றிக்கு முன்னோடி முயற்சியே :

முன்னாள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் பி. எம். ஏ. காதர், 'வைரம்' இதழில் 'வெற்றி இலக்கு முயற்சி முன்னோடி' என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் "வெற்றி என்பது அதிஷ்ட வசத்தாலோ அல்லது அறிவாற்றலால் மட்டுமோ கிடைத்து விடுவதல்ல. அது அளவிடப்படாத தயாரிப்புகளின் அடிப்படையிலும் ஆழமான உறுதிப்பாட்டினாலுமே நிச்சயிக்கப்படுகின்றது. தோல்வியின் மீது தான் வெற்றி அமைகிறது என்பது பார்ப்போர் கருத்துப்படி மாறுபடலாம். போட்டிகளின் இறுதிப்படியேயாகும் இது. நகம் அளவு இடைவெளியில் கூட போட்டியில் வீழ்ச்சி ஏற்படலாம். வலுவற்ற வலிமையும் மீண்டும் ஒரு முறை முயலும் வாய்ப்பைக் கைவிடுவதுமே, கிட்டவிருக்கும் வெற்றிக் கனியைக் கொய்திடக் கிடைக்கும் சூழலை நழுவ விடும் படியாக அமைந்து விடுகிறது. உரிய வாழ்க்கையின் உருவாக்கத்திற்கு வாழ்வின் உன்னத லட்சிய முடிவை நிர்ணயிப்பது அவசியம். அதன் மூலம் வரலாறு படைக்கவும், தொடர்ந்து சாதனைகளை எட்டவும் மேன்மேலும் முயற்சி தேவை. இவ்வகையில்

வெற்றியைப் படைக்கும் அனைத்து வலிமையும் சக்தியும் நம் எல்லோரிடமுமே புதைந்துள்ளன. ஓர் மிகப் பெரும் சாதனை படைப்பு நமது எண்ணத்தில் உதயமானால் அது முயற்சியால் வளர்ச்சி அடைந்து, மனவலிமையால் நிறைவடைகின்றது. அதில் தன்னிறைவு காண்பது என்பதை, திட்டமிட்ட செயலாலும், உறுதியான முயற்சியாலும் மட்டுமே பெற முடியும்"[52]. இவ்வாறு இளைஞர்களின் வெற்றிக்கு முயற்சியே முன்னோடி என்பதையும் தக்க இடங்களில் கிறிஸ்தவஇதழ்கள் எடுத்துக் காட்டியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

vi. வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் :

பள்ளிக்கல்வி முதல் பல்வேறு தொழிற் கல்வி வரைப்படித்தவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் பெருகிக் கொண்டே போகும் நிலையால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இளைய சமுதாயத்தினரை வெகுவாகத் தாக்கி வருகின்றது.

"இதற்கு அடிப்படைக் காரணம் 1998 – மே மாதம் முதல் அனைத்து மைய அரசுப் பணியாளர்களின் உச்ச வரம்பு ஓய்வு வயது 58 – இல் இருந்து 60 – ஆக உயர்த்தப்பட்டதால் தான் இரு ஆண்டுகளாகப் பெரும் எண்ணிக்கையில் புதிய பணியாளர்களின் தேர்வு, மைய அரசில் முடக்கப்பட்டுவிட்டது. இரண்டாவதாக அரசு மற்றும் தனியார் துறைகளில் கணினி மயமாக்கம் வேலை வாய்ப்பின்மையை மேலும் வளரச் செய்துள்ளது"[53].

இதனால் இன்றைய இளைஞர்கள் உள்நாட்டு வேலை வாய்புக்காகக் காத்திருப்பதைத் தவிர்த்துவிட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளின் மூலம் சாதனை படைக்கலாம் எனத் திட்டமிடுகின்றனர். அதே வேளையில் பல்வேறு இடைத் தரகர்களால் அவர்கள் பல்வேறு சோதனைகளையும் சந்திக்கின்றனர். அவர்களுக்கு 'வைரம் ' இதழ் அரசுத்துறை நிறுவனத்தின் மூலமாக வெளிநாட்டு வேலையைப் பெற முடியும் என்ற உண்மைகளையும், அதற்கான வழிமுறைகளையும், அந்நிறுவனங்களின் முகவரிகளையும் தந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

vii. வேலையின்மையும் இளைஞர்களும்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சிகள் மூலமும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மூலமும் வேலையில்லாப் பிரச்சினையை ஒழிக்கப் போவதாகவும், வேலையில்லா அனைவரும் வேலை வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்னும் மத்திய அரசின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

"எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் காலம் என்பது 1992 – லிருந்து 1997 – ஆம் ஆண்டு வரையாகும். நாலரை கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்று குறிப்பிட்டவர்கள், இந்த ஒரு வருடத்திற்குள் 90 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், வேலை வாய்ப்பு கொஞ்சமும் அதிகரிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல. அரசு துறைகளில் புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்குத் தடை, இருக்கின்ற வேலையும் பறிக்கப்பட்டு வருகின்றது. இந்திய நாடு முழுவதும் இரண்டு

இலட்சத்து அறுபதாயிரம் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து, வீதிக்கு விரட்டப்படும் அபாயம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஐந்தாண்டு திட்ட முடிவில் 53 இலட்சமாக இருந்த வேலையில்லாது பதிவு செய்தோர் எண்ணிக்கை, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 கோடியே 50 லட்சமாகவும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் சுமார் நாலரை கோடியாகவும் உயர்ந்துள்ளது. தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சியில் சுமார் 5 இலட்சம் பேர் வேலையில்லாமல் புதிதாகப் பதிவு செய்து காத்துக் கொண்டிருக்கின்றனர்"[54]. வேலையில்லா கால நிவாரணத் தொகையை உயர்த்த வேண்டுமென கோரிக்கை விடுவித்துக் கொண்டு போராடிக் கொண்டிருக்கும் காலத்தில், தமிழக அரசு இந்த நிவாரணத் தொகையை நிறுத்தியது. இது இளைஞர்களுக்கு விரோதமான அரசின் போக்கை எடுத்துக் காட்டுகின்றது. இதனைக் கண்டித்து 29-06-93 அன்று இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், தமிழகத்தின் மாவட்டத் தலைநகரங்களில் மறியல் செய்தனர். குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் ஆட்சியாளர் அலுவலகம் முன்னர் ஜனநாயக வாலிபர் சங்க மாவட்டச்செயலாளர் தோழர் ஆர். செல்லசாமி தலைமையில் நடைபெற்ற மறியல் போரில் பெண்கள் உட்பட 300 –க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். மறியலில் பங்கு பெற்றவர்களைக் காவல் துறை கைது செய்தது.

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழான 'ஏழையின் குமுறல்' வேலையில்லாத இளைஞர்களின் நலனில் ஆர்வம் கொண்டு மத்திய – மாநில அரசுகளை வன்மையாகக் கண்டித்து 'வேலையின்மையும்

இளைஞர்களும்' என்னும் கட்டுரையை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

viii. தேசம் காக்கும் போர்ப்படை :

சமத்துவ சமுதாயம் படைக்கத் துடிக்கும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் 'விடியலை நோக்கி' என்னும் மாத இதழும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்விதழில் கே. ஏ. ராஜ ரெத்தினம் 'இளைஞர்களே' என்னும் கவிதையைப் படைத்துள்ளார். பொன்விழாக் காணும் சுதந்திர இந்தியாவில் சாதி, மத, இன, மொழி வெறிகளும் வேலையின்மைப் பிரச்சினைகளும் கோரத் தாண்டவம் ஆடுகின்றன. அரசியல் கட்சித் தலைவர்கள் இளைஞர்களைத் தங்கள் சுயநலங்களுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். பகுத்தறிவுக் கோஷம் போடும் ஆட்சியாளர்களுக்கு இளைஞர்கள் துருப்புச் சீட்டுக்களாக இருக்க வேண்டும். பிரிவினை வாதச் சக்திகளுக்கு இளைஞர்கள் சாட்டையடி கொடுக்க வேண்டும். இளைஞர்கள் விழிப்புணர்வு கொண்டு தேசம் காக்கும் புதிய போர்ப்படைத் தளபதிகளாகச் செயல்பட வேண்டும் என்பதை இக் கவிதையில் கவிஞர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

"ஜாதியும் மதமும் இனமும் மொழியும்
வேலையின்மையும் வறுமையும்
நம்மை நெருடும் போது
தூபமிடும் தலைவர்களுக்கு
உம்ம சொப்பனமாய் நாமிருப்போம்

பகுத்தறிவுக் கோஷம் போடும்
ஆட்சியாளருக்கு துருப்புச் சீட்டாய்
நாமிருப்போம் இளைஞர்களே !
பிரிவினை வாத சக்திகளுக்கு
சாட்டையடியாய் நாமிருப்போம்
அடிமைத்தளை முறித்துப் புதியதோர்
தேசம் காக்கும் போர்படையாய்
வலம் வருவோம் - தேசமதில்
வாருங்கள் இளைஞர்களே !"[55]

இளைஞர்களின் வல்லமையும் ஆற்றலும் தான் சாதி, மத, இன, மொழி வெறிகளை ஒழித்து, பிரிவினைவாதங்களைக் கடந்து, வேலையின்மையும் வறுமையையும் ஒழித்துச் சமத்துவ சமுதாயத்தைப் படைக்க இயலும் என்பதைக் கவிஞர் சுட்டியுள்ள பாங்கு சிந்தனைக்குரியதாகும்.

ix. இளைஞர்களும் மத நல்லிணக்கமும் :

'மதங்கள்' என்பது மனிதனுக்காக உருவாக்கப்பட்டதே தவிர, மதத்திற்காக மனிதர்கள் உருவாக்கப்படவில்லை. மத நல்லிணக்கம் என்பது மதத்தை நேசிப்பதனால் உருவாகப் போவதில்லை. மனிதனை நேசிக்கும் போது தான் நாம் இறைவனை நேசிக்கின்றோம். எனவே உண்மையான மத நல்லிணக்கம் மனிதனிடத்திலிருந்து உருவாகின்றது. மத நல்லிணக்கத்தை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்களிப்பே மிகவும் முக்கியமானதாகும்.

இதனை இளைஞர் - மாணாக்கர் இதழான 'யுகச்சிற்பி' இன்றைய இந்தியாவில் பழமைவாதம், மத வாதம், அடிப்படை வாதம், சாதீயம் போன்றவற்றிற்கு எதிராக முற்போக்குச் சனநாயக சக்திகள் அணி திரண்டு கொண்டிருக்கிறார்கள். அறிவியல் பூர்வமாகப் பிரச்சினைகளை அணுகுவதோடு தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், தலித் மக்கள், மீனவர்கள் சார்பாக நின்று குரல் கொடுக்கிறார்கள். நமது இளைஞர்கள் இந்த முற்போக்குச் சக்திகளை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அனைத்து மத இளைஞர்களும் இணைந்து மத நல்லிணக்கத்துக்காக உழைப்பதோடு நீதியான சமூகம் மலரவும் பணியாற்ற வேண்டும்"[56]. என வலியுறுத்திக் கூறியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

X. மதுவும் இளைஞர்களும் :

இன்று குமரி மாவட்டத்தில் ஏழைகளின் போதை சொர்க்கமாகக் கருதப்படுவது 'அரிஸ்டம் ' என்ற ஒரு போதைப் பொருளாகும். ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டு, உடல் நலத்திற்காக உருவாக்கப்பட்ட இந்த மருந்து இன்று போதையை அதிகமாக்கக்குளோரோபாம் போன்ற நச்சுப் பொருட்களும் சேர்க்கப்பட்டு விற்கப்படுவது வேதனைக்குரியதாகும். நாட்டு மருத்துவர்களால் தயாரிக்கப்பட்டு உடல் நலம் என்ற பெயரில் தயாரிக்கப்படும் இந்த மதுவும், மற்ற வகை போதைப் பொருட்களைப் போலவே எல்லாப் பிரச்சினைகளையும் உடலில் உருவாக்குகின்றது. இதனை 'யுகச்சிற்பி' இதழ் வன்மையாகக் கண்டித்துள்ளது.

"அரசின் கொள்கைகளாலும், கலாச்சார மாற்றங்களாலும், இன்று போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்ற வாய்ப்பும் வசதியும் ஏராளம். குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே இந்தப் பழக்கம் அதிகமாகும் ஆபத்துக்கள் ஏராளம். பதினைந்து முதல் இருபத்தைந்து வயதுக்குள் போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் இளைஞர்கள் முப்பத்தைந்து நாற்பது வயதுக்குள் இவைகளுக்கு அடிமையாகிப் போகின்றார்கள். இளைஞர்கள் தான் ஒரு நாட்டின் மிகப் பெரிய சக்தி, அவர்கள் தங்கள் முகவரியைப் போதைக்குள் தொலைத்துவிட்டால் ஒரு நாடே முகவரி இல்லாமல் போய்விடும். இளைஞர்கள் தங்களிடம் உள்ள சக்தியைக் கொண்டு ஆக்கப் பூர்வமாகச் செயல்பட வேண்டுமென்றால் இந்தப் போதைப் பொருட்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்"[57]. என்று பொறுப்புணர்வோடு 'யுகச் சிற்பி' இதழ் இளைஞர்களின் மதுப் பழக்கத்தைச் சாடியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இவ்விதழில் "மரியா எழுதியுள்ள 'வேலையில்லாத் திண்டாட்டம் ' என்ற கட்டுரை, இன்றைய இளைஞர்கள் வேலையின்மையால் அனுபவித்து வரும் கொடுமைகளையும் அவலங்களையும் சுட்டிக் காட்டுவதாக"[58] அமைந்துள்ளது.

xi. இளைஞர்களும் புரட்சியும் :

இன்றைய இளைஞர்களைத் தவிர்த்து விட்டுத் திருச்சபைகள், சமூகம் ஆகியன தனித்து செயல்பட முடியாது. மாற்றத்தின் - முன்னேற்றத்தின் - வளர்ச்சியின் - புரட்சியின் கருவிகளாகச் செயல்பட வேண்டியவர்கள் இளைஞர்களே. உணர்ச்சி, ஆர்வம், உற்சாகம், ஆற்றல், தீவிரத் தன்மை,

புதுமையை விரும்பும் படைப்பாற்றல், வேகம் ஆகியனவற்றில் மொத்த வடிவமே இளமையாகும். 15 வயது முதல் 35 வயது வரையுள்ள மனிதர்களின் தொகுதி தான் இளமை. அதாவது சமுதாயத்தில் எண்ணிக்கையாலும் வயதாலும் மிகப்பெரிய மனித வளத்தை உள்ளடக்கியது இளமையாகும். மனித ஆற்றலின் தோற்றுவாயே இளமை தான். ஒரு சமூக வளர்ச்சியின் அடிப்படையாக இருப்பது அந்த சமூகத்தின் இளமையே ஆகும்.

"இந்த சமூகமும் திருச்சபையும் உங்களை எதிர்பார்த்தே காத்திருக்கின்றது. எனவே மனித நேயத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். மனித குல முன்னேற்றத்தில் நாட்டம் கொள்வது தான் மனித நேயம். ஒருவன் தனக்காகவே பாடுபட்டுத் தன்னல வழியில் நடப்பானானால், ஒரு வேளை அவன் புகழ்மிக்க அறிஞனாகலாம், மாமேதையாகலாம். தலை சிறந்த கவிஞனாகலாம். ஆனால் ஒரு நாளும் நிறைவு பெற்ற மனிதனாக வாழ முடியாது. உண்மையில் மகத்துவம் பெற்ற மாமனிதனாக முடியாது. எதை அடகு வைத்தாலும் உங்கள் சிந்தனையை அடகு வைக்காதீர்கள். மக்கள் சார்பாக நின்று சிந்தியுங்கள். மக்களுக்காக நல்லது எதையும் செய்யத் துணியுங்கள். 'செய் ' அல்லது 'செத்துமடி' என்ற தாரக மந்திரத்தை இரத்த நாளங்களிலே ஓடச் செய்யுங்கள். புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் சொன்னதை நினைவில் வையுங்கள்

குன்றினைப் போல் உடல் வன்மை வேண்டும்
கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும்
தின்றதை தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்வில் புதுமை காண வேண்டும்"[59]

இவ்வாறு இளைஞர்களின் புரட்சிப் போராட்டங்களினால் தான் புதிய சமுதாயத்தைப் படைக்க முடியும் எனக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ - இதழ்கள் வலியுறுத்திக் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கதாகும்.

xii. இளைஞர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் :

இன்றைய இளைஞர்களின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் குறித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் சிந்தித்துள்ளன. அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்றவை இளைஞர்களைக் கட்டுப் போட்டு இறுக்கி வைத்துள்ளன. இதனை முளைவிளை எஸ். ஜாண்சன் 'இன்றைய இளைஞர்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் ' என்ற கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இன்று அரசியல் வாதிகள் பல திட்டங்களை இளைஞர்களுக்குக் கொண்டு வந்தாலும் அதைச் செயல்படுத்துவதில் குருடர்களாகவே உள்ளனர். அரசியல் வாதிகள் பல பேர் இளைஞர்களைப் பற்றி அக்கரைப்படுவதே இல்லை. தங்கள் சுய லாபத்திற்காக கட்சி விட்டுக்கட்சித் தாவும் தன்னல அரசியல் வாதிகளால் இளைஞர்கள் நலம் காக்கப் படமாட்டாது.

"இன்று இளைஞர்கள் பல பேருக்கு வேலை வாய்ப்புகள் இல்லை. காரணம் அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையாகும். சரியான திட்டமிடுதல் இல்லை. இளைஞர்களுக்குத் தகுதியின் படி வேலை வந்தும் அதற்குஇலஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை. ஒருவேளை இலஞ்சம்

கொடுக்கப் பொருளாதாரம் இல்லாவிட்டால் அவர்களுக்கு வேலை இல்லை. இதில் சோர்ந்து போன பல இளைஞர்கள் சமுதாயத்தில் ரவுடிகளாக வலம் வருகிறார்கள். சமுதாயத்தில் இன்று இளைஞர்கள் மிதிக்கப்படுகிறார்கள். இளைஞர்கள் எந்தவொரு நல்ல காரியம் செய்தாலும் சமுதாயத்திலுள்ள 50 சதவீதம் முதியவர்கள் இளைஞர்களைத் தட்டிக் கொடுக்காமல் இளையோர்கள் செய்கின்ற நற்செயலைத் தட்டிவிடுவதிலேயே குறியாக உள்ளனர். இன்று மதங்கள் இளைஞர்களின் முற்போக்கை பிற்போக்கு ஆக்குகின்றது. குறிப்பாக இந்து மதத்தில் 'கர்ம வினை' என்றும், முஸ்லீம் மதத்தில் 'கீழ்ப்படிதல்' என்றும், கிறிஸ்தவ மதத்தில் 'ஜென்ம பாவம்' என்றும் கருப் பொருள்கள் உள்ளன. இக்கருப் பொருள்கள் இளைய தலைமுறைகளை எண்ணெயிலிட்ட அப்பளத்தைப் போல வாட்டி வதைக்கின்றது. தற்போதும் நம் சமுதாயம் பல மூட நம்பிக்கைகளைப் பின்பற்றுவது இளைஞர்களின் வளர்ச்சியில் இடிவிழுந்தது போல் உள்ளது. உண்மையான காதல் எது என்பதைப் புரிந்து கொள்ளாமல் பல இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையைச் சீரழிக்கின்றார்கள். வெறும் உணர்ச்சியை மட்டும் மையப் படுத்தும் போக்கைக் காதல் என்று எண்ணி வாழ்நாட்களை வீணடிக்கின்றார்கள். நாகரீக மோகம் என்பது இன்று இளைஞர்களை வாட்டும் ஒரு கொடிய வைரஸ் ஆகும். ஒவ்வொரு இளைஞனும் தன்னைச் சினிமாவில் வரும் கதா பாத்திரம் போல கற்பனை செய்து கொண்டு பூலோகத்தில் பூப்பறிக்க முயலுகிறான். திரைப்படக் கதா நாயகன் போல ஆடைகளையும் அணிந்து கொண்டு கைக்கு எட்டாத கனவில் ஆசைப்படுகிறார்கள். திரைப்படம், டெலிவிஷன் போன்ற விளம்பரச்

சாதனங்களால் விளம்பரப்படுத்தப்படும் பொருட்களை வாங்க இளைஞர்கள் பம்பரமாய்ச் சுழலுகின்றார்கள்"[60].

இவ்வாறு யுகச் சிற்பி இதழ் அரசியல், பொருளாதாரம், சமூகம், மதம், மூடநம்பிக்கை, காதல், நாகரீக மோகம், திரைப்படம், தொலைக்காட்சி ஆகியன எவ்வாறு இளைஞர்களின் வீழ்ச்சிக்கும் காரணங்களாக அமைகின்றன என்பதைப் படம் பிடித்துக் காட்டியிருப்பது நினையத்தக்கதாகும்.

xiii. சுதந்திர இந்தியாவில் இளைஞர்களின் பணி :

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமையாகும். அதிலும் முக்கியமாக இளைஞர்கள் பணி இதில் மிகுந்துள்ளது. மனித வாழ்வில் முக்கியமான பகுதி இளமைக்காலம். இளமைக் காலத்தில் நம் வாழ்வு நெறிப்படுத்தப்பட்டால் ஆயுள் முழுமையும் மன நிறைவோடு வாழலாம். இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் பல்வேறு கோணங்களில் சிந்தித்து இளைஞர்களின் கடமைகளையும் வலியுறுத்தியுள்ளன. 'யுகச் சிற்பி' இதழில் அ. தாயல் லென்ஸ் 'இளைஞர்களே ! சுதந்திர இந்தியாவில் நம்பணி' என்னும் கட்டுரையில், "சாதி வேறுபாடு நம் நாட்டின் ஒற்றுமைச் சீர் குலைவிற்கு முதற் காரணமாகும். சாதிகளை ஒழிப்பதற்கு உரிய வழிகளுள் ஒன்று கலப்புத் திருமணம் ஆகும். கலப்புத் திருமணங்களை அரசு ஊக்குவித்து வருகின்றது. சட்டத்தால் சாதியை ஒழிப்பதை விட மக்கள் மனமாற்றத்தால் சாதியை ஒழிப்பதே சாலச் சிறந்ததாகும். ஆகவே இளைஞர்கள் ஒவ்வொருவரும்

கலப்புத் திருமணம் செய்ய முன்வர வேண்டும். குழந்தைகள் இதயத்திலும் தீண்டாமை எண்ணம் சிறிதும் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும். நம் பெயர்களின் பின் சாதியைச் சுட்டிக் காட்டக் கூடாது. ஒவ்வொரு இளைஞர்களும் தங்கள் ஊர் முன்னேற்றத்தால் இன்றியமையாத பங்கு வகிக்க வேண்டும். அரசாங்கத்தின் திட்டங்களை அறியாமை மிகுந்த மக்களுக்கு விளக்கிக் கூறி அவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து அவர்களை முன்னேற்றப் பாதையில் வழி நடத்த வேண்டும். ஆங்காங்கே இளைஞர் மன்றங்களைத் தோற்றுவித்து தங்கள் மன்றங்களின் சார்பாகப் பட்டி மன்றங்கள், சொற்பொழிவுகள், மேடை நாடகங்கள் போன்றவற்றை நடத்தி அதன் மூலமாக மக்களுக்கு நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறி அவர்களை நாட்டு நலனில் நாட்டமுள்ளவர்களாக மாற்ற வேண்டும். சிறு சேமிப்பு, நோய் தடுக்கும் முறைகள், குடும்பநலத் திட்டம், சட்டங்களை மதித்தல், வரதட்சணை மறுத்தல் போன்றவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றின் நன்மைகளை மக்களுக்கு விளக்கிந்தொண்டுள்ளம் கொண்டவர்களாக வாழ வேண்டும். இவ்வாறு வாழ்வதன் மூலம் எதிர் காலத்தில் இந்தியாவை இயக்கும் உரிமை பெற வாய்ப்பு உள்ளது. ஒவ்வொரு இளைஞனும் இராணுவத்தில் பங்கேற்க வேண்டும். நம் பாரத நாடு உலக அரங்கில் தன்னிறைவு பெற்றுப்புகழ் மிகுந்து விளங்கிட ஒவ்வொரு இளைஞனும் 'என் கடன்' என்ற குறிக்கோள் கொண்டு வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன்பட வாழ வேண்டும்"[61]. இவ்வாறு கலப்புத் திருமணம் செய்தல், சாதியை ஒழித்தல், ஊர் முன்னேற்றத்திற்கு உழைத்தல், அரசின் திட்டங்களை மக்களுக்கு

விளக்கிக் கூறல், இராணுவத்தில் பங்கேற்றல் என்ற நிலைகளில் இளைஞர்களின் கடமைகளைக் கிறித்தவ இதழ்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

xiv. 2000 – ஆம் ஆண்டின் சவால்களும் இளைஞர்களும் :

மனிதன் என்று தோன்றினானோ அன்றிலிருந்தே மனிதன் எண்ணற்ற சவால்களையும், ஏமாற்றங்களையும் எதிர்பார்ப்புக்களையும் சந்திக்கத் தயாரானான். மனித குலம் எந்த அளவுக்கு வளர்ச்சி வேகம் கண்டுள்ளதோ அந்த அளவை விட ஆயிரம் மடங்கு மனித குலம் அழிவை எதிர் கொண்டு உள்ளது. இதனை அ. அலெக்ஸ் '2000–ஆம் ஆண்டில் சவால்களும் இளைஞர்களும் ! என்ற கட்டுரையில் தெளிவு படுத்தியுள்ளார். "இளைஞர்களிடம் பெருகி வரும் போதை மோகம், பாலியல் சீரழிவுகள், வன்முறைகள், வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவை மனித நேயச் சிந்தனையாளர்களிடம் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. 'பெத்தடின்' போன்ற போதை ஊசிகளைப் பயன்படுத்தித் தன்னை மறந்து இன்பம் கொள்கிறது இளமை. பள்ளி மாணவனிடத்தில் போதை ஒரு கலாச்சாரமாக மாறியுள்ளது. பான்பராக் , துள்சி, கணேஷ், கானஸ், மாணிக்சன்ட், ருட்கா இவ்வாறு பெருகி வரும் போதைப் பொருட்களை ஒழிக்க அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பம்பாயின் மையப் பகுதியில் இருக்கிற ஒரு கேளிக்கை விடுதியில் தினந்தோறும் மாலை ஆறு மணிக்கு மேல் 10 மணிக்குள்ளாக 150 இளம் பெண்கள் சென்று வருவதாக ஒரு அறிக்கை குறிப்பிடுகின்றது. பல்வேறு பிரபல மருத்துவ மனைகளில் நடத்தப்பட்ட இரகசியக் கணக்கெடுப்புகள்

ஆண்டுதோறும் அதிகரித்து வரும் கருக்கலைப்பு களைச் சுட்டிக் காட்டுகின்றன. ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு, பேருந்துகளில் பயணிகள் வெட்டிக் கொலை, தங்கச் சங்கிலி பறிப்பு, வங்கியில் பூட்டை உடைத்துக் கொலை, இளம் பெண் கற்பழிப்பு, ஈவ்டீசிங் - கொடுமைகள் என்ற வண்ணம் ஒவ்வொரு நாளும் திகைப்பூட்டும் செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. இத்தகைய அநீதிகளில் 90 சதவீதம் நேரடியாகப் பங்கு பெறுவது இளைஞர்களே. வேலையில்லாதவர்களில் குமரி மாவட்டத்தைக் கணக்கிட்டால் 1999 – ஆம் ஆண்டின் கணக்குப்படி இரண்டு லட்சத்துப் பத்தாயிரம், இன்று பெருகி வரும் சமூகக் குற்றங்களுக்கு வளர்ந்து வரும் வேலையின்மையே முக்கியக் காரணம் என்று சமூகவியலார் கருத்துத் தெரிவித்துள்ளார்"[62].

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் 2000 ஆம் ஆண்டில் இளைஞர்கள் போதை மோகம், பாலியல் சீரழிவுகள், வன்முறைகள் போன்ற தீய செயல்களில் ஈடுபடுதையும், வளர்ந்து வரும் இச் சமூகக் குற்றங்களுக்கு இளைஞர்களுக்கு வேலையின்மையே காரணம் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு இருக்கும் சூழலில் நாள்தோறும் இயந்திர மயமாக்கலின் மூலமாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலையிழந்து வீதிக்கு வரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையும் முக்கியக் காரணமாகும். இவ்வாறு பெருகி வரும் வேலையின்மை நாளைய இளைய சமுதாயத்தை மீண்டும் சவால்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் இழுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

xv. இளைஞர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் :

1998 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இராண்டாவது வாரத்தில் சென்னையில் நடைபெற்ற தேசிய இளைஞர் விழாவில் கலந்துக் கொண்ட தமிழக முதல்வர் தமது சிறப்புரையில், இளைஞர் நலத் திட்டத்தின் கீழ் 10000 போலீசார் தேர்வு செய்யப்படுவார்கள் என அறிவித்தார். 'உண்மை ஒலி' இதழ் அவர்களுக்கு வழிகாட்டி உள்ளது. "நமது இளைஞர்கள் காலையில் தினமும் ஓட்டப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். திரும்பத் திரும்ப 80 முதல் 100 மீட்டர் வரை ஓட வேண்டும். சற்று இளைப்பாறுதலுக்காக இடையே நடக்கலாம். இந்தப் பயிற்சி அவர்களின் பயத்தைப் போக்கும். இதன் மூலம் நம் பழக்க வழக்கங்கள், மனநிலை மற்றும் நம் நடத்தைகளையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியும். நம் குமரி மாவட்டத்தைச் சார்ந்த உடற்கல்விப்பயிற்சியாளர் திரு. ராப்சன் அவர்களால் தான் தேசிய உடற்தகுதிச் சோதனைகள் உருவாக்கப்பட்டுள்ளன"[63]. இவ்வாறு இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும் வழிகாட்டுதல்களையும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் செய்து வருவது மனங்கொள்ளத் தக்க செய்தியாகும்.

xvi. இளைஞர்களின் வல்லமையும் வலிமையும் :

வலியோரைப் வாழ்த்தி எளியோரைத் தாழ்த்தும் அநீதிச் சமுதாய அரங்கில் எளியோருக்கு நற்செய்தி, சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை வாழ்வு, நெருக்கப்பட்டோர் - ஒடுக்கப்பட்டோருக்கு உயர்வு என்று பறை

சாற்றுகின்றது. 'விண்ணரசு இதழ்' நற்செய்தியை அறிவிப்பதும், பிரசங்கிப்பதும் மட்டுமல்ல, வாழ்ந்து காட்டலாம் என்ற உண்மைக்கு புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்கி வைத்ததும் இவ்விதழே ஆகும்.

"உள்ள உறுதியும் திடகாத்திரமான நம்பிக்கையும், தெளிவான இறையறிவும் கொண்ட இளைஞர்களால் இவ்வுலகம் அநீதிகளைக் களைய முடியும் என்று வாழ்வியலுக்குப் புதிய நெறியை வகுத்துக்காட்டி கொண்டிருக்கின்றது விண்ணரசு. 'வாழ்க்கை வாழ்வதற்கே, செய் அல்லது செத்துமடி' என்ற சித்தாந்தத்தை தலைமேற் கொண்டு, வாழ்வியல் போராட்டத்தில் கோழையாக வாழாதே' என்றொரு அறை கூவலைப் பறை சாற்றிக் கொண்டு,

'வாழ்க்கை ஒரு கணக்கு நண்பா
கடவுள் அதைச் செய்யச் சொன்னார்
வழியை அவர் சொல்லித் தந்தார்
விழியை அதில் வைத்துச் செய்வாய்'.

என்றொரு இலக்கணத்தை வகுத்துத் தந்து வழிகாட்டி நிற்கின்றது விண்ணரசு. கறுப்புப் பணத்தை உண்மையான பணமாக மாற்றும் ஹவாலாக்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிய உறுதியான நம்பிக்கையும், திட காத்திரமான ஒப்படைப்பும் கொண்டு, விசுவாசத்திலும் அன்பிலும் நிலைத்திருக்கும் இளைய சகோதரனே வீறு நடை போட்டு எழுந்து வா என்று வீரச் சவால் விடுகின்றது விண்ணரசு. 21 – ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்க அயராத உழைப்பும், உழைப்பினால் உயர்வும் பெற்ற சமய, சமூகத் தலைவர்களைப் பயிற்றுவித்து உழைப்பின் பெருமையை உலகறியச் செய்ய

உயிர்த்துடிப்புடன் இளைஞர்களை இணைத்துச் செயலாற்றுகின்றது விண்ணரசு"[64].

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் இளைஞர்களின் வல்லமையையும்வலிமையையும், செயல் திறன்களையும் எடுத்துக்காட்டி இளைஞர்கள் முன்னேற்றத்திற்கு உழைத்து வருகின்றன.

xvii. பங்குப் பேரவையில் இளைஞர்கள் :

குமரிக் கோட்டாறு மறை மாவட்ட இளைஞர் ஆணைக்குழு, இளம் கிறிஸ்தவ மாணவர், இளம் மாணவர் இயக்கம், இளைஞர் இயக்கம், அய்க்க.்.ப் என்ற இயக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. சிதறிக் கிடக்கும் மாணவர்கள், இளைஞர்களை ஒருங்கிணைத்து, அவர்கள் தம் பிரச்சினை, நாட்டின் பிரச்சினை இவைகளை விஞ்ஞான ரீதியாகச் சிந்திக்கச் செய்து சமுதாய மாற்றம் கொண்டு வரப் பொறுப்புள்ள தலைவர்களாக்கி திருச் சபையிலும் சமுதாயத்திலும் ஈடுபட வைப்பதே இளைஞர் ஆணைக் குழுவின் நோக்கமாகும். குறிக்கோளுக்கு ஏற்ப அவர்களை உருவாக்கும் பயிற்சியானது பங்கு, பள்ளி, வட்டாரம், மறை மாவட்டம் ஆகிய நிலைகளில் கொடுக்கப்படுகின்றது. இந்த நல்ல நோக்கத்தைக் குமரிக் கிறிஸ்தவ இதழ்கள் வெளிப்படுத்தியுள்ளன. 'தென் ஒலி' இதழில், "திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் இளைஞர்கள் தேவை 'உண்மை எதுவோ, நீதி எதுவோ, தூயது எதுவோ (பிலி 4 :8) இனியது எதுவோ' இவைகளைத் தேடிப்பற்றிக் கொள்கின்ற இளைஞர்கள் இன்று அதிகமாகத் தேவைப்படுகின்றனர். தன்னலத்தைத் தாண்டி, உயர்ந்த இலட்சியம் கொண்ட இளைஞர்களுக்காக சமுதாயம் ஏங்குகின்றது.

இளைஞர்களே! நீங்களே திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் உயிர் நாடி, உங்களுடைய திறமைகள், சக்திகள், இலட்சியம் இவைகளை ஆக்கப்பூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்த முன் வாருங்கள் "[65]. என இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன. இதிலிருந்து பங்குப் பேரவையில் இளைஞர்களின் பங்களிப்பினை அறியலாம்.

xviii. இளைஞர்களின் விபரீதத் தேடல்கள் :

இன்றைய நாகரீக இளைஞர்களின் விபரீதத் தேடல்களையும், மாணவர்களின் கேலிவதைகளினால் பாதிக்கப்படும் கல்லூரி மாணவியர்களைப் பற்றியும் குமரிக் கிறிஸ்தவ இதழ்கள் சிந்தித்துள்ளன. இளைஞர்களின் 'ராக்கிங் ' கொடுமையின் உச்சக்கட்டமாக மருத்துவக் கல்லூரி மாணவர் நாவரசுவின் உயிர் பலியிடப்பட்டது. கேலி வதையின் உச்சக் கட்டமாக சென்னை எத்திராஜ் கல்லூாயில் படித்த மாணவி சரிகாஷா உயிரிழக்கின்றாள் இதனைக் கண்டித்து 'நம் வாழ்வு' இதழ்,

"'ஈவ்டீசிங் ' செய்யும் இளைய சமுதாயம் தன் உறவினர், சகோதரிகள் பாதிக்கப்படுவது தெரிந்தும் இச்செயலில் ஈடுபடுகின்றது என்பது வெட்கக் கேடான விசயம். பெரும்பாலான இளைஞர்களிடம் குறிக்கோள் இல்லை. பட்டம் பெறுவது சமுதாயத்திற்குத் தொண்டு செய்யும் நுழைவுச் சீட்டு என்ற எண்ணம் இல்லாதவர்களாகப் படிப்பதும், முன்னேறுவதும் வெறும் பணத்துக்காக என்ற எண்ணம் தான் மேலோங்கியுள்ளது. இளைஞன் தன்னுடைய விபரீதத் தேடல்களான சினிமா மோகம், பாலியல் வன்முறை, மேற்கத்திய கலாச்சாரம், போதை, சுய நலம் இவற்றை விடுத்துத் தேசியம், மொழி, பொது நலன், ஒழுக்கம், மனித நேயம் இவற்றை அடிப்படையாகக்

கொண்டு 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற முது மொழிக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்"[66] என்று இளைஞர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக செய்திகளைப் பரவலாக வெளியிட்டு இளைஞர்களை ஊக்குவித்திருப்பதைக் காணலாம்.

6. பெண்கள் :

'பெண்கள் ' என்றால் சமூகத்தில் இரண்டாம் தரமானவர்கள் என்றும், 'ஆண்கள் ' என்றால் முதல் தரமானவர்கள் என்றும் மக்களின் நாடி நரம்புகளில் உறைந்து மிக இயல்பான ஒன்றாகிவிட்டது. ஆதலால் பெண்களால் சில வேலைகளைச் செய்ய முடியாது என்றும், அவர்கள் உடல் வலிமைக் குறைந்தவர்கள் என்றும் இச்சமூகம் ஒதுக்கி வைத்தது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், தீமைகள் கொஞ்சமல்ல, நமது நாட்டின் சட்டங்கள், சமயங்கள், இலக்கியங்கள், நாட்டுப் பழமொழிகள், மரபுகள் அனைத்தும் பெண்களைக் குறைவாகவே மதிப்பீடு செய்கின்றன. ஒரு ஆண் பிரம்மச்சாரியாக இருந்தால் அது அவனுக்குப் பெருமையாகும். ஒரு பெண் திருமணமாகாத கன்னியாக இருந்தால் அது அவளுக்கும் அவள் பெற்றோருக்கும் இழுக்காகும். விதவைப் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் எண்ணற்றவை.

பெண்ணுக்கு மட்டும் 'கற்பு நெறி' வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்குப் புராண இதிகாசங்கள் சான்றளிக்கின்றன. பெண்ணுக்கு 'விபச்சாரி' என்று பட்டம் சூட்டும் சமுதாயம், அதற்குக் காரணமான ஆண்களை 'விபச்சாரக்காரன் ' என்று அழைப்பதில்லை. சமயங்களில் இந்து சமயம் மட்டும் அன்று, கிறிஸ்தவமும் இசுலாமும் கூடப் பெண்களைக் குறைவாகவே மதிப்பிடுகின்றன. 'திருமணமான பெண்களே, ஆண்டவருக்கு அடங்கியிருப்பது போல, நீங்கள் உங்கள் கணவருக்கு அடங்கியிருங்கள் ' (எபே. 5 : 22) 'ஆணுக்குப் பெண்ணின் மீது அதிகாரம் உண்டு. ஏனென்றால் அல்லா ஆணைப் பெண்ணைக் காட்டிலும் உயர்வாகப் படைத்தார்'. (குரான்) .

சமூக நடப்புக்களே இலக்கியமாகவும், பழமொழிகளாகவும் எதிரொலிக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பெண்களைக் கட்டுப்படுத்தும் நம் நாட்டுப் பழமொழிகளைக் குறிப்பிடலாம். சான்றாக 'பொம்பளை சிரிச்சா போச்சு ! புகையில விரிச்சாப் போச்சு', 'அடுப்படியே திருப்பதி', 'ஆம்படையானே குல தெய்வம்' போன்ற பழமொழிகளைக் குறிப்பிடலாம்.

இருப்பினும் பெரியோர் பலரின் விழிப்புணர்வின் காரணமாக நம் நாட்டில் பெண்களுக்குச் சாதகமான சட்டங்கள் பல இயற்றப்பட்டுள்ளன. சான்றாக 'சதி' ஒழிப்புச் சட்டம், இந்து – விதவை மறுமணச்சட்டம், குழந்தை மணத் தடுப்புச் சட்டம், கலப்பு மணங்களை ஆதரிக்கும் சட்டம், விபச்சாரத் தடைச் சட்டம், வரதட்சணை ஒழிப்புச் சட்டம், பேறுகால விடுப்புச் சட்டம், பெண்கள் கேலிவதைச் சட்டம் போன்ற சட்டங்களைக் குறிப்பிடலாம். இச்சட்டங்கள் பெண்கள் வளர்ச்சிப் பாதையில் செல்கிறார்கள் என்பதற்குச் சான்றளிக்கின்றன. ஆனால் இவை முழுமையான பெண் விடுதலை அன்று.

முழுமையான பெண் விடுதலைக்கு ஆண்களும், பெண்களும் இணைந்து மனிதநேயத்துடன் செயல்பட வேண்டும். இதற்குக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வழிகாட்டுகின்றன.

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் பெண்களின் பிரச்சினைகள், பெண் விடுதலை, பெண்கள் முன்னேற்றம், பெண்கள் - எதிர் கொள்ளும் பிரச்சினைகள், பெண் கல்வி, குணமுள்ள குடும்பப் பெண்கள், சமயங்களில் பெண்களின் நிலை, திருச்சபை வளர்ச்சியில் பெண்களின் பங்கு, பெண் சிசுக் கொலை, பெண்ணடிமைத் தனம், இல்லத்தரசிகளுக்கு, பாலியல் பலாத்காரம், கற்பழிப்பு, சமூகத்தில் பெண்களின் நிலையும் எதிர்கால நடவடிக்கைகளும் , மகளிருக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு கேட்டு விழுப்புரத்தில் நடைப்பெற்ற மகளிர் மாநாடு, காஷ்மீரில் திருமணமான பெண்களின் அவல நிலை, வரதட்சணைக் கொடுமை, சங்க காலத்தில் பெண்களின் மதிப்பு, மத அடிப்படை வாதமும் பெண்களும், பெண்கள் கேலிவதை, குமரியில் பெண்கள் எழுச்சி, விவிலியமும் பெண் விடுதலையும், பெண்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள், பெண்களும் விளம்பரமும், பெண்களின் அவலங்கள், பெண்மையின் பேராற்றல், பேதலித்து நிற்கும் பெண்மை, பெண்களுக்கான சமையல் குறிப்புக்கள், வீட்டுக் குறிப்புக்கள், மகளிர் மேம்பாட்டு மன்றம், பெண்ணுக்குச் சம உரிமை, அமைப்பு முறையும் பெண்ணுரிமையும், பெண்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள், கலாச்சாரமாகிவிட்ட அழகிப் போட்டிகள், பெண்ணடிமை வளர்ந்த வரலாறு, பெண்களின் திருமணப் பிரச்சினைகள், மதவாதத்திற்கு எதிராகப் பெண்கள் ஆகியன குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன. சான்றுகளாகப் பின்வரும் செய்திகளை விரிவாக விளக்கலாம்.

i. புதிய ஏற்பாட்டின் முதல் பெண் பிரசங்கி :

இயேசுவின் பிறப்பு பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் பெண்கள் அவரது ஊழியத்தை மிகவும் தாங்கி வந்துள்ளனர். குழந்தை இயேசுவை ஆலயத்திற்குக் கொண்டு சென்றவரும், அவரை வாழ்த்திப் பிரசங்கித்தவரும் அன்னாள் என்ற பெண்மணியே ஆவாள். அன்னாள் ஒரு தீர்க்கத்தரிசி. இளம் வயதில் திருமணமாகி ஏழே ஆண்டுகளில் விதவையானவள் எண்பத்து நான்கு வயதாகியும் ஆலயத்தை விட்டு நீங்க ாமல் இரவும் பகலும் உபவாசித்துச் செபம் பண்ணித் தொழுகை செய்து கொண்டிருந்தவள். இப்பெண்மணியின் பெருமைகளைப் பற்றி 'தேசோபகாரி' இதழ், "ஆலயத்தைவிட்டு நீங்காதிருந்த அன்னாள் பெத்லகேம் பாலனைத் தரிசித்தாள். பெண்களாகிய நாம் ஆலயத்திற்குச் செல்வதில் மிகுந்த ஆர்வம் காட்ட வேண்டும். அப் போது தான் குழந்தைகளுக்கும் ஏனையோருக்கும் நாம் முன் மாதிரியாக இருக்க முடியும். நம் வாழ்வில் இயேசுவின் பிரசன்னத்தைக் காண வேண்டுமானால் நாம் அன்னாளைப் போல் ஆலயத்தை அதிகமாக நாட வேண்டும். அன்னாள் இரவும் பகலும் உபவாசித்து செபித்தாள். நம் வாழ்வில் ஆசீர்வாதம் வேண்டுமானால் நாம் உபவாசித்து செபிக்க வேண்டும். பெண்கள் பல வேளைகளில் பலவிதமான சாக்குப் போக்குகளைக் கூறிந்தொழுகையை அசட்டை பண்ணி விடுவார். பெலவீனம், முதுமை, குடும்பப் பிரச்சினைகள் என்று ஏராளமான காரணங்கள். இத்தகைய காரணம் காட்டித்தொழுகையை மறக்கும் வேளையில் எண்பத்து நான்கு வயதாகியும் தொழுகை செய்து கொண்டிருந்த அன்னாளின் வாழ்க்கை நம்மை உணர்த்தட்டும். ஆலயத்

தொழுகைகளில் பங்கு பெற்று நம் வாழ்விலும் அன்னாளைப் போல் இயேசுவைத் தரிசிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் முதல் பெண் பிரசங்கி அன்னாள். அவள் எருசலேமிலே மீட்புண்டாக வேண்டுமென்று காத்திருந்த அனைவருக்கும் இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தாள்"[67].

ஆதலால், பெண்கள் ஆலயத் தொழுகைகளில் ஈடுபடுவதிலும், நற்செய்தியாக வந்த இயேசுவைப் பற்றிப் பிரசங்கிப்பதிலும் ஜெபிப்பதிலும் அதிகமாக ஈடுபட வேண்டும் என்பதைக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் உணர்த்துகின்றன.

ii. பெண்களின் நற் பண்புகள் :

மனித உறவில் குடும்ப வாழ்க்கை மிகவும் இன்றியமையாததாகும். குடும்பம் சமுதாயத்தின் மக்களை உருவாக்கும் தொட்டிலாகும். நவீன உலகில் குடும்பங்களில் சண்டைகள் தவிர்க்க முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. குடும்பங்களில் பூசல்கள் தவிர்க்கப்பட்டு சமாதானமும் ஒற்றுமையும் நிலவக் குடும்பங்களுக்கு உதவும் பெண்கள் முன் வர வேண்டும். திருமறையில் வரும் சாராளின் நல்ல, தீய பண்புகள் குடும்பப் பெண்களுக்கு நல்ல படிப்பினைகளைத் தருகின்றன. சாராளிடம் காணப்பட்ட நல்ல பண்புகளில் சாராளின் கீழ்ப்படிதல், இன்முகமாக விருந்தோம்பல், சாராளின் இறை விசுவாசம் ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கவை.

"சாராள் ஆபிரகாமுக்கு ஒரு சிறந்த மனைவியாக அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். கடவுளின் அழைப்பைப் பெற்ற ஆபிரகாம் சென்ற இடங்களில் எல்லாம் சாராளும் கூடச் சென்றாள். எகிப்திலும் கோரேரிலும் தன்னை ஆபிரகாமின் சகோதரி எனச் சொல்லச் சொன்ன போதும் அதனை

ஏற்றுக் கொண்டுக்கீழ்ப்படிந்தாள். மம்ரேயின் சமபூமியில் ஆபிரகாம் இருக்கும் போது மூன்று பேர் அவரிடம் வந்தனர். 'ஆபிரகாம் தீவீரமாய்க் கூடாரத்தில் சாராளிடம் சென்று நீ சீக்கிரமாய் மூன்று படி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து அப்பம் சுடு என்றார். (ஆதி. 18 : 6) சாராள் ஆபிரகாமுடன் இணைந்து இன்முகத்துடன் அவர்களுக்கு ஆகாரம் ஆயத்தம் செய்தாள்.

எபிரேயருக்கு எழுதின பக்தன் கொடுத்துள்ள விசுவாசிகளின் பட்டியலில் சாராள் பெயரும் இடம் பெற்றுள்ளது. (எபி 11 : 11) சாராளுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்ற கா்த்தரின் வார்த்தையைச் சந்தேகித்துச் சாராள் நகைத்தாலும், விசுவாசத்தில் தேறி அதே வாக்கிலே அவள் விசுவாசம் வைத்தாள். அந்த விசுவாசத்தினாலே அவளும் அவள் கணவனும் வயது முதிர்ந்தவா்களாயிருந்தும் ஒரு குமாரனைப் பெற்றாள் விசுவாசத்தில் சிறந்தவளானாள் " [68] இவ்வாறு சாராள் போன்று இன்றைய குடும்பப் பெண்கள் கணவனுக்குக் கீழ்ப்படிதல், விருந்தோம்பலில் இன்முகம் காட்டல், விசுவாசத்தில் நம்பிக்கை கொண்டிருத்தல் போன்ற நல்ல பெண்களின் குணத்தைப் பெற்றிருந்தால் குடும்ப வாழ்வில் அமைதி காணலாம் என்பதைக் கிறித்தவ இதழ்கள் சுட்டிக்காட்டுகின்றன.

iii. குடும்பப் பெண்களிடம் தீயப்பண்புகள் :

விவிலியத்தில் நற்பண்புகளின் உறைவிடமாக விளங்கிய சாராள் பொறுமையைப் பேண வில்லை. வேலைக்காரி ஆகாரைக் கடினமாக நடத்தினாள் இஸ்மவேல் குடும்பத்தில் சிறிது குழப்பம் தோன்றியது.

சாராள் தனக்குக் குழந்தைப் பாக்கியம் கிட்டும் என்ற ஆண்டவனின் வாக்குறுதியைப் பொறுமை பேணாமல், தன் கணவனாகிய ஆபிரகாமை

அடிமைப் பெண்ணான ஆகாரை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி தன் சொந்த ஆலோசனையைக் கூறினாள். இதன் விளைவாக அவளுடைய குடும்பத்தில் பல தொல்லைகள் உண்டாயின. வேலைக்காரியான ஆகார் கருவுற்றிருந்த நிலையில், சாராள் அவளைக் கொடுமைப்படுத்துகின்றாள். இந்த அடிமைப் பெண்ணையும் அவள் மகன் இஸ்மவேலையும் புறம்பே தள்ளும் இந்த அடிமைப் பெண்ணின் மகன், என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை. (ஆதி 21 10) சாராள் பொறாமை, பகைமை காரணமாக ஆகாரையும் அவள் மகன் இஸ்மவேலையும் துரத்தி விடுகின்றாள்".[69] இவ்வாறு குடும்பப் பெண்களிடம் பொறுமையின்மை, வேலைக்காரியைக் கொடுமைப்படுத்துதல், பகை உணர்ச்சி கொள்ளுதல் ஆகிய தீய பண்புகள் இருக்கக் கூடாது என்பதை விவிலிய நெறியில் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் சுட்டிக் காட்டுவது மனங்கொள்ளத்தக்கதாகும்.

iv. குடும்பமும் குடும்பப் பெண்களும் :

'குடும்பம் ' ஒரு குதூகலம் மிகுந்த கூடாரமாகக் காட்சி தர வேண்டுமானால் குணமுள்ள குடும்பப் பெண்கள் தேவை. பெண் என்பவள் இளமைப்பருவத்தில் காதலியாகவும், நடுத்தரப் பருவத்தில் வாழ்க்கைத் துணைவியாகவும், வயோதிகப் பருவத்தில் பணிப் பெண்ணாகவும் விளங்குகின்றாள். குடும்பப் பெண்களுக்குப் பக்தி வாழ்வு, குடும்ப ஆராதனை, இல்லத்தரசி, மனை மந்திரி, மகிழ்ச்சியான மனம், கனிதரும் கொடி, இலட்சியத்தாய் முதலான பண்புகள் அவசியமாகும். இப்பண்புகளைக் கொண்ட பெண்களே 'குணமுள்ள குடும்பப் பெண்கள்' ஆவர். "தன்

கணவனையும், பிள்ளைகளையும் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்து - வதற்கு நற்சாட்சியுள்ள பக்தி வாழ்க்கை பெண்களுக்கு அவசியம். ஒழுங்கான குடும்ப செபத்தால் ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை மிளிர்கின்றது. இயேசுவை மையமாகக் கொண்ட இல்லற வாழ்க்கை இனிக்கின்றது. குடும்ப செபம் இல்லாத வீட்டைப் பார்க்கிலும் கூரை இல்லாத வீடே மேலாகும்.குடும்பப் பெண்கள் 'இல்லத்தரசி' என வருணிக்கப்படுபவர்கள் மட்டுமல்லர். அவர்கள் குடும்பத்தை நிருவகிக்கும் 'ராணி' என மதிக்கப்படுபவர்கள், அவள் வீட்டைக் கட்டும் ஒரு சிறப்பாசாரி. அவள் தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கவனமாக இருக்கிறாள். தன் வீட்டாருடைய ஆடைகளைக் குறித்துக் அக்கரை காட்டுகின்றாள். கணவன் ஓர் அரசன் என்றால் அவனுக்கு வழிகாட்டும் மனைவி ஒரு மந்திரியாவாள். மனைவியின் கடமை கணவனின் அக வாழ்க்கையின் மலர்ச்சிக்கும், புற வாழ்வின் மென்மைக்கும் ஆக்கம் தர வேண்டியதாகும். மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகின்றான். இளமைப் பருவத்தில் மேனியழகும் காதல் உணர்ச்சியும் முதலிடம் பெற்றுத் திகழ்கின்றது. முதிர முதிர பற்றும் அன்பும் நெருக்கமும் காட்டிப் பிணைக்கின்றது. வயது ஏற ஏற பண்பும் பாசமும் தலை தூக்கி நிற்கின்றன. மனைவியானவள் தன் பிள்ளைகளோடும் தன் குடும்பத்தாரோடும் சார்ந்து இணைந்து பிணைந்து கொடியாக நிற்கின்றாள். இதனால் அவள் உள்ளத்தை மகிழ்விக்கும் கனிகளைச் கொடுக்கின்றாள். இறுதியாக நல்ல மனைவியே இலட்சியத்தாயாகவும் விளங்குகின்றாள்"[70].

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் குமரிப் பெண்களின் பக்தி, ஆராதனை, மன மகிழ்ச்சி,

முதலான பண்புகளை விவிலிய நெறியில் எடுத்துரைப்பது கவனிக்கத்தக்கதாகும்.

v. திருச்சபை வளர்ச்சியில் பெண்கள் :

பாரதியார் கண்ட புதுமைப் பெண்களைப் போலவே, பெண்கள் இன்று எல்லாத் துறைகளிலும் முன்னேறிவிட்டார்கள். திருச்சபைக் காரியங்களிலும் கூட பெண்களின் பங்களிப்பு சிறப்பாகவே உள்ளது. அகில உலகத் திருச்சபைகளின் 295 சபைப் பிரிவுகளில் ஏறக்குறைய 57 பிரிவுகளைத் தவிர எல்லாச் சபைப் பிரிவுகளிலும் பெண்கள் போதகர்களாக அருட் பொழிவு பெற்றிருக்கின்றார்கள். திருச் சபைகளை வளர்ப்பதற்குப் பெண்களுக்குச் சில கடமைகள் உள்ளன. அவற்றுள் ஜெபம், பிள்ளைகளை நல்வழியில் வளர்த்தல், நற் குணம் என்ற மூன்றும் குறிப்பிடத்தக்கதாகும். "திருச் சபையாகிய மரம் தழைத்து வளர்ந்து பலரும் பயன் பெறும் நற்கனிகளைக் கொடுப்பதற்காகப் பெண்களின் ஜெபமாகிய ஆணி வேர் உறுதியாக இருக்க வேண்டும். கிறிஸ்துவைப் பற்றி அறியாத மக்கள் மத்தியில் மிஷனெரிப் பணி செய்கின்ற ஊழியர்களுக்காகவும், மக்கள் உண்மை இரட்சகரைக் கண்டு கொள்வதற்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், மரணப் படுக்கையில் இருக்கும் நோயாளிகளுக்காகவும் பெண்கள் கூடி செபிக்க வேண்டும். அன்றைய திருச்சபையில் பெண்கள் செபித்ததைப் போன்று இன்றும் பெண்கள் கிறிஸ்துவின் சமூகத்தில் முழுங்காற்படியிட்டு ஊக்கத்தோடு செபித்தால் திருச்சபை வளர்ச்சிக்கு அது பேருதவியாக இருக்கும். பெண்கள் ஐக்கிய சங்கத்தின் முக்கியப் பணிகளில் இதுவும் ஒன்றாகும். திருச்சபைகளில் பெண்கள் சாந்தமும் அமைதியுமுள்ள நற்குண

சாலிகளாகத் திகழ வேண்டும். இன்றைய குழந்தைகள் தான் நாளைய திருச்சபையின் தலைவர்கள் என்பதை மறந்து விடாமல் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படும் விதத்தில் வளர்க்க வேண்டிய பொறுப்பு பெண்கள் கையில்தான் இருக்கின்றது"[71].

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் திருச்சபை வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை கோடிட்டுக் காட்டி ஊக்குவித்து வருகின்றன.

vi. பெண் சிசுக் கொலை :

பெருகிவரும் பெண் சிசுக் கொலைகள் குறித்தும் அவற்றைத் தடுப்பதற்குரிய வழி வகைகள் குறித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் கவனம் செலுத்தி வருகின்றன. சேலம், மதுரை மாவட்டங்களில் பெண் குழந்தைகளைப் பிறந்த உடனேயே கொல்லும் சமுதாயக் கொடுமை தொன்மையானதாகும்.

"சமுதாயத்தில் பெண்ணுக்கு முக்கியத்துவம் இல்லாமை, பாதுகாப்பு இல்லாமை, வரதட்சணைக் கொடுமை, பெண்ணடிமைத் தனம் முதலிய சமூகக் காரணங்களினால் பிறந்த பெண் குழந்தைகளைப் பசியால் வாட வைத்து வதைத்தல், நஞ்சூட்டுதல், கழுத்தை நெரித்தல், நெல் மணிகளை வாயில் திணித்தல், எருக்கம்பாலை வாயில் ஊற்றுதல், தூக்க மாத்திரைகளை அதிகமாகக் கொடுத்தல் இன்னும் பிற வழிகளைக் கையாண்டுக் கொலை செய்கின்றனர்"[72].

பெண் சிசுக் கொலை செய்கின்றவர்கள் பெண் குழந்தைகள் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையில் பெரும் சவால்களையும்

துன்பங்களையும் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் முதலியன ஏற்படுவதைக் கண்டு வாழ்க்கை முழுவதும் மனம் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதற்கு மாற்று வழியாக பிறந்த உடனேயே குழந்தையைக் கொன்றுவிடுவது சிறப்பு என்கின்றனர். இத்தகைய பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க வேண்டுமேயானால் "இச்சமூகப்பொருளாதாரப்பிரச்சினைக்கு ஆண், பெண் இருபாலரிடையே நிலவும் வேற்றுமையைச் சமப்படுத்த முயல வேண்டும். பெண்களைப் பற்றிய தாழ்ந்த மனப் பான்மையை மாற்ற வேண்டும். பிரச்சினைக்கு ஆக்கப் பூர்வமான திட்டங்களைத் தீட்டிச் செயலாக்க வேண்டும். சிசுக் கொலையில் ஈடுபடுவோர்க்கு கடுமையான தண்டனைகளை வழங்குவதோடு, கொலை செய்யாமல் இருக்க உரிய சூழ்நிலைகளை உருவாக்குதல் சிறப்பாகும்"[73].

இவ்வாறு குமரி மாவட்டத்துக் கிறிஸ்தவ இதழ்கள் பெண்சிசுக் கொலைகளை எதிர்த்துத் தங்கள் சிந்தனைகளை வெளியிட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

vii. சமயங்களில் பெண்களின் நிலை :

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் சமயங்களில் பெண்களின் நிலை குறித்து சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களை வெளியிட்டுள்ளன. சாதி அமைப்பினை ஏற்றுக் கொண்ட இந்து சமயத்தில் பொதுவாக ஆண், பெண் சம நிலையில் கருதப்படுவதில்லை. ரிக்வேதத் திருமண நிகழ்வுகளில் பெண் அன்பு கொள்ளத்தக்கவளாகவும் மகிமை பொருந்தியவளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளாள். பெண்களின் இச்சிறப்புகள் ஒப்புக் கொள்ளப்பட்ட இந்து சமுதாயத்தில் (Classical Hinduism) வேத

காலத்தைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் பெண்களுக்கான வேதகால சுதந்திரம் மறுக்கப்பட்டு பெண்ணாகப் பிறப்பதே மோசமான கர்மாவின் வினையெனக் கருதப்பட்டது. பெண் குழந்தைகள் சுமையாகக் கருதப்பட்டு பலதார மணம் வளர்ச்சியடைந்தது. மனு நூல் பெண்ணுரிமையை முழுமையாக மறுக்கின்றது. 19–ஆம் நூற்றாண்டிலிருந்து ஆங்கிலேயர் ஆட்சியின் போது சாதி, தேவதாசி முறை, குழந்தைத் திருமணம் போன்றவை பல்வேறு சட்டங்கள் மூலம் ஒழிக்கப்பட்டன.

திருக்குரானின் கண்ணோட்டத்தில் சமய அடிப்படையில் ஆணும் பெண்ணும் கடவுள் பார்வையில் சமம் என இசுலாம் கூறுகின்றது. இசுலாம் சமயத்தின் பற்றுறுதியாளராக ஆண் அல்லது பெண் யாராயினும் நற்செயல் செய்யும் ஒருவர் நல்வாழ்வு வாழத் தன்னை உருவாக்குகின்றார் எனக்குரான் (16 : 97) கூறுகின்றது. பெண் தானே தனது கணவனைத் தெரிந்துக் கொள்ளும் உரிமையை இசுலாம் வழங்குகின்றது. ஆணும் பெண்ணும் சமநிலையில் இணைவதே திருமணம் எனக் குரான் வலியுறுத்துகின்றது. மணவிலக்கைப் பொறுத்தமட்டில் குரான் தயக்கம் காட்டுகின்றது. அது மீண்டும் மீண்டும் ஒப்புரவாகுதலையே (2 : 228) வலியுறுத்துகின்றது.

கிறிஸ்தவ சமயத்தில் "படைப்பின் வரலாறு கடவுள் ஆணையும் பெண்ணையும் தமது சாயலில் படைத்தார் என்கிறது. (ஆதி 1 : 27) இறைச் சாயலை இரு சாராரும் சம நிலையில் பெற்றுள்ளனர். பெண் திருச்சபையில் பேசாமலிருக்க வேண்டும் என்னும் பவுலின் கருத்தோடு, ஆணென்றும், பெண்ணென்றும் இல்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். (கலா 3 : 28) என்ற கருத்தும் காணப்படுகிறது. மேலும் தூய ஆவியானவரின் வரங்கள் ஆண் - பெண் இருசாராருக்கும்

கொடுக்கப்படுகின்றதையும் அங்கீகரிக்கின்றனர். திருச்சபையின் தொடக்கம் மற்றும் மத்திபக் காலத்தில் பெண்கள் மயக்கிச் சிக்க வைப்பவர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர். மத்திப காலத்துறவற இயக்கங்களில் உண்டான கடவுளின் தாய் நிலை (Gods Motherhood) நமது கிறிஸ்துவின் தாய் போன்ற சிந்தனைகள் இன்றையப் பெண்விடுதலை இறையியலாருக்கான பரிசுகளாயிற்று. சீர்திருத்த காலம் மற்றும் தற்காலக் கிறிஸ்தவத்தில் பெண்கள் நிலை சற்று முன்னேற்ற மடைந்துள்ளது. இன்று ஆயர்களாய், பேராயர்களாய் பெண்கள் நிலை உயர்த்தப்பட்டாலும் பல திருச்சபைகள் இவற்றை மனமுவந்து ஏற்றிடத் தயக்கம் காட்டுகின்றன"[74].

மேற்கண்டவாறு இந்து சமயம், இசுலாமிய சமயம், கிறிஸ்தவ சமயம் ஆகிய எல்லாச் சமயங்களும் கொள்கை அளவில் ஆண் - பெண் சமம் என ஏற்றுள்ளன. ஆனால் செயலளவில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. பெண்களின் நிலையினை மேம்படுத்த திருச்சபை செபத்தோடு, பெண்களுக்கு எதிரான வன்முறைகளான பெண் ஆணின் சொத்து. வரதட்சணைச் சாவு, மனைவியை அடித்தல், பாலியல் வன்முறை ஆகியனவற்றை இனங் கண்டு பாதிக்கப்பட்டோருக்காக உதவ முன் வரவேண்டும். பெண் இறையியல் கல்வி, பெண்களுக்கு அருட்பொழிவு, திருச்சபைகளில் பெண்களின் தலைமைத்துவம் போன்ற தீர்மானங்களை உருவாக்கி பெண்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும். விவிலியக் கண்ணோட்டத்தின் சிறப்பினை உணர்ந்து பெண்களின் நிலையின் மேன்மைக்கு திருச்சபை உழைக்க வேண்டும் என குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வலியுறுத்துகின்றன.

viii. இல்லத்தரசிக்கு :

'தேசோபகாரி' இதழில் இதழ்தோறும் 'இல்லத்தரசிக்கு' என்னும் தலைப்பில் பெண்களுக்கான சமையல் குறிப்புகளும், வீட்டுக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இப்பகுதி குடும்பப் பெண்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

ix. பெண்ணடிமைத்தனம் :

ஆணாதிக்கம் - பெண்ணடிமை உலக நாடுகளிலும் நமது நாட்டிலும் திருச்சபைகளிலும், நமது பண்பாட்டிலும் அடிமட்டத்தில் காணப்படும், ஒரு நோயாகும். இது கல்வி, அரசியல், மதங்களில் மிகுதியாகப் புகுந்து விட்டது. திருச்சபை என்று கூட பெண்களுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை. இது இறையரசு இவ்வுலகில் வருவதைத் தாமதப்படுத்துவதாகும். கடவுளின் சாயலில் ஆணும் பெண்ணும் உருவாக்கப்பட்டனர். கடவுள் ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்பங்களையும் சமூகத்தையும் பூமியினையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கொடுத்தார்.

"இந்தப்பூமியைப் பயன்படுத்தவும் பாதுகாக்கவும் இருபாலினருக்குமே பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. எனவே ஆணோ, பெண்ணோ யாரோ ஒருவர் ஆதிக்கம் செலுத்துவது மனிதத் தன்மை அல்ல. விபச்சாரத்தில் குற்றம் சாட்டப்பட்ட பெண்ணிடம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நடந்து கொண்ட விதம் (யோவா 8:1-11) தேவையற்ற ஆணாதிக்கத்தை அவர் வெறுத்த முறைமையை வெளிப்படுத்துகின்றது"[75].

தாழ்ந்த நிலையில் தள்ளப்பட்டிருக்கும் பெண்களை மேல்நிலைக்குக் கொண்டு வருவதற்காக 'தேசோபகாரி' இதழ் சட்ட ரீதியாகத் தீர்வு காணுதல் ஆராதனை ஒழுங்குகளில் மாற்றம் ஏற்படுத்துதல் திருமறை இறையியல் சார்ந்து தீர்வு காணல், பண்பாட்டு முறையில் தீர்வு காணல் என்னும் நான்கு நெறி முறைகளைச் சுட்டிக் காட்டி உள்ளது.

"தென்னிந்தியத் திருச்சபைச் சட்டத்திலும் ஆதினச் சட்டத்திலும் ஆணும் பெண்ணும் சம அளவில் பங்கு பெறுவதற்குச் சட்ட அளவில் மாற்றம் கொண்டு வருதல் மிக மிகத் தேவையாகும். திருச்சபையின் வாழ்வுக்கு அடிப்படையாக அமைவது ஆராதனை ஆகும். குடும்பம், தனி நபர்கள், ஆராதனை மூலம், வாழ்வு பெறுகின்றனர். ஆராதனை ஒழுங்குகளில் திருவிருந்து, ஆராதனை, பாடல்கள் உட்பட அனைத்தும் ஆண்களை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளன. ஜெபங்களையும் பாடல்களையும் பெண்களை மையப்படுத்தி அமைப்பது அவசியம். திருமறையைக் கையிலேந்தி விளக்கம் கொடுப்பவர்கள் எபிரேய, கிரேக்க வார்த்தைகளின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும். தமிழர் பண்பாடு முதல் இந்திய நாட்டுப் பண்பாட்டிலும் மேற்கத்திய, கிழக்கத்திய நாடுகளிலும் பெண்கள் தாழ்வாகவே கருதப்பட்டு வருகின்றனர். அதிலும் தலித் இனப் பெண்கள் இன்னும் தாழ்வாகக் கருதப்படுகின்றனர். இதனை நாம் மாற்றியமைக்கச் சமுதாய மாற்றங்கள் நிச்சயம் தேவை"[76].

கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. இறையரசுக்கு அனைவரும் தேவை. இறையரசு உலகில் மலர்ந்திட இருபால் மக்களின் முயற்சியும் தேவை. எனவே திருச்சபை இதனை உணர்ந்து பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் முக்கியத்துவம் கொடுக்க முன்வர

வேண்டும். நமது திருச்சபைகளின் பெண்கள் ஐக்கிய சங்கம் திருச்சபையின் ஒரு முக்கியக் குழுவாக மாற வேண்டும். அப்போது தான் பெண்ணடிமைத்தனம் நீங்கும் என்பதைக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வலியுறுத்திக் கூறுகின்றன.

X. சமூகத்தில் பெண்களும் எதிர்கால நடவடிக்கைகளும் :

சமூக உறவுகளில் பெண்களின் நிலையை நான்கு வகைகளாகக் காணலாம். விரும்பத்தகாதவர்கள், ஒதுக்கப்படுபவர்கள், வளர்ச்சியடையாதவர்கள், தவறாகப் பயன்படுத்தப்படுபவர்கள் என்ற நான்கு நிலைகளில் சமூகத்தில் பெண்களின் உறவு அமைந்துள்ளது. பெண் குழந்தைகள் பிறப்பதைச் சமூகம் பொதுவாக வரவேற்பதில்லை. அண்மையில் பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழிக்கும் முறை அதிகரித்து வருகின்றது. பெண்ணைப் பெறும் தாய் தனக்கு நேர்ந்த கதியால் தன் மகளை வெறுத்து ஒதுக்குகின்றாள். கல்வி, நோய்க்கு மருந்து கொடுப்பதில் கூடப் பெண்கள் வெறுத்து ஒதுக்கப்படுகின்றனர். குடும்பப் பொருளாதாரத்தைப் பெருக்கவும், வீட்டு வேலைகளுக்கு எனவும், பெற்றோர்கள் ஈடுபடும் வேலைகளில் துணைபுரியவும் சிறுமிகள் பள்ளிப் படிப்பைத் தியாகம் செய்கின்றனர். இதனால் பெண்கள் கல்வியில் வளர்ச்சியடையவில்லை. இந்தியாவில் சுமார் 2 இலட்சம் சிறுமிகள் வரையிலும் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 1. "பெண்கள் சார்ந்துள்ள சமுதாயம் இன்னும் பெண் கல்வியை முக்கியமானதாகக் கருதவில்லை. 2. உணவு, உடை, வீடு, ஆரோக்கியம் ஆகிய இவற்றுடன் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை அரசும் மக்களும் பார்ப்பதில்லை. 3. வரதட்சணை, அடக்கு முறைகள்,

பொருளாதார சுதந்திரம், வேலை வாய்ப்பு, கூலி போன்ற பிரச்சினைகளின் அடிப்படையில் பெண்களின் கல்வி அமையும் போது பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். 4. தன்னார்வக் குழுக்கள் முறைசாராக் கல்வியை அமல்படுத்துவதில் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுவதால் பெண்கள் கல்வியை நடைமுறைப்படுத்த இயலவில்லை"[77].

இவ்வாறு பெண்கள் கல்வி பெறுவதில் உள்ள தடங்கல்களையும் சாதகமான காரணிகளையும் தன்னார்வக் குழுக்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளன. குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழான 'வைரம்' பெண் கல்விக்கான எதிர்காலச் செயல்பாடுகளை, "வலுவான பெண்கள் குழுக்களும், கூட்டுக் குழுக்களும் இணைந்து பெண்கள் கல்வியை ஊக்குவிக்க சமூகத்திலும் அரசு தரப்பிலும் ஆதரவு திரட்ட வேண்டும். பள்ளிப் பாடங்களிலும், கல்லூரிப் பாடத்திட்டங்களிலும் பெண்கள் பிரச்சினைகள் தொடர்புடைய பாடங்களும் ஆய்வுகளும் அதிகரிக்கப்பட வேண்டும். வேலை வாய்ப்புக்கு விருதுகளும் பட்டங்களும் தேவை என்னும் விதி முறைகளைத் தவிர்த்து எண்ண வளம், செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் வேலை வாய்ப்புகள் பெருகும் மனப்பக்குவம் அரசு துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் ஏற்படச் செய்ய வேண்டும்"[78]. இவ்வாறு சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்தவும், பெண் கல்வியை அதிகரிக்கவும் எதிர்காலத் திட்டங்களைக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வலியுறுத்துகின்றன.

xi. மாதர் விடுதலை :

மாதர் விடுதலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும்,. குமரிக் கிறிஸ்தவ இதழ்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. மனித சமுதாயம் தோன்றியதிலிருந்தே பெண்கள் அடிமைப்பட்டு வந்தமைக்கான எந்த ஆதாரமும் இல்லை. சமுதாயத்தில் வேலைப் பிரிவினைகள் தோன்றிய பின்னரே பெண்கள் ஒடுக்கப்பட்டனர். "சமுதாயத்தில் தனிச் சொத்துடைமையும், வேலைப் பிரிவினையும் மாதர்களை அடிமைகளாக்கிவிட்டன. காலம் காலமாக இரண்டாம் தர குடி மக்களாக நடத்தப்பட்டு வரும் இவர்களின் சரித்திரம் மட்டும் இன்று வரை முழுமையாக எழுதப்படாத சரித்திரமாகவே தொடர்கின்றது. சமுதாயத்தின் பாதி அங்கங்களான இவர்கள் அடிமைப்பட்ட நாட்களில் இருந்து அடிப்படை உரிமைகளுக்காகவும் விடுதலைக்காவும் போராடி வருகின்றனர் என்பதை மறுக்க முடியாது. மாதர் விடுதலை என்பது மகளிர் விடுதலை மட்டுமல்ல. மானிட விடுதலைக்கான அறைகூவலையும் உள்ளடக்கியதே. ஜாதி, மதம், இனம், மொழி பேதமற்ற அமைதியான தெளிவான சமமான புது உலகை உருவாக்க இருக்கும் அறை கூவலே மாதர் விடுதலையாகும்"[79].

ஆதலால் மாதர் விடுதலையே மானுட விடுதலை என்பது புலனாகின்றது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் மாதர் விடுதலை குறித்தும் கவனம் செலுத்தி வருவது மனங்கொள்ளத்தக்கதாகும்.

xii. மகளிருக்கு இட ஒதுக்கீடு :

மகளிருக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீட்டில் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளன. விழுப்புரத்தில் செயல்பட்டு வரும் 'பவ்டா' தொண்டு நிறுவனம் சார்பில் மகளிர் தின விழாவும் மகளிர் மாநாடும் நடைபெற்றது. அம்மாநாட்டில், "பஞ்சாயத்து, பாராளுமன்றம், சட்ட மன்றம் ஆகியவற்றிலும் மற்றும் அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். பாலியல் பலாத்கார செயல்களுக்குக் கடுமையான தண்டனை அளிப்பதுடன், குற்றவாளிகள் தப்பிக்க முடியாதபடி கடுமையானச் சட்டம் இயற்றிச் செயல்படுத்த வேண்டும்"[80]. என்னும் முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதனை 'வைரம்' இதழ் வெளியிட்டுள்ளது.

xiii. காஷ்மீரில் திருமணமான பெண்களின் அவலநிலை :

பெண்களுக்கு இந்தியாவின் எந்தப் பகுதியில் கொடுமைகள் நடந்தாலும் அவர்களுக்காகக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் குரல் கொடுத்து வருகின்றன. காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்கியதில் அழிந்து போனது அமைதி மட்டுமல்ல. எத்தனையோ குடும்பங்களின் வருங்காலக் கனவுகளும் தான். அங்குக் கணவனை இழந்த பெண்களின் அவல நிலை மிகவும் பரிதாபகரமானது. காஷ்மீர் மக்கள் தொகையில் விதவைகளின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. "காஷ்மீர் மக்கள் தொகையில் விதவைகளின் எண்ணிக்கை அதிகம். பூவும் பொட்டும் இழந்த மகளின் நிலையைக் கண்டுப் பெற்றோரும், தாலியிழந்த சகோதரியின்

கண்ணீர் கண்டு சகோதரர்களும், தாங்களே தங்களைத் தேற்றிக் கொள்கின்றனர். கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் நடப்பது அபூர்வமாக உள்ளது. இவர்களைத் திருமணம் செய்ய முன்வருபவர்கள் முதல் கணவனின் பிள்ளைகளை வைத்து பராமரிக்க விரும்புவதில்லை. சில விதவைகள் புதிய வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு முதல் கணவன் மூலம் பிறந்த குழந்தைகளை அம்போவென்று விட்டு விட்டு புதிய வாழ்வுக்குச் செல்கின்றனர். இவர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் தெருவில் அனாதைகளாக அலைகின்றனர். இப்படிப்பட்ட குழந்தைகளை அரசாங்கமே பேணி வந்தாலும் அன்பான அரவணைப்பை இழந்த குழந்தைகள் சிறுவயதிலேயே குற்றவாளிகளாக மாறுகின்றனர். இப்படிப்பட்ட குழந்தைகளைத் தீவிரவாதக் குழுக்கள் கண்டெடுத்துப் பயிற்சி கொடுத்து தீவிரவாதிகளாக மாற்றும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன"[81]. இவ்வாறு குமரிக் கிறிஸ்தவ இதழ்கள் தீவிரவாதத்தினால் விதவைகளாகும் பெண்களின் அவல நிலையைச் சுட்டிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

xiv. இலக்கியத்தில் பெண்களின் மதிப்பு :

பழைய இலக்கியங்களில் பெண்களின் மதிப்பு, சமுதாய நிலை, பெண்களின் காதல் வாழ்க்கை, கல்வி ஆகியன குறித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. இதற்குச் சான்றாக 'ஏழையின் குமுறல்' இதழில் வ. இந்திர—பாவாநி எழுதியுள்ள "சங்க

காலத்தில் பெண்கள் மதிப்பு"[82] என்னும் கட்டுரை வெளியாகி இருப்பதைக் குறிப்பிடலாம்.

XV. மதவாதமும் பெண்களும் :

இசுலாமியம், கிறிஸ்தவம், இந்துத்துவம் ஆகிய சமயங்களைச் சார்ந்து நடைபெறும் வன்முறைகளில் பெண்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். 'ஏழையின் குமுறல்' இதழில் டி.ஆர்.எம். எழுதியுள்ள 'மத அடிப்படை வாதமும் பெண்களும்' என்னும் சிறப்புக் கட்டுரை வெளிப்படுத்துகின்றது. அக்கட்டுரையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் ஆறாம் நாள் நடைபெற்ற பாபர் மசூதி இடிப்பு காரணமாக நடைபெற்ற வன்முறைக் கலவரங்களில்,

"சூரத்தில் உள்ள விஜய நகர் பகுதியில் இந்துக்கள் தங்கள் மனைவி குழந்தைகளை வேறு இடங்களுக்கு மாற்றினர். மின்சார இணைப்புகளை துண்டித்து அப்பிரதேசத்தை இருட்டாக்கினர். முஸ்லீம் பெண்களை வீட்டுக்குள்ளிருந்து வெளியே இழுத்து வந்தனர். கூட்டமாகக் கற்பழித்தனர். இதை சக்தி மிக்க ஒளி விளக்குகளில் வெளிச்சத்தில் படம் எடுத்தனர். காந்திய வாதி டாக்டர் உஷா மேத்தா, செல்வி ஹன்சாராஜீதா இவர்களும் இக் கொடுமைக்கு உள்ளானார்கள். கற்பழிக்கப் பட்டபின் பல பெண்கள் உயிருடன் கொளுத்தப்பட்டனர். யாஸ்மின் என்ற 18 வயதுப் பெண்ணின் தாயைத் தாக்கி கீழே சாய்த்து விட்டு 10 பேர் சேர்ந்து யாஸ்மினைக் கற்பழித்தனர். பின்னர் கொளுத்தினர்"[83].

இவ்வாறு மதவாதத்தின் அடிப்படையில் மத வெறியர்களால் கற்பழிக்கப்பட்டுக் கொளுத்தப்பட்ட பெண்களுக்காகக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் ஓங்கிக் குரல் கொடுத்திருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

xvi. குமரியில் பெண்களின் எழுச்சி :

பெண்களின் மாநாடு, பெண்களின் கண்காட்சி, பெண்ணுரிமைப் போராட்டங்கள் ஆகியனவற்றிற்குக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளன. இதற்குச் சான்றாகக் 'குமரியில் பெண்களின் எழுச்சி குறித்து 'விடியலை நோக்கி' என்னும் இதழ் வெளியிட்டுள்ள பின்வரும் செய்தியினை எடுத்துக்காட்டலாம். "உலகெங்கும் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களின் உழைப்புச் சுரண்டப்படுகிறது. உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பல்வேறு பெண்ணுரிமைப் போராட்டங்களையும் மகளிர் எழுச்சியையும் கண்டுள்ள குமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டிலிருந்து (1992) சர்வதேசப் பெண்கள் தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு (1993) பெண்கள் தினம் குமரி மாவட்டப் பெண்களின் எழுச்சி தினமாகவே அமைந்திருந்தது. கோட்டாறு மறை மாவட்டப்பெண்கள் ஆணைக்குழு, மகளிர் ஜனநாயக முன்னணி, உழைக்கும் பெண்கள் இயக்கம், கிராம மகளிர் மன்றம், அடித்தள அன்பியப்பெண்கள் குழு, நவ ஜீவன், திருச்சிலுவைக் கல்லூரிப் பெண்கள், பயோனியர் குமாரசாமி கல்லூரிப் பெண்கள் போன்ற 15 அமைப்புகள் சேர்ந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். கருவறை முதல் கல்லறை வரை பெண்கள் சந்திக்கின்ற பிரச்சனைகள், பெண்களுக்கு

எதிரான அநீதிகள், பெண்களின் சாதனைகள், பெண்கள் இயக்கமாக வேண்டியதன் தேவை ஆகியனவற்றைச் சித்தரிக்கும் காட்சிகள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன"[84]. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் பெண்களின் போராட்டங்களிலும், எழுச்சிப் பேரணிகளிலும் பங்கேற்று பெண்களை ஆதரித்துத் தூண்டுவதைக் காண முடிகின்றது.

xvii. விவிலியத்தின் அடிப்படையில் பெண் விடுதலை :

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் விவிலியத்தின் அடிப்படையிலும் பெண் விடுதலையையும் பெண்ணுரிமையையும் வலியுறுத்தியுள்ளன. சான்றாக 'விடியலை நோக்கி' என்னும் இதழில் 'பெண்கள் பகுதி' யில் 'விவிலியமும் பெண் விடுதலையும்' என்னும் கட்டுரைத்தொடர் வெளியாகியிருப்பதைக் குறிப்பிடலாம். இந்தத்தொடரின் மூன்றாவது அதிகாரம் மானிடரின் வீழ்ச்சியைப்பற்றியும், உலகில் வந்துள்ள தீமைகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது. சமுதாயத்தில் மானுடர் அனுபவிக்கும் தீமைகள், துன்பங்கள், பிரச்சனைகள் ஆகியவற்றுக்குக் காரணம் கடவுள் அல்ல. அல்லது கடவுளுக்கு இணையான தீய சக்தியும் அல்ல. மாறாக மானிடரே அதற்குக் காரணம் என்பதை விளக்க விளைகிறது. மூன்றாவது பகுதி அதைக் கற்பனை வளத்தோடு கதை வடிவில் எடுத்துரைக்கிறது திருவிவிலியம். ஆனால் இந்த ஆழ்ந்த பேருண்மையை மனத்தில் இருத்துவதற்குப் பதிலாக 'பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னிடமிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள்.

கிறிஸ்தவக் கலாச்சாரச் சிந்தனையில் பெண் தான் பிரச்சினைகளுக்கெல்லாம், தீமைகளுக்கெல்லாம், பாவத்துக்கெல்லாம் காரணம் என்று ஆழமாகப் பதிந்து போயிற்று. கதையாகச் சொல்லப்பட்ட ஒன்று, காலம் காலமாகப் பெண்ணடிமைத் தனத்துக்கு துணையாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனால் மேலே காட்டிய சிந்தனைகள் வளர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இவை விவிலியப் படிப்பினை அல்ல. இது போல இந்துக் கலாச்சாரத்தை உருவாக்கிய புராணங்களும் பெண்களால் பிரச்சினைகள் உருவாகின்றன என்ற உணர்வை வளர்த்துள்ளன. குறிப்பாக இராமாயணத்தில் கூனியும் கைகேயியும் இராமன் காட்டுக்குச் செல்ல காரணமாகச் சித்தரிக்கப்படுகிறார்கள்"[85]. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் பெண் விடுதலை, பெண்ணுரிமை, பெண்ணடிமை ஆகியன பற்றிய சிந்தனைகள் விவிலிய நோக்கிலும், புராண இதிகாசங்களின் நோக்கிலும் ஒப்பிட்டுச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

xviii. பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் :

'பிறப்பு முதல் இறப்பு வரை' தொடரும் பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப்பற்றிக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் அலசி ஆராய்கின்றன. பெண் குழந்தைகளுக்குப் பள்ளிக் கல்வி மறுக்கப்படுகின்றது. காரணம் புத்தகங்களின் விலையேற்றமாகும். தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களுக்குக் கூலி மிகவும் குறைவாகவும் உழைப்பு மிகுதியாகவும் உள்ளது. கூலி உயர்வு கேட்டால் வேலையில்லை. இதற்குக் காரணம் புதிய பொருளாதாரக் கொள்கையாகும்.

திருமணமாகாத பெண்களைச் சமுதாயம் கேவலமாகப் பார்க்கின்றது. பெண் கருவுற்றால் பிறக்கப் போகும் குழந்தை ஆணா? பெண்ணா? என்று ஆராய்ச்சி நடத்துகின்றார்கள். பெண் குழந்தை பிறந்து விட்டால் வரதட்சணை கேட்டுக் கொடுமைப்படுத்துகின்றார்கள். விலைவாசி ஏற்றத்தினால் முதுமைப் பருவத்தில் பெண்களை அனாதை இல்லங்களில் சேர்த்து விடுகின்றனர். இவ்வாறு பிறப்பு முதல் இறப்பு வரையில் வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கும் பெண்கள் விடியலைத் தேடி அலைகின்றார்கள் என்பதை 'யுகச் சிற்பி' இதழில் அன்பில் ஜோதி எழுதிய 'விடியலைத் தேடி' என்னும் கவிதை உணர்த்தி நிற்கின்றது. அக்கவிதை வரிகள் பின்வருமாறு.

"கருவுற்றேன்
ஆராய்ந்தார்கள்
எதற்கு என்றால்
ஆணா, பெண்ணா
காரணம் கேட்டால்
வரதட்சணைக் கொடுமையாம்
முதிர்ந்தேன்
அனாதை இல்லத்தில்
ஏன் என்றால்
பாதுகாப்பாம்
காரணம் கேட்டால்
விலைவாசி உயர்வாம் ?
என் வாழ்வின்

விடியல் இப்போது ?

கல்லறையிலா"[86]

இவ்வாறு குமரிமாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சமுதாயக் கண்ணோட்டத்தில் பல கோணங்களில் அலசி ஆராய்ந்திருப்பது நினையத்தக்கதாகும்.

xix பெண்களின் மீது வன்முறைகள் :

கடந்த பத்தாண்டுகளில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டித் தாலுகாவில் குறைந்தது 6000 பெண் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளார்கள் என 'இந்தியா டுடே' பத்திரிகைக் குறிப்பிடுகின்றது. 'தினமணி' 1984 -- 1996 வரை வரதட்சணைக் கொடுமையால் பெட்ரோல் ஊற்றிக் கொழுத்தப்பட்ட பெண்களின் எண்ணிக்கையைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டியுள்ளது.

உத்திரப் பிரதேசம்	-	615
மகாராஷ்டிரம்	-	292
ஹரியானா	-	212
பஞ்சாப்	-	98
ராஜஸ்தான்	-	88
கர்நாடகா	-	81

இப்படியாகப் பெண்களின் மீது திணிக்கப்படும் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. நாகர்கோவிலுக்கு அருகே ஓர் ஊரில் ஒரு பெரியவர் தனது மகளுக்கு 22 பவுன் நகையும் ரூபாய் 17 ஆயிரமும் வரதட்சணையாகக் கொடுத்தார். திருமணமாகி இரண்டு ஆண்டுகள் கழித்து

ரூபாய் 10,000 வாங்கி வரும்படி அவள் கணவன் கொடுமைப்படுத்தினான். 'யுகச்சிற்பி' இதழ் இப்புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி சமுதாயத்தில் இன்னும் பெண்களின் வாழ்க்கை விடியவில்லை என்பதைச் சுட்டுகின்றது.

"பெண்புத்தி பின்புத்தி, ஆஸ்திக்கு ஆண் ஆசைக்குப் பெண், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்னும் பழமொழிகள் பெண்களை ஒரு விலை மதிப்பற்ற ஜடப் பொருளாகவே காண்பிக்கின்றது. இன்று பெண்கள் வர்க்கச் சுரண்டல், பாலினச் சுரண்டல், விளம்பரச் சுரண்டல் என்னும் நிலைகளில் சுரண்டப்படுகின்றனர். இன்று பெண்களுக்கு, ஆண்களுக்குச் சமமான கூலி இல்லை. ஆயுள் காப்பீடு இல்லை. பெண்களை அதிகமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் கொடுமையும் நடக்கின்றது. திரைப்படங்களிலும் விளம்பரங்களிலும் பெண்கள் கொச்சைப்படுத்தப்படுகின்றனர்"[87]. இவ்வாறு வர்க்கச் சுரண்டல், பாலினச் சுரண்டல், விளம்பரச் சுரண்டல் முதலான கொடுமைகளால் பாதிக்கப்பட்டு வரும் பெண்களுக்காகக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் குரல் கொடுத்து வருவது சிந்திக்கத்தக்கதாகும்.

xx. வரதட்சணை தீ :

'யுகச் சிற்பி' இதழில் ஷீலா எழுதியுள்ள 'அன்புள்ள அம்மா' என்னும் கவிதை சமுதாயத்தில் வரதட்சணை, பெண்களின் வாழ்க்கையில் தொடர்கதையாக இருப்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

"அன்புள்ள அம்மா

முந்தானையில் மூடி வளர்த்த

நான் நலமாயில்லை

கிழக்கு வீடும்

மேற்கு வயலும் கூட

வரதட்சணையாய் வேண்டுமாம்

உன் கணவனிடம்

அழுதழுது நீ

நின்ற கோலத்தில் தான்

இப்பொழுது நானும்

தீயின் நாக்குகள் எனைத்

தீண்டுவதற்குள்

தட்சணையாய் ஏதேனும்

அனுப்பி வை அம்மா !

அடுத்த முறை

அனுப்புவதற்கும் ஏதேனும்

வைத்துக் கொண்டு"[88]

இவ்வாறு வரதட்சணைக் கொடுமைகள் குறித்த பல கவிதைகள் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் வெளியாகியுள்ளன.

xxi. பெண்களும் விளம்பரங்களும் :

இது விளம்பர யுகம். வியாபார உலகின் முக்கிய அம்சம் விளம்பரமாகும். இன்றைய விளம்பரங்களில் பெண்கள் நுகர்பொருளாகவும், வேட்டைமான்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். "ஆண்களும்

பெண்களும் பயன்படுத்தும் பொருளானாலும், ஆண்கள் மட்டும் பயன்படுத்தும் பொருளுக்கும் பெண்ணையே விளம்பரமாகக் காட்டுவது வாடிக்கையாகிவிட்டது. பெண்களுக்குச் சற்றும் தொடர்பில்லாத பொருள்களுக்கெல்லாம் பெண் விளம்பரமாய் நிற்பது வேதனைக்குரியது. ஆணும் பெண்ணும் பயன்படுத்தும் சோப்பிற்கும் அரை நிர்வாணமாகப் பெண்ணே பயன்படுத்தப்படுகிறாள். போதை தரும் மதுவிற்கு விதவிதமான பாவனைகளில் பெண்ணே பயன்படுத்தப்பட்டு, கொச்சையான விளம்பரங்களில் சிக்கித் தவிக்கும் வேட்டைமானாகத் திணறுகிறாள்"[89]. இந்நிலை மாற வேண்டுமேயானால், "நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டிய அன்னையர் இன்று தொலைக்காட்சி விளம்பரங்களைக் காட்டியே குழந்தைகளுக்குச் சோறு ஊட்டுகின்றனர். இவ்வாறு அன்றாட வாழ்வில் முக்கிய இடத்தை விளம்பரங்கள் பிடித்துக் கொள்ளும் இந்நிலையில் (பெண்மை) மனிதம் காப்பாற்றப்பட வேண்டுமெனில் நாம் விளம்பர உலகின் வெறியூட்டும் நுகர்வுகளிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். சரிந்து விழுகிற சமூக ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பிக் காப்பாற்ற வேண்டும். பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்ப வேண்டும். பெண்களின் உணர்வுகளை அவமதிக்கும் தயாரிப்புகளைப் புறக்கணிக்க வேண்டும்"[90]. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில், பெண்கள் விளம்பரங்களில் கொச்சைப்படுத்தப்படுவதைச் சாடி, அதற்குத்தகுந்த தீர்வுகளும் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

xxii. பெண்ணுரிமையும் கிறிஸ்தவமும் :

'பெண்ணுரிமையும் கிறிஸ்தவமும்' குறித்துக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளன. ஆண் வர்க்கம் என்ற ஒரே காரணத்தினால் பெண்ணினத்தைப் புழுக்களிலும் கேவலமாக மிதித்துக் கொடுமைப் படுத்துகின்றனர். அத்தகைய கோடிக்கணக்கான பெண்களுக்குப் பெண்ணுரிமை வேண்டும். 'சமுதாயச் சிந்தனை' இதழில் டாக்டர் சிந்திகெயாள் 'பெண்ணுரிமையும் கிறிஸ்தவமும்' என்னும் தொடர் கட்டுரையை எழுதியுள்ளார். அக் கட்டுரையில் அவர்,

"பெண்ணுக்கு விடுதலை புகைபிடித்துத் திரியவோ, போதைப் பொருட்களுக்கு அடிமையாகவோ, நிர்வாணமாக உடை உடுத்தவோ, பாலியல் உணர்வுகளுக்குள் சிக்கிப் பலியாகவோ அல்ல, விசிலடித்து, ஓலமிட்டு, ஆர்ப்பரித்து, வெகுளித்தனமாகச் சுற்றித்திரியவுமல்ல, சுதந்திரத்தோடு உலா வரும் ஆண்மகன் கூட குடித்து வெறித்துக் கும்மாளமிட்டுத் திரிந்தால் அவனை ஆண் மகன் என்று ஏற்போமா ? அவனை ரவுடி, என்றல்லவா சுட்டுகிறோம். விடுதலை என்ற பெயரில் பெண்ணும் அப்படி மாறினால் அவளும் பெண்ணல்ல 'ரவுடியே' இவர்களெல்லாம் மனித நிலையினின்றும் விலங்கின நிலைக்கு இறங்கி விட்டார்கள்"[91]. என்று பெண் விடுதலையையும் பெண்ணுரிமையையும் தவறாகப் பயன்படுத்தும் பெண்களைக் கடுமையாகச் சாடியுள்ளார். இவ்வாறு பெண்ணுரிமையின் நன்மை தீமைகளை விளக்கியும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

xxiii. திருச்சபை சார்ந்த மகளிர் மேம்பாடு :

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் திருச்சபை சார்ந்த மகளிர் மேம்பாடு குறித்தும் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. 'திருச்சபையில் புது மலர்ச்சி' என்னும் இதழில், "திருச்சபைகளைப் பொறுத்த வரையில் ஞாயிறு ஆலய ஆராதனைகளில் பங்கு பெறும் ஆண்களைவிட பெண்களின் எண்ணிக்கையே மிகுதி. இதை அடிப்படையாகக் கொண்டு திருச்சபை வாழ்வில் பெண்களின் பங்கேற்பு மிகுதி எனக் கூறிவிட முடியாது. ஏனெனில் வழி வழியாகப் பெண்கள் திருச்சபையில் பயனாளிகளாகக் கருதப்பட்டார்களே தவிர பங்குத் தாரர்களாகக் கருதப்படவில்லை. ஆலய ஆராதனைகளில் பங்கு பெறுவதோடு பாட்டுப் பாடுவது, ஏழைகள் உதவி மற்றும் நோயாளிகள் சந்திப்பு போன்றவற்றைச் செய்வது, அறுப்பின் பண்டிகை காலங்களில் வீடு வீடாகச் சென்று பணம் சேகரிப்பது போன்ற சிறுசிறு வேலைகளை திருச்சபை அவர்களுக்கென்றே ஒதுக்கி வைத்துள்ளது. காலை – மாலை ஆராதனைகளில் பங்கு பெறுவதோடு தங்கள் கடமை முடிந்து விட்டது எனக் கருதும் பெண்கள் திருச்சபையின் அன்றாடப் பணிகளில் ஈடுபடும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்றவர்களாக இருப்பதில்லை. எந்தச் சமூகமும் மேம்பாடடைய வேண்டுமெனில் அச்சமூகத்தில் உள்ளவர்கள் அனைவரும் முதலிடம் பெற்ற பயனாளிகளாக அன்று முடிவு செய்யும் பங்குதாரர்களாக முன்னிறுத்தப்பட வேண்டும் திருச்சபையின் ஆண்களும், பெண்களும் தோழமையுள்ள பங்காளர்களாக மாற வேண்டும். ஆலயத்தில் அனைத்துப் பணிகளிலும் ஆண்களும் - பெண்களும் எத்தகைய வேறுபாடும் இன்றிப்பங்கேற்கத் தகுந்த அளவிலான

செயல்முறை உத்திகளை உருவாக்கிக் கொள்வது அவசியம் ".[92] எனச் திருச்சபை சார்ந்த மகளிர் மேம்பாட்டினை விளக்கியுள்ளது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறித்தவ இதழ்கள், திருச்சபைகளில் மகளிர் பங்கு தாரர்களாக மாறும் போது, அவர்களின் வாழ்க்கை முன்னேறும் எனக் குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.

xxiv. பெண்மையின் பேராற்றல் :

"பெண்மையின் பேராற்றல், பிறப்பிலே பெண் சிசுக் கொலை, பூப்படைந்த பிறகு பாலியல் பலாத்காரம், திருமணமான பிறகும் கணவன்-மாமியாரின் கொடுமை, தாய்மைக்குப்பிறகும் குழந்தைகளாலும் சமுதாயத்தாலும் கைவிடப்படும் நிலை "[93] என்று "பேதலித்து நிற்கும் பெண்மையின் அவலக் கோலத்தை விளக்கியும் குமரிமாவட்டக் கிறித்தவ இதழ்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. "[94] 'உண்மை ஒலி', இதழில் மாதர் பகுதியில் பெண்களுக்கான சமையல் குறிப்புக்களும் வீட்டுக் குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

xxv. மகளிர் மேம்பாட்டு மன்றம் :

'மகளிர் மேம்பாட்டு மன்றம்' குறித்து 'விண்ணரசு' இதழில், சேரமங்கலம், சூரியகோடு, கப்பியறை, செல்லங்கோணம், மேல்புறம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் மகளிர் மேம்பாட்டு மன்றங்கள் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மன்றமும் அந்தந்தப் பகுதியிலுள்ள தன்னார்வத் தொண்டர் ஒருவரின் தலைமையில் இயங்கி

வருகின்றது. சாதி சமயங்களைக் கடந்த சுமார் 30 முதல் 40 வயதினர் இம்மன்றங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். மத நல்லிணக்கம், பல்சமயக் கல்வி, பொதுச் சுகாதாரம், கிராமிய நூலகம், சிறுசேமிப்பு, மகளிர் மேம்பாடு ஆகியனவற்றில் இம்மன்றங்கள் அதிகக் கவனம் செலுத்துகின்றன."[95]. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மகளிர் மேம்பாட்டு மன்றங்கள், அம்மன்றங்களின் சமுதாயப் பணிகள் குறித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் கவனம் செலுத்தி வருகின்றன.

'தென்ஒலி' இதழில் பெண்ணுக்குச் சம உரிமை"[96], "அமைப்பு முறையும் பெண்ணுரிமையும்"[97] ஆகிய சிந்தனைகள் குறித்தச் செய்திகள் வெளியாகியுள்ளன. பெண்கள் மீதான வன்முறைகள், பெண்ணுரிமை, பெண்ணடிமை ஆகியனவற்றிற்கு 'தென்ஒலி' இதழ் மிகுந்த முக்கியத்துவம் செலுத்தியிருப்பதைக் காணலாம். அவ்விதழில் வெளியான " பெண்கள் மீதான வன்முறைகள் "[98] என்னும் கட்டுரை, பெண்கள் மீதான பாலியல் பலாத்காரத்தைக் கடுமையாகச் சாடுகின்றது. "பெண்களுக்கான இட ஒதுக்கீடு"[99] என்னும் கட்டுரை, அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு 50சதவீதம் இட ஒதுக்கீட்டின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது. ம. பெஞ்சமின் "பகுத்தறிவு ப் பாதையில் "[100] என்னும் தொடர் கட்டுரையில் 'மாதரை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

xxvi. அழகிப் போட்டிகள்:

'கலாச்சாரம் ' என்பது, மக்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற உணர்வு நிலையை மக்கள் மனத்தில் வரையறுக்கின்றது. இது இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் மாறுபட்டாலும் பெண்கள் வாழ்வில் மட்டும் மாற்றம் அடையவில்லை. பெண்ணடிமைத் தனத்தைப் பண்பாடு ஊக்குவிக்கின்றது. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சினிமா போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெண்கள் மத்தியில் இக் கலாச்சாரத்தை ஊக்குவித்து வருகின்றன, நியாயப்படுத்தி வருகின்றன. 'தென்ஒலி' இதழ் பெண்ணடிமைத்தனத்தின் அடையாளச் சின்னமாக விளங்கும் அழகிப் போட்டியைக் கடுமையாகச் சாடியுள்ளது. "சிந்திக்கத் தொடங்கியிருக்கும் பெண்மையைத் திசை திருப்ப, திட்டமிட்டு நடத்தப்படும் உலக அழகிப் போட்டிகள், நம் நாட்டின் பெண் நல வாதிகள் இப்போட்டிக்கு நம் நாட்டில் மூடு விழா காணும் நோக்கத்துடன் எவ்வளவோ முயன்றும் இறுதியில் நம் நாடு, இப்போட்டிக்கு நுழைவாயில் அமைத்துக் கொடுத்து திறப்பு விழாவும் கண்டது. இதிலும் தன் தாராள மயத்தைக் காண்பித்து விட்டது. "[101]. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள், பெண்களின் நலனில் ஆர்வம் கொண்டு பெண்ணடிமைத்தனத்தை வன்மையாகச் சாடியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். 'தென்ஒலி' இதழில் திருமதி பரிமள செல்வி பெண்ணடிமை வளர்ந்த வரலாறு"[102] என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் சமய, சமுதாய, வரலாற்று, பொருளாதாரக் கண்ணோட்டங்களில் பெண்ணடிமைத் தனத்தை விளக்கியுள்ளார்.

xxvii. இளம் பெண்களின் இன்றையப் பிரச்சினைகள் :

குமரி மாவட்டக் கிறித்தவ இதழ்கள் இளம் பெண்களின் இன்றையப் பிரச்சினைகள் குறித்தும் அலசி ஆராய்ந்துள்ளன. சான்றாக 'நம் வாழ்வு' இதழில் இரா. பாவேந்தன் எழுதியுள்ள 'இளம் பெண்களின் இன்றையப் பிரச்சினைகள்' என்னும் கட்டுரையில், "முதலில் இளம் பெண்களுக்கு இளைஞர்களுக்கு இணையாக சமமான மதிப்பு அளிக்கப்பட வேண்டும். மிக முக்கியப் பிரச்சினைகளில் இளம் பெண்களின் யோசனைகளைக் கேட்பதன் மூலம் அவர்களின் செயல்களுக்கு மதிப்பளிக்கப்படுகின்றது என்பதை உணர்த்த வேண்டும். உடை, தலையலங்காரம் போன்ற அவர்களின் தனி உரிமைகளில் பெற்றோர் தலையிடவே கூடாது. ஆபாசமாகவோ, அநாகரிகமாகவோ இருந்தால் மட்டும் சுட்டிக் காட்டலாம். கேலி செய்தல், கோபமாகப் பேசுதல், திட்டுதல் போன்ற செயல்கள் இளம் பெண்களிடம் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே தவறுகளைச் சுட்டிக்காட்டி நண்பர்கள் போல ஒழுங்கு படுத்த வேண்டும்."[103]. என்று இளம் பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

பெண்களின் மீதான ஒடுக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் மதம் முக்கிய கருவியாகச் செயல்பட்டு வருகின்றது. எனவே மதவாதத்திற்கு எதிராகப் பெண்கள் போராடி வருகின்றனர். குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களும் மதவாதத்திற்கு எதிரான பெண்களின் போராட்டங்களை ஆதரித்து ஊக்குவித்து வருகின்றன. 'நம் வாழ்வு' இதழ் '

மதவாதத்திற்கு எதிராகப் பெண்கள் ' என்னும் பொருளில் சிறப்பிதழ் வெளியிட்டிருப்பதைக் குறிப்பிடலாம். அவ்விதழில், "இன்றைக்குத் தமிழ் நாட்டில் இருக்கின்ற பெண்கள் தன்னந் தனியாக சுதந்திரமாக சொந்தக்காலில் நின்று முன்னேற முடியாததற்குக் காரணம் அடிப்படை வாதம், எனவே இந்த மத அடிப்படை வாதத்தை முறியடிக்க வேண்டும். சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் பலாத்காரங்களுக்கு அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே. எனவே தான் ஆண்களைக் காட்டிலும் மதப் பழமைவாதத்திற்கு எதிராக, அடிப்படை வாதத்திற்கு எதிராக குரல் கொடுக்கின்ற முழுப்பொறுப்பு, கடமைகள் பெண்களாகிய நமக்கே தான் இருக்கின்றது."[104] என மதவாதத்திற்கு எதிரான பெண்களின் போராட்டச் சிந்தனை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறித்தவ இதழ்களில் பெண்ணியச் சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

7. முதியோர் :

மாபெரும் சமூக - பொருளாதாரச் சூழலில் கூட்டுக் குடும்பமுறை தளர்ந்து தனிக் குடித்தனங்கள் பரவலாகி, இந்த வேகத்தில் குடும்பங்களிலுள்ள 'மூத்த குடி மக்கள்' (Senior Citizens) தங்கள் உடமைகளையும் உரிமைகளையும், இழந்து பரிதவிக்கின்றனர். குறிப்பாகக் கிராமப் பகுதிகளிலும், புற நகர்ப் பகுதிகளிலும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கூட வழியின்றி மூத்தவர்கள் பலர் அவதிப்பட்டு வருகின்றனர். இவர்கள் சமூகத்திற்குப் புறம்பானவர்கள் அல்ல என்ற உணர்வைக் குடும்பச் சூழலிலும் சமூகப் பின்னணியிலும் மூத்தவர்கள் உணர

வேண்டும். வாழ்ந்து இளைத்தவர்கள் என்ற சலிப்பு இவர்களுக்கு வரக்கூடாது. இவர்களிடம் சம்பாதிக்க இயலாத வாழாவெட்டிகள் என்ற உணர்வும் எழக் கூடாது. எனவே தான் 'முதியோர் ' என்பதை விட 'மூத்த குடிமக்கள் ' என இவர்கள் அழைக்கப்படவும், கருதப்படவும் வேண்டுமென சமூகவியலார் அறிவுறுத்துகின்றனர்.

மூத்தவர்களைக் குடும்பச் சூழலில் தழைக்க விடுவதே சிறந்ததாகும். மூத்தவர்களுக்கும் இளையவர்களுக்கும் 'தலைமுறை இடைவெளி' (Generation Gap) ஏற்படுத்தும் விரிசலும் பொருளாதாரத் தனிமைத்துவம் வலியுறுத்தும் நிர்பந்தங்களும் மூத்தவர்களையும் இளையவர்களையும் பிரிக்கின்றது. இப்பிரிவைத் தவிர்க்கப்பாச உணர்வுகள் இறுக வேண்டும். குடும்பச் சூழலில் குறிப்பிட்ட பணிகளையும் பொறுப்புக்களையும் முதியவர்களிடம் ஒப்படைத்தால் மகிழ்ச்சியடைவார்கள். குழந்தைகளைப் பள்ளி ஊர்திகளில் அனுப்புவதற்குப் பதிலாக மூத்தவர்களிடம் ஒப்படைத்துப் பள்ளிக்கு அனுப்புகின்ற தம்பதியினர் விவேகமுடையவர்கள்.

உடல் தளர்ச்சியின் காரணமாக மூத்தவர்கள் சில குறிப்பிட்ட நோய்களுக்கு ஆட்படுகின்றனர். தக்க மருத்துவ ஆலோசனைகளும் சிகிச்சைகளும் உரிய நேரத்தில் கிடைத்தால் அவர்கள் நோயின்றி வாழ முடியும். இத்தகைய மருத்துவ ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற மருத்துவ முகாம்கள் மாதம் ஒருமுறை நடத்தலாம். மூத்தவர்களுக்கான சுகாதார மையங்களில் தனிக்கவனம் செலுத்தப்படவோ அல்லது தனிப்பிரிவு அமைக்கவோ செய்யலாம். குமரி மாவட்டக் கிறித்தவ இதழ்கள் முதியோர்களின் நல்வாழ்வில் ஆர்வம் கொண்டு, அவர்களின் நலம் குறித்த செய்திகளைப் பரவலாக வெளிப்படுத்தி இருக்கின்றன.

i. முதியோர் மனநிலை :

[illegible] ஐக்கிய நாட்டு சபையின் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் 1999-ஆம் ஆண்டினை முதியோரின் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. முற்காலங்களில் கூட்டுக் குடும்பங்களில் வாழ்ந்து வந்த முதியவர்கள் தற்போது தனித்து விடப்பட்டவராக இருக்கின்றனர். மரணபயம் முதற்கொண்டு பலவிதமான சுகவீனங்கள், தனிமைகள் அவர்களைத் துன்புறுத்துகின்றன. ஒரு காலத்தில் பொருளீட்டிப்பிள்ளைகள் நல்வாழ்விற்காக அரும்பாடுபட்டவர்கள் தற்பொழுது மற்றவர்களைச் சார்ந்து வாழும் கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் வயோதிகர்களின் மனநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்பதைத் 'தேசோபகாரி' இதழ் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளது. "டி.எல். பிரிங் என்ற பண்டிதர், சவால்களை வயோதிகர்கள் எடுக்க முடியாதவர்களாகவும், பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதவர்களாகவும், மற்றவர்களின் ஆக்க சக்திகளை மதிக்கத் தெரியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்கிறார். மறை திரு. கிளாரன்ஸ் பட்லர் என்பவர் அவருடைய ஆய்வில் முதியவர் சமுக, மனோதத்துவ இறையியல் அளவில் பாதிக்கப்படுகின்றனர். சமுக அடிப்படையில் முதியோர் உழைத்துப் பிறரைப் போஷிக்கும் நிலையில் இருந்து பிறரைச் சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஏனெனில் பிறருக்கு ஆலோசனைக் கூறித் தீர்மானம் எடுத்த அவர்கள் தற்போது பிறர் இவர்களுக்காக எடுக்கும் தீர்மானப்படி வாழக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். கவலைகளாலும் உள்

உணர்வுகளாலும் பயம் வருவதால் இவர்கள் மனநிலை பாதிப்படைகின்றது. இறையியல் அடிப்படையிலும் முதியவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதைப் பட்லர், என்றும் பண்டிதர் கூறுகிறார். இவ்வயோதிகர்கள் தேவையற்றவர்கள், பயனற்றவர்கள் என்று இளைஞர்களால் கருதப்படுவதோடு மட்டுமின்றி, கடந்தகால பாவ உணர்வுகளுக்கும், இறைப்பற்று குறைவுக்கும் இவர்கள் தள்ளப்படுகின்றனர் என்கிறார் "[105].

ii. முதுமை நலத் திட்டங்கள் :

'தேசோபகாரி ' இதழில் சிரில் லாங்டன் எழுதியுள்ள 'முதுமை தொல்லையா? என்னும் கட்டுரையில் முதுமை நலத்திட்டங்கள் பற்றிப் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார். "கடந்த சில ஆண்டுகளாக முதியோருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சமூகமும் அரசும் அறை கூவல் விடுகின்றன. முதியோர் இல்லம், இலவச மருத்துவம், போனஸ், ஓய்வு காலத் திட்டம், இலவசக் குடியிருப்புக்கள், ரயில்களில் இலவசப் பயணம், தொழிலாளர்கள், மீனவர்கள், ஏழைகள் என்ற முறையில் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வு கால ஊதியம் கொடுத்தல் - முதியோர்களைக் கவுரவிக்கும் வகையில் உள்ளன."[106]. இவ்வாறு 'தேசோபகாரி' இதழ் முதியோர் மனநிலை , முதுமை நலத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

iii. முதியோரை மகிழ்ச்சிப் படுத்துதல் :

மூத்தவர்களை மகிழ்வித்தல் இளையவர்களின் கடமை என்பதை 'வைரம்' இதழில் சி. ஜாண்ரோஸ் 'மூத்தவர் ஆண்டில் முத்தான பணிகள்' என்னும் கட்டுரையில், "மூத்தவர்களை அதிகமாக வாட்டுவது தனிமை. நோய்வாய்ப்பட்டு, வீட்டில் அடங்கி விடுபவர்களுக்கு சமூகத்துடன் உறவுகள் அறுந்து விடுகின்றன. இத்தகையவர்களைச் சந்தித்து உற்சாகப்படுத்த ஆங்காங்கே இளைஞர் மன்றத்தினரும், சேவைக் குழுவினரும் முனைய வேண்டும். மூத்தவர்களிடம் உரையாடுவது இளைஞர்களின் அறிவைப் புடமிடவும் உணர்வுகளை நெறிப்படுத்தவும் நிச்சயம் உதவும்"[107]. என எடுத்துக் காட்டியுள்ளார். ஆதலால் முதியவர்களின் அனுபவங்கள் வளர்ந்து வரும் இளைஞர்களுக்கு அவசியம் தேவை என்பது புலனாகிறது.

iv. முதியோர் இல்லம் :

முதுமை என்பது நம் வாழ்வில் தவிர்க்க இயலாத ஒரு பகுதி. இந்த உண்மையை உணர்ந்து முதுமையை இன்பமானதாகவும், அனைத்து வசதிகளுடன் கூடிய ஒன்றாகவும் நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். வாழ்வில் புதியவர்களுக்கு வழிவிட்டு முதியவர்கள் தங்கள் நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். முதியவர்களின் நல்வாழ்வுக்கென அனைத்து வசதிகளுடன் கூடிய முதியோர் இல்லங்கள் உள்ளன. 'உண்மைஒலி' இதழில் இ. எல். கிளமெண்ட 'முதியோர் இல்லம்' என்ற கட்டுரையில் முதியோர் இல்லங்களில் பெற்றோர்களைச் சேர்க்கும் இக்கால இளைய

தலைமுறையினரின் வாழ்க்கைச் சூழலைப் பின்வருமாறு விளக்கிக் காட்டியுள்ளார்.

" நவீன வாழ்க்கை முறையால் வாழ்வின் சிந்தனைகளே மாறிக் கொண்டிருக்கின்றன. ஒரு ஆண், பெண் உலகில் வாழ்வது ஒரு முறை தான். எனவே தன்னுடைய வாழ்க்கையைத்தானே அமைத்துக் கொள்ளும் உரிமை அவருக்கே உரியது என்ற சிந்தனை தற்போது மேலோங்கி நிற்கின்றது. அனேக இளைஞர்கள் தங்கள் திருமண வாழ்க்கையை ஆரம்பிக்கும் போதே தங்கள் பெற்றோரை விட்டுப்பிரிந்து சென்று விடுகிறார்கள். ஆனால் வயதாகும் போது மனிதனுக்கு அடுத்தவர்களின் துணை தேவைப்படுகின்றது. வயதாக வயதாக அவன் மற்றவர்களைச் சார்ந்தே இருக்க விரும்புகின்றான்."[108]. இந்நிலையில் அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகின்றனர். முதியோர் இல்லம் முதியவர்களுக்கு அனைத்துப் பாதுகாப்புக்களையும் வசதிகளையும் அளிக்கின்றது.

v. முதியோருக்கு எச்சரிக்கை:

உலக முழுவதிலும் முதியோர் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளால் சம்மந்தப்பட்ட நாடுகளின் மற்ற பணிகளில் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்தப் பிரச்சினை காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆபத்து நேரிட்டுள்ளது. இதனை 'அருட்பணிமலர் ' இதழ் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளது.

"கடந்த 1990-ஆம் ஆண்டில் உலக ஜனத் தொகையில் ஒன்பது சதவீதம் (அதாவது 50 கோடி பேர்) 60 வயதுக்கும் மேற்பட்டவர்களாக

இருந்தனர். வரும் 2000-ஆம் ஆண்டில் இது மூன்று மடங்காக உயரும். இன்னும் 35 ஆண்டுகளில் முதியோர் அல்லது ஓய்வு பெற்றோர் எண்ணிக்கை 140 கோடியாக உயரும். எனவே எதிர்காலத்தில் ஒய்வு ஊதியத் திட்டம் சீர்குலையும் நிலைவரும். முதியோர் எண்ணிக்கை உயர்வது காரணமாக நாட்டின் பொருளாதார நிலையே பாதிக்கப்படும். ஓய்வு பெற்ற ஊழியர்கள் அதிகரிக்கும் போது அரசு அளித்து வரும் ஓய்வூதியம் காரணமாக சம்மந்தப்பட்ட அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்படும். இந்த நிலை நாட்டின் பொருளாதாரத்தையே வீழ்ச்சி அடையச் செய்யும். எனவே பென்ஷன் திட்டத்திற்கு மாற்று ஏற்பாடு பற்றி உலக அளவில் சிந்தனை எழ வேண்டும். உழைக்கும் போதே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி ஓய்வுகாலத்தில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் திட்டங்கள் வர வேண்டும்."[109]. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் முதியோர்களை மையமிட்ட, நாட்டின் பொருளாதாரப் பாதிப்புக்களையும் எடுத்துக் காட்டியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

vi. முதியோர் அனுபவமும் திறமையும் :

தொழில் நுட்ப முன்னேற்றத்தால் உலகம் முழுவதும் இந்தியாவிலும் மக்களின் வாழ்நாள் அதிகரித்துள்ளது. இதனால் முதியோர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் கூடுகின்றது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை 4.45 கோடியாகும். தற்போது 6.3 கோடியாகும். பெரும்பாலான நாடுகளில் முதியோர்கள் அமைப்பு ரீதியான துறைகளில் வேலை செய்யவில்லை. இதனால் அவர்களுக்கு ஓய்வூதியமும் சமூக பாதுகாப்பும்

கிடைப்பதில்லை. இந்தியா ஒரு வேளாண்மை நாடு. பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். கடின உழைப்பாளிகள் அவர்களுக்குச் சத்துள்ள உணவும், உடல்நலப் பாதுகாப்பு வசதிகளும் குறைவு. இதனால் விரைவில் சோர்வடைகின்றனர்.

முதியோர்களின் திறமையை நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வழி முறைகள் குறித்து சர்வதேச முதியோர் கூட்டமைப்பு அண்மையில் ஆய்வு ஒன்றை நடத்தியது. அந்த ஆய்வறிக்கையின் படி, " வயதின் காரணமாக மிகச் சிறந்த திறமையுள்ள பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். திடீரென்று இவ்வாறு பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு வருமானம் குறைகின்றது. தங்களது மருத்துவச் செலவுகளுக்கும் குடும்பச் செலவுகளுக்கும் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே அவர்கள் தங்களது உடல் திறன் நல்ல நிலையில் இருக்கும் வரையில் பணிபுரிய விரும்புகின்றனர். முதியோர்களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் அவசியம். அவர்கள் எப்பொழுதுமே மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டிய நிலை உள்ளது. உடல் தகுதி மற்றும் திறன் குறைந்து விடுகிறது என்ற காரணத்தினால் முதியோர்களைப் பணியில் வைத்துக் கொள்ள, வேலை கொடுப்போர் தயங்குகின்றனர். "[110] என்ற உண்மை கண்டறியப்பட்டது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் முதியோர் நலனில் அக்கரை கொண்டு முதியோர் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, தக்க தீர்வுகளையும் வலியுறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

8. விதவைகள் :

கணவனை இழந்த விதவை பெண்களைப் பெற்ற பிள்ளைகளும் குடும்பத்தாரும் பராமரித்துப் பாதுகாத்தில் மட்டும் போதாது. அவர்களுக்குத் தக்க பாதுகாப்பும் பராமரிப்பும் சமூகத்திலிருந்தும் கிடைக்க வேண்டும். தமிழ்ச் சமுதாயத்தில் சாதி-மதபேதமின்றி விதவைப் பெண்கள் பல்வேறு துயரங்களை அனுபவித்து வருகின்றனர். விதவைப் பெண்களுக்குச் சமய அடிப்படையில் சமுதாயத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் முதலில் நீங்க வேண்டும். விதவைகள் மறுமணம் சமூக மதிப்புடைய தாக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் விதவைகளின் வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியும். குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் விதவைகளின் சமுதாய மதிப்புப் பேணல், அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையூட்டல், ஆதரித்தல் என்ற நிலைகளில் பரவலாகச் செய்திகளை வெளியிட்டுள்ளன. சான்றுகளாகப் பின்வரும் செய்திளைக் குறிப்பிடலாம்.

i. விதவைகள் நலத்திட்டம் :

குமரி மாவட்டத் திருச்சபைகள் பெண்கள், விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தினை ஆதரித்து ஊக்குவித்து வருகின்றன. 'தேசோபகாரி ' இதழ் விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தில் நாட்டம் செலுத்தி வருகின்றது. இதனை "பெண்கள், விதவைகள் மேம்பாடு - மறுவாழ்வுத் திட்டம் துறையின் சார்பில் அரசு நலத் திட்டங்கள் அறிமுகம் செய்கின்ற வகையில் எல்லா திருச்சபை மக்களுக்கும் தரிசனத் திருப்பணி 2000- த்தின் சார்பில் 11.09.99 அன்று நாகர்கோவில் கஸ்பா சபையிலும் அதைத் தொடர்ந்து சேகர ஆலயத்திலும்

மறை திரு பேராயர் எம்.ஐ. கேசரி அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அரசு அதிகாரிகள் விதவைப் பெண்களுக்கான அரசுநல உதவிகளைப் பற்றி சிறப்பான முறையில் விளக்கினார்கள்"[111]. 'தேசோபகாரி' இதழின்' தரிசனத் திருப்பணி 2000' திட்டங்களுள் ஒன்றாக விதவைகள் மறுவாழ்வுத் திட்டம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ii. குமரியில் விதவைகள் நிலை:

"பனைத் தொழில், பாறைத் தொழில், கட்டிடத் தொழில் மற்றும் கடல் மீன்பிடித் தொழில் போன்றவைகளால் ஏற்படும் விபத்துக்களினாலும், நோய்வாய்ப்பட்டும் கணவன் இறந்து போவதால் மனைவி இளம் வயதிலேயே விதவையாகின்றாள். இத்தகையோர் குமரி மாவட்டத்தில் மிகவும் ஏராளம். குறைந்தது ஒரு வீட்டுக்கு ஒன்றுக்குக் குறையாமல் விதவைகள் உள்ளனர். இவர்களைத் தங்கள் வயோதிக வயதில் பிள்ளைகளோ குடும்பத்தினரோ சரியாகப் பராமரிப்பதில்லை." [112]. இவர்களுக்குப் பராமரிப்புக் கொடுக்கவும், பாதுகாப்புக் கொடுக்கவும், படித்தவர்களும் இளைஞர்களும் பொருள் வசதி உள்ளவர்களும் உதவ முன் வர வேண்டுமென ' விண்ணரசு' இதழ் வலியுறுத்திக் கூறியுள்ளது.

iii. ஆதரவற்ற விதவைகள் நல்வாழ்வு:

ஆதரவற்ற விதவைகள் நல்வாழ்விற்கு விண்ணரசு இதழ் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது. முதுமை ஒரு துன்பம்" முதுமையில் விதவையாக இருப்பது அதனினும் அதிகத் துன்பம். பிள்ளைகளாலும்

உறவினர்களாலும் உதவியற்ற விதவைகள் ஆயிரக்கணக்கில் கிராமங்களில் அவதிப்படுவதைக் கண்டு விண்ணரசு இயக்கம் சிந்திக்க ஆரம்பித்தது. இதன் பயனாக உருவானதே விதவைகள் நல்வாழ்வுத் திட்டமாகும். சுமார் 300க்கும் அதிகமான விதவைகள் இதுகாறும் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர். அதில் 144 பேர் டிசம்பர் மாதம் பொருளுதவியும் பண உதவியும் பெறுகின்றனர். சிறு தொழில்கள் புரியும் திறமையானவர்களுக்கு சிறு கடனுதவியும் வழங்கப்படுகின்றது. ஒரு விதவைக்குத் தேவையான உதவி செய்ய ரூ.400 தேவைப்படுகின்றது. இந்த முதிர் வயது விதவைகளில் ஒருவருக்கோ அல்லது பலருக்கோ உதவ விரும்புகிறவர்கள் பலர் உள்ளனர்."[113] இவ்வாறு விண்ணரசு இதழில் விண்ணரசு இயக்கம் ஆதரவற்ற ஏழை விதவைப் பெண்களுக்கு நற்பணிசெய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

iv. விதவைகள் மறுமணம் :

உடல் ரீதியாகவே ஆண்-பெண் பேதம் அமைந்துள்ளது. உயிர், மனம், சிந்தனை, செயல் போன்றவற்றில் பேதமில்லை. கணவன் துணையை இழந்த பெண்கள் தங்களுக்குத் தகுந்த துணையைத் தேடிக் கொள்வதில் தவறில்லை. புராண - இதிகாசங்கள் ஆகியன அக்காலத்தில் நிகழ்ந்த சூழலுக்கு ஏற்ப எழுதப்பட்டவையாகும். நாம் வாழும் கலி காலத்துச் சூழலுக்கேற்பவே நாம் சிந்திக்க வேண்டும். கலியுகத்து அவதாரமான அய்யா வைகுண்ட சுவாமி தனது 'அகிலத் திரட்டு' நூலில் மறுமணத்தை மறுக்காமல் ஏற்றுக் கொண்டுள்ளார். ராஜரிஷி பால பிரஜாபதி அடிகளார் '

வைரம் ' இதழில் எழுதிய ' விதவைகள் மறுமணம் தவறானதா? ' என்ற கட்டுரையில், " உடன்கட்டை ஏறுவது கூட இயற்கைக்குப் பொருந்தாத, ஆன்மீகத்துக்கு அடுக்காத செயலே தான். யாகங்கள் கலி காலத்துக்கு ஏற்புடையன அல்ல. கலியுகத்து மக்கள் கூட்டு வழிபாடு செய்வதே சிறப்புடையது. சாதிக்குச் சிறப்பிருந்தால் எந்த சாதியில் கொலைகாரர்களே இல்லாத, கொள்ளையடிப்பவர், லஞ்சம் கொடுப்பவர், அநியாயம் செய்யாதவர் இல்லாத நிலை உள்ளது. விபச்சார அபச்சாரங்களில் சிக்கிக் கொள்ளாத சாதி எது. சாதி என்பது மாய வலை. அதில் சிக்கிக் கொள்ளாத சாதி மனிதன் நல்ல மனிதன் - ஆன்மீக வாதி. சாதி என்பது சாரங்கெட்டது. அது வெறும் மாயை என்பதனை மக்களுக்கு உணர்த்தி சம அந்தஸ்தும் வாய்ப்பும் கொடுத்து பெருமைச் சேர்க்க உழைக்க வேண்டியது உண்மை ஆன்மீகவாதிகளின் கடமை ஆகும்."[114] எனச் சுட்டிக்காட்டி விதவை மறுமணத்திற்குத் தடையாக உள்ள புராணம், இதிகாசம், சாதி, மதம், ஆன்மீகம் ஆகியனவற்றைக் கடுமையாகச் சாடியுள்ளார். ' ஏழையின் குமுறல் ' இதழில் மதுரை பல்லவி 'விதவை ' என்னும் கவிதையில் விதவைகளின் துயரினை,

" அவள் அறியாமலே

அவளைக் கேட்காமலே

நெற்றியில் அவள் இட்ட பொட்டும்

தலையில் அவள் சூடிய பூவும்

உதிர்ந்து விட்டன.

ஏன்?

அவள் கட்டிய கலர் ஆடை கூட

தற்கொலை செய்து கொண்டது

இச்சீர் கெட்ட சமுதாயத்தால்

ஏன்?

அவள் விதவையாம்! " [115]

என வடித்துக் காட்டியுள்ளார். விதவைகள் பூவிழந்து, பொட்டிழந்து, வெள்ளைச் சேலை உடுத்தும் அவல நிலையையும், அதற்குக் காரணமான சமுதாயத்தையும் இக்கவிதை சாடியுள்ளது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் விதவைகள் நலத்திட்டம், குமரியில் விதவைகள் நிலை, ஆதரவற்ற விதவைகள் நல்வாழ்வு, விதவைகள் மறுமணம் என்ற நிலைகளில் விதவைகள் பற்றிய செய்திகள் வெளியாகியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

9. ஆன்மீகச் செய்திகள் :

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் அருளுரை, இறையாட்சி, தொழுகையும் வாழ்க்கையும், ஆலயம் சார்ந்த கிறிஸ்தவத் தொழுகை, அருங்கொடைத் தீவிரவாதம், மனித நேயத்தின் மறுபெயர் ஆன்மீகம், ஆன்மீக கிறிஸ்தவம், ஏசாயாவின் சமுதாயப் பார்வையும் பிற்காலக் கிறிஸ்தவர்களின் தடுமாற்றமும், கம்பியூட்டர் இறையியல், கிறிஸ்துவுக்கு முதற்கனி பிச்சைக் குடியிருப்பு - பிச்சைநாடார் அபிஷேகத்தின் அவசியம், தேவபக்தி, இரட்சிப்பின் இரகசியம், தீர்க்கத் தரிசிகள், பரிசுத்த ஆவியின் எழுப்புதல், பாவமும் பரிகாரமும், குறைவற்ற இறை அன்பு, பலி, சின்ன ஜெபம், ஆவியின் கனிகள் மாம்சத்தின் கிரியைகள், விசுவாசம், கர்த்தர்

உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், உத்தம விசுவாசம், தெய்வீக சுகங்களும் அற்புத அடையாளங்களும், தினசரி ஜெபம், ஈஸ்டர் ஞாயிறு, குருத்தோலை ஞாயிறு, இயேசுவின் அதிகாரம், இயேசுவின் கட்டளை, இயேசுவின் வாக்குத்தத்தம், அருட்பணியில் திருச்சபை, அருட்பணியின் நிறைவு சிலுவையே, ஜெபத்துக்கு முதலிடம், தேவனுக்காகப் போராடுவது, திருமறையும் மனம் திரும்புவதும், விசுவாசத்தை வளர்ப்பது, சுவிசேஷத்தின் உக்கிராண உத்தரவாதம், பாவத்துக்கு தேவ தண்டனை, உருக்கமான ஊழியமும் உறுதியான எழுப்புதலும், பரிசுத்தமும் பாடுகளும், கிறிஸ்துவை அறிதல், ஜீவனுக்குள் வழி நடத்தும் பாதை, அன்பும் தியாகமும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவுக்காக, கொள்கைகளும் உபதேசங்களும் அல்ல, கிறிஸ்து மாத்திரமே நமது அன்புக்குப் பாத்திரமானவர், பயனுள்ள விசுவாசம், மன்னித்தல், மனம்திரும்பாத பாவிகளை விட உயிர்ப்பிக்கப்படாத கிறிஸ்தவர்களே பெரிய குற்றவாளிகள். தேவனுடைய பூரண ஆசீர்வாதத்தை அடைந்து கொள்ளத் தாழ்மையாக நடந்து கொள்ளுதல், அமைதியான ஆராதனை, ஆண்டவரின் வருகையும் பரிசுத்தமும், ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை, உண்மையான தேவ ஆராதனை, வாழ்க்கைத் தொடர்புகளில் தேவனுக்கே முதலிடம், மன்றாடுதல், பெரிய காரியங்களைப் பெற்றுக் கொள்ளும் வல்லமையுடையது, கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ளும் முறை, மனிதரால் கூடாதவைகளுக்காக தேவனை நம்புதல் இயேசு அதிசயமானவர், கிறிஸ்துவோடு ஆளுகை செய்தல், வெளிப்படுத்தப்பட்ட தேவப்பிரசன்னம், பயனுள்ள மன்றாட்டு ஜெபம், ஜெபமும் அன்பும், தேவனை நேசிப்பது என்பது அவருக்குக் கீழ்ப்படிவதே, இணைந்த ஜெபத்தின் வல்லமை, விசுவாசியின் வாழ்க்கையில் தூய ஆவியானவரின் பணி, கிறிஸ்துவின் சிலுவையில் பங்கு

பெறுவோம், அவருடைய வாழ்வின் பங்காளிகளாவோம், உலக முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவித்தல், கிறிஸ்துவைப் போலவே வாழ்தல், மீட்பின் இரகசியம் தாழ்மையாகும், தேவனிலுள்ள நமது விசுவாசத்தை வளரச்செய்தல், மறைவான பாவங்கள், ஆத்துமாக்கள் அழிகின்றன அவைகளை ஆதாயப்படுத்த உன்னை ஆயத்தப்படுத்து, தேவனோடு ஒப்புரவாகுவதற்கு மனிதர் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாக வேண்டும். இயேசுவை ஆண்டவர் என்பது தான் சுவிசேஷம், சத்தியத்தை அன்போடு பகிர்ந்து கொடுத்தல், விசுவாசிகளின் ஒருமைப்பாட்டிற்காக கிறிஸ்து செபித்தார், தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்வதன் முக்கியத்துவம், இயேசு உலக இரட்சகர், கன்வென்ஷன் கூட்டங்களும் சபைநாள் ஆராதனையும், சிலுவையின் சிறப்பு, சிலுவையில் சூழ்ந்த அதிசயங்கள், உயிர்த்தெழுதல், நித்திய ஜீவன், இயேசு பாலனின் பிறப்பின் மேன்மை, நிருபங்களில் கிறிஸ்துவின் பிறப்பு, பரிசுத்தம், எங்களுக்குக் கர்த்தரே தேவன், பாவியின் மனம் திரும்புதலாகிய ஆத்தும இரட்சிப்பு, தேவனுடைய வீட்டில் பரிசுத்தம் தேவை, பன்மை நிலையும் சமய சுதந்திரமும், பல்சமய நம்பிக்கை, இறையரசு, விண்ணரசு, ஓரிறைக்கோட்பாடு, அன்பியம், இறையாட்சிப்பாதையில் பங்குப் பேரவை, திருவழிபாடு, திருப்பலியில் நற்கருணை மன்றாட்டுக்கள், சகிப்புத்தன்மை, அத்வைதமும் கிறிஸ்தவமும் என்னும் பொருள்களிலும் அடிக்கருத்துக்களிலும் ஆன்மீகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

' தேசோபகாரி ', ' உண்மை ஒலி ' , சுவிசேஷ நண்பன் ' , விண்ணரசு ' , அருட்பணிமலர் ' வருகையின் தூதன் ' மறைநெறி ' நம்வாழ்வு'

திருச்சபையில் புதுமலர்ச்சி ஆகிய கிறிஸ்தவ இதழ்களில் ஆன்மீகச் செய்திகளே பெரும்பான்மையான பக்கங்களை நிரப்பியுள்ளன. சமயமும் சமுதாயமும் பின்னிப்பிணைந்த ஆன்மீகச் செய்திகளையே குமரி மாவட்டக் கிறித்தவ இதழ்களில் காணலாம். மனச்செம்மை, வாழ்வியல் ஒழுக்கம், தூய்மை, நேர்மை, வாய்மை, அறநெறியில் அன்பு வாழ்வு, அருள் வாழ்வு, இல்லற வாழ்க்கையில் அன்புறவு ஆகிய சிந்தனைகளையும், மனித நேயத்தையும் வெளிப்படுத்தும் வகையில் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் ஆன்மீகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் ஆன்மீகச் செய்திகளை எடுத்துக் காட்டி விளக்கலாம்.

i. தொழுகையும் வாழ்க்கையும் :

' தேசோபகாரி ' இதழில் தா. ஆசீர்டேவிட் எழுதியுள்ள ' தொழுகையும் வாழ்க்கையும் ' என்னும் கட்டுரையில், " கடவுளை ஒரு மனதாகத் தேடுகின்ற இடத்தில் அவர் நிச்சயமாக இருப்பார் என்கிறது திருமறை பல ஆயிரம் பேர் கூட வேண்டுமென்பதில்லை. இரண்டு பேரோ மூன்று பேரோ கூடினால் போதும். உள்ளம் ஒரு நிலைப்பட வேண்டும். அதுவே முக்கியம். ஆலய வழிபாடு மனிதனைக் கடவுளோடு உறவுக்கொள்ளச் செய்து, மாசுபடிந்த உள்ளத்தை ஒள்ளிய மணியாக்கி, சமுதாய உணர்வைக் கிளர்ந்தெழச் செய்து கடவுள் விரும்பும் மானிட வாழ்வாக்கும் ஏதுவாக்க வேண்டும்"(116) எனத் தொழுகையையும், வாழ்க்கையையும்

ஒன்றிணைத்து, வாழ்க்கையின் ஒரு முக்கிய கூறாகத் தொழுகையை வலியுறுத்திக் கூறியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

ii. திருமறைச் சார்ந்த கிறிஸ்தவத் தொழுகை:

திருமறைச் சார்ந்த கிறிஸ்தவத் தொழுகையே மிகவும் சிறப்பான ஆன்மீகமாகும். ' தேசோபகாரி ' திருமறை சார்ந்த கிறிஸ்தவத் தொழுகையின் தனிவழிபாடு, குடும்ப வழிபாடு, ஆலய ஆராதனை என மூவகைப்படுத்தி விளக்கியுள்ளது." இவ்வழிபாடுகள் நன்றி செலுத்துதலின் பகுதியானதால் அது தூய வாழ்க்கைக்கு நம்மை ஆயத்தப்படுத்துகின்றது. இதனால் தான் ஆராதனை வழிபடவந்து செயல்பட வெளியே செல்வது எனப்படுகிறது. நாமும் ஆராதனைகளைப் பொருளுள்ளதாக அமைத்து இயேசுவைத் தொழுது அவருக்குப் பணிவிடைக்காரர்களாக இயங்க வேண்டும். "[117]. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் திருமறை சார்ந்த கிறித்தவத் தொழுகை மக்களுக்குப் புரியும் வகையிலும் பயன்படும் வகையிலும் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

iii. அருளுரையும் இறையாட்சியும் :

இறையாட்சி என்பது நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக தூய ஆவி அருளும் நீதி. அமைதி, மகிழ்ச்சி, ஆகியனவற்றையே அடிப்படையாகக் கொண்டது. (ரோமர் 14: 17) இதனை இன்றைய கிறிஸ்தவ வழிபாட்டு மக்கள் சரியாகப்

பின்பற்றுவதில்லை. " இன்று உணவும், உடையும், இருப்பிடமும் டெ இறையரசு, நற்செய்தி எனத் தவறாக நம்பித் திருச்சபைக சமூகத்தையும் அவைகளைப் பெறும் களங்களாகக் கொண்டுள்ளனர். ஆனால் கடவுள் அரசின் அடிப்படையான நீதி, நேர்மை, சமாதானம், மகிழ்ச்சி இவைகளை மறந்து வாழ்கின்றனர். "[118] ஆதலால் 'தேசோபகாரி ' இதழ் கடவுள் அரசு நம்மைக் கடவுளுக்கு ஒப்படைப்பதில் அமைந்துள்ளது. கடவுள் ராஜ்யம் கடவுளோடுள்ள உறவு சார்ந்தது, கடவுள் ராஜ்யம் பிற மனிதர்களோடுள்ள உறவு சார்ந்தது என்னும் ஆன்மீக நெறிகளை உணர்த்தியுள்ளது.

iv. ஆன்மீகக் கிறிஸ்தவம் :

பொருளியல் சார்ந்த ஆன்மீகச் சிந்தனைகளைக் குமரி மாவட்டக் கிறித்தவ இதழ்கள் வன்மையாகச் சாடியுள்ளன. தூய ஆவியில் தோன்றிய இறையியல் சிந்தனைகளை வலியுறுத்தியுள்ளன. இதற்குச் சான்றாகச் 'சமுதாயச் சிந்தனை ' இதழில் வெளியான பின்வரும்' செய்தியைக் குறிப்பிடலாம். " ஒரு மதத் தலைவன் தன் பதவிக்காலம் முழுவதும் அரசியல் வாதியைப் போல, பொருள் பரமான (Materialistic) சில நவடிக்கைகளில் ஈடுபட்டு, தானும் அதன் மூலம் பொருளீட்டிக் கொண்டு அவைகளைத் தன் சாதனைப் பட்டியல் என்றும், முள்ளில் நடந்து இரத்தம் சொட்டச் சொட்ட சாதித்தவை என்றும், நிலைய வித்துவான்களை வைத்து வரலாறு எழுதி, அண்டங் காக்கைக்கும் குயில்களுக்கும் வித்தியாசம் தெரியாத பொருள் சேர்க்கும் சிந்தனை ஒன்றை மட்டும் தெரிந்த, இன்றைய

திருச்சபை மக்களை ஏமாற்றியது கிறிஸ்தவமென்றால் அந்த பொருள்பரமான சிந்தனையில் நனைந்த கிறிஸ்தவம் நமக்கு வேண்டாம். ஆன்மீகக் கிறிஸ்தவம் வேண்டும் '[119]. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் ஆன்மீகக் கிறிஸ்தவ நெறிகளை எடுத்துக்காட்டி, போலியான ஆன்மீக வாதிகளைக் கடுமையாகச் சாடி அடையாளம் காட்டி இருக்கின்றன.

v. பரிசுத்த ஆவியின் எழுப்புதல் :

கிறிஸ்தவ வழிபாட்டில் பரிசுத்த ஆவியின் எழுப்புதல் மிகவும் இன்றியமையாததாகும். குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களுள் ' மறைநெறி ' இதழ் பரிசுத்த ஆவியின் எழுப்புதல் மற்றும் ஜெபக் கூட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதற்குச் சான்றாகப் பின்வரும் செய்தியைக் குறிப்பிடலாம். ' நாணமற்ற நற்செய்தியாளர்கள் சிலர் இப்பொழுது தான் ஒரு பெரிய எழுப்புதல் கூட்டம் நடத்திவிட்டு வந்தேன். அதில் ஆயிரக்கணக்கானோர் ஒப்புக்கொடுக்க முன் வந்தனர். இத்தோடு நிறுத்தமாட்டார்கள் ஏனென்றால் வறட்டு அடிப்படைக் கொள்கைவாதிகளை ஆறுதல் படுத்த வேண்டுமே! ஆனால் அங்கு உணர்ச்சி ததும்புதலோ, அசைவோ ஒன்றும் கிடையாது என்றும் கூறிவிடுவர். இது தான் வேடிக்கையானது. மக்களை அதிரச் செய்யாத பூகம்பத்தைக் கேள்விப்பட்டது யார்? நிலை குலைக்காத சூறாவளியும் உண்டோ '[120]

ஆதலால் திருச்சபை, மக்களின் உள்ளங்களை அதிரச் செய்து, அவர்களின் ஆவிகளைக் கிளர்ந்தெழச் செய்தலே உண்மையான

பரிசுத்தாவியின் எழுப்புதல் என்பதை ' மறைநெறி ' இதழ் வலியுறுத்திக் கூறுகின்றது.

vi. அருட்பணியும் திருச்சபையும் :

அருட்பணியில் அனைத்து மக்களையும் ஈடுபடுத்துதல் இயேசு கிறிஸ்துவின் திட்டமாகும். திருச்சபையானது அருட்பணிக்காகவும் அருட்பணியினாலும் தான் நிலைத்து நிற்கின்றது. அருட்பணியானது இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்டுள்ள திட்டத்தை நற்செய்தியின் வாயிலாக நிரூபித்துக் காட்டுதலாகும். இதுவே மிகச் சிறந்த ஆன்மீகப் பணியாகும். பி.ஜே.ஜெயசீலன், ' அருட்பணியில் திருச்சபை ' என்னும் ஆன்மீகக் கட்டுரையை எழுதியுள்ளளா். அக்கட்டுரை அருட்பணி மலரில் வெளியாகியுள்ளது.

' அருட்பணியில் ஐக்கியமும் சாட்சியும் தேவை, அருட்பணி நற்செய்தியை அறிவித்தலாகும். அருட்பணியானது தொழுகை, பிரசங்கம், மறைக்கல்வி, போதகா் ஆலோசனைப் பணி ஆகியனவற்றின் மூலம் மக்களை வளரச் செய்வதாகும். அருட்பணியானது சமூகத்தில் நீதியை நிலை நாட்டுகின்றதாக இருக்க வேண்டும். "அருட்பணியானது கடவுள் படைத்த படைப்புக்களைப் பாதுகாத்தலாகும் "[12] இவ்வாறு 'அருட் பணி மலா் ' ஆன்மீக வாழ்க்கையின் நோக்கங்களையும் பயன்பாட்டினையும் எடுத்துரைப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

vii. பாவ மன்னிப்பு:

கிறிஸ்தவ ஆன்மீக நெறியில் பாவ மன்னிப்பு மிகவும் இன்றியமையாததாகும். தபசு அல்லது லெந்து நாட்களில் இயேசுவிடம் பாவமன்னிப்புக் கேட்பது பயனுடையதாகும். ' அருட்பணிமலர் ' தபசு அல்லது லெந்து நாட்களில் நாம் பாவ மன்னிப்புக்காக,

"1. உபவாசம் செய்தல்,

2. ஜெபத்தில் தரித்திருத்தல்

3. ஜெபக் கூட்டங்களை நெகிழவிடாதிருத்தல்

4. காணிக்கை செலுத்துதல்

5, நமது ஆண்டவரின் பாடு மரணங்களைத் தியானித்தல் "[122]

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் ஆன்மீகப் பாதையில் ' பாவ மன்னிப்புப் பற்றிய கருத்துக்களையும் வெளியிட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

viii. பிரசித்தம் செய்தல் :

சிறைப்பட்டுப் போன மக்களை விடுதலை செய்ய அரசர் ஒருவர் தோன்றுவார் என யூதர்கள் எதிர்பார்த்தனர். காலம் வந்தபோது பாரசீக மன்னன் கோரேசு யூதர்களை விடுதலை செய்தான். இதனால் அவர் தான் கிறிஸ்து அரசர் என்று அன்று நினைத்தனர். ஆனால் அந்த எண்ணம் மறைந்து இறைவனே அரசராக வருவார் என மக்கள் நம்பினர். காலம் நிறைவேறிய போது தேவனே உலகில் அரசராகப் பிறந்தார். உலகில்

தோன்றிய கிறிஸ்து அரசா் அடிமைப்பட்ட மக்களுக்கு விடுதலை வழங்கும் அரசராக விளங்கினாா். பேயிலிருந்தும் நோயிலிருந்தும் மக்களை விடுவித்தாா்.

" விதவைகளைப் பட்சித்து விதண்டாவாதம் செய்தவா்களை வீழ்த்தினாா். ஏழைகளை ஒடுக்கின சமூக விரோதிகளிடமிருந்து மக்களை விடுதலை செய்தாா். வரலாற்றில் மனித சமுதாயத்திற்கு கிறிஸ்து செய்த இந்த விடுதலையைப் பிரசித்தம் செய்ய இயேசு உங்களை அழைக்கிறாா். கிறிஸ்துவுக்காக நாம் காட்டுகிற அன்பு விசுவாசமல்ல., ஒரு மனிதனுடைய முழுவாழ்க்கையிலும் காணப்படும் அநீதி, அநியாயம், ஒடுக்குதல் இவை அனைத்தையும் நீக்குவதற்குப் பாடுபடுவது தான் உண்மையான விசுவாசமாகும். "(123) இவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை அடிப்படையாகக் கொண்டதே கிறிஸ்தவ ஆன்மீகம் என்பதைக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வலியுறுத்துகின்றன.

ix. ஆவியில் அனலடை தல் :

போதகா் ஆவியில் அனலடைந்தால் சபை புத்துயிா் பெறுவது உறுதி என்பதை 'வருகையின் தூதன் ' இதழ் சுட்டிக் காட்டுகின்றது. போதகா் ஆவியில் அனலடைதலே சிறப்பான ஆன்மீகமாகும். கிறிஸ்தவ வழிபாட்டில் இரண்டு செயல்பாடுகள் உண்டு. ஒன்று தரிசனம், மற்றொன்று வாஞ்சை. ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேற முயல்கின்றவா்களுக்கு இரு பெரும் மலைகள் எதிரிகளாகத் தோன்றுவதுண்டு. ஒன்று சாத்தானுடைய போராட்டமும் எதிா்ப்பும் ஆகும். மற்றொன்று உலக மனிதரால் ஏற்படும்

எதிர்ப்பாகும்.இப்படிப்பட்டவர்கள் உலகத்திற்கும் ஆன்மீக வாழ்க்கைக்கும் பயன்பட மாட்டார்கள். தரிசனங்களில் உன்னத தரிசனம், ஆழத்தின் தரிசனம், அகன்ற தரிசனம் என்னும் மூவகை உண்டு. இவற்றில் உன்னத தரிசனமே தேவனைக் கண்டு கொள்ளும் வழியாகும். " நீண்டகாலமாய் கிறிஸ்தவத்தில் புரண்டு கொண்டிருந்த ஒரு ஆத்துமா, திடீரென்று ஆவியில் அனலடைந்து ஆண்டவருக்காக அயராது உழைக்குமானால் ஒரு காரணம் வேண்டும். அவன் யாக்கோபைப் போல விடாப்பிடியாய்ப் போராடி ஆவியானவரின் வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும். "[124] எனவே போதகர் ஆவியில் அனலடைந்தால் தான் திருச்சபை புத்துயிர் பெறும் என்பதை ' வருகையின் தூதன் ' இதழ் தெளிவாக உணர்த்துவதைக் காணலாம்.

x. ஜெபம் :

இன்றைய திருச்சபை தீவிரமாகப் பல காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் ஜெபத்தில் பின்தங்கிவிட்டது. அனேகக் கிறிஸ்தவர்கள் ஜெபிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர். அனேகர் எழுப்புதலின் வல்லமையைக் குறித்துப் பயம் கொள்கின்றனர். வேத போதனைகளை அறிந்த நாம் அவற்றை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. ஜீவனற்ற ஆவியால் நிரப்பப்படாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆவியில் தொடங்கி மாம்சத்தில் முடிக்கின்றோம். ஆவியானவர் வழி நடத்தாவிட்டால் ஆத்துமா அழிந்து விடும். எனவே ஜெபம் மிகவும் இன்றியமையாததாகும்.

" தனது சீடர்களுக்கு நமது ஆண்டவர் கொடுத்த கடைசிக் கட்டளை' எல்லா ஜாதிகளையும் சீடராக்க வேண்டும் என்பது தான். அவர்கள் அதை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் அந்தப் பணியை எப்படிச் செய்ய வேண்டுமென்ற ஆலோசனைகளையும் அளித்தார். எருசலேமிலே தரித்திருந்து ஜெபிக்கும்படி அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அறுவடை ஏராளமாயிருப்பதால் அறுப்புக்கு எஜமான் அனேக வேலையாட்களை அனுப்புவதற்காக ஜெபிக்கும் படி ஏற்கனவே அவர்கள் கட்டளை பெற்றிருந்தார்கள். அவர் ஆரம்பித்த பணியை நிறைவேற்றுவதற்கான தெய்வீக வல்லமையை அளிப்பதாகவும் வாக்களித்தார். அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவரது கட்டளையை நிறைவேற்ற வேண்டும்."[125]. பொருளாதார, வியாபார, சமூக வாழ்க்கைகளில் வெறுமையடைந்த மேலை நாடுகள் ஜெபத்தின் மூலம் வெற்றி கண்டுள்ளதை உலக வரலாறு உணர்த்துகின்றது. எனவே கிறிஸ்தவர்களின் மிகப் பெரிய கட்டளை ஜெபிப்பதே என்பதை 'வருகையின் தூதன் ' இதழ் எடுத்துக்காட்டுகின்றது.

xi. மறைவான பாவங்கள் :

நமது சுயத்தை நாமே அறியாமலிருக்கிறோம். எனவே நம்மைக் குறித்த நமது தீர்ப்புத் தவறானதாகும். இன்னொரு விதமான மறைவான பாவமும் உண்டு. பாவம் வஞ்சனையுள்ளது. எனது வழிமுறை, எனது சுபாவம் என்று நாம் சாக்குப் போக்குக் கூறினாலும் தேவனுடைய பார்வையில் அவை

தவறுகளும் குறைபாடுகளும் ஆகும். அவை பாவங்களே. இதனை ' வருகையின் தூதன் ' இதழ்,

"தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்க்கை வாழ நம்மிலிருக்கும் எல்லாக் குறைகளையும் கண்டு பிடிக்க விரும்பாதவன் 'கோழை' நம்மிலிருக்கும் மறைவான குற்றங்களைக் கண்டுபிடிப்பது நமக்கு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். நற்குணங்கள் நிறைந்தவர்களிடமும் தவறுகள் உண்டு. நாம் அவற்றைக் கண்டு கொள்வதில்லை. ஆனால் நமது அயலானைப் பார்த்து ' இப்படிப்பட்டவனிடம் இத்தவறு காணப்படுகிறதே ' என்கிறோம். அவர்களும்நம்மைக் குறித்து அவ்விதமாகவே கூறுகிறார்கள். பாவம் வஞ்சனையுள்ளது. இன்னும் கண்டுபிடிக்கப்படாத பாவங்களிருந்தால் வெளிப்படுத்தும் படியாகத் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். " [126] என வலியுறுத்திக் கூறியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

xii. சிலுவையின் சிறப்பு:

சிலுவை இன்று புனித சின்னமாகக் கருதப்படுகின்றது. ஆனால் தொடக்க காலத்தில் அது ஒரு அழிவின் சின்னமாகும். அவமானம், இழிவு, இகழ்ச்சி, பழிப்பு, பகைமை, கொடுமை, கொலை, துயரம், துன்பம், சாவு,சாபம் ஆகியனவற்றின் அடையாளமாகக் கருதப்பட்ட சிலுவை இன்று புனிதம், புகழ்ச்சி, மகிழ்ச்சி, மகிமை, வாழ்வு, வளமை, மன்னிப்பு மறுமையின் சின்னமாக விளங்கி வருகின்றது. மொத்தத்தில் சிலுவையானது மரணம், கீழ்ப்படிதல், தாழ்மை ஆகியனவற்றை உணர்த்துவதாகும். இதனைச் ' சுவிசேஷ நண்பன் ' என்னும் கிறிஸ்தவ இதழ்,

மரணத்தில் முடிவடைந்த தோல்வியல்ல சிலுவை அது வெற்றியின் ஆரம்பமும் ஆதாரமுமே, ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவை உயர்த்தினார் என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். (பிலி.2: 9) மரித்து அடக்கம் பண்ணப்பட்ட இயேசு மூன்றாம் நாள் வெற்றியோடு உயிர்த்தார். கல்லறை அவரைக் கட்டி வைக்க வில்லை, தரணி அவரைத் தடுத்து நிறுத்தவில்லை. மண் அவரை மறைத்து வைக்க வில்லை, மரணம் அவரை மடங்கடிக்க வில்லை, உயிரோடு எழும்பிய இயேசு நாற்பது நாட்கள் தம் அடியாருக்குத் தம்மைக் காண்பித்து விட்டு மகிமையோடு பரத்துக்கு ஏறிச் சென்றார். அழிவுள்ள சரீரம் பரத்துக்கு உயர்த்தப்பட்டது சிலுவை நமக்குக் கற்பிக்கும் பாடமதுவே.'[127] எனச் சிலுவையின் சிறப்புக்களை எடுத்துக் காட்டியுள்ளது. இதிலிருந்து சிலுவையின் சிறப்புக்களை அறியலாம்.

xiii. தேவன் ஆபிரகாமை சோதித்தல் :

தேவன் ஏன் நம்மை சோதிக்கிறார், தேவன் ஏன் ஆபிரகாமை சோதித்தார்.? (ஆதி. 22 : 1) எப்படி சோதிக்கிறார்? சோதனையின் பொருள் என்ன? அந்தச் சோதனையில் வெற்றி பெறும் வழி யாது? வெற்றி பெறுபவர் களுக்குக் கிடைப்பது என்ன? வேதத்தில் தேவனால் சோதிக்கப்பட்ட ஆபிரகாமின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் இக் கேள்விகளுக்கு விடை கிடைக்கும். இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் என்று வேதம் (மத். 4: 1) குறிப்பிடுகிறது. இயேசுவையே சோதித்த சாத்தான் நம்மை விட்டு

விடுவானா? இயேசு வேத வசனங்களை ஆதாரமாகக் கொண்டு சாத்தானின் சோதனைகளை எளிதில் வென்றுவிட்டார். ஆனால் மனிதராகிய நாம் அவனது சோதனைகளில் வெற்றிபெறுவது அவ்வளவு எளிதல்ல, தேவனுடைய உதவியைக் கொண்டு நாம் அவனை மடங்கடிக்க முடியும். இதையே பேதுரு ' கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சிக்கிறார் ' (2.பேதுரு.2:9) என்று குறிப்பிடுகின்றார் '. பிசாசானவன் மிகவும் தந்திரமாக நம்மைச் சோதிப்பான் என்பதையும் இடைவிடாமல் சோதிப்பான் என்பதையும் வலியுறுத்தும் விதத்தில் இயேசு தனது சீடர்களுக்கு ' நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் (மத் 26 : 41)என்று ஆலோசனை கொடுத்தார். "[128] இதையே நாமும் செய்ய வேண்டும். இல்லையெனில் சாத்தானை எளிதில் வெல்ல முடியாது.

xiv. இயேசு கிறிஸ்துவின் வருகை:

இயேசு கிறிஸ்துவின் வருகையின் நோக்கங்கள் பலவாகும். அந்நோக்கங்கள் மிகவும் உயர்ந்தவையாகும். " ஆண்டவர் தமக்குச் சொந்தமானவர்களைத் தம்மிடம் சேர்த்துக் கொள்ளும்படியாய் வருகிறார். இரட்சிப்பைப் பூரணப்படுத்துவதற்காகவும், தேவனுடைய பிள்ளைகளை நியாயம் விசாரிக்கவும் வருகிறார். மகிமையுடையவராய் வருவார். ஆளுகை செய்யவும் வருகிறார். உலகத்தை நியாயந்தீர்க்க வருகிறார். மரணத்தைப் பரிகரிக்க வருகிறார். இவ்வாறு குறிப்பிட்ட பல நோக்கங்களை நிறைவேற்ற ஆண்டவர் சீக்கிரம் வரப்போகிறார். " [129]. இவ்வாறு இயேசு கிறிஸ்துவின்

வருகையின் நோக்கங்களையும் அவரது இரட்சிப்பையும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் சுட்டிக் காட்டுகின்றன. கிறிஸ்துவை விசுவாசித்துக் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றன.

xv. இறையரசு:

இன வேறுபாடுகளையும் இனக் கலவரங்களையும் அகற்றி மத நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும். கிறித்தவத் திருப்பணிகளின் ஒட்டு மொத்தப் பார்வை இப்பூவுலகில் இறையாட்சியைக் கொண்டு வர வேண்டும் என்பதே ஆகும். திருச்சபைப் பணிகளும் எழுப்புதல் கூட்டங்களும் இறையாட்சிக்கு வழிவகுக்கும் வாயில்களாகும். இறைவழிபாடு, வேதவாசிப்பு, தியானம், இறை உணர்வு, இறை உறவு, ஜெபம் போன்றவை மனிதச் செயல்பாடுகளையும், சிந்தனைகளையும் ஒழுங்கு படுத்துவதற்குத் தேவையாகும். ஆனால் மனித வாழ்வின் முழுமைக்கு அவை போதுமானதல்ல. ஆலயம் தொழுவதும், ஆராதனைகளில் குறைவின்றிப் பங்குபெறுதலும், காணிக்கைகளைத் தாராளமாக வழங்குதலும் இறைவாழ்வின் தொடக்கமேயன்றி இறையாட்சியை மலரச் செய்வதற்கு இவை போதுமானதல்ல. 'விண்ணரசு' இதழ் இவ்வுலகில் இறையாட்சியைக் கொண்டு வருவதற்கு,

"அக்கிரமத்தின் கட்டுக்களை அவிழ்ப்பதிலும், அடிமைத்தளைகளை மாற்றுவதிலும், ஒடுக்கப்பட்டோரை விடுவிப்பதிலும், தரித்திரர்களை உயர்த்துவதிலும் கிறிஸ்தவர்களுக்கு பெரும் பங்குண்டு. நன்மை

செய்கின்றவர்கள் நலிந்து, தீய சக்திகளின் ஆதிக்கம் வலுவடையும் போது நாம் இறையாட்சியை விட்டு வெகு தொலைவில் இருக்கின்றோம் என்று பொருள். ஆதலால் தீய சக்திகள் அழிக்கப்பட்டு, எங்கும் எதிலும் நல்லவைகள் தழைத்தோங்கினால் ஒழிய இறையரசு வரமுடியாது"[130] என வலியுறுத்தியுள்ளது. இதிலிருந்து தீய சக்திகளை அழித்து மக்களுக்கு நன்மைகளைச் செய்வதே இறையரசு என்றும், அதுவே உண்மையான ஆன்மீகம் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

xvi. நற்செய்திப்பணி:

இயேசு கிறிஸ்துவின் நற்செய்திகளைப் பரப்புதலே செம்மையான உண்மையான ஆன்மீகப் பணியாகும். சமயங்களில் சில பணிகளை ஆசாரியப்பணி என்றும், சில பணிகளை ஆவிக்குரிய பணி என்றும், சிலவற்றைச் சரீரச் செயல்பாடுகள் என்றும் பிரித்துக் காண்கின்றனர். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இப்பணிகளிளெல்லாம் மனித முயற்சி இடம் பெற்றிருப்பதைக் காணலாம். மனித முயற்சிக்குக் காரணமான தேவைகள், தூண்டுதல், இறைத்தொடர்பு, வாய்ப்பு வசதி, சவால், ஆர்வம் என்பன போன்ற பல காரணிகள் இருக்கின்றன.

" அருட்பணியின் தொடக்கத்திற்குத் திருச்சபைதான் காரணம் எனக் கூறவதில் தவறில்லை. எனினும் திருச்சபை என்பது அருட்பணியின் விளைவு என்பதே உண்மையாகும். திருச்சபையிலிருந்து அருட்பணியைப் பிரிப்பதோ இயலாது. திருச்சபையின் வாழ்வை அருட்பணியும்,

அருட்பணியின் வாழ்வைத் திருச்சபையும் வளமூட்டுகின்றன."[131] இவ்விரு பணிகளும் இணைந்ததே உண்மையான ஆன்மீகப் பணியாகும்.

xvii. இயேசுவின் உயிர்ப்பு:

இயேசு கற்றுத்தந்த செபம் இன்று மனிதனை ஊனியல்பிலிருந்து உயிரூட்டும் ஆவிக்குக் கொண்டு செல்கின்றது. இதனை 'அருங்கொடை' இதழ் "ஒவ்வொரு கிறித்தவனைப் பொறுத்த அளவிலும் ஆதியாகமம் 6: 3 இதே போல் மாற்றி எழுதப்பட வேண்டும். அதாவது மனிதன் ஊனியல்பை வென்று ஆவியாக வேண்டும். 'ஆண்டவரின் ஆவியானவர் எங்கிருக்கிறாரோ அங்கு விடுதலை உண்டு (2கொரி 3: 17) அதாவது தனது ஊனியல்பி லிருந்து உயிரூட்டும் ஆவிக்கு இன்று மனிதன் பயணம் செய்ய வேண்டும் ".[132] என இயேசு கற்றுத்தந்த செபத்தின் வழியாக மேல் நோக்கிப் பயணமாகும் மனிதன் தன் ஊனியல்பிலிருந்து உயிரூட்டும் ஆவிக்குப் பயணமாகின்றான் என்னும் உண்மையினை இதன் மூலம் அறியலாம்.

xviii. இறையன்பும் இயேசு கற்றுத் தந்த செபமும் :

கடந்து நிற்பவர் கடவுள் என்றால், கடவுளை நோக்கிக் கடந்து செல்பவனே மனிதன் ஆவான். அவனின் சாயலில் இறைவனின் இருத்தல் இருப்பது சிறப்பாகும். கடந்து செல்லும் பண்பினைக் காட்டி நிற்கும் ஐந்து விதி தீராவனம் கவனம், அறிவு, வாதத்தை ஒத்துக் கொள்ளுதல், பொறுப்பு, அன்பு என்பனவாகும். இந்த ஐந்தையும் ஒரு மனிதன் பெற்றிருக்க வேண்டும். சுயம் கடந்து செல்லும் இயக்கத்தில் தான் மனித உயிர் நிலைத்து நிற்கின்றது

இதனை 'அருங்கொடை' இதழ், "அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவர் இறைவனின் அன்பு நமது உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றாக அமைத்துள்ளார். மேலும் இறைவனின் அன்பு நமது உள்ளங்களில் பொழியப்படுவதற்கு ஆவியானவர் இடையீட்டாளராக அமைந்துள்ளார். (உரோ.8:15-17, கலாத்தியர் 4: 6) ". [133] எனச் சுட்டிக் காட்டியுள்ளது. அருளப்பட்ட ஆவியினால் இறையன்பு பொழியப்பட்டு, இதயங்களில் குடி கொள்ள இறை மனிதன் ஆகி விடலாம். கடந்து செல்லும் பண்பினைக் கடவுள் அன்பு கொண்டதினால் கடந்து செல்லும் ஏக்கத்திற்குக் கலை வடிவம் கொடுத்திடலாம் என்ற உண்மையும் புலனாகின்றது.

xix. இறை அனுபவமும் இறைத் தந்தை அனுபவமும் :

கடவுளைத் தாயாகவும் தந்தையாகவும் காணும் மரபை இந்திய வேத இலக்கியங்கள் காட்டுகின்றன. இதே நிலையில் பழைய ஏற்பாட்டில் 'கடவுள்' தந்தை என்று அழைக்கப்பட்டார். இயற்கை வழி இறை அனுபவம் பெற்றவர்கள் தீமையிலிருந்து மீட்பு பெறும் அனுபவம், அழைப்பால் இறைவனின் பிள்ளைகளான இஸ்ராயேல் மக்கள் தீமையிலிருந்து மீட்பு பெறும் அனுபவம், சுவீகாரப் பிள்ளைகளானோர் இயேசு வழியாகத் தீமையிலிருந்து மீட்பு பெறும் அனுபவம் ஆகிய மூன்றும் தீமையிலிருந்து மீட்பு பெறும் அனுபவங்களாகும். இவர்கள் சாத்தானின் சோதனைகளில் விழாதிருக்கும் அனுபவங்களையும் இறைவனிடமிருந்து பெறுகின்றனர். இயேசு கற்றுத்தந்த ஜெபத்தில் மூன்றாவது அனுபவம் பகைவரை மன்னிக்கும் அனுபவமாகும். இயற்கை வெளியீட்டில் அருளாளர்கள் கண்ட மன்னிப்பு

அனுபவத்தைப், பழைய ஏற்பாட்டில் காணலாம். மன்னிப்பு அனுபவம், இயேசுவில் மன்னிக்கும் அனுபவம், பகைவரை மன்னிக்கும் அனுபவமாகும். ஆவி சார்ந்த அனுபவங்களும் இந்த மூன்றினையும் அடிப்படையாகக் கொண்டதாகும். வார்த்தை அனுபவங்களும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. இதிலிருந்து 'அருங்கொடை' இதழ், "இறைத் தந்தை அனுபவம், இறைமகன் அனுபவம், இறை ஆவி அனுபவம் ஆகிய மூன்று அனுபவங்களையும் கிறித்தவர்களுக்கு கற்றுக் கொடுக்கின்றது. தீமையிலிருந்து மீட்பு அனுபவம், சோதனையில் விழாமலிருக்கும் அனுபவம், முழுமையில் பார்த்து மன்னிக்கும் அனுபவம், உணவாகும் ஆவித்தள அனுபவம், இயேசுவில் வாழும் வார்த்தையின் அனுபவம் ஆகியன".[134]. இறை அனுபவமும் இறைத் தந்தை அனுபவங்களும் ஆகும். இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் ஆன்மீகச் செய்திகளும், அருங்கொடை இயக்கம் பற்றிய ஆன்மீகச் செய்திகளும் பரவலாக இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

10. சாதி வெறி:

கடவுளோடு தொடர்புடைய ஒழுக்க நெறியைச் 'சமயம் ' என்று மரபாகக் குறித்து வருகின்றனர். திருவள்ளுவர் இதனைப்"பொய் தீர் ஒழுக்க நெறி" [135] என்று போற்றுகின்றார். " இந்திய சமுதாயத்தில் சமயம் நெடுங்காலத்திற்கு முன்னரே வேரூன்றி விட்டது. இந்திய நாட்டு மக்களின் வாழ்க்கை சமயத்தைக் கருவாகக் கொண்டு விளங்குகின்றது. இந்திய சமுதாயம் சமய அடிப்படையிலான சமுதாயம் ஆகும் என்று கே.,சி. வியாஸ்."[136]

136 குறிப்பிடுகின்றார். "பாமர மக்களுடைய வாழ்வு மதத்தோடு பின்னிப்பிணைந்து, அவர்கள் பிறப்பு முதல் இறப்பு முடிய ஏதாவதொரு சமயச் சடங்கைச் செய்து திருப்தி அடைகிறார்கள் ".[137] என்கிறார் சோமலே. "இந்தியாவில் சமயம் ஒரு கோட்பாடு அன்று, அது ஒரு வாழ்க்கை முறையாகும். காலத்திற்குப் பொருந்தாத கோட்பாடுகளும் ஐயப்பாட்டிற்குரிய இயற்கை இறந்த நம்பிக்கைகளும் எளிமையான சமய வாழ்வைக் கெடுப்பதாக"[138] மெய்யியற் கோணத்தில் டாக்டர் இராதா கிருஷ்ணன் சமயத்தை அணுகுகின்றார். இந்து சமயம் இந்தியாவில் பெருவழக்குடையதாகும். இந்து சமயம் வருணாஸிரம முறையினை அடிப்படையாகக் கொண்டது. சாதீயம், தீண்டாமை ஆகிய இரண்டும் இந்து சமயத்தில் பிரிக்க முடியாத அளவுக்கு நிலை கொண்டுள்ளன. 'மனுதர்மம் ' இந்து சமயத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றது. வகுப்பு பேதம் ஏற்பட்டதற்கும் இந்து சமயமும் காரணமாயிற்று. இந்நிலை இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்தவ சமய மக்களிடமும் காணப்படுகின்றது. சமயமே சாதிப்பிரிவினைகளைத் தூண்டுவதற்கும் சாதிக் கலவரங்களுக்கும் அடிப்படைக் காரணமாகும். இதனை எதிர்த்து குமரி மாவட்டத்தில் சமதருமம் தழைப்பதற்கு கிறிஸ்தவ இதழ்கள் குரல் கொடுத்து வருகின்றன.

"இந்தியாவில் சாதி என்பது சமயத் தொடர்பானதாகும். அது நாடு முழுவதும் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டி வந்துள்ளது. சாதி ஒவ்வொருவருக்கும் உரிய தர்மம் என்னும், அது சமயத்தோடும் கர்மவினையோடும் இரண்டறக் கலந்து கிடக்கிறது என்றும் நெடுங்காலமாக

மக்களால் நம்பப்பட்டு வருகின்றது. இறைவனால் படைக்கப்பட்டதாகக் கூறப்படும் நான்கு வா்ணாசிரமங்களே சாதிப் பிரிவுகளுக்கு அடிப்படை என்றும் 'புருஷார்த்தம் ' கூறுகிறது. " [139.] "இந்தியாவில் நடைபெறும் மரபுத் திருமணங்கள் சாதியின் அழுத்தத்தைப் புலப்படுத்துகின்றன. இந்திய சமுதாயத்தில் தங்களுக்குள் கொள்வினை, கொடுப்பினை ஏற்படுத்திக் கொள்ளும் குழுவே சாதியாகும். ஒரு குழு மற்றொரு குழுவிலிருந்து மாறுபட்டுத் தனக்கென்று சில தனித்த பின்னணிகளைக் கொண்டு இயங்குகின்றது". [140] இந்நிலை குமரி மாவட்ட மக்களுக்கும் முற்றும் பொருத்தமுடையதாகும்.

"சாதி பொது மக்களின் ஆன்மாவைக் கொல்லுகின்றது. அது சமுதாயத்தில் பிறரிடம் காட்டும் அன்பையும் கருணையையும் அழிக்கின்றது. பொது மக்களின் ஒரு மித்த கருத்து வெளிப்பாட்டிற்கும் ஒற்றுமையுணர்ச்சிக்கும் தடைக்கல்லாக நிற்கின்றது. இந்திய சமுதாயத்தின் அனைத்துக் கூறுகளும் சாதியை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றன. இந்துக்களின் வாழ்க்கை, நம்பிக்கைகள் அவா்களது சாதியுணா்வின் அடிப்படையில் நிா்ணயிக்கப்படுகின்றன. மனித வாழ்க்கையின் உயரிய கூறுகளான சீரிய பண்பு, நல்லொழுக்கம் ஆகிய அனைத்தும் சாதி அபிமானத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன".[141] எனச் சாதியத்தால் வரும் சிக்கல்களைச் சுட்டிக் காட்டியுள்ளாா் அம்பேத்காா். இந்நிலை இந்துக்களுக்கு மட்டுமின்றி குமரி மாவட்டத்தில் வாழும் கிறிஸ்தவா்களுக்கும் ஏற்புடையதே ஆகும். எனவே தான் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் சாதி வெறியைக் கடுமையாகச் சாடியுள்ளன.

i. அரசியலில் சாதிகளும் மதங்களும் :

அரசியலில் சாதிகளே மேலாதிக்கம் செலுத்துகின்றன. இந்நிலை இந்நூற்றாண்டில் தவிர்க்க இயலாத ஒன்றாகும். இதனால் சாதிக் கலவரங்களும், மதக் கலவரங்களும் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கைப் பாதிக்கப்படுகின்றது. சமய - சமுதாய ஒற்றுமையும் கெடுகின்றது. இதற்குக் காரணம் அரசியலில் சாதிகளும் மதங்களும் இணைந்திருப்பதே ஆகும். இந்திய அரசியலில் சாதிக் கட்சிகளும் மதக் கட்சிகளும் தோன்றி மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைத்து வருவதை "வைரம் " இதழில் பி. குமரேசன் எழுதிய ' இந்திய அரசியலில் சாதிகளும் மதங்களும் ' என்னும் கட்டுரை தெளிவாக உணர்த்துகின்றது.

சமூக நீதியின் பெயரால் அவதாரம் எடுத்த ஜனதாக் கட்சியும், அதன் மறுபிறவியான ஜனதா தளமும் தலித் மக்களுக்குப் போதிய நீதி வழங்காததால் கன்ஷிராம், மாயாவதி போன்றவர்கள் சிந்திக்கத் தொடங்கினர். அதன் விளைவாகப் பகுஜன் சமாஜ் கட்சி தோன்றியது. இக்கட்சி வட இந்தியாவில் உத்திரப்பிரதேச அரசியலில் ஏற்படுத்திய மாற்றங்களும், தலித்துக்களின் உணர்ச்சியைக் கண்டு அவர்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள முற்பட்ட, பின் தங்கிய வகுப்பினருக்கு ஏற்பட்ட சவால்களும் சிந்தனைக்குரியன. இந்த இரண்டு கட்சிகளுமே சில சக்தி வாய்ந்த பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களின் பிடியில் சிக்கிக் கொண்டன. எனவே தமது அடிப்படைக் கொள்கையான 'சமூகநீதி ' என்ற இலட்சியம் இக்கட்சிகளுக்கு மறந்து போயின. பெரும்பான்மைச்

சமூகத்தினருக்குக் கட்சியிலும் நிருவாகத்திலும் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை.

"தேசியக் கட்சிகளின் தேசிய நீரோட்டம் என்ற இலட்சியம் முற்பட்ட சமூகத் தலைவர்களிடையே ஒதுங்கிக் கொண்டது. இடது சாரிக் கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. பல மாநிலங்களிலும் இடது சாரிக் கட்சிகளின் வாக்கு வங்கி (Vote Bank) தலித் மற்றும் சிறுபான்மையினராக உள்ளனர். தேசியக் கட்சி அமைப்புக்களில் பெரும்பாலும் முற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களின் ஆதிக்கமே அதிகம். தமிழக அரசியலில் தலித் மக்களை ஈர்க்க, அவர்களின் அபிலாசைகளை நிறைவடையச் செய்ய இடதுசாரிக் கட்சிகளும் தவறிவிட்டன என்றே சொல்ல வேண்டும். தேசியக்கட்சியான பா.ஜனதா கட்சி இந்து முற்பட்ட வகுப்பினரின் முதுகெலும்பாக நிலை கொள்ளும் போது, தங்கள் உயிரையும் உடைமைகளையும் தன் மானத்தையும் காக்க நாட்டில் ஆங்காங்கே சாதி - மதக் கட்சிகள் தோன்றுவது காலத்தின் கட்டாயம்". [142] என்று சாதி, மதக்கட்சிகளையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் 'வைரம்' இதழ் சுட்டிக்காட்டியிருப்பது சிந்தனைக்குரியதாகும்.

ii. சாதீய அரசியல் :

புலவர் கு. பச்சைமால் ' சாதீய அரசியல் ' என்னும் கட்டுரையில் இன்றைய சாதீய அரசியலைக் கடுமையாகச் சாடியுள்ளார். சாதி என்பது சின்ன வட்டமாகும். அது சமயத்துக்குள் போகும் போது மழுங்கிப் போகும். மதம் என்பது பெரிய வட்டமாகும். அது அதைவிடப்பெரிய வட்டமான

அரசியலுக்குள் நுழையும் போது அமுங்கிப் போகும். ஜனநாயகம் என்பது சாதி, மதமற்ற சமநீதி அரசியலாக மலர வேண்டும் என்பதை ' வைரம் ' இதழ் " இந்தியாவில் சாதி ' நாட்டப்பட்ட வியாதிதான் ' ஆனால் கட்டுப்படுத்த முடியாதது அல்ல. கட்டுப்படுத்த வேண்டும் என்ற லட்சியம் பொது மனித உணர்வாக வளர்க்கப்பட வேண்டும். இளைஞர் சக்திக்குள் அது ஊடுருவி, வெளிப்பட வேண்டும். சாதி அமைப்புகள் தடைசெய்யப் பட வேண்டும். கல்வி நிலையங்கள் ஊடாகவும், வேலைக்களங்கள் மூலமாகவும் மதங்கள் வாயிலாகவும் கடைசியில் அரசியல் வழியாகவும் சாதி விழுதுவிட்டுத் தன்னை நிலைப்படுத்தியுள்ளது. சாதி பார்த்து எப்போது அரசியல் கட்சிகள் வேட்பாளர்களைப் பொறுக்கி எடுத்தனவோ அப்போது அரசியலுக்குள்சாதி என்னும் நஞ்சு புகுந்து விட்டது. அற்ப ஓட்டுகளுக்காக அனுமதித்தவர்கள் தான் இதில் முதல் குற்றவாளிகள். அவர்கள் விதைத்த வினையை அவர்கள் அறுவடை செய்வார்கள். ஆனால் அது அரசியல் அநாகரீகமாக ஆகி விடும் நிலை ஏற்படுவதால் தமிழ்ச் சமூகமே இதை எதிர்த்து அடக்க வேண்டும். "[143] எனச் சாதீய அரசியலை ஒழிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

iii. ஜாதி வெறி:

' ஏழையின் குமுறல் ' இதழ் ' ஜாதி வெறி ' என்னும் கட்டுரையில் 1996 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம் கீழக் கொடுமலூர் கிராமத்தில் நடந்த சாதிக் கலவரத்தைச் சாடியுள்ளது." சிங்கப்பூரிலிருந்து திருமணம் ஒன்றிற்காக வேலுச்சாமி இக்கிராமத்திற்கு வந்தார். இவர் காலில்

செருப்புப் போட்டிருந்தார். இதைக் கண்ட மேல் ஜாதிக்காரர்கள் சிலர் குழப்பத்தை உருவாக்கி வேலுச்சாமியையும் இன்னும் சிலரையும் தாக்கினர்." [144]

இதுவே இங்கு நடைபெற்ற சாதிக் கலவரத்தின் காரணமாகும். கருமாத்தூர் எஸ். எம். இராஜேந்திரன் ' சாதிக்கு விலங்கிடுவோம் ' என்னும் கவிதையில்,

" மனித நேயத்தை மறந்து
சாதிச்சாக்கடையில்
சாகின்றோம்
பிறப்பினில் வேற்றுமை காட்டும்
பிரிவினை வாதத்தால்
விலங்கினைப் போலாகின்றோம்
சாதியின் நாமத்தால்
எத்தனையோ அர்ச்சனைகள் - அது
நம்முயிர் தட்சணைகள்
சாதிவெறியைத் தூண்டும்
இன்றைய அரசியல் வாதிகள்
நாளைய சமூக வேடன்
சாதியின் தளைகளை அறுத்திட
சமத்துவ சமுதாயம் அமைத்திட
புறப்படுவோம் நாம். " [145].

எனச் சாதி வெறியைச் சாடி, சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டும் என்கிறார். கலைகரன் ' ஜாதி இரண்டொழிய வேறில்லை ' என்னும் கவிதையில்,

" ஜாதி இரண்டொழிய வேறில்லை

ஆம்

ஒன்று மனித ஜாதி

மற்றொன்று மிருக ஜாதி "[146].

என மனித ஜாதியையும் மிருக சாதியையும் குறிப்பிட்டு, மனிதருக்குள் பல சாதிகள் இருப்பதை வன்மையாகச் சாடியுள்ளார்.

iv. தென்மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் :

1997 ஆம் ஆண்டு ஜுன் மாதம் தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்றன. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இரண்டு வாரங்களுக்கு மேலாக ஏற்பட்ட சாதிக்கலவரங்கள் தமிழகத்தையே உலுக்க வைத்து விட்டன. காமராசர் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், நெல்லைக்கட்டப்பொம்மன் மாவட்டம், வைகை வீரன் அழகு முத்து மாவட்டம் ஆகியவைகளில் உயிர்ச்சேதமும் கோடிக்கணக்கில் பொருட்சேதமும் ஏற்பட்டது கசப்பான உண்மையாகும். இதனை 'ஏழையின் குமுறல் ' "தென் மாவட்டங்களில் ஜாதிக் கலவரங்கள் - ஓர் ஆய்வு" என்னும் கட்டுரையில் விளக்கியுள்ளது. அக்கட்டுரையில்,

"இம் மாவட்டங்களில் நடந்த கலவரங்களை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒன்று முத்துராமலிங்கத் தேவருடைய சிலையைச்

சேதப்படுத்தியது தொடர்பான கலவரம். இரண்டு சுந்தரலிங்கம் பெயரில் போக்குவரத்துக் கழகம் தொடங்கியதன் பெயரில் ஏற்பட்ட கலவரம் மூன்று தலித் மக்கள் தலைவர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. கைது செய்யப்பட்டது தொடர்பான கலவரம் ".[147]. எனச் சாதிக் கலவரத்தை வகைப்படுத்தி, இத்தகைய சாதிக் கலவரங்களை நிரந்தரமாகக் களைவதற்கு அரசாங்கமும் மக்களும் முன் வர வேண்டும் என வலியுறுத்தி இருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

v. வகுப்பு வாதம் :

சாதியின் அடிப்படையில் தோன்றும் வகுப்புவாதத்தையும் கிறிஸ்தவ இதழ்கள் வன்மையாகச் சாடியுள்ளன. நாட்டில் ஊழல், வகுப்புவாதம், ஜாதி வெறி, அரசியல் குண்டர்களின் ஆதிக்கம் போன்ற தீய சக்திகளை எதிர்த்துப் போராடுவது 'விடியலை நோக்கி' இதழின் தலையாய நோக்கமாகும். வகுப்பு வாதமும் அடிப்படைவாதமும் என்னும் கட்டுரையில், "ஒரு நாட்டில் வாழும் மக்கள் பல இனத்தவராக பல மொழி பேசுபவர்களாக பல மதங்களைப் பின்பற்றுபவர்களாக பல சாதிகளைச் சேர்ந்தவராக இருக்கலாம். இப்படிப்பட்ட வகுப்புகளில் ஏதாவது ஒரு வகுப்பு பிற வகுப்புகளை விட உயர்ந்தது என்று காட்டிக்கொண்டு, ஆதிக்கம் செலுத்தவும், ஆளவும் நினைத்துக் கொண்டு அரசியல் நிலை எடுக்கும் போது அவ்வகுப்பு வகுப்புவாத சக்தியாக மாறுகிறது. இதுதான் வகுப்பு வாதம். இது வகுப்பு ஒற்றுமையைக் குலைக்கின்றது. வகுப்புக்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துகின்றது. மனித நேயத்தையும் வகுப்புகளின் நல்லிணக்கத்தையும் விட வகுப்பு

மோதல்களுக்கும் மனித ரத்தத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கின்றது. ஒரு வகுப்பின் ஆதிக்க வெறிக்குத் தூபம் போட மதம் தனது போதனைகளை பிற்போக்குத் தனமாக, மூடத்தனமாக விளக்கமளித்து வெறியைத் தூண்டுவதை அடிப்படை வாதம் எனலாம்". [148]. எனக் குறிப்பிட்டு, அயோத்திப் பிரச்சினையின் விளைவுகளை எடுத்துக்காட்டி சாதியை அடிப்படையாகக் கொண்ட அடிப்படை வாதத்தையும் 'விடியலை நோக்கி' இதழ் வன்மையாகச் சாடியுள்ளது. அரசியல் அதிகாரத்தைப் பிடித்து ஆதிக்கம் செலுத்த மதத்தையோ, சாதியையோ பயன்படுத்துவது தான் வகுப்புவாதமாகும்.

vi. கிறிஸ்தவத்தில் வகுப்பு வாதம் :

விவிலிய விசுவாசம் விடுதலை அனுபவத்திலிருந்து தொடங்குகிறது. இதனை 'வகுப்பு வாதமும் கிறிஸ்தவமும் ' என்னும் கட்டுரை விளக்குகின்றது. "எகிப்திலிருந்து விடுதலை பெற்ற மக்கள் ஆண்டவருடைய குலமாகின்றார்கள். புரட்சி செய்து விடுதலை பெற்ற மக்கள் 'அபிரு' என்றழைக்கப்பட்டனர். அபிரு என்பது ஒரு இனத்தையோ குலத்தையோ சுட்டிக்காட்டவில்லை. திருமுழுக்கு மட்டுமே கிறிஸ்தவர்கள் ஆவதன் அடையாளமாகின்றது. ஒரு இனத்தைக் கிறிஸ்தவம் ஆதரிப்பதில்லை. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்காக சார்பு நிலை கொள்வதையே கிறிஸ்தவம் அதிகம் மதிக்கிறது". [149]. எனவே கிறிஸ்தவத்தில் வகுப்புவாதமோ இனவாதமோ இல்லை என்ற உண்மை புலனாகின்றது.

vii. சாதீயக் கொடுமைகள்:

விடியலை நோக்கி இதழின்பா. லூர்துசாமி "ஏ, சாதியமே! நீ செத்துத் தொலை' என்னும் கவிதையை எழுதியுள்ளார். அக்கவிதையில்,

"ஏ, சாதீயமே!
நீ சாகமாட்டாயா?
சகோதரத்துவத்தின்
முதல் எதிரியே!
உந்தன்
எதேச் சதிகாரம்
எப்போது ஒழியும்?
மனித நேயத்தை
மண்தோண்டிப் புதைக்கின்றாய்?
சமத்துவத் தராசை
சாய்த்துப் பிடித்தே
இத்திரு நாட்டை
ஏய்த்து வருகின்றாய்!
உன்னால்
சுதந்திரம் கூட
'சும்மா' என்றானதே?
சாமானியர்கள் முதல்
சமயத்தலைவர்கள் வரை

கல்வியாளர்கள் முதல்

அரசியல் வித்தகர்கள் வரை

அத்தனை பேர்களையும்

ஆட்டிப் படைக்கும்

அரக்கத்துவமே?

ஒழிந்து போ

நீ செத்துத் தொலை".[150]

இவ்வாறு இக்கவிதையில் கவிஞர் சாதிவெறியைக் கடுமையாகச் சாடி மனித நேயத்தை வலியுறுத்தியுள்ளார். 'யுகச்சிற்பி' இதழில் மேல்புறம் மனோ "பொன்விழா கண்ட சாதி - தீ" என்னும் கட்டுரையில் வரலாற்றில் சாதிப்பிரிவு, பிறக்கும் போதே அடிமைத்தனம், அரசியலில் சாதி விளையாட்டுகள், தமிழகத்தில் சாதிப்பிரிவுகள், தீண்டாமையும் அதன் கூறுகளும், பொன்விழா ஆண்டில் சாதீயம் என்னும் அடிப்படை நிலைகளில் சாதியை வன்மையாகச் சாடியுள்ளார்.

"சாதீயம் என்பது வெறும் இனக்கூறு ~~என்பது~~ மட்டும் அல்ல. இது மன உறவில் உயர்வு - தாழ்வு தூய்மை, தீட்டு என்னும் தீண்டத்தகாதவன் மனிதரில் ஒரு பிரிவினரை மனிதப்பிறவி அல்ல எனக் கூறியும்,அதற்கு இறை முலாம் பூசி, சமூக அதிகாரமும் அங்கீகாரமும் பெறுவதற்காக பிரித்தாளும் சூழ்ச்சியின் புறத்தோற்றமே. சாதி, அதிகார, அரசியலைக் கைக்கொண்டு 'சாதித்தீ' என்னும் நஞ்சைப்பரப்பும் பாதுகாக்கும் எம்மதமாக இருந்தாலும் அது இறைவனுக்கு எதிரானதே".[151]

என்னும் கருத்து சிந்தனைக்குரியதாகும். அ. றாயல்லென்ஸ் 'சாதிக்கு முற்றுப்புள்ளி' என்னும் கவிதையை எழுதியுள்ளார். அக்கவிதையில்,

"சாதிகள் இல்லையடி
பாப்பா, குலத்தாழ்ச்சிகள்,
சொல்லுவது பாவம்.,
என்று கற்றுத் தருபவர்கள்
பாப்பாவிடம் சாதிப் பெயர்
கேட்கிறார்கள்
பிஞ்சு மனசிலேயே
நஞ்சுப் பெயர் எழுதி
வேற்றுமை
உணர்ச்சிக்கு விதை
போடுகிறார்கள்!
கலப்புத் திருமணங்கள்
காதல் திருமணங்கள்
சாதி ஒழிப்புப் பிரச்சாரங்கள்
சமத்துவ புரங்கள்
இவற்றால் சாதியை
ஒழித்து விட முடியாது
பிஞ்சுக்குழந்தையில்
நஞ்சுப்பெயர் எழுதுபவர்கள்
நிறுத்தும் போதும் !
பிற்படுத்தப்பட்டவர்களுக்கு

இட ஒதுக்கீடு

என்று இல்லாமல்,

ஏழைகளுக்கு

இடஒதுக்கீடு என்ற

சட்டம் கொண்டு வரும்

போதும் ! சாதி என்ற

எய்ட்ஸ் நோய்க்கு!

முற்றுப் புள்ளி".[152.]

என்று சாதீய ஒழிப்பிற்குத் தீர்வு சொல்லியிருப்பதைக் காணலாம். பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது சாதிப் பெயரைச் சேர்க்கக் கூடாது. ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு வேண்டும். அப்பொழுது தான் சாதியை ஒழிக்க முடியும் என்னும் சிந்தனை புதியதாகும். 'யுகச்சிற்பி' இதழில் வெளியாகியுள்ள 'சாதீய மோதல்கள் ஒரு பார்வை! என்னும் கட்டுரை கரைந்து போன விடுதலைக் கனவுகள், மோதல்களின் வெளிப்பாடு, பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு மத்தியில், சாதீய மோதல்களுக்கான சமூகக் காரணங்கள், அரசியல் காரணங்கள், பொருளாதாரக் காரணங்கள், சமூக மற்றும் பண்பாட்டுக் காரணங்கள், சாதீயம் - மனித உரிமை நிலை என்ற அடிப்படைகளில் சாதீயச் சிக்கல்களை அலசியுள்ளன.

"இந்தியாவில் நடந்த சாதிக் கலவரங்களை ஆய்வு செய்தாலும் சரி, அண்மையில் தென் தமிழகத்தில் நடந்த சாதிக் கலவரங்களை ஆய்வு செய்தாலும் சரி இக்கலவரங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள்., உயிர் இழந்தவர்கள்., சொத்துக்களை இழந்தவர்கள் தாழ்த்தப்பட்ட தலித்

மக்களே".[153] என்னும் கருத்து சிந்தனைக்குரியதாகும். "சமுதாயச் சிந்தனை, இதழில் சாதியைப் பற்றிய செய்திகள் இல்லை. 'விண்ணரசு' இதழில் செ. எபநேசர் எழுதிய "நம்மில் இங்கு எத்தனை சாதி"[154] என்னும் கவிதையில், சாதி வெறியைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் சாதி வெறியைக் கடுமையாகச் சாடியிருப்பதைக் காணலாம்.

11. மதவெறி:

"கலை மக்களைச் சேர்ந்தது. அதனுடைய வேர்கள் உழைக்கும் மக்களின் மிகுந்த நெருக்கத்தில் ஆழமாக ஊன்றிட வேண்டும். அது இந்த மக்களால் புரிந்து கொள்ளப்படவும் நேசிக்கப்படவும் வேண்டும். அது அவர்களுடைய உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் விருப்பத்தையும் கண்டிப்பாக உயர்த்தவும் ஒன்றுபடுத்தவும் வேண்டும். எது கண்டிப்பாகச் செயலுக்குக் கிளர்ந்தெழச் செய்யவும் வேண்டும் ".[155]. என்று லெனின் குறிப்பிட்டார். அது இலக்கியக் கலைகளில் ஒன்றாகிய இதழியல் கலைக்கு முற்றிலும் பொருந்தும். 'ஆத்திகம் ' (Theism) என்னும் கடவுள் நம்பிக்கையில் மதவாதிகளும் வேதவித்தகர்களும் ஒன்றுபடுகின்றனர். வேத நூல்கள் தனிவுடைமைச் சமுதாயப் பாதுகாப்புக்கான வேலிகளாக விளங்குகின்றன. ஒரு புறம் மதவாதிகளும் சுரண்டல் வாதிகளும் உழைக்கும் மக்களின் உழைப்பைச் சுரண்டுகின்றனர். மறுபுறம் மதத்தை நம்பிப் பொருளை இழக்கின்றனர்.

i. சமயப் போதை :

'மதம் ' என்பது சமுதாய உணர்வு வடிவங்களில் ஒன்றாகும். வர்க்க சமுதாயத்தில் மதம் மேல்கட்டுமானங்களில் (Super Structure) ஒன்றாக விளங்குகின்றது. காரல் மார்க்சு, "வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டு மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மாந்தர்களுக்கு மதம் ஒரு மூச்சாகிறது. இதயம் இல்லாத உலகிற்கு இதயமாகவும், உயிரற்ற சூழ்நிலையில் உயிரூட்டுவதாகவும் மதம் இருக்கிறது. உழைக்கும் மக்களுடைய அபினியாக மதம் பிறக்கிறது".[156] என்று குறிப்பிட்டார் அபின் மக்களின் மதியைக் கெடுப்பது போன்று மதமும் மக்களின் மதியைக் கெடுக்கின்றது. மதம், பக்தி என்னும் போர்வையில் மக்களுக்கு சமயப் போதைப் பொருளாகின்றது. எனவே காரல் மார்க்சு மதத்தை எதிர்த்துப் போராடினார்.

"ஜாதியர்களுக்குள் மதம் இருக்கிறது. வகுப்பினர்களுக்குள் மதம் இருக்கிறது. ஜன சமூகங்களுக்குள் மதம் இருக்கிறது. ஜாதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நகரவாசியும் தன்தன் மதமே மற்ற எவருடைய மதத்தையும் விட உயர்ந்தது".[157] என்று கருதுவதாக இராபர்ட். ஜி. இங்கர்சால் கூறுகின்றார். இத்தகைய மதவெறியைச் சாடிக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

ii. மதவெறிப்பாவம் :

'தேசோபகாரி' இதழ் மதவெறியைப் பாவச் செயலாகக் குறிப்பிட்டுள்ளது. தேவ பக்தி நமக்குத் தேவை. ஆனால் மதவெறியும் குருட்டுப் பக்தியும் பாவமாகும். "யூதருடைய குருட்டுப் பக்தியையும், மாய்மாலத்தையும் கண்டித்ததினாலேயே இயேசு கொல்லப்பட்டார். நாம் பாவம் என்று கூறுகிற காரியங்களை விட ஆவிக்குரிய பாவங்கள் இயேசுவின் பார்வையில் மிகப் பொல்லாதவைகளாயிருந்தன. மதவெறிதான் இயேசுவைச் சிலுவையில் அறைந்தது என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன. மதவெறி உயிர்த்தெழுந்த இயேசுவைத் துன்புறுத்தியது. எனவே நாம் மதவெறி பிடித்தவர்களாக வாழக் கூடாது".[158] ஆதலால் மதவெறி பாவச்செயலாகும் என்பது தெளிவு. நமது வாழ்வின் பாவங்களை தேவன் உணர்த்தும் போது அவைகளை விட்டு விலகி நாம் பரிசுத்தமாக வாழ வேண்டும்.

iii. மதம் பிடித்த அரசியல் :

வைரம் இதழில் கு. பச்சை மால் 'மதம் ' பிடித்த அரசியல், என்ற கட்டுரையை எழுதியுள்ளார். மதம் சமயமாகி மனிதனை சமைத்து ஆன்மீகத்துக்கு வழி நடத்த வேண்டும். அரசியல் வாழ்வியலாகி மனிதனின் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். இவ்விரண்டும் வேறு வேறு துறைகள். ஆனால் இன்று அரசியலில் மதம் கலந்து மக்கள் வாழ்க்கையைச் சீரழிக்கின்றது. இதனை வைரம் இதழ்,

"இந்தியர்கள் இந்துக்களோ முஸ்லீம்களோ கிறிஸ்தவர்களோ, பார்ஸிகளோ எத்தனை மதப்பிரிவுகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். ஆனால் அரசியல் லாபங்களுக்காக இவர்களில் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு யானைக்கு மது ஊட்டுவது போல மதவெறி ஊட்டப்பட்டு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்களின் செயல்பாடுகளால் மொத்த இந்திய சமூகமும் தலைகுனிய வேண்டியுள்ளது". [159] என மதம் பிடித்த அரசியலைச் சாடியுள்ளது. எனவே மதத்தில் அரசியலோ அரசியலில் மதமோ புகுந்து கொண்டு மனித நேயத்தைக் கொல்வதை அனுமதிக்கக் கூடாது. மதம் பிடித்த அரசியல் மனித நேயத்தை அழித்து விடும் என்ற உண்மை 'வைரம்' இதழ் உணர்த்துவதைக் காணலாம்.

iv. கறுப்புதினம் :

"ஏழையின் குமுறல் இதழ் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் ஆறாம் நாள் அயோத்திப் பிரச்சனை காரணமாக பாபர் மசூதி இடிக்கப்பட்டதை கறுப்பு தினம்" என்று வன்மையாகக் கண்டித்துள்ளது. அவ்விதழ் மேலும், " [160] பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் வன்முறை வெறியாட்டங்களும் வழிபாட்டுத் தலங்களை இடிப்பதும் நடந்தது. பிவாண்டியில் (பம்பாய்) முஸ்லீம் சமூகத்தினர் இந்து கோவில்களை மதவெறியர்களிடமிருந்து பாதுகாத்தனர். இங்கே 60 சதவீதம் முஸ்லீம்களும் 40 சதவீதம் இந்துக்களும் வாழ்கின்றனர். அயோத்தியில் நடந்த சம்பவத்துக்காக இந்துக்கள் மிகவும் வேதனைப்பட்டார்கள். இந்து

வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாப்போம் என்பதில் முஸ்லீம் சமூகத்தினா் தியாகமாக இருந்தனா் "[161]. என மத நல்லிணக்கத்தை வலியுறுத்தியிருப்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும். 'பாபா் மசூதி' இடிப்பு விவகாரம் வளா்ந்து விட்ட நிலையில், மத நல்லிணக்கம் பற்றிய சிந்தனையும் வலுவடைந்தது. இதற்குச் சான்றாக குன்றக்குடி அடிகளாா் எழுதிய "சமயச் சாா்பற்றோா் ஒன்றுபடட்டும் " என்னும் மதநல்லிணக்கக் கட்டுரையை 'ஏழையின் குமுறல் ' இதழ் வெளியிட்டிருப்பதைக் குறிப்பிடலாம். அக்கட்டுரையில் குன்றக்குடி அடிகளாா், "இடது சாரி - தேசிய முன்னணிக் கட்சிகளைப் பின்பற்றுகிறவா்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியின் பின்னால் உள்ள மக்களும் சமயச் சாா்பற்ற நோக்குடையவா்களே. எந்தக் கட்சியையும் சாராத அமைப்புகள் பலவும், மக்களில் பலரும் அத்தகைய நோக்குடையவரே. இவா்கள் அனைவருமாக சோ்ந்து இந்தியாவில் வகுப்பு வாதத்தை எதிா்க்க வேண்டும். இது உடனடித் தேவை".[162] என்னும் கருத்தினை வலியுறுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

v. மதவெறிக்கு உயிா்ப்பலி:

'ஏழையின் குமுறல் ' இதழ் குமரி மாவட்டம் அம்பாங்காலை என்னும் ஊரில் பெல்லாா்மின் என்ற கிறிஸ்தவ இளைஞா், மதவெறியா்களால் வன்மையான முறையில் கொலை செய்யப்பட்டதை "மத வெறிக்குப் பலி"[163] என்னும் கட்டுரையில் சுட்டிக் காட்டி, மதவெறியா்களை வன்மையாகக் கண்டித்துள்ளது.

vi. சிறுபான்மையினருக்கு எதிராக ஆர். எஸ். எஸ். :

ஆந்திராவில் நடைபெற்ற பயிற்சி முகாமை நிறைவு செய்து ஆர். எஸ்.எஸ். தலைவர் பேசும் போது, "இந்துக்களை தங்களது மூதாதையர்களாக ஒப்புக் கொள்ள வேண்டும் எனவும், கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் இந்துக்களை மதித்தும் மரியாதை செலுத்தியும் தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும் ".[164] என்று பேசினார். சிறுபான்மையினருக்கு எதிரான இந்த மதவெறித் தாக்குதலை ஏழையின் குமுறல் 'சுயம் சேவக்கின் தாக்குதல்கள் ' என்ற தலைப்பில் செய்தியாக வெளியிட்டு, ஒரு குறிப்பிட்ட இயக்கத்தின் மத வெறியைக் கண்டித்துள்ளது.

vii. மத சார்பின்மை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் நம் நாட்டின் பொருளாதார முறை, சோசலிசம், ஆட்சிமுறை ஜனநாயகம், மதக் கொள்கை மத சார்பின்மை என்று தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. மத சார்பின்மை என்ற கொள்கையின் மூலம் சிந்தனை, வெளிப்பாடு, நம்பிக்கை, விசுவாசம், வழிபாடு, சுதந்திரம் என்பன எல்லா இந்தியனுக்கும் உண்டு. இதனை 'விடியலை நோக்கி' என்னும் இதழ் 'அரசியல் சட்டத்தில் மத சார்பின்மை' என்ற கட்டுரையில், "உண்மையான மத சார்பின்மை நிலைநிறுத்தப்பட வேண்டுமானால் மதங்களுக்குள் கலப்புத்திருமணம் நிகழ்வதை அரசு ஊக்குவிக்க வேண்டும். வானொலி, தொலைக்காட்சி போன்ற அரசின் தகவல் தொடர்புச் சாதனங்களில் மத நிகழ்ச்சிகளை ஒலிபரப்பக் கூடாது".[165] எனச் சுட்டிக் காட்டியிருக்கும் கருத்து சிந்திக்கத்

தக்கதாகும். 'விடியலை நோக்கி' என்னும் இவ்விதழ் "தினமலர் ' நாளேட்டின் மதவெறிப் பிரச்சாரம் "[166] என்னும் கட்டுரையில், தினமலர் நாளிதழ் வெளியிடும் மதவெறிச் செய்திகளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

viii. மதவாத சக்திகள் :

மத்தியில் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி செய்யும் பி.ஜே.பி. அரசின் அடித்தளம் சங்பரிவார் ஆகும். மதவாத சக்திகளான வி. எச்.பி., ஆர். எஸ்.எஸ்., பஜ்ரங்தள், சிவசேனா போன்றவை, ஆளும் மத்திய அரசினை ஆட்டிப்படைக்கின்றன. 1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. சிறுபான்மை மக்கள் பயத்திலும் பீதியிலும் வாழ்ந்து வருகின்றனர். மதவாதக் கொள்கைகளைக் கண்மூடித்தனமாகப் புகுத்தத் துடிக்கின்றது பி.ஜே.பி. அரசு இதனை 'யுகச்சிற்பி' இதழ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

"இந்திய நாட்டில் பிறந்து வாழ்ந்த இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மதச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டுத் தலங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. மனிதர்களைக் கொல்வதும் எரிப்பதும் சர்வ சாதாரண நிகழ்வாகிக் கொண்டிருக்கிறது. பிறந்த நாட்டிலே உரிமையிழந்து தவிக்கின்றனர் சிறுபான்மை மக்கள் ".[167] இவ்வாறு மனித இரத்தம் உறிஞ்சும் மதவாதச் சக்திகளைக் கிறிஸ்தவ இதழ்கள் கடுமையாகச் சாடியுள்ளன.

ix. மதம் - மனித நேயத்தைக் கெடுத்தல் :

"சாதியும் மதமும் மனித நேயத்தைக் கெடுப்பதையும் 'யுகச்சிற்பி' இதழ் சுட்டிக் காட்டியுள்ளது. " வகுப்பு வாதப் பேய் இந்திய சமூகத்தில் புற்றுநோய் போல்கிளை விரித்து வளர்ந்து வருகிறது. இன்று நாட்டில் நடக்கும் மதக் கலவரங்கள், மதங்களுக்கு இடையே நடைபெறும் கலவரங்கள் எனத் தோன்றினாலும் உண்மை அதுவல்ல. சமூகத்தில் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள முனையும், அரசியல் ஆதாயம் தேட விரும்பும் வகுப்புவாத சக்திகளின் தூண்டுதல்களாலேயே இக் கலவரங்கள் ஏற்படுகின்றன". [168] என்றும், "1964 இல் இருந்து 1996 வரை 32 ஆண்டுகளில் கிறிஸ்தவர்கள் மீது நடந்த தாக்குதல்கள் எனப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 38 தான். ஆனால் 1998 ஆம் ஆண்டில் மட்டும் 90 வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில் மிகவும் பாதிக்கப்பட்டது. குஜராத் மாநிலம் தான். 1998 டிசம்பர் 25 லிருந்து ஜனவரி 1 ஆம் தேதிக்குள் ஒரே வாரத்தில் 32 தேவாலயங்கள் இடிக்கப்பட்டுள்ளன".[169]. என்றும் அவ்விதழ் சுட்டிக் காட்டியுள்ளது. இத்தகைய மனித நேயமற்ற செயலை வன்மையாகக் கண்டித்துள்ளது. 'சமுதாயச் சிந்தனை' இதழ் "மதவாதம் என்பதென்ன?".[170]

என்ற கட்டுரையில், மதவாதச் சக்திகளை இனங்காட்டி, மதவாத சக்திகளை ஊக்குவிக்கும் பி.ஜே.பி. அரசையும் வன்மையாகச் சாடியுள்ளது.

x. மனித நேயமே மதம் :

மனித நேயமே மதமாகும். இதனை வலியுறுத்தி 'விண்ணரசு' இதழில் "மதக்கலவரங்களைத் தவிர்த்து மனித நேயம் காப்போம் "[171] என்னும்

தலைப்பில் தலையங்கம் வெளியாகியுள்ளது. அவ்விதழில் குப்பைத் தமிழன் "மதங்களைக் கடந்து" என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரையில், " ' மதம் ' என்ற நெறியிலே வீழாது மதத்தில் மண்டிக் கிடக்கும் ஆன்மீகத்தைக் காண முயல வேண்டும். மதங்களில் உள்ள உயரிய கொள்கைகளையும் பேருண்மைகளையும் புரிந்து கொள்வதும், பிறர் புரிந்து கொள்ளச் செய்வதும் மிகச் சிறந்த சமயப் பணியும் இறைப்பணியும் ஆகும். அதுவே மனுக்குல மீட்புப் பணியாகும் ".[172] என மனித நேய அடிப்படையில் சமயத்தைச் சுட்டியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் மதவெறியைச் சாடியும் மனித நேயத்தை வலியுறுத்தியும் செய்திகள் வெளியாகி உள்ளன.

12. தீவிரவாதம் :

பாலஸ்தீன விடுதலை, கொலை, கொள்ளை, கிறித்தவர்களுக்கெதிரான வன்முறை முதலான தீவிரவாதச் செயல்களைச் சாடியும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களின் தீவிரவாத எதிர்ப்புக்குச் சான்றாகப் பின்வரும் செய்திகளைக் குறிப்பிடலாம்.

i. விமானப் பயணிகள் கடத்தல் :

"டெல்அவிவிலிருந்து 1996 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் தேதி 300 பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் பாரிஸ் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

திடீரென இரண்டு பாலஸ்தீன தீவிரவாதிகளாலும், இரண்டு ஜெர்மன் தீவிரவாதிகளாலும் விமானம் கடத்தப்பட்டு உகண்டா கொண்டு வரப்பட்டு, பயணிகள் "என்டபி" விமான நிலையத்தில் ப .ணயக் கைதிகளாக வைக்கப்பட்டார்கள் "[173] இத்தீவிரவாதச் செயலை 'தேசோபகாரி' இதழ் வன்மையாகச் சாடியுள்ளது. 'தேசோபகாரி' இதழில் ஓய். ஜேக்கப் "எங்கள் குற்றங்களை மன்னியும் "[174] என்னும் சிறுகதையை எழுதியுள்ளார். அச்சிறுகதையில் வரும் 'பரபாஸ் ' என்பவன் தீவிரவாதச் செயல்களிலும், கொலை, கொள்ளை போன்ற வன்முறை செயல்களிலும் ஈடுபட்டுச் சிறைத் தண்டனை பெறுகின்றான். சிறைச்சாலையில் மன மாற்றம் பெற்று விடுதலை அடைந்த பரபாஸ், கல்வாரி மலையை நோக்கி ஓடுகின்றான். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவிடம் தனது தீவிரவாதச் செயல்களுக்கு மன்னிப்புக் கோருகின்றான்.

ii. கிறித்தவர்களுக்கெதிரான வன்முறை:

அண்மையில் குஜராத்தில் இந்துத் தீவிரவாதிகளால் பல கிறிஸ்தவத் திருச்சபைக் கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரிசாவில் ஒரு ஆஸ்திரேலிய அருட்பணியாளர் குடும்பத்தோடு எரித்துக் கொல்லப்பட்டார். இந்தத் தீவிரவாத வன்முறைச் செயலை 'தேசோபகாரி' கண்டித்துள்ளது.அதே வேளையில் " கிறிஸ்தவர்கள் பிற சமயத்தவரை அணுகுவதில் அன்புணர்வும் திறந்த மனமும் கொண்டிருக்க வேண்டும். இந்து சமயத்தைத் தாக்கி தவறாகப்பிரதிபலித்து கிறிஸ்தவர்கள் நற்செய்திப் பணி என்ற பெயரில் பேசுவதையும் எழுதுவதையும் இந்துக்கள் இன்று உரிய

சான்றுகளோடு எடுத்துக் காட்டுகிறார்கள். 'பிறருக்கு விரோதமாகப் பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக' என்ற கட்டளையை மீறிவிட்டோம். தவறுகளுக்காகக் கிறிஸ்தவர்கள் வெளிப்படையாக மன்னிப்புக் கேட்பதற்கு முன் வருதல் தேவை".[175.] எனச் சுட்டிக் காட்டியிருப்பது அவ்விதழின் பெருந்தன்மையையும், சமயச்சார்பின்மையையும் காட்டுவதாகும்.

iii. கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தலும் வீரப்பனும் :

குழித்துறை எஸ். ஜெபமணி "வீரப்பனின் காடு யாருடையது?" என்னும் கட்டுரையை 'வைரம் ' இதழில் எழுதியுள்ளார். அக்கட்டுரையில், "திருடனாக, கடத்தல்காரனாக, கொலைகாரனாக தினமும் ஒரு வேடம் பூண்டு சட்டத்தின் தண்டனைக்குப் பயந்து காட்டிலே மறைந்து வாழும் வீரப்பன் பிரபல நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியதன் மூலம் இந்திய அரசியலில் புதிய ரூபம் எடுத்திருக்கிறான். வீரப்பன் செய்த உயிர்ச்சேதங்கள் விலை மதிப்பற்றவை அவனால் ஏற்பட்ட பொருள் சேதங்களை விட கர்நாடகா, தமிழ்நாடு அரசுகள் அவனைப்பிடிக்கச் செலவிட்டதோ பல கோடிகள் ".[176]. என வீரப்பனின் தீவிரவாதச் செயல்களையும், அதனால் ஏற்பட்ட இழப்புக்களையும் சுட்டிக் காட்டியிருப்பது இவ்விதழின் தீவிரவாத எதிர்ப்புக்குத் தக்க சான்றாகும். ஏழையின் குமுறல் ' இதழில் வெளிவந்த "வீரப்பன் அரசியல் "[177] என்ற கட்டுரையும் வீரப்பனின் தீவிரவாதத்தை வன்மையாகச் சாடுகின்றது. கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்பதற்கு உரிய அவசியத்தையும் அக்கட்டுரை வலியுறுத்தியுள்ளது.

iv. ராஜீவ் காந்தி படுகொலை:

'விண்ணரசு' இதழில் ராஜீவ் காந்தி படுகொலை குறித்து 'வன்முறைகள் ஒழியட்டும்' என்னும் தலைப்பில் தலையங்கம் வெளிவந்துள்ளது. அத்தலையங்கத்தில்,

"தேசத் தலைவர் ராஜீவ் காந்தி படுபாவிகளால் கொலை செய்யப்பட்டார். உலக வரலாற்றில் 21.5.1991 ஆம் தேதி எங்கும் இருள் சூழ்ந்து விட்டது. உலகத் தலைவர்கள் அத்தனை பேரையும் கண் கலங்க வைத்த மாபெரும் துக்கத்தினம் மே. 21. சென்னைக்கருகில் ஸ்ரீ பெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரத்திற்காக வருகை தந்த மாபெரும் தலைவர் ராஜீவ் காந்தியை வெடிகுண்டு வைத்துக் கொன்ற அராஜகச் செயல் இந்தியாவை தலைகுனியச் செய்து விட்டது. உலக வரலாற்றிலிருந்து துடைத்தெறிய முடியாத இந்த இரத்தக் கறையை உண்டு பண்ணி விட்டனர் கொலைகாரக் கும்பல்கள், இருதயமில்லா அரக்கர்கள் ".[178]. எனத் தீவிரவாதத்தையும் தீவிரவாதிகளையும் மனித வெடிகுண்டு கலாச்சாரத்தையும் சுட்டியிருப்பது குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களின் தீவிரவாத எதிர்ப்புக்கு மற்றுமொரு சான்றாகும்.

v. குளச்சல் துப்பாக்கிச் சூடு:

குளச்சலில் 30.09.1991இல் ஒரு கிறிஸ்தவப் பள்ளிக்கூடம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டது. அன்று கிறிஸ்தவ மக்கள் மீது துப்பாக்கிச்

சூடும் நடைபெற்றது. இதனைக் கண்டித்து 17.12.1991இல் குமரி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பு மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் குளச்சல் பகுதி இளைஞர்களால் நடத்தப்பட்டது. "அப்பாவி மக்கள் மீதும் பாதிரியார் மீதும் போடப்பட்ட பொய் வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும். தாக்கப்பட்ட பள்ளிக் கூடத்திற்கு உடனே நிவாரணம் வழங்கப்பட வேண்டும்".[179]

என்னும் கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் போராட்டம் நடத்தினர். துப்பாகிச் சூடு போன்ற தீவிரவாதச் செயல்களை குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

vi.பஞ்சாபில் பயங்கரவாதமும் தீவிரவாதமும் :

'தென் ஒலி', இதழில் "பஞ்சாபுக்கு விடிவு வருமா?", என்னும் தலைப்பில் பஞ்சாபில் நடைபெற்று வரும் தீவிரவாதங்களைப் பற்றிய விமர்சனக் கட்டுரை வெளியாகியுள்ளது. அக்கட்டுரையில், "இன்று பஞ்சாபில் ஏற்பட்டிருக்கும் பயங்கர வாதத்திற்குக் காரணம் இந்திய அரசியல்வாதிகளின் சுய நலப்போக்கும் போலி வாக்குறுதிகளும் தான். பிரச்சினைகள் என்பது நாட்டில் இருக்கத்தான் செய்யும். ஆனால் நம் நாட்டு அரசியல் தலைவர்கள் பிரச்சினைகளை வைத்தே அரசியல் நடத்துவது தான் இன்று தீவிரவாதங்களையும் பயங்கரவாதங்களையும் வளர்த்து விடுகின்றன".[180] எனப் பஞ்சாபில் நடைபெற்று வரும் தீவிரவாதங்களுக்கும் பயங்கரவாதங்களுக்கும் அரசியல் வாதிகளே காரணம் எனச் சுட்டிக் காட்டியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

vii.கோவை குண்டு வெடிப்பு:

'தென் ஒலி' இதழில் 'கோவைக்குண்டு வெடிப்பு ஓர் அலசல் ' என்னும் கட்டுரை வெளியாகியுள்ளது. 14.2.1998 இல் கோவையில் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் 60 பேர் பலியாகி உள்ளனர். தமிழ்நாட்டில் ஊடுருவி இருக்கும் எல்.டி.டி.இ., தமிழர் விடுதலை இயக்கம், ஆர். எஸ். எஸ்., விசுவ ஹிந்து பரிசத், இந்து முன்னணி, பி.ஜே.பி, அல் உம்மா ஜிகாத் போன்ற தீவிரவாத அமைப்புகளால் தினமும் கலவரங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண,

"தீவிரவாத அமைப்புகளை தடைசெய்வதோடு அரசின் பணி முடிந்து விடவில்லை. இந்தப் பயங்கரவாதத்தால் சிறுபான்மையினர் தான் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பதை முஸ்லீம் சமுதாயத்துக்கு உணர்த்துவதும் அரசின் தலையாய கடமையாகும். பெரும்பான்மை சமூகத்திலுள்ள வகுப்புவாத, மத வாத சக்திகளே வலுப்பெறும், நாட்டின் சமயச் சார்பின்மை மறைந்து விடும் என்பதும் இந்த சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு உணர்த்தப்பட வேண்டும்".[181]. எனச் சுட்டிக் காட்டியிருப்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

viii. தீவிரவாதிகளின் வெறிச் செயல் :

குஜராத் மாநிலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இந்துத் தீவிரவாதிகளின் வெறியாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அகமதாபாத் மாவட்டத்தில் ராஜ்கோட்டில் இயங்கி வரும் 'சங் பரிவார் ' என்ற இந்துத் தீவிரவாத அமைப்பு கிறிஸ்தவர்களுக்கு எதிரான

தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. இதனை 'நம்வாழ்வு' இதழ் கடுமையாகச் சாடியுள்ளது. "20.7.1998 அன்று ராஜ்கோட்டில் அமைந்துள்ள கிறிஸ்தவப் பள்ளி மீது பஜ்ரங்தள், பாரதீய வித்தியார்த்தி பரிசத் ஆகிய தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த வன்முறைக் கும்பல் கூர்மையான ஆயுதங்களால் மாணவர்களைக் கடுமையாகத் தாக்கி பள்ளியையும் சேதப்படுத்தியுள்ளனர் ". [182]. இந்த மனிதாபிமானமற்ற செயலைக் கிறிஸ்தவ இதழ்கள் வன்மையாகக் கண்டித்திருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறு தீவிரவாதிகள் உருவாகும்விதம், தீவிரவாதமும் மதவாதமும், பீகாரில் தொடரும் படுகொலைகள் ஆகியன குறித்தும், அவற்றைக் களைய வேண்டியதன் அவசியம் குறித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் தனிக் கவனம் செலுத்தியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

13. நல்லொழுக்கம்:

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் மக்களிடமும் இளைஞர்களிடமும் மாணவர்களிடமும் குறிப்பாக பெண்களிடம் நல்லொழுக்கங்களை வளர்க்கவும் பேணவும் வழிகாட்டியுள்ளன. புகை, மது போன்ற பழக்கங்களைச் சாடியுள்ளன. பாலியல் பலாத்காரம், கற்பழிப்பு போன்ற வன்முறைச் செயல்களைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. உடல் நலம் பேணுவதிலும், சமுதாயத்தின் உயரிய ஒழுக்கங்களை மதிப்பதிலும் குமரிமாவட்டக் கிறிஸ்தவ இதழ்களின் மதிப்புகள் (Values) சிறப்புடையதாகும்.

i. புகைப் பிடிப்பவர்கள்:

குமரி மாவட்டத்தில் வெளிவந்துள்ள பெரும்பான்மையான இதழ்கள் புகைப்பழக்கத்திற்கு எதிர்ப்பும் மறுப்பும் தெரிவித்துள்ளன. இதன் மூலம் அவ்விதழ்களின் உயரிய 'இதழியல் தருமம் ' வெளிப்படுகின்றது. இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் செய்திகளை எடுத்துக் காட்டி விளக்கலாம்.

புகை பிடிப்பவர்களைப் பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்களை 'ஏழையின் குமறுல் ' இதழ் வெளிப்படுத்தியுள்ளது. புகை பிடிக்கும் பழக்கத்திற்கு 14 மில்லியன் மக்கள் ஆளாகியுள்ளனர். இதனால் மணிக்கு 12 பேர் சராசரியாக இறக்கின்றார்கள். "2,85,000 பேர் ஆண்டுதோறும் புகையிலை சம்பந்தமான நோய்க்குச்சிகிச்சை பெறுகின்றனர். அரசாங்கங்கள் இதற்காக வருடத்திற்கு 2000 கோடி ரூபாய் செலவிடுகின்றன. இந்நோய்களால் ஒவ்வொரு வருடமும் 50 மில்லியன் மனித உழைக்கும் நேரம் வீணாகிறது. சாலை விபத்தில் மரணம் அடைபவர்களை காட்டிலும் 20 மடங்கு அதிகமாக புகை பிடிப்பதனால் இறக்கிறார்கள். புகை பிடிப்பதனால் இருதய நோய் மட்டும் அல்ல, வாய், சிறுநீரகம், கல்லீரல் ஆகியவற்றில் புற்றுநோய் வருவதாகத் தெரியவந்துள்ளது".[183]. இதிலிருந்து 'ஏழையின் குமுறல் ' இதழ் புகைப்பழக்கத்தை எதிர்ப்பதை அறியலாம்.

iv.மாணவரும் போதையும் :

'களவும் கற்று மற ' என்பது பழமொழி. இந்தப் பழமொழி இளைஞர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்லவும் வாய்ப்புண்டு. புதிய கண்ணோட்டத்தில் எதையும் பார்ப்பதும், புதிய அனுபவங்களைப் பெற

விரும்புவதும் இளைஞர் உள்ளங்களின் இயல்பாகும். இதனால் மாணவர் போதைப் பழக்கத்திற்கு ஆட்படுகின்றனர். இதனை 'யுகச்சிற்பி' இதழ் 'மாணவரும் போதையும் ' என்னும் கட்டுரையில் சாடியுள்ளது.

"பள்ளியில் கல்லூரியில் படிக்கும் இளைஞருக்கு மது, ஏனைய போதைப் பொருள்களினால் வரும் தீமைகளைப் பற்றித் தெரியும் சமுதாயத்தில் சில நேரங்களில் தமது குடும்பத்தில் போதை அடிமைகளை, அவர்களைச் சார்ந்தோர் படும் துன்பங்களையும் மாணவன் காண்கிறான். போதையால் மனம் பாதிக்கப்பட்டு, மானமிழந்து மனைவி மக்களைப் போதை அடிமை சித்திரவதை செய்வதைக் காண்கிறான். அதே மாணவன் புதிய அனுபவம் தேடிப் போதையை நாடுகின்றான் "[184] இவ்வாறு மது தரும் மாயையை உண்மையென நம்பி மதுப் பழக்கத்திற்கு ஆளாகின்றான். புகையிலை, பாக்கு என்ற பெயரில் விற்கப்படும் போதைகளிலிருந்து மாணவர்களைக் காப்பாற்ற எந்த அரசியல் கட்சிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் மாணவர்கள் அரிஸ்டம், கஞ்சா, பிரவுண் சுகர் போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

"குமரி மாவட்டத்திலுள்ள காவல்துறை துணையோடு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கஞ்சாவைக் குமரி மாவட்டத்தில் விநியோகம் செய்வதாக நம்பப்படுகிறது. அங்கே தெரு மூலைகளில், பெட்டிக்கடைகளில் விற்கப்பட்டு வந்த கஞ்சா சிகரெட்டுகள் இப்போது பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் விற்கப்படுவது பரவலாகி வருகிறது". [185]. இதனால் மாணவர்கள் புகைப் பழக்கத்திற்கு அடிமையாகிக் கெட்டுப் போவதை 'யுகச்சிற்பி' இதழ் சுட்டிக்

காட்டுகின்றது. யுகச்சிற்பி இதழில் வெளியாகியுள்ள "போதைப் பொருட்கள்" என்ற கட்டுரையும் இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

ii.எய்ட்ஸை விடக் கொடியது - புகை:

எய்ட்ஸ் நோய் கொடிய நோய்களுள் கொடிய நோயாகும். ஆனால் 'மறைநெறி' இதழ் சிகரெட் புகைப்பது எயிட்ஸை விடக் கொடியது என்பதை, "சிகரெட் புகைப்பது எயிட்ஸைவிடக் கொடியது என்று எடுத்துச் சொன்னாலும் கேட்பாரில்லை". [187]. எனச் சுட்டிக் காட்டுகின்றது.

iii.அதிகமான சிகரெட் புகைத்த கிறித்தவர் :

உலகில் அதிகமான எண்ணிக்கையில் சிகரெட் புகைத்தவர் பாப்ஹென்ஸ்லர் ஆவார். அவர், "2,92,000 சிகரெட்டுகளைப் புகைத்த நான் விடுதலை பெற்றேன். சிகரெட் என் தகப்பனாருக்கு மரணத்தை விளைவித்த கொடிய காட்சியைக் கண்களால் கண்டாலும் புகைக்கும் பழக்கத்தை என்னால் விட்டு விட முடியவில்லை. ஆனால் புகையிலை கொல்லும் தன்மையுடையது என்பதை யாரும் மறுக்கவே முடியாது". [188]. என்று குறிப்பிட்டுள்ளார். ஆதலால் புகைப்பழக்கத்தை விட்டு விட வேண்டுமென்று 'வருகையின் தூதன் ' இதழ் வலியுறுத்துகின்றது. ' நம் வாழ்வு' இதழ் 'புகைவிடும் பழக்கத்தை விடுங்கள்' என்ற கட்டுரையில்,

"புகை பிடிப்பவர்கள் நிக்கோடின் என்ற பொருளுக்கு அடிமையாகின்றனர். உயிரைப்பலி கொள்வது நிக்கோடின் முதலிடம்

வகிக்கிறது. புகை பிடிப்பவர்களின் உடலில் நோய் எதிர்ப்புத் திறன் குறைவதால் அவர்களுக்குப் பல நோய்கள் ஏற்படுகின்றன. புகை பிடிப்பவர்களுக்கு மாரடைப்பு நோயும் இதயத்தமனிகளில் அடைப்பும் எற்பட அதிக வாய்ப்பு உள்ளது". [189]. என புகைப்பதால் ஏற்படும் நோய்களையும் சுட்டிக் காட்டுகின்றது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் புகைப்பழக்கத்தைச் சாடிச் செய்திகள் வந்திருப்பது, அவ்விதழ்கள் மக்களின் உடல் நலத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன. மதுப்பழக்கத்தைக் கண்டித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் கவனம் செலுத்தியுள்ளன. குடிப்பழக்கத்தினால் குடிப்பவனின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. குடும்பப் பொருளாதாரமும் சீரழிகின்றது. வீண் கலவரங்களும் எற்படுகின்றன. குடும்பத்தில் அமைதி கெடுகின்றது. இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் செய்திகளை எடுத்துக் காட்டி விளக்கலாம்.

v. மது மருந்தா? விருந்தா?:

'தேசோபகாரி' இதழில் அருள்திரு. டி. எஸ். செல்வராஜ் 'குடி' என்னும் கவிதையை எழுதியுள்ளார். அக்கவிதையில் குடும்பத்துக்கு வரும் மாப்பிள்ளை விருந்து என்னும் பெயரில் மது அருந்திச் சீரழிவைச் சுட்டிக் காட்டியுள்ளார். மருந்து எனக் கருதி அருந்தி நிற்பவர் வருந்தி அழிவர் என்பதைக் கவிஞர் நுட்பமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

"மனித

உடலை

சுவடியாக்கி

வாழ்க்கை

முடிவை

குத்திக்

கிழித்து

எழுதும்

நாராயம்

விஷச்

சாராயம்

இனியேனும்

போதைப்பொருள்

விழிப்புணர்வு

மாறி

போதைப்

பொருள்

ஒழிப்புணர்வு

உருவாகட்டும்

என

அவர்கள்

உணர்வார்களா?"[190]

எனப் போதைப் பொருள் ஒழிப்புணர்வைச் சுட்டிக்காட்டியுள்ளார். மது மருந்தும் இல்லை விருந்தும் இல்லை., மக்கள் வாழ்க்கையைக் கெடுக்கும் நச்சுக் கிருமி எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

v. போதைப் பழக்கம் :

'தேசோபகாரி' இதழில், "நமது நாட்டில் கல்வி பயிலும் 30 சதவிகித மாணவர்கள் புகைத்தல், மது அருந்துதல், சூதாடுதல் போன்ற தீயப் பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் 13 முதல் 19 வயதுக்குட்பட்ட டீன் ஏஜ் பருவத்தில் 36 சதவிகிதம் பேருக்கு ஒரே ஒரு தடவையாவது தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் மனதில் எழுவதாக ஆராய்ச்சி முடிவுகள் உறுதி செய்கின்றன".[191]. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இவற்றை எதிர் கொள்வதில் நம் கல்வி முறை சிறப்பாகவும் ஒழுக்கத்துடனும் அமைய வேண்டும்.

vii.மதுவின் தீமை:

குடி குடியைக் கெடுக்கும்., மதுப்பிரியர்கள் மடையர்கள்., கொல்லும் கொடியது மது., மது ஆன்மாவை அழிக்கும் என்னும் கருத்துக்களை 'தேசோபகாரி' இதழ் வெளிப்படுத்தியுள்ளது. "மது என்பது மருந்தல்ல., மது அருந்துவதினால் மயக்கம், புலம்பல், பைத்தியம், தூக்கமின்மை, வலிப்பு, நரம்புத் தளர்ச்சி, குடல்புண், கல்லீரல் வீக்கம், இதய நோய், பக்கவாதம், ரத்தக் கொதிப்புப் போன்ற பல்வேறு நோய்கள் வருவதற்கு வாய்ப்புள்ளது".[192]

என மதுவினால் ஏற்படும் தீமைகளை விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

viii.அரசின் மதுவிலக்குக் கொள்கை:

தமிழகத்தில் முழு மதுவிலக்கு அமுலாக்கப்படும் என்று தேர்தலின் போது உறுதி கூறியது அ.தி.மு.க. கட்சி. ராஜீவ் ஆட்சிக்கு வந்தபிறகு முதல் கையெழுத்திட்ட தீர்மானமே மலிவு விலை மது ஒழிப்பு தான் இதனை 'ஏழையின் குமுறல் ' இதழ், "வெளிநாட்டு மது ஒழிப்புக்கு முயற்சி ஏதும் இல்லை. கள்ளச் சாராயம் விற்பனையாளர்களுக்கு இனிக் கொள்ளை லாபம் தான். காவல் துறையினர் லஞ்சத்தில் புரளுவார்கள். " [193] என தமிழக அரசின் மதுவிலக்குக் கொள்கையைச் சாடியுள்ளது.

x. போதையும் சமுதாயப் பாதிப்புகளும் :

'யுகச்சிற்பி' இதழில் 'போதையும் சமுதாயப் பாதிப்புக்களும் " என்னும் கட்டுரை வெளியாகியுள்ளது. போதையின் சமுதாயப் பாதிப்புக்களை "இச்சமுதாயத்தில் போதைக்கு அடிமையாகாத மனிதர்களின் வாழ்க்கை தான் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. மது குடிப்பதால் அறிஞர்கள், கலைஞர்கள், தலைவர்கள்கூட சமுதாயத்தில் மதிப்பிழந்து போகிறார்கள். முதலில் சிலர் உடைமைகள் அனைத்தையும் விற்றுக் குடித்து, அதற்கு முழு அடிமையாகி முடிவில் நடுரோட்டில் பிறரிடம் கையேந்தி நிற்கின்ற நிலையை உருவாக்கிக் கொள்கின்றார்கள் ". [194]. என அக்கட்டுரை விளக்கிக் காட்டியிருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.

x. தமிழ்நாடு மது ஒழிப்பு இயக்கம் :

மகளிர் இயக்கங்கள் கிராமங்களில் வேரூன்றிய போது சந்தித்த பெரும் அடக்கு முறை மது அரக்கனால் ஏற்பட்டதாகும். 'திருச்சபையில் புதுமலர்ச்சி' என்னும் இதழ், "மகளிர்குழுக்கள் மதுவை எதிர்த்து கிராமிய அளவில் குரல் எழுப்பிய போது மகளிர் அணியினர் அதற்கு ஆதரவாகக் களம் இறங்கவில்லை. பெண்ணுரிமை இயக்கங்களும் தயங்கின. இன்று மாநிலம் தழுவிய அளவில் மது ஒழிப்பிற்கான முயற்சியில் ஏக்தா நிறுவனம் முன் வந்திருப்பது பாரட்டிற்குரியதாகும். தமிழ்நாடு மது ஒழிப்பு இயக்கம் மிகச் சிறிய ஆரம்பத்தைக் கொண்டிருப்பினும் பெரும் வெற்றியடைய வேண்டியது அவசியம் ". [195]. என தமிழ்நாடு மது ஒழிப்பு இயக்கத்தின் பணியினைப் பாராட்டியிருப்பது அவ்விதழின் மது விலக்குக் கொள்கையைப் பற்றியதாகும்.

x. கள்ளச் சாராயம் ஒழிப்பு:

வட்டாரப்பெண்கள் அமைப்பு மூலம் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திர மேரூர், மதுராந்தகம் ஆகிய ஒன்றியங்களிலுள்ள கிராமங்களில் கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டது. இதனைத் 'திருச்சபையில் புது மலர்ச்சி' , என்னும் இதழ் "பெண்கள் அமைப்புகளில் வட்டாரப் பெண்கள் அமைப்பின் மூலம் எதையும் சாதிக்க முடியும் என்னும் மனவலிமையைப் பெற்றுள்ளனர் ". [196] எனச் சுட்டிக் காட்டியுள்ளது.

xii. மது அடிமை விடுதலை பெறும் வழி:

'நம் வாழ்வு' இதழில் எஸ். ராபர்ட், "போதைப்பொருள், மதுவுக்கு அடிமையானவர் விடுதலை பெறும் வழி" என்னும் கட்டுரையில், மதுவுக்கு அடிமையானவர் விடுதலை பெற,

"நம் இரட்சிப்பை முழுமனதோடு வாஞ்சித்தால் இயேசு தரும் பலத்தோடு நாம் மதுவை மறந்து மனம் திரும்ப முடியும். மது அரக்கனின் கட்டுகளிலிருந்தும் போதை மாத்திரை மற்றும் தீய பழக்க வழக்கங்களின் பிடியிலிருந்தும் உன்னை விடுவிக்க அவர் ஒருவருக்கே ஆற்றல் உண்டு. கிறிஸ்து இயேசு எனும் வைத்தியனிடம் நீங்கள் ஒரு முறை மட்டும் முழு இருதயத்துடன் வந்தால் போதும். மது மற்றும் அனைத்துப் போதையிலிருந்தும் இறுதி வரைக்கும் விடுதலை கிடைக்கும் ".[197] என இறை நெறியை வலியுறுத்தி இருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். ' நம் வாழ்வு' இதழில் உலகில் போதைப் பொருட்களின் பாதிப்புக்களை விளக்கிம் "போதைப் பொருட்கள் ".[198] என்னும் கட்டுரையும் வெளியாகியுள்ளது.

xii. இளைஞர் வாழ்வில் போதை:

இளைஞர்கள் வாழ்வில் போதை மிகப் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. ' நம் வாழ்வு' இதழில் சேலம் செந்தாமரை இதனைப் 'போதை' என்னும் கவிதையில் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

"போதையை ஒழிப்போம் வாழ்வில் - நல்ல
பாதையை அமைப்போம்

உடலுக்கு உணர்வற்றுத் திரியச் செய்யும்

மடலறுக்கும் பாசனம்

மண்ணின் மாந்தர் மயக்கும் போதை

தன்னில் மயங்கலாமா?

பேதையாய் பின் உணர்வற்று - மண்ணில்

விதவையாக மாறலாமா?

வேண்டாம் வேண்டாம் வேதனை தரும்

கண் கண்ட போதைகள்

எத்தனை கொடுமைகளையது - நின்று

வித்தகமாய் செய்யுது

அந்த போதை வேண்டுமா? நமக்கு

வெந்து போகட்டுமா உடல்

நய்ந்து போகட்டுமா நல்வாழ்வு - அது

பிய்ந்து போகட்டுமா?

வேண்டாம் போதைகள் ஆமாம் - அதன்

வேர் அறுத்து ஒழிப்போம்.

அன்றே இளைஞர் வாழ்வில் - நல்ல

புதுயுகம் மலரும் ". [199]

இளைஞர் வாழ்வில் புது யுகம் காணப் போதையை ஒழிக்க வேண்டும் என்கிறார் கவிஞர். இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் மதுவின் தீமைகளைப் பல கோணங்களில் விளக்கிச் செய்திகளை வெளியிட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

14பாலியல் பலாத்காரம் :

பெண்கள் மீதான பாலியல் பலாத்-காரத்தையும், சிறுமியர் மீது நடத்தப்படும் பாலியல் பலாத்கார வன்முறைத்தாக்குதல்களையும் வன்மையாகச் சாடியும் கண்டித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. சமுதாய ஒழுக்கத்திற்கும் மனித நேயத்திற்கும் புறம்பான பாலியல் வன்முறைத் தாக்குதல்கள் களையப்பட வேண்டிய ஒன்றாகும். இதனைப்பின்வரும் சான்றுகளைக் காட்டி விளக்கலாம்.

i. சிறுமியர் பாலியல் பலாத்காரம் :

ஒவ்வொரு வருடமும் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் 4 கோடி குழந்தைகள் கருக்கலைப்புச் செய்கின்றனர். 'தேசோபகாரி' இதழ் சிறுமியர் மீதான பாலியல் பலாத்காரத்தை வன்மையாகச் சாடுகின்றது.

"ஏறக்குறைய ஒரு கோடி குழந்தைகள் பாலியல் பலாத்காரம் மற்றும் விபச்சாரத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர். வருடந்தோறும் 60 லட்சம் பெண் குழந்தைகள் இத்தொழிலுக்கு உட்படுத்தப்படுவதாக உலக தரிசனம் மற்றும் யுனிசெப் என்பனவற்றின் ஆய்வறிக்கை கூறுகிறது. தமிழகத்தில் 6 முதல் 8 வயதுக்குட் பட்ட சிறுமிகள் தான் பெருமளவில் பாலியல் வன்முறைக்கு உள்ளாகின்றனர். 1994 ஆம் வருட அறிக்கையின் படி 7 வயதுக்குள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டோர் 23பேர் 11 முதல் 16 வயதுக்குள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டோர் 50பேர் என அதிகாரப் பூர்வமாகக் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது".

இத்தகைய வன்செயல்கள் களையப்பட வேண்டுமென 'தேசோபகாரி' இதழ் வலியுறுத்துகின்றது". 22.06.1995இல் தக்கலையில் மூன்று வயதுக் குழந்தை சஜ்னு அரசு மருத்துவமனையில் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டாள். இந்தச் சம்பவம் குமரி மாவட்ட மக்களை அதிர்ச்சி அடையச் செய்தது".[200] என 'ஏழையின் குமுறல் ' புகைப்படத்துடன் செய்தியை வெளியிட்டுள்ளது.

"குமரி மாவட்டத்தில் பால்யப் பாலியல் வன்முறை அதிகரித்து வருகின்றது. விளவங்கோடு தாலுகாவில் 'கவி' என்னும் சிறு குழந்தை பாலியல் பலாத்காரத்திற்குப் பலியாகியுள்ளாள் '.[201] இதனை 'ஏழையின்' குமுறல் 'பிஞ்சுக்கு வந்த கொடுமை' என்னும் தலைப்பில் செய்தியாக வெளியிட்டுள்ளது.

ii.பாலியல் இம்சைகள் - உச்ச நீதிமன்றத் தீர்ப்பு:

பணியிடங்களில் பெண்களுக்கு அன்றாடம் நடக்கும் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுத்து நிறுத்தவும், பாலியல் சமத்துவம் பேணப்படவும் உச்ச நீதி மன்றம் தலையிடக்கோரி 'விசாகா' என்ற தன்னார்வ அமைப்பும் மற்றும் பல பெண்கள் அமைப்புக்களும் வழக்குத் தொடர்ந்தன. 13.8.1997இல் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு வந்தது. விரும்பத்தகாத பாலியல் வக்கிரத்துடன் கூடிய திட்டமிட்ட செயல்கள் எல்லாம் பாலியல் இம்சைகளே. அவை வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இருக்கலாம்.

உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பில்,

"உடல் ரீதியாகத் தொடுதல் அல்லது தொட முயற்சித்தல், பாலியலுக்கு இணங்க வற்புறுத்துவது அல்லது அழைப்பது, பாலியல் உள்நோக்கத்தோடு சாடையாகப் பேசுவது, கேலி செய்வது, இரு பொருள் படப் பேசுவது, ஆபாசப்படங்களையும், சித்திரங்களையும் காண்பிப்பதும், செய்கை மூலம் அல்லது பேச்சுவழி அல்லது வேறு ஏதேனும் வழியில் விரும்பத்தகாத முறையில் கீழ்த்தரமான வகையில் பாலியலை வெளிப்படுத்துதல் அனைத்தும் பாலியல் துன்புறுத்தல் தான் என்கின்றது உச்ச நீதி மன்றத் தீர்ப்பு" .[202].

மாத ஊதியம், மதிப்பூதியம், தொகுப்பூதியம் பெறுபவர்கள், அரசு ஊழியர்கள், பொதுத்துறை மற்றும் தனியார் துறையைச் சார்ந்தவர்கள். முறை சாராத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் என்று பெண்கள் எத்துறையில் பணியாற்றினாலும் எவ்விடத்தில் பணியாற்றினாலும் இத்தீர்ப்பு அவர்களுக்குப் பொருந்தும் எனினும் சட்டத்தைப் பொருட்படுத்தாமல் பாலியல் பலாத்காரம தொடர்ந்து கொண்டு தான்இருக்கின்றது என்பது வேதனைக்குரிய செயலாகும்.

iii. ராஜ் கோட்டில் கன்னியர்கள் மீது பாலியல்பலாத்காரம் :

1977 ஆம் ஆண்டு ஜுலை மாதம் குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இந்துத்துவத் தீவிரவாதிகள் விவிலியத்தைத் தீயிட்டுக் கொழுத்தினர். உத்திரப்பிரதேசம், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் தாக்கப்பட்டன.

"செப்டம்பர் 23 ம் தேதி மத்தியப்பிரதேசத்தில் பழங்குடியினர் வசிக்கும் ஜாபுவா மாவட்டம் நவபரா கிராமத்தில்பழங்குடி மக்களிடையே அறப்பணி செய்து வந்த நான்கு கிறிஸ்தவக் கன்னியர்களை இந்து வெறிபிடித்த சங்க் பரிவாரங்களைச் சார்ந்த கும்பல் பாலியல் பலாத்காரம் செய்துள்ளது".[203]. இதனை 'நம்வாழ்வு' இதழ் கன்னியர்கள் மீது பாலியல் பலாத்காரம் பொறுத்தது போதும் என்னும் தலைப்பில் செய்தியாக வெளியிட்டு, அந்த பாலியல் வன்கொடுமையைக் கடுமையாகச் சாடியுள்ளது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறித்தவ இதழ்கள் பரவலாகப் பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்துச் செய்திகளை வெளியிட்டிருப்பது சுட்டத்தக்கதாகும்.

iv. மகாராஷ்டிராவுக்குப் பெண்கள் கடத்தல் :

'ஏழையின் குமுறல் 'இதழ் "இரால் கம்பெனியா? விபச்சாரக்கூடமா?" என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தி, கல்நெஞ்சம் கொண்ட கயவர்களையும் மனம் வருந்தச் செய்கின்றது.

"குமரி மாவட்டத்திலிருந்து பெண்கள் கடத்தப்பட்டனர். இளம்பெண்களுடன் திருமணமான பெண்களும் கேரளா இரால் கம்பெனியில் வேலை என்று ஏமாற்றப்பட்டு மகாராஷ்டிராவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர் ". [204].

அப்பெண்களின் கண்ணீர் கதையை 'ஏழையின் குமுறல் ' இதழ் வெளியிட்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க வேண்டிய காவல்துறை பணத்திற்கு அடிமைப்பட்டு சமூகவிரோதிகளுக்குக் கூட்டு நிற்கின்றது எனச் சுட்டியிருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.

v. பத்மினியின் சோகக் கதை:

சிதம்பரம் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் காவல் துறையினரால் கொடுமையான, அநாகரீகமான முறையில் கற்பழிக்கப்பட்ட பத்மினியின் துயரங்களையும் பாதிப்புக்களையும் 'ஏழையின் குமுறல் ' இதழ் "பத்மினியின் சோகக் கதை" [205] என்னும் தலைப்பில் செய்தியாக வெளியிட்டிருப்பது குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களின் மனித நேயப் பண்பினை வெளிப்படுத்துவதாகும்.

vi. கொலைகளும் கற்பழிப்புக்களும் :

கல்வியையும் அறிவையும் தலித் மக்களுக்குக் கிறிஸ்தவ அமைப்புகள் கொடுத்து வருவதால் ஆத்திரம் கொண்ட சாதி இந்துக்கள், இந்தியாவில் மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், குஜராத், பீகார், ஒரிசா, கர்நாடகா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய எட்டு மாநிலங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரம் கற்பழிப்புப் போன்ற வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இதனால் 'சமுதாயச் சிந்தனை' இதழ் "சங் பரிவார் தன் கொலைகளையும், கொள்ளைகளையும், கற்பழிப்புக்களையும், தீயிலிடுதல்களையும் செய்தது என்பது வெளிச்சம். மதத் தீவிரவாத இயக்கங்களான சங் பரிவார், ஆர். எஸ்.எஸ், விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள், சிவசேனா போன்றவை பி. ஜே. பி. அரசின் ஆதரவு அமைப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இயக்கங்களின் தாய் இயக்கமான ஜனசங், தேசபிதா காந்தியைச் சுட்டுக் கொன்றது என்பதை நாம்

அறிதல் வேண்டும் ". [206] எனச் சுட்டிக் காட்டியுள்ளது. மதவெறியினால் நடைபெற்று வரும் கற்பழிப்புக்களையும் கொலைகளையும் சாடியுள்ளது.

'தென்ஒலி' இதழும் நவபாராவில் நான்கு கிறிஸ்தவப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதைக் "கொடுமையோ கொடுமை. நவபாராவில் நான்கு தமிழ்க் கன்னியர்கள் கற்பழிப்பு "[207] என்னும் தலைப்பிலும், குஜராத்தில் கிறிஸ்தவப் பெண்கள் மீது நடைபெற்று வரும் பாலியல் பலாத் காரங்களைக் "குஜராத்தில் நடக்கும் கொடுமைகள்".[208] என்ற தலைப்பிலும், பீகாரில் கன்னியாஸ்திரிகள் கற்பழிக்கப்படுவதை "பீகாரில் கன்னியாஸ்திரி மான பங்கம் "[209] என்ற தலைப்பிலும் செய்தியாக வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

15. விபச்சாரம் :

விபச்சாரத்தை வன்மையாகக் கண்டித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. சான்றுகளாகப் பின்வரும் செய்திகளைக் குறிப்பிட்டு விளக்கலாம்.

i . விபச்சாரத்தைக் கட்டுப்படுத்திய பொது மக்கள் :

விபச்சாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தும் பொறுப்பு பொதுமக்களிடையே உள்ளது. 'ஏழையின் குமுறல்' இதழில். "மும்பையில் காவலியா டேஸ்க் பகுதியில் உள்ள ராகவ்ஜி சாலையில் இருபக்கங்களிலும்

விபச்சாரம் நடந்தது. இரவு பொது மக்கள் நடக்க முடியாத நிலை. போலீசார் கண்டு கொள்ளாததால் விபச்சாரத்திற்கு வரும் வாடிக்கையாளர்களைத் தடுத்து திருப்பி அனுப்பிப்பொது மக்கள் விபச்சாரத்தை முற்றிலுமாக ஒழித்து விட்டனர் ".[210] என்னும் செய்தி வெளியாகியுள்ளது. இதிலிருந்து அவ்விதழ் விபச்சார ஒழிப்பில் கொண்டிருக்கும் நாட்டத்தை அறியலாம்.

ii .விபச்சாரமும் மணவிலக்கும் :

அருட்திரு. ஒய். இருதயராஜ், 'விபச்சாரத்திற்கு விவாகரத்து உண்டா? என்னும் கட்டுரையை 'நம் வாழ்வு' இதழில் எழுதியுள்ளார். அக்கட்டுரையில் "கத்தோலிக்கக் கிறிஸ்தவத் தம்பதிகளிலும் ஒரு சிலர் விபச்சாரக் குற்றத்தில் ஈடுபடுகின்றனர். நமது நாட்டில் சிவில் சட்டப்படி விபச்சாரத்திற்கு விவாகரத்து உண்டு. உண்மையில் நமது நாட்டில் கிறிஸ்தவர்களுக்கு விபச்சாரத்திற்கு மட்டுமே விவாகரத்துக் கொடுக்க சிவில் சட்டம் இடம் தருகிறது. வேறு எந்தக் காரணத்திற்கும் கிறிஸ்தவர்களுக்கு விவாகரத்துக் கிடையாது. ஆனால் திருச்சபைச் சட்டத்தில் விபச்சாரத்திற்கு விவாகரத்துக் கிடையாது". [211]. எனச் சுட்டிக் காட்டியுள்ளார். விபச்சாரத்தில் ஈடுப்பட்டவர்கள் மனம் திருந்தி இணைந்து வாழ வேண்டும் என்பதே இதன் உட்பொருளாகும். இவ்வாறு குமரிமாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் பாலியல் பலாத்காரம், கற்பழிப்பு, விபச்சாரம் ஆகியன குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன.

16. பல்வகைச் செய்திகள்:

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் பொதுவான இறை பக்தி, மக்களின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளல் தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்தல், புற்று நோய், தொழுநோய், இருதய நோய், போலியோ, எயிட்ஸ், காசநோய், வலிப்பு நோய் போன்ற கொடிய நோய்களுக்கு மருத்துவம் என்ற அடிக்கருத்து நிலைகளிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. இச்செய்திகள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்திருக்கின்றன.

i.இறைபக்தி:

இறைபக்தி, அருளுரை, இறையியல் கல்வியைப் போதித்தல் என்ற நோக்கம் குமரி மாவட்டத்தில் வெளிவருகின்ற அனைத்துக் கிறிஸ்தவ இதழ்களிலும் காணப்படுகின்றது. கிறிஸ்தவம் சாராத பொதுவான இறை பக்தியைப் பற்றிய செய்திகளும் இவ்விதழ்களில் மிகுந்த முக்கியத்துவத்துடன் வெளியிடப்பட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இதற்குச் சான்றுகளாக பின்வரும் செய்திகளை எடுத்துக்காட்டி விளக்கலாம். விதி, இறையியல் விடுதலை, அருளுரை போன்ற இறைபக்தியை வலியுறுத்தும் செய்திகளை 'தேசோபகாரி' இதழ் வெளியிட்டிருக்கின்றது.

ii. இறை நம்பிக்கையும், மூடநம்பிக்கையும் :

'விடியலை நோக்கி' இதழில் 'ஜீவா கோட்பாடுகளைப் புரிந்து கொள்ளுங்கள் ' என்னும் சமயக் கட்டுரையைத் தொடர் கட்டுரையாக

எழுதியுள்ளார். வாழ்க்கையில் நிரூபணத்திற்கு அப்பாற்பட்ட, அடிப்படையான அர்த்தங்களைக் கலை நயத்தோடும் கற்பனைத் திறனோடும் எடுத்துக் காட்டுவதே இறை நம்பிக்கை ஆகும்.

"இறை நம்பிக்கையானது வாழ்க்கைக்கு அர்த்தம் தருவதால், மாறி வரும் வாழ்க்கை முறைக்கு தங்களது விசுவாசமும், நம்பிக்கையும் என்னென்ன புது அர்த்தங்களைக் கொடுக்கின்றன என்று பார்த்து விளக்க வேண்டும். இறை நம்பிக்கையின் வெளிச்சத்தில் உலக வாழ்வில் ஒரு திட்டம் இருக்கிறது. வாழ்க்கை இயக்கம் வெறுமனேயே தற்செயலானதல்ல என்று நம்பினால், வாழ்க்கைத் திட்டத்தை உணர முடியும். இவ்வாறு சிந்திக்காமல் இருந்தால் மூட நம்பிக்கையை வளர்க்கும்.இறை நம்பிக்கை இருப்பதால் பொருள் முதல் வாத அணுகு முறையை விட்டுவிட வேண்டும் என்றில்லை. நம்பும் மனிதன் உலகிலே தான் அர்த்தத்தைத் தேட வேண்டும். பொருண்டு என்ற பிடிப்போடு உலகை அலசுகிறான். விடைகிடைக்கும் என்ற வேகத்தில் உந்துதலோடு வாழ்க்கையை ஆய்வு செய்கின்றான். இந்தச் சார்பை அவனுக்கு தருவது அவனது நம்பிக்கையாகும். அந்தச் சார்பு நிலைக்கு ஆதாரம் உள்ளதா என்பதை ஆய்ந்துதான் முடிவு செய்ய வேண்டும். கடவுள் நம்பிக்கையைக் கற்பனை வடிவிலேயே விளக்குவது உண்மையென்று கருதி, உலக நிகழ்ச்சிகளை அலசிப் பார்க்காமலும் விஞ்ஞான வளர்ச்சியை எதிர்க்கும் மதம் மூட நம்பிக்கைகளை வளர்க்கிறது. கடவுள் நம்பிக்கையைக் கேலிக் கூத்தாக்குகிறது. கடவுள் மறுப்புக்கு வகை செய்கிறது". [212]. இவ்வாறு இக் கட்டுரை இறைநம்பிக்கை மூட நம்பிக்கை இல்லை என்பதைத்

தெளிவுப்படுத்துகின்றது. இதிலிருந்து இறை பக்தி, இறை நம்பிக்கை ஆகியனவற்றின் உட்பொருள் தத்துவத்தைத் தெரியலாம்.

iii. பல தெய்வ வழிபாட்டு முறை:

எகிப்து, மெசப்படோமியா, உரோம் ஆகிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் பல தெய்வங்களை வணங்கி வந்தனர் எனப் பல தெய்வ வழிபாட்டு முறையை விளக்கி 'உண்மைஒலி' இதழில் 'தெய்வங்களும் வழிபாடுகளும் உலகக் கடவுள்கள்' என்னும் கட்டுரை வெளியாகியுள்ளது. இந்நாடுகளில் தெய்வங்களை வழிபடும் போது, நரபலி கொடுத்துள்ளனர்.

"நரபலி கொடுப்பதை அக்கால மக்கள் முக்கிய வழிபாட்டு முறையாகக் கருதினர். கோவில்களைப் பிரதிஷ்டை செய்யும் நாளில் நரபலி கொடுக்கும் வழிபாடுகளிளெல்லாம் சிறப்புடையதாயிற்று. நரபலி கொடுக்கும் போது மனிதனைக் கொலை செய்து அவனது இருதயத்தை எடுத்துக் கடவுள் சிலை மீது பிழிந்து விட்டு வழிபாடு நடைபெறும். உடல்வெளியே எறியப்பட்டு விடும். மழை தெய்வத்தை வழிபடும் போது அக்கடவுள் வழிபாடு துவங்கு முன் ஆண்களையும் இளம் பெண்களையும் தெரிவு செய்து அவர்களை மிக ஆழமான குளங்களில் எறிந்து விடுவது வழக்கம். இவ்வாறு பெண்களும் ஆண்களும் உயிர் துறக்கும் போது மழை தெய்வம் அமைதியடைந்து தேவையான மழையை மக்களுக்குக் கொடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது".[213]. இவ்வாறு பல சமய நம்பிக்கைகளையும் பல தெய்வ வழிபாட்டு முறைகளையும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வலியுறுத்தியுள்ளன.

iv.பல்சமய நம்பிக்கை:

'விண்ணரசு' இதழ் பல்சமய நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் கடவுளின் பிள்ளைகளே என்னும் கருத்தினை வலியுறுத்துகின்றது. "கிறிஸ்தவர்கள் மட்டுமே கடவுளின் பிள்ளைகள் இந்து, இசுலாமியர்கள் அனைவரும் பேயின் பிள்ளைகள் எனச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அறிவிலிகள் மட்டுமல்லாது தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டிருக்கிறவர்கள், எல்லா ஜனத்துக்கும் தந்தையாம் கடவுள் ஒருவரே என்பதை எல்லா சமயங்களும் வலியுறுத்துகின்றன. உலகனைத்தும் அந்த ஒரே கடவுளின் படைப்பு என்பது நமது முன்னோர்களின் விசுவாச அறிக்கை. கிறிஸ்து இயேசு வழியாக நாம் கடவுளை அறிவதைப் போல இராமர் வழியாக இந்துக்களும், நபிநாயகம் வழியாக இசுலாமியர்களும் அந்த ஒரே கடவுளை அறிகின்றனர், வழிபடுகின்றனர். அதை ஒப்புக் கொள்ளவும், அவர்களை மதிக்கவும் நமக்கேன் தயக்கம் ? ".[214] எனப்பல் சமய நம்பிக்கையை 'விண்ணரசு' இதழ் வலியுறுத்துவதைக் காணலாம்.

v.பன்மை நிலை:

இந்தியா போன்ற பல் சமயத்தவர் வாழ்கின்ற நாட்டில் மத நல்லிணக்கம் பேணப்படுவது அவசியம். 'விண்ணரசு' இதழில் வெளி வந்துள்ள 'பன்மை நிலையும் சமய சுதந்திரமும்' என்னும் தொடர் கட்டுரை இதனைச் சுட்டுகின்றது. மேலும் 'விண்ணரசு' இதழில் வெளிவந்துள்ள "ஓரிறைக் கோட்பாடு உண்மையா?"[215] என்னும் கட்டுரை, பல்சமயச் சூழ்நிலையில் இந்தியாவில் ஓரிறைக் கோட்பாடு சாத்தியமன்று

என்பதைத் தெளிவு படுத்துகின்றது.இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் பொதுவாக இறை பக்தியை வலியுறுத்தி வந்திருப்பதைக் காணலாம்.

17. வருமானத்தைப் பெருக்குதல் :

பொது நிலையில் உள்ள மக்கள் தங்கள் குடும்பப் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் தேனீ வளர்த்தல், சுய தொழில் குமரி மாவட்டத்தில் வளர்ந்து வருகின்ற தொழில்கள், தொழிற்கல்வி ஆகிய பயனுள்ள தகவல்களையும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் பரவலாக வெளியிட்டிருப்பதைக் காணலாம். இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் செய்திகளை எடுத்துக் காட்டலாம்.

i. தேனீ வளர்ப்பு:

'ஏழையின் குமுறல் ', இதழில் 'தேனீ வளர்ப்பு ஓர் பாதிப்பு' என்னும் பயனுள்ள கட்டுரை வெளியாகியுள்ளது. குமரி மாவட்டத்தில் தேனீ வளர்த்தல் மக்களின் முக்கியத் தொழிலாகும். அத்தொழில் 1993 ஆம் ஆண்டில் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1991 இறுதியில் கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் அடையாளம் தெரியாத ஒரு வகை நோயின் தாக்குதலால் தேனீ குடும்பங்கள் அழியத் தொடங்கின. ஆராய்ச்சியில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேனீக்கள் மீது தாக்குதல் தொடுத்துள்ளது, புது வகை வைரஸ் நோய்க்கிருமி என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவிலேயே இத்தகைய நோய் புதிதாக உள்ளது. இதனை ஒழிக்க தற்போது உள்ள மருந்துகளால் முடியாது. எனவே பல்கலைக் கழகம் சென்று விரிவாக

ஆராய்ச்சி செய்வது புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் எனப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறிச் சென்றனர்".[216] இதன் முக்கியத்துவத்தை 'ஏழையின் குமுறல் ' இதழ் கோடிட்டுக் காட்டியிருப்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

ii.குமரியில் தொழில் வளர்ச்சி:

'சமுதாயச் சிந்தனை' இதழில் இளந்தோட்டம் சுகுமாரன் "குமரி நாட்டில் தொழில் வளர்ச்சி" என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரை வினா-விடை வடிவில் அமைந்துள்ளது. அக்கட்டுரையில்,

"நீர் வளமும் நில வளமும் நிரம்பப்பெற்ற குமரி மாவட்டத்தில், தொழில் வளம் பெறுவதில் தயக்கமான ஒரு சூழ்நிலை தான் காணப்படுகிறது. தமிழகத்தில் மக்கள் அடர்த்தி மிகுதியான இம் மாவட்டத்தில் மக்களின் பெருவாரியான தொழில் 'கல்வி' என்றுதான் கூற வேண்டும். கல்வியறிவில் தன்னிறைவு பெற்றிட்ட இம்மாவட்டத்தில் தொழில் என்ற பொருளுடன் காண்கின் மருத்துவத் தொழில் மட்டும் தான் வளர்ச்சியடைந்துள்ளது. நோயாளிகளின் பெருக்கத்தால் இச்சேவைத்தொழில் பிற மாவட்டங்களை விட பெரும்வளர்ச்சியை இங்கு கண்டுள்ளது. இதனால் ஏராளமானவர்களுக்குப் பணிகளும் கிடைத்துள்ளன."[217]

என மருத்துவத் தொழிலின் வளர்ச்சியைச் சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பிற தொழில்களும் இம்மாவட்டத்தில் வளர வேண்டும் என்னும் செய்தியும் சிந்தனைக்குரியதாகும்.

iii.வேளாண்மைத் தொழில் :

வேளாண்மைத் தொழில்களையும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் ஊக்குவித்துள்ளன. சான்றாக 'உண்மை ஒலி' இதழில் இடம் பெற்றுள்ள "விவசாயம் " என்னும் பகுதி வேளாண்மைத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதைக் குறிப்பிடலாம். "வறட்சியிலும் வாழ்வளிக்கும் புளிய மரம் " [218] என்ற கட்டுரை, புளிய மரம் பயிரிடும் முறையையும், அது தரும் பயன்களையும் பயனுள்ள வகையில் எடுத்துக் காட்டியுள்ளது.

iv.சிறுதொழில்கள் :

சிறுதொழில்களின் வளர்ச்சி, அதன் முக்கியத்துவம், பொருளாதாரப்பயன் ஆகியன குறித்தும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. "வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கப் பல வழிகள் உள்ளன. அவற்றில் சுய தொழில் செய்வது ஒரு சிறந்த வழியாகும். நம் உழைப்புக்கு ஏற்ற வருவாய் ஈட்ட முடியும். படிப்படியாக முன்னேறி ஒரு சிறந்த தொழில் அதிபராகலாம். வரலாற்றில் இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. நம் சமுதாயம் சுய தொழில் செய்வதிலும் பின் தங்கியுள்ளது. இதனால் பொருளாதார நிலையில் முன்னேற்றமடைய முடியவில்லை".[219]. இதனை மனங்கொண்டு 'உண்மை ஒலி' இதழ் கே. ஆர். எஸ் சுகுமாரின் 'தொழில் செய்வீர ' வளம் பெறுவீர என்னும் தொடர் கட்டுரையை வெளியிட்டிருக்கின்றது. இக்கட்டுரையில் சுய

தொழில் செய்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள தகவல்கள் உள்ளன.

v. சொட்டு நீலம் தயாரிக்கும் முறை:

'உண்மை ஒலி' இதழ் சொட்டு நீலம் தயாரிக்கும் முறை, தேவையானப் பொருட்கள், செய்முறை ஆகியனவற்றை விளக்கியும் செய்தியை வெளியிட்டுள்ளது".[220] ஒவ்வொரு இதழிலும் ஒரு தொழிலைப்பற்றிய செயல்முறை விளக்கத்தினை வெளியிட்டிருக்கின்றது.

vi. முந்திரிப் பருப்பின் மதிப்பு:

'உண்மை ஒலி' இதழ் "தரிசு நிலத்தில் தங்கம் பெறுவது எப்படி? "[221] என்னும் கட்டுரையில், முந்திரிப்பருப்பின் மதிப்பு, பணப்பயிர் இரகங்கள், நடும்முறை, உரமிடல், பயிர் பாதுகாப்பு ஆகியனவற்றைத் தெளிவாக விளக்கியுள்ளது. "கொசுவத்திச்சுருள், கொசுவத்தி வில்லைகள், கொசு விரட்டித் தைலம் ஆகியன தயாரிக்கும் முறைகள் பற்றியும் 'உண்மை ஒலி' இதழில் செய்திகள் வெளியாகியுள்ளன".[222]. இவ்வாறு சுய தொழில்களை வலியுறுத்தியும் கிறிஸ்தவ இதழ்களில் செய்திகள் வெளிவந்திருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

vii.ஊனமுற்றோர் தொழில்கள் :

'விண்ணரசு' இதழின் ஆசிரியர் டி. மத்தியாஸ் 'கைகளால் பேசுகின்றோம்' என்ற தலையங்கத்தில் ஊமைகளின் தொழில் திறமைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். "வாய் பேச முடியாமல் ஊமைகளாய்ப் பிறந்த குழந்தைகளின் இல்லம் ஒன்றைப் பார்வையிட்டேன். அங்கே இருபால் மாணவ மாணவியர் ஐந்து வயது முதல் சுமார் 20 வயது வரைத் தங்கி ஏட்டுக் கல்வியும், தொழிற்கல்வியும் பெறுகின்றனர். கற்பதும், கற்றுக்கொடுப்பதும் கைகளின் சைகைகளினால் மட்டுமே. இவர்களில் சிலர் தையல் கலையைக் கற்று வருகின்றனர். வேறுசிலர் மண்பாண்டங்கள் செய்கின்றனர். புத்தகங்கள் கட்டுதல், அச்சுக் கோர்த்தல், செருப்புத் தைத்தல், சலவைத் தொழில் ஆகிய அனைத்துத் தொழில்களையும் நேர்த்தியாகக் கற்றுத் திறம்படச் செய்து வருகின்றனர் ". [223] எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் 'செய்யும் தொழிலே தெய்வம் ' என்பதற்கு இலக்கணமாகத் திகழ்கின்றனர்.

viii.தொழிற்கல்வி:

'நம்வாழ்வு, இதழில் "வாழ சில வழிகள். மாணவரே, தொழிற்கல்வி தேடுபவரா நீங்கள்"[224] என்னும் கட்டுரை வெளியாகியுள்ளது. அக்கட்டுரை கலைத்தொழில் பட்டப்படிப்பு, கட்டிடக் கலை, - சிற்பக் கலை பட்டப்படிப்பு, தொழிற் பயிற்சி நிலையங்கள், மருந்தாளுநர் பட்டயப் படிப்பு ஆகிய பயனுள்ள தொழிற்கல்விகளைப் பயிலுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டியுள்ளது. 'தென் ஒலி' இதழிலும் சுயதொழில் கற்றுக் கொள்வோம் '

என்னும் தொடர் கட்டுரை வெளியாகியுள்ளது. அக்கட்டுரை சுய தொழில் செய்பவர்களுக்கு ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வாழ்க்கையில் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் பயனுள்ள செய்திகளை வெளியிட்டிருப்பது சிந்தனைக்குரியதாகும்.

18. தேவையற்ற செலவுகளைத் தவிர்த்தல் :

பொது நிலையினர் தங்கள் வாழ்க்கையில் தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பதற்கும் சிக்கனமாக வாழ்வதற்கும் தேவையான பயனுள்ள தகவல்களையும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வெளியிட்டிருக்கின்றன. இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் செய்திகளை எடுத்துக் காட்டலாம்.

i. சிக்கனம் :

செலவினங்களைத் தவிர்த்து சிக்கனமாக வாழ்வதற்கு 'தேசோபகாரி' இதழ் வழி காட்டியுள்ளது. எந்தப் பொருளை வாங்க வேண்டுமென்றாலும் இப்போது கடன் வாங்குவதற்குரிய வாய்ப்புகள் மிகுதி. மளிகைச் சாமான்கள் வாங்குவது முதல் மாடி வீடு கட்டுவது வரையிலும் கடன் முறையில் நடைபெறுகின்றது. தவணை முறையில் விற்கப்படும் வீட்டு உபயோகப் பொருட்கள் எளிதில் எவரையும் கடனாளி ஆக்கி விடுகின்றது. 'தேசோபகாரி' இதழ். "கடன்பட்டவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை (நீதி:22:7) என்பது பழைய ஏற்பாட்டு ஞானியின் தத்துவம். கடன்படாதிருக்க வேண்டும் என்பதே

கா்த்தா் விரும்பும் காரியம். வரவுக்கு மிஞ்சி செலவு செய்வதால் தான் கடன் பிரச்சினை ஏற்படுகிறது. குடியனும், போஜனப் பிரியனும் தரித்திரராவா்கள். சிற்றின்பப் பிரியன் ஏழையாவான். மதுபானத்தை விரும்புகிறவன். ஐசுவரியவானாவதில்லை என்றெல்லாம் வேதம் நமக்குப் போதிக்கவில்லையா? சிக்கனமாக இருப்பதே வருவாயை அதிகரிக்கும் சிறந்த வழியாகும்"[225] என வாழ்க்கையில் சிக்கனத்தை வலியுறுத்தியுள்ளது.

ii.மாதச் செலவுகள் :

அத்தியாவசியப் பொருட்கள் விலை உயரும் போதெல்லாம் பாதிப்புக்குள்ளாவது நடுத்தர வா்க்கத்தினா் தான் இதனால் பல குடும்பங்களின் மாத பட்ஜெட்டில் துண்டு விழுகின்றது. இதனைத் தவிா்ப்பதற்கு 'நம்வாழ்வு' இதழ் 'வளரும் மாதச் செலவுகளைத் தவிா்ப்பது எப்பிடி? என்னும் கட்டுரையை வெளியிட்டுள்ளது. அக்கட்டுரையில் "தவிா்க்கவே இயலாத திடீா் செலவுகள், பிள்ளைகளின் பள்ளிக் கட்டணம், மருத்துவச் செலவுகள் என்ற பல ரூபங்களில் எந்த நேரத்திலும் வரக்கூடும். எனவே சிக்கனமும் சேமிப்பும் தேவை" [226]. என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் தேவையற்ற செலவுகளைத் தவிா்த்து சிக்கனத்தைக் கையாண்டு, வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் வழிவகைகள் குறித்துப் பயனுள்ள செய்திகள் வெளியாகியிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

19. கொடிய நோய்கள் :

குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் தொழுநோய், புற்றுநோய், இருதய நோய், போலியோ, எய்ட்ஸ், காசநோய், வலிப்பு நோய் போன்ற கொடிய நோய்கள் தோன்றக் காரணங்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள், மருத்துவ முறை, மருந்துகள், மருத்துவமனைகள், நோயாளிகள் படும் துயரங்கள் ஆகியன குறித்தும் பொது நிலையினர் பயன் பெறும் வகையிலும் பல தகவல்களை வெளியிட்டிருக்கின்றன. இதன் மூலம் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களின் மருத்துவப் பணிகளையும், சமுதாயப் பணிகளையும் தெரியலாம். இதற்குச் சான்றுகளாக பின்வரும் செய்திகளை எடுத்துக் காட்டி விளக்கலாம்.

i.காசநோய் :

'தேசோபகாரி' இதழ் 'மருத்துவ'ப் பகுதியில் காச நோய் குறித்த கட்டுரையை எழுதியுள்ளது. "குழந்தைகளில் காசநோய்" என்னும் தலைப்பில் அமைந்துள்ள அக்கட்டுரை இந்நோய் தோன்றக் காரணம், உடலில் பரவும் முறை, பாதிக்கப்படும் உடலுறுப்புகள், நோயுற்ற குழந்தை, நீர்கட்டுதல், மூளைத்தாக்கப்படல், நோய்த்தடுப்பு முறைகள் என விரிவாகக் காசநோயைப் பற்றி விளக்கியுள்ளது. "காச நோய் உலகின் பல பாகங்களில் பரவலாக நிலவும் ஒரு வியாதியாகும். இருபதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் வாழ்க்கைத்தரம் உயர்ந்தாலும், சுற்றுச் சுகாதார நிலையின் முன்னேற்றத்தாலும் மேலை நாடுகளில் இவ்வியாதியுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளது. பொருளாதார நிலையில் பின்

தங்கியுள்ள ஆசியா, தெற்கு அமெரிக்கா, ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் தற்போதும் இவ்வியாதியுள்ள குழந்தைகள் அதிக அளவில் உள்ளனர் " [227]

எனவே இக்கொடிய நோயினைப் பற்றி 'தேசோபகாரி' இதழ் பயனுள்ள தகவல்களைத் தந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ii.எய்ட்ஸ்:

எயிட்ஸ் (AIDS) என்னும் ஆட்கொல்லி நோய் 1970-ஆம் ஆண்டில் மேலைநாடுகளில் பரவத் தொடங்கியது. 1981-இல் இந்நோயும் இதற்குக் காரணமாக எச்.ஐ.வி. வைரஸ் கிருமியும் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் பம்பாய்நகரத்தில் 1984-ஆம் ஆண்டு மே மாதம் முதன் முதலாக எய்ட்ஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நோயாளி அமெரிக்காவில் இருதய அறுவைச் சிகிச்சை செய்துவிட்டு இந்தியா திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1991-இல் உலகம் முழுவதும் 10 மில்லியன் மக்களுக்கு இரத்தத்தில் எச். ஐ.வி வைரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களில் 8000 பேர் இந்தியர். இந்த எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டில் 40 மில்லியனாக உயர்ந்துள்ளது. எனவே இக்கொடிய நோயினை விளக்கிக் குமரிமாவட்டக் கிறித்தவ இதழ்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. [227]

'தேசோபகாரி' இதழ் "எய்ட்ஸ் " என்ற தலைப்பிலும் 'ஏழையின் குமுறல் ' இதழ், "எய்ட்ஸ் - கொடிய நோய் " [228] என்ற தலைப்பிலும் 'உண்மை ஒலி' இதழ் "மருந்தாகும் மாதுளை" [229] (எயிட்ஸ் மருந்து) என்ற

தலைப்பிலும் எய்ட்ஸ் நோய் பற்றிய தகவல்களை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விதழ்களில் எய்ட்ஸ் உண்டாகும் விதம், எய்ட்ஸ் பரவும் முறைகள், எய்ட்ஸின் அறிகுறிகள், நோயை நிர்ணயித்தல், மருத்துவ முறைகள், எய்ட்ஸ் தடுக்கும் முறைகள், எயிட்ஸினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மன நிலை என்ற பொருள்களின் அடிப்படையில் இந்நோயினைப் பற்றிய தகவல்கள், கட்டுரை வடிவில் வெளிவந்திருக்கின்றன. இவ்விதழ்கள் எய்ட்ஸ் நோயினைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளன. இதனைக் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களின் மருத்துவப் பணியாகவும் கருதலாம்.

iii.யானைக் கால் நோய் :

'யானைக்கால்' நோய் தாக்குதலில் முழுமையாகச் சிக்கிக் கொண்டால் பலமிக்க யானையின் கால்களுக்கு நடுவே சிக்கிச்சிதைபடும் கதி தான் ஏற்படும். யானைக் கால் நோய் கொடூர தோற்றத்தை ஏற்படுத்தி இம்சைப்படுத்தும். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கால்கள் யானைக்கால் போன்ற பயங்கரத் தோற்றத்துடன் காணப்படும்.டாக்டர் அமல்ராஜ் "மருத்துவரின் பார்வையில் யானைக் கால் நோய் " என்னும் கட்டுரையை 'வைரம் ' இதழில் எழுதியுள்ளார். அக்கட்டுரையில், "யானைக்கால் நோய் உலகில் 70 நாடுகளில் குறிப்பாக பூமத்திய ரேகை அருகிலுள்ள நாடுகளில் காணப்படுகிறது. உலகில் 10 கோடியே 62 லட்சம் மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகப் புள்ளி விபரம் கூறுகிறது.

அதில் 66.65 சதவீதம் பேர் ஆண்கள். 33.35 சதவீதம் பேர் பெண்கள். இந்தியாவில் மொத்தம் 4 கோடியே 55 லட்சம் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 'பைலேரியாசிஸ்' என்று சொல்லப்படும் யானைக்கால் நோயானது புழுவகையைச் சேர்ந்த ஒரு வகை ஒட்டுண்ணியால் உண்டாக்கப்பட்டு "கியூலக்ஸ்" மற்றும் மன்சோனியா வகை பெண் கொசுக்களால் பரப்பப் படுகிறது. குமரி மாவட்டத்தில் தற்போது புதுக்கடை, இரணியல், நட்டாலம், தலக்குளம், கருங்கல், பள்ளியாடி, மண்டைக்காடு, திருவிதாங்கோடு பகுதிகளில்" இந்நோய் மிக அதிகமாகப் பரவியிருக்கிறது."[230] எனக் குறிப்பிட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். "தேசிய யானைக்கால் நோய் ஒழிப்பு தினம்"[231] பற்றிய செய்தியையும் வைரம் இதழ் வெளியிட்டிருக்கின்றது.

iv.தொழுநோய் :

'ஏழையின் குமுறல்' இதழ், "உலக நாடுகளின் மொத்தத் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை 12 கோடியே 60 லட்சம் ஆகும். இதில் இந்திய தொழுநோயாளிகளின் எண்ணிக்கை 5 கோடியே 90 லட்சம் ஆகும். அதாவது 47 சதவிகிதம் பேர் இந்தியாவில் உள்ளனர். இந்தத் தொழுநோயை ஒடுக்க 490 மாவட்டங்களில் தீவிரத் தொழுநோய் ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது"[232]. என்று இந்தியாவில் தொழுநோயாளிகள் பற்றிய தகவல்களைத் தந்து அந்நோயை ஒழிப்பதற்கு வழிகாட்டுகின்றது.

v. புற்றுநோய் :

மனிதனைத் தாக்கும் நோய்கள் பல. சாதாரண தலைவலி, காய்ச்சல், வயிற்றுவலி, போன்றவற்றிலிருந்து கொடிய நோய்களான நுரையீரல், சயரோகம், மஞ்சட் காமாலை, இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி, இதயவலி, புற்றுநோய் வரை மனிதன் பாதிக்கப்படுகின்ற நிலையினை நாம் காண்கிறோம். 'தேசோபகாரி' இதழ், " புற்றுநோய் " என்னும் கட்டுரையில் "சாதாரணமாகக் காணப்படும் புற்று நோய்கள், கன்னப்புற்று நோய், புற்றுநோயின் சாதாரண அறிகுறிகள், முக்கியப் பரிசோதனைகள், மருத்துவ முறைகள் " [233] ஆகியனவற்றை விரிவாக விளக்கியுள்ளது.

VI. மார்புப்புற்றுநோய் :

'தென் ஒலி' இதழில் சரோஜா 'மார்புப்புற்றுநோய் ' என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். பெண்களுக்குப் புற்றுநோய் மார்புப் பகுதியிலோ அல்லது கர்ப்பப்பையிலோ ஏற்படுகின்றது. "40 வயதுக்கு மேல் உள்ள பெண்கள், குடும்பத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் வாரிசுகள், வயதான காலத்தில் குழந்தை பெற்றோர், குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகளை நீண்ட நாள் உபயோகித்தவர்கள் ஆகிய தாய் மார்களுக்குப் புற்றுநோய் வர வாய்ப்புகள் அதிகம். ஒரு மார்பகம் வழக்கத்திற்கு மாறாகப் பெரிதாக இருக்கும். சில வெடிப்புகள் தோன்றலாம். காம்பு பகுதி உள் அமுங்கி இருக்கலாம். சீழ் கட்டிகள் தோன்றி இருக்கலாம். ஏதாவது திரவக்கசிவு ஏற்படலாம். ஒரு மார்பகத்தில் விட்டு விட்டு வலி ஏற்படலாம் " [234]. என்று பெண்களுக்கு வரும் மார்புப் புற்று நோய் அறிகுறிகளைத் 'தென்ஒலி' இதழ்

சுட்டிக்காட்டியுள்ளது. இவ்வாறு மனித உயிரைக் குடிக்கும் கொடிய நோய்களையும், உயிர்க்கொல்லி நோய்களையும் குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் சமூகப் பணியாகவும், மருத்துவப் பணியாகவும் கருதிப் பரவலாக வெளியிட்டு வந்திருப்பதைக் காணலாம்.

20. வரதட்சணை:

தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களை விடக் குமரி மாவட்டத்தில் வரதட்சணைக் கொடுமைகளும், கொலைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாகக் கிறிஸ்தவ இனத்தவர்களிடம் வரதட்சணைக் கொடுமைகள் மிகுதி. எனவே தான் குமரி மாவட்டத்தில் வெளி வருகின்ற அனைத்துக் கிறிஸ்தவ இதழ்களும் வரதட்சணைக் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுத்து வருகின்றன. இதற்குச் சான்றுகளாகப் பின்வரும் செய்திகளை எடுத்துக்காட்டி விளக்கலாம்.

இந்தியவில் காணப்படும் வரதட்சணை வாங்கும், கொடுக்கும் பழக்கம் ஒரு தீய பாவப் பழக்கமாகும். கடவுள் ஆணையும் பெண்ணையும் சரிசமமாகவும் அவர் சாயலாகவும் படைத்தார். ஒரு ஆண், பெண்ணை விட எவ்விதத்திலும் மதிப்பிலும் அந்தஸ்திலும் உயர்ந்தவர் அல்ல. எனவே ஒரு கிறிஸ்தவன் வரதட்சணை கொடுக்கவோ, வாங்கவோ கூடாது.இப்பழக்கத்தை நாம் எதிர்க்க வேண்டும். இன்றைய அரசியல் சட்டப்படி வரதட்சணையைக் குறித்து பேச்சு வார்த்தை நடத்துவதே சட்ட விரோதமான செயலாகும். வரதட்சணைப் பழக்கம் தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் தானாக யாதொரு நிர்ப்பந்தமும் இல்லாது சுயமாகப் பெண், மணமகனுக்கு நல்ல பரிசு வழங்குவது குற்றமில்லை. நிர்ப்பந்தமும் பேரமும் பேசுவது தவறு. திருமணம்

நடந்தேற ஒரு பெண் ரொக்கம் கொடுத்தாள் என வேதத்தில் எந்தச் சான்றும் கிடையாது.

இதனைத்தேசோபகாரி' இதழ்

"உண்மைக் கிறிஸ்தவத் திருமணம் வேத அடிப்படையில் அமைய வேண்டும்.

அவர்கள் சபையில் அங்கம் வகிக்க வேண்டும். தங்கள் திருமணம் தேவ சித்தம் என அறிந்திருக்க வேண்டும். மண வாழ்வில் தாங்கள் இருவருமே சரிசமம் எனச் சம்மதிக்க வேண்டும். இவ்வித வேத அடிப்படைத் திருமணமே முக்கியம். வரதட்சணைக் கலாச்சாரம் தீய பாவச் செயல். "[235]

எனக் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து வரதட்சணை திருமறைக்கு எதிரான பாவச் செயல் என்பதை அறியலாம்.

i.மாமியார் கொடுமை:

இன்றைய வரதட்சணையால் சமுதாயத்தில் ஏற்படும் கொடுமைகள் எண்ணற்றவை. மருமகளாகச் செல்பவர்கள் மாமியார், மாமனார் கணவன் ஆகியோர்களால் புகுந்த வீட்டில் கொடுமைப்படுத்தப்பட்டு கொலை செய்யப் படுகின்றார்கள். 'வைரம் ' இதழில் எஸ். ஹெலன் எழுதியுள்ள 'மாமியார் ' நினைத்தால் ஸ்டவ் வெடிக்குமோ? என்னும் கட்டுரையில்,

'உத்திரப்பிரதேசத்திலுள்ள கான்பூர் நகரில் மம்மதா, அலகா, பூனம் ஷரு என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகள் தங்களது பெற்றோரால் வரதட்சணை கொடுக்க முடியாது என்ற நிலையை உணர்ந்து மூவரும் ஒரே நாளில் மின் விசிறியில் தூக்குப் போட்டுத் தங்கள் உயிரை

மாய்த்துக் கொண்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1991இல் 19 வயது நிரம்பிய அனிதா என்ற பெண்ணை விரும்பி மணந்த ஜேம்ஸ், திருமணமான மூன்றாம் மாதம் கொடுமைப்படுத்திக் கொன்றான். இன்று வரதட்சணை என்பது நடுத்தர மக்களை அதிகம் பாதிக்கும் ஒரு பெரிய பிரச்சினை. 1975 முதல் 1985 வரையிலான 10 ஆண்டுகளில் பதிவாக்கப்பட்ட வரதட்சணைச் சாவுகள் பின்வருமாறு:

1. வரதட்சணைப் பாக்கித் தொல்லையால் தற்கொலை செய்தவர்கள் 4769.
2. வரதட்சணைப் பாக்கிக்காகச் சேலையில் தீப்பிடித்து இறந்தவர்கள் - 6414
3. வரதட்சணைப் பாக்கிக்காக சித்திரவதை செய்யப்பட்டவர்கள் - 2514. "[236]

எனச் சுட்டிக்காட்டியிருப்பது வரதட்சணைக் கொடுமையின் சமுதாயப் பாதிப்பினைக் காட்டுவதாகும்.

ii.வரதட்சணைக் கொலைகள் :

'ஏழையின் குமுறல் ' இதழில் 'உண்மை நிகழ்ச்சி 'என்ற தலைப்பில் குமரியில் வரதட்சணைக் கொலைகள், கொடுமைகள் பற்றிய செய்திகள் இதழ்தோறும் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். குமரி மாவட்டக் கிறிஸ்தவர்களிடம் வரதட்சணைக் கொலைகள் தொடர் கதையாக நடைபெற்றுக் கொண்டிருப்பது மிகுந்த வேதனைக்குரிய செயலாகும். "இளம் பெண் படுகொலை உயிருக்கு உலை வைத்த வரதட்சணை " [237]"கிணற்றில் மிதந்தாள் " [238] "தொடர்கின்ற கொடூரம் "[239]" தொடரும் கொலைகள் "[240] என்னும் தலைப்புக்களில் குமரி மாவட்டத்தில் நடந்த வரதட்சணைக் கொலைகளை ஏழையின் குமுறல் இதழ் வெளிப்படுத்தியுள்ளது.

'யுகச் சிற்பி', இதழில் வெள்ள மடம் ஷீபா 'அன்புள்ள அம்மா' என்னும் கவிதையை எழுதியுள்ளார்!

"அன்புள்ள அம்மா!

ஆட்டையும் மாட்டையும் வித்து

நீ தந்த மாங்கல்யம்

நலமாயிருக்கிறது

சிலுசிலுக்கிற காத்து

உடம்புக்கு ஆகாதென்று

உன்

முந்தானையில் மூடி வளர்த்த

நான் நலமாயில்லை

கிழக்கு வீடும்

மேற்கு வயலும் கூட

வரதட்சணையாய் வேண்டுமாம் .

உன் கணவனிடம்

அழுதழுது நீ

நின்ற கோலத்தில் தான்

இப்பொழுது நானும் !!

தீயின் நாக்குகள் எனைத்

தீண்டுவதற்குள்

தட்சணையாய் ஏதேனும்

அனுப்பிவை அம்மா

அடுத்த முறை

அனுப்புவதற்கும் ஏதேனும்

வைத்துக் கொண்டு " [241]

மடல் வடிவில் அமைந்துள்ள இக்கவிதை பெண்களின் வாழ்க்கையில் தொடர் கதையாகி விட்ட வரதட்சணைக் கொடுமையைச் சுட்டிக் காட்டுகின்றது.

iii.வரதட்சணை - சிக்கல்களும் தீர்வுகளும் :

மணமகன் வரதட்சனை வாங்குவதற்கு சமூக ஏற்றத் தாழ்வுகளும், பொருளாதாரச் சிக்கல்களும் அடிப்படைக் காரணங்களாக இருப்பினும் - தற்பொழுது வரதட்சணை ஒரு ஆடம்பரமாக மாறியிருப்பது வேதனைக்குரியதாகும். வாழ்க்கையில் மற்றவர்களின் வசதிகளைக் கண்டு தாமும் அவ்விதமாக வாழ ஆசைப்படுவதும், அரசு ஊழியர், உயர் பதவியில் இருப்பவர்களை தம் மக்களுக்கு மணமுடிக்க விரும்புவதும் நகரங்களில் வரதட்சணைப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாகும். விண்ணரசு இதழில் "வாழ்வியல் பிரச்சினைகள் - 1. வரதட்சணை சிக்கல்களும் தீர்வுகளும் " என்னும் கட்டுரையை ஆ. ஸ்டான்லி ஜோசப் சமுதாயப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் எழுதியுள்ளார். அக்கட்டுரையில்,

1. "உழைப்பையும் நாணயமான வாழ்க்கையையும் பெரிதென மதிக்கின்ற மணமகனுக்கு மணமுடித்துத் தருகின்ற நிலை பெற்றோருடைய இயல்பாகிட வேண்டும்.
2. திருமண வாழ்க்கைக்குத் தேவை மகிழ்ச்சியும் மன அமைதியுமே வாழ்வின் அடிப்படை எனப் பெற்றோர் புரிதல் வேண்டும்.

3. வரதட்சணை வாங்க மறுத்தால் மணமகனுக்குத் தீராத வியாதியோ என்ற தேவையற்ற பயங்களை நீக்கி நல்ல மனமுள்ள மணமகனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

4. பணம் ஒன்று தான் இல்லறத்தின் குறியீடாகக் கருதாமல், ஒழுக்கம், ஒருவரையொருவர் புரிந்து வாழ்தல், மன்னித்தல், விட்டுக்கொடுத்தல் ஆகிய நற்பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் ".[242] ஆகியனவற்றை வரதட்சணை ஒழிப்பிற்குத் தீர்வாகச் சுட்டிக் காட்டி உள்ளது. வரதட்சணை வாங்கிட தடைச் சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டாலும் வரதட்சணைக் கொடுமைகள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இவ்வாறு குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்கள் வரதட்சணைக் கொடுமைகளையும், கொலைகளையும் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

தொகுப்புரை:

1. குமரி மாவட்டக் கிறிஸ்தவ இதழ்களில் கவிதைகள், கட்டுரைகள், இசையோடு கூடிய பாடல்கள், தொடர் கட்டுரைகள், இறையியல், இறைபக்தி தொடர்பான ஆன்மீகச் செய்திகள், சிறுகதைகள், மினி கதைகள், குட்டிக் கதைகள், தொடர் கதைகள், சிறுவர் பகுதி, மாதர் பகுதி, உலகச் செய்திகள், நாட்டு நடப்புச் செய்திகள் ஆகியன உள்ளடக்கங்களாக இடம் பெற்றுள்ளன. பெரும்பாலான இதழ்கள் கட்டுரை வடிவிலேயே செய்திகளை உணர்த்துகின்றன. இந்த

அடிப்படையில் கிறிஸ்தவ இதழ்களின் சமுதாயத் தாக்கங்களும் சமூகப் பணிகளும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

2. கிறிஸ்தவ இதழ்கள் சமயப் பணிகளில் ஒன்றாக சமுதாயப் பணியைக் கருதியுள்ளன. சமயமும் சமுதாயமும் பின்னிப் பிணைந்துள்ள நிலையினையே இவ்விதழ்களின் உள்ளடக்கப் பகுதிகள் அமைந்துள்ளன.

3. 'இளந்தளிர் ' இதழ் குழந்தைகளுக்கான நல்லொழுக்கம், பண்பு, அறநெறி ஆகியனவற்றைப் போதித்துள்ளது. ஏனைய இதழ்களிலும் குழந்தைகளுக்கான செய்திகள் வெளியாகியுள்ளன. சான்றாக - 'தேசோபகாரி 'இதழில் சிறுவர் பகுதியும்' பூவும் பிஞ்சும் என்னும் பகுதியும், 'உண்மை ஒலி' இதழில் சிறுவர் பகுதியும் இடம் பெற்றிருப்பதைக் குறிப்பிடலாம்.

4. 'இளந்தளிர் ' இதழினைப் போன்று 'பள்ளத்தாக்கின் லீலி' சிறியோர்களாகிய சிறுவர்களுக்குப் பயனுள்ள பல்வேறு வேத அறிவுப் போட்டிகளையும் பொது அறிவுப் போட்டிகளையும் நடத்தியுள்ளது.

5. கிறிஸ்தவ இதழ்கள் இளைஞர்களின் ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிப்படுத்தியுள்ளன. அவர்களின் போதை, புகை, மதுப்பழக்கங்களைக் கடுமையாகச் சாடி, நல்வாழ்வுக்கு வழிகாட்டியுள்ளன. கிறிஸ்தவ நெறியில் இளைஞர்களுக்குக் குறிக்கோள் வாழ்க்கையை அடையாளம் காட்டியுள்ளன.

6. கிறிஸ்தவ இதழ்கள் பெண்களின் பல்வேறு பிரச்சினைகளையும் அலசி ஆராய்ந்துள்ளன. இன்றைய இளம்பெண்கள் சந்திக்கும் சவால்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளன. பெண்ணடிமைத்தனத்தைச் சாடி

பெண்ணுரிமையையும் பெண்கல்வியையும் வலியுறுத்தியுள்ளன. பெண்களின் நற்பண்புகளைப் போற்றி தீய பண்புகளையும் ஒழுக்கங்களையும் சாடியுள்ளன.

7. முதியோர் பிரச்சினைகளை உளவியல் நோக்கில் அலசி ஆராய்ந்து, மனித நேயத்துடன் அவர்கள் பிரச்சினைகளை அணுகியுள்ளன. விதவைகள் துயரினை உணர்ந்து விதவைகளுக்கு உதவுவதிலும் விதவை நல்வாழ்வுத் திட்டங்களை ஏற்படுத்திச் சமூகப் பணி செய்வதிலும் கிறிஸ்தவ இதழ்கள் முன் நிற்கின்றன.

8. கிறிஸ்தவ சமயம் சார்ந்த இறையியல், இறைபக்தி, செபம், விசுவாசம், மன்றாட்டு ஆகிய ஆன்மீகச் செய்திகளுக்கு கிறித்தவ இதழ்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

9. இன்றைய சமுதாய - சமய ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கும் வகுப்புவாத ஆதிக்கச் சக்திகளான சாதி – வெறி, மதவெறி, தீவிரவாதம், ஆகியவற்றைக் கிறித்தவ இதழ்கள் வன்மையாகச் சாடியுள்ளன. சாதி வெறி மத வெறி, தீவிரவாதம் ஆகியனவற்றிற்குத் தீர்வாக மனித நேயத்தையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளன.

10. போதை, புகை போன்ற தீய பழக்கங்களை ஒழித்து நல்லொழுக்கம் பேணுவதற்குக் கிறிஸ்தவ இதழ்கள் வழிகாட்டுகின்றன. விபச்சாரத்தைத் தடுப்பதற்கும் கிறிஸ்தவ இதழ்கள் வழிகாட்டியுள்ளன. பெண்கள் மீதான பாலியல் பலாத்காரத்தை கிறிஸ்தவ இதழ்கள் வன்மையாகச் சாடியுள்ளன.

11. கிறிஸ்தவ இதழ்கள் பொதுவாக இறை பக்தியை வலியுறுத்துகின்றன. பல்சமயச் சிந்தனையில் மத நல்லிணக்கத்தை வளர்க்கவும் சமுகங்களுக்கிடையே உறவுகளைப் பலப்படுத்தவும் கிறித்தவ இதழ்கள் முன் நிற்கின்றன. தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து, வாழ்க்கையில் வருமானத்தைப் பெருக்கவும் பொது நிலையினருக்கு வழிகாட்டியுள்ளன. கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் இதழ்கள் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் உதவிகளையும் புரிந்து வருகின்றன. வரதட்சணைக் கொடுமைகளையும், கொலைகளையும் சாடியுள்ளன. மாணவர்களின் கல்விப் பணியிலும் இளைஞர்களின் முன்னேற்றத்திலும் தனிக் கவனம் செலுத்தியுள்ளன.

அடிக்குறிப்புகள் :

1. கோபாலகிருஷ்ணக்கோன், இ.மா., தமிழ்ப்பேரகராதி, ப. 682.
2. Narayanaswami Iyer, R., Tamil Lexicon, P.1392-A .
3. Beale, The Random House Dictionary of the English Language, P.1351.
4. Linton Ralph, The Study of Man, P.125.
5. May Hew Leon, H., The International Encyclopaedia, P. 578.
6. திருநாவுக்கரசு , க.த.,தமிழ்ச் சமுதாயத்தின் தோற்றம், ப.6.
7. நம்வாழ்வு, 25-05-1997, ப . 5.
8. விண்ணரசு, மே, ஜூன் 1994, ப . 2.
9. இளந்தளிர், நவம்பர், டிசம்பர் 1997, ப . .

10. மேலது, ஜீலை, ஆகஸ்ட் 1998, ப . 3.

11. மேலது, நவம்பர், டிசம்பர் 1998, பக். 13-17.

12. மேலது, மார்ச், ஏப்ரல் 1999, ப . 8.

13. மேலது, செப்டம்பர், அக்டோபர் 1998, பக். 3-13.

14. மேலது, ஜனவரி, பிப்ரவரி 1998, ப . 2

15. மேலது, பக். 5,6.

16. மேலது, ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 2000, பக். 2,3.

17. மேலது, ஏப்ரல், மே, ஜீன் 2000, பக். 2,3.

18. மேலது, அக்டோபர், நவம்பர், டிசம்பர் 2000, பக். 2,3.

19. மேலது, ப . 5.

20. மேலது, மார்ச், ஏப்ரல் 1999, பக். 28-30.

21. மேலது, நவம்பர், டிசம்பர் 1999, ப . 86.

22. மேலது, மார்ச், ஏப்ரல் 1999, ப . 21.

23. மேலது, நவம்பர், டிசம்பர் 1999, ப. 86.

24. மேலது, மார்ச், ஏப்ரல் 1999, ப . 21.

25. மேலது, ப . 31.

26. மேலது, நவம்பர், டிசம்பர் 1999, ப. 86.

27. மேலது, ப . 87.

28. மேலது, மார்ச், ஏப்ரல் 1999, ப . 19.

29. மேலது, நவம்பர், டிசம்பர் 1999, ப. 96.

30. மேலது, ஜீலை, ஆகஸ்ட் , செப்டம்பர் 2000, ப . 20.

31. மேலது, ப. 21.

32. மேலது, ப . 23.

33. மேலது, மார்ச், ஏப்ரல் 1999, ப . 31.

34. பள்ளத்தாக்கின் லீலி, ஜீன் 1997, ப . 5.

35. மேலது, மார்ச் 1997, ப . 27.

36. மேலது, செப்டம்பர் 2000, பக். 4,8.

37. பள்ளத்தாக்கின் லீலி 75-வது சிறப்பு மலர், ப. 21.

38. பள்ளத்தாக்கின் லீலி, செப்டம்பர் 1997, பக் . 11,12.

39. மேலது, பக். 16-18.

40. மேலது, மே 1998,ப.17.

41. மேலது, டிசம்பர் 1997, பக். 1,2.

42. மேலது, பக். 10,11.

43. மேலது, மே 1999, பக். 16,17.

44. மேலது, ஆகஸ்ட் 1999, ப . 20.

45. மேலது, ப . 20.

46. தேசோபகாரி, நவம்பர் 1993, ப . 10.

47. மேலது, நவம்பர் 1993, ப . 10.

48. மேலது, பக். 11,12.

49. மேலது, ப . 11.

50. மேலது, ப . 12.

51. வைரம், பிப்ரவரி, மார்ச் 1997, ப . 13.

52. மேலது, அக்டோபர், நவம்பர் 2000, ப . 25.

53. மேலது, டிசம்பர் 2000, ப . 23.

54. ஏழையின் குமுறல், ஜீலை 1993, பக். 20,21.

55. விடியலை நோக்கி, நவம்பர், டிசம்பர் 1997, ப . 4.

56. யுகச்சிற்பி, நவம்பர், டிசம்பர் 1997, ப . 5.

57. மேலது, ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 1997, ப . 12.

58. மேலது, ஜீலை, ஆகஸ்ட் 1996, பக். 26, 29.

59. மேலது, ஜனவரி, பிப்ரவரி 1996, ப . 10.

60. மேலது, மார்ச், ஏப்ரல் 1998, பக். 22-26.

61. மேலது, ஜுலை, ஆகஸ்ட் 1999, பக். 34,35.

62. மேலது, ஜனவரி 2000, பக். 3,5.

63. உண்மைஒலி, பிப்ரவரி 1998, ப . 15.

64. விண்ணரசு, பிப்ரவரி, மார்ச் 1996, பக். 3, 4.

65. தென்ஒலி, அக்டோபர் 1992, ப . 9.

66. நம் வாழ்வு, 09-08-1998, ப. 13.

67. தேசோபகாரி, டிசம்பர் 1991, ப . 61.

68. மேலது, ஜனவரி 1994, பக். 17,18.

69. மேலது, பக். 18,19.

70. மேலது, பிப்ரவரி 1993, பக். 53,55.

71. மேலது, பிப்ரவரி 1993, பக். 57,58.

72. மேலது, பிப்ரவரி 1993, ப . 21.

73. மேலது, ப . 22.

74. மேலது, மார்ச் 2000, பக். 14,15.

75. மேலது, ஜீலை 2000, ப . 12.

76. மேலது, ப . 13.

77. வைரம், பிப்ரவரி, மார்ச் 1995, ப . 8.

78. மேலது, ப . 8.

79. மேலது, ஏப்ரல் 2000, ப . 8.

80. மேலது, பிப்ரவரி, மார்ச் 1997, ப . 3.

81. மேலது, டிசம்பர் 2000, ப . 17.

82. ஏழையின் குமுறல், அக்டோபர் 1991, ப . 13.

83. மேலது, மார்ச், ஏப்ரல் 1993, ப . 8.

84. விடியலை நோக்கி, ஏப்ரல் 1993, பக். 5,6.

85. மேலது, பிப்ரவரி, மார்ச் 1997, பக். 5,6.

86. யுகச்சிற்பி, ஜுலை, ஆகஸ்ட் 1996, ப . 8.

87. மேலது, ஆகஸ்ட் 2000, ப . 24.

88. மேலது, மார்ச் 2000, (அட்டைக் கவிதை),

89. மேலது, மார்ச் 2000, ப . 4.

90. மேலது, ப . 5.

91. சமுதாயச் சிந்தனை, ஜுலை 2000, ப . 17.

92. திருச்சபையில் புது மலர்ச்சி, ஜனவரி 1999, ப . 10.

93. மேலது, நவம்பர் 1998, பக். 10,11.

94. மேலது, ஜுலை 1998, ப . 4.

95. விண்ணரசு, டிசம்பர் 1995, ஜனவரி 1996, ப . 7.

96. தென்ஒலி, மார்ச் 1993, பக். 5-20.

97. மேலது, மார்ச் 1995, ப . 11.

98. மேலது, ஏப்ரல் 1997, பக். 7-9.

99. மேலது, ஆகஸ்ட் 1998, பக். 21,22.

100. மேலது, பிப்ரவரி 2000, ப . 14.

101. மேலது, மார்ச் 1998, பக். 15, 16.

102. மேலது, மார்ச் 1999, பக். 5-7.

103. நம்வாழ்வு, 26-01-1992, ப . 6.

104. மேலது, 19-04-1998, ப . 16.

105. தேசோபகாரி, ஜனவரி 1999, பக். 25,26.

106. மேலது, நவம்பர் 1994, ப . 7.

107. வைரம், ஆகஸ்ட் 1998, ப . 4.

108. உண்மைஒலி, ஜுன் 1998, ப . 21.

109. அருட்பணிமலர், நவம்பர் 1994, ப . 6.

110. நம்வாழ்வு, 21-11-1993, ப . 4.

111. தேசோபகாரி, அக்டோபர் 1999, ப . 16.

112. விண்ணரசு, ஜனவரி, பிப்ரவரி 1997, ப . 10.

113. மேலது, டிசம்பர் 1995, ஜனவரி 1996, பக். 7,8.

114. வைரம், ஆகஸ்ட் 1998, பக். 13-15.

115. ஏழையின் குமுறல், மார்ச், ஏப்ரல் 1993, ப . 8.

116. தேசோபகாரி, அக்டோபர் 1993, பக். 13,14.

117. மேலது, அக்டோபர் 1993, ப . 26.

118. மேலது, அக்டோபர் 2000, பக். 4,5.

119. சமுதாயச்சிந்தனை, ஆகஸ்ட் 1997, ப . 3.

120. மறைநெறி, ஜனவரி 1992, ப . 14.

121. அருட்பணிமலர், செப்டம்பர் 2000, பக். 19,20.

122. மேலது, செப்டம்பர் 2000, ப . 3.

123. மேலது, நவம்பர் 1992, பக். 7,8.

124. வருகையின் தூதன், மார்ச் 1991, ப . 6.

125. மேலது, மே 1993, ப . 1.

126. மேலது, ஜனவரி 1998, ப . 1

127. சுவிசேஷ நண்பன், ஏப்ரல் 1992, பக். 7,8.

128. மேலது, ஆகஸ்ட் 1995, ப . 3.

129. மேலது, மே 1999, பக். 3,4.

130. விண்ணரசு, ஆகஸ்ட், செப்டம்பர் 1995, பக். 3,4.

131. திருச்சபையில் புது மலர்ச்சி, அக்டோபர் 1999, ப . 8.

132. அருங்கொடை, ஜுன் 1992, ப . 6.

133. மேலது, பிப்ரவரி 1993, ப . 2.

134. மேலது, மே 1999, பக் . 48-54.

135. கழக வெளியீடு, திருக்குறள் :6

136. Viyas, K.C., The Social Renaissance in India, P. 12.

137. சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப . 42.

138. Radhakrishnan, S., Religion and culture, Pp. 11,12.

139. கில்பர்ட் பாஸ்கல், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் ப . 456.

140. Ghurge, G.S., Caste and Religion in India, p. 17.

141. Thangaraj, p., Selected Thoughts of Dr. Ambedkar, P.9.

142. வைரம், நவம்பர் 1999, ப . 9.

143. மேலது, செப்டம்பர் 2000, ப . 8.

144. ஏழையின் குமுறல், பிப்ரவரி 1996 ப . 13.

145. மேலது, மார்ச், ஏப்ரல் 1992, ப . 3.

146. மேலது, டிசம்பர் 1993, ப . 10.

147. மேலது, ஜுன் 1997, ப . 13.

148. விடியலை நோக்கி, மார்ச் 1994, ப . 17.

149. மேலது, ஜனவரி, பிப்ரவரி 1994, பக். 9-11.

150. மேலது, செப்டம்பர் 1997, ப . 13.

151. யுகச்சிற்பி, நவம்பர், டிசம்பர் 1998, பக். 8,9.

152. மேலது, நவம்பர், டிசம்பர் 1998, ப . 16.

153. மேலது, பக். 3,4.

154. விண்ணசை, மே, ஜுன் 1991, பக். 5,6.

155. கீதானந்தன், எல்.ஜி., கலை இலக்கியத்தில் சோஷலிஸ்ட் எதார்த்த வாதம் (கட்டுரைத் தொகுப்பு), ப . 39.

156. Marx, K., Engels, F., collected works, vol.3, P. 174.

157. இங்கர்சால், ராபர்ட், ஜி., நான் சத்தியவாதி ஆனதேன்?, ப . 13.

158. தேசோபகாரி, அக்டோபர் 1998, பக். 15,16.

159. வைரம், டிசம்பர் 2000, ப . 18.

160. ஏழையின் குமுறல், ஜனவரி, டிசம்பர் 1993, பக். 4,9.

161. மேலது, ப . 14.

162. மேலது, பிப்ரவரி 1993, ப . 14.

163. மேலது, செப்டம்பர், அக்டோபர் 1999, பக். 25-27.

164. மேலது, நவம்பர் 2000, ப . 15.

165. விடியலை நோக்கி, பிப்ரவரி 1993, ப . 2.

166. மேலது, செப்டம்பர் 1997, பக். 21,22.

167. யுகச்சிற்பி, ஏப்ரல், மே 1999, ப . 14.

168. மேலது, ஏப்ரல், மே 1999, ப . 20.

169. மேலது, ப . 21.

170. சமுதாயச்சிந்தனை, அக்டோபர் 1999, பக். 20,21.

171. விண்ணரசு, ஜனவரி, பிப்ரவரி 1997, பக். 3,4.

172. மேலது, ஏப்ரல், மே 1998, ப . 8.

173. தேசோபகாரி, ஆகஸ்ட் 1996, ப . 43.

174. மேலது, மார்ச் 1991, பக். 1-3.

175. மேலது, மே 1999, ப . 17.

176. வைரம், ஆகஸ்ட் 2000, ப . 5.

177. ஏழையின் குமுறல், செப்டம்பர், அக்டோபர் 2000, ப . 25.

178. விண்ணரசு, மே, ஜுன் 1991, ப . 2.

179. தென்ஒலி, ஜனவரி 1992, ப . 24.

180. மேலது, மார்ச் 1992. ப . 15.

181. மேலது, மார்ச் 1998, ப . 26.

182. நம்வாழ்வு, 09-08-1998, ப . 10.

183. ஏழையின் குமுறல், பிப்ரவரி 1992, ப . 4.

184. யுகச்சிற்பி, ஜனவரி 1998, ப . 24.

185. மேலது, ப . 27.

186. மேலது, நவம்பர், டிசம்பர் 1997, பக். 21-24.

187. மறைநெறி, செப்டம்பர் 1999, ப . 12.

188. வருகையின் தூதன், ஆகஸ்ட் 1994, ப . 4.

189. நம்வாழ்வு, 13-10-1996, ப . 21.

190. தேசோபகாரி, அக்டோபர் 1998, ப . 31.

191. மேலது, ஜுன் 1992, ப . 34.

192. மேலது, ஜுன் 2000 ப . 11.

193. ஏழையின் குமுறல், ஆகஸ்ட் 1991, ப . 10.

194. யுகச்சிற்பி, ஆகஸ்ட் 1998, ப . 11.

195. திருச்சபையில் புதுமலர்ச்சி, அக்டோபர் 1998, ப . 11.

196. மேலது, ஜுன் 1998, ப . 9.

197. நம்வாழ்வு, 28-08-1994, ப . 13.

198. மேலது, 12-10-1997, பக். 18,19.

199. மேலது, 09-02-1992, ப . 5.

200. தேசோபகாரி, நவம்பர் 1993, ப . 57.

201. ஏழையின் குமுறல், ஜுலை 1995, ப . 3.

202. மேலது, மார்ச் 1996, ப . 9.

203. மேலது, பிப்ரவரி 1997, ப . 15.

204. மேலது, ஏப்ரல் 1999, ப . 10.

205. மேலது, செப்டம்பர் 1991, ப . 3.

206. சமுதாயச்சிந்தனை, மே 1999, ப . 7.

207. தென்ஒலி, நவம்பர் 1998, பக். 5,6.

208. மேலது, பிப்ரவரி 1999, பக். 10,11.

209. மேலது, அக்டோபர் 1999, பக். 10-12.

210. ஏழையின் குமுறல், அக்டோபர் 1997, ப . 4.

211. நம்வாழ்வு, 20, 27-12-1992 & 03-01-1993, ப . 22.

212. விடியலைநோக்கி, ஆகஸ்ட் 1993, பக். 10-12.

213. உண்மைஒலி, பிப்ரவரி 1996, பக் . 7,8.

214. விண்ணரசு, ஏப்ரல், மே 1992, ப . 21.

215. மேலது, மே, ஜுன் 1994, பக். 3,4.

216. ஏழையின் குமுறல், மே 1993, ப . 7.

217. சமுதாயச்சிந்தனை, ஜுன் 1998, ப . 8.

218. உண்மைஒலி, மார்ச் 1997, பக். 23-25.

219. மேலது, ஏப்ரல் 1997, ப . 9.

220. மேலது, ப . 15.

221. மேலது, பக். 19-21.

222. மேலது, ஜுன் 1993, பக். 18,19.

223. விண்ணரசு, ஜனவரி, பிப்ரவரி 1995, ப . 3.

224. நம்வாழ்வு, 06-06-1993, பக். 9,10.

225. தேசோபகாரி, ஏப்ரல் 2000, ப . 17.

226. நம்வாழ்வு, 24-09-1995, ப . 3.

227. தேசோபகாரி, அக்டோபர் 1992, ப . 39.

228. ஏழையின் குமுறல், பிப்ரவரி 1999, ப . 17.

229. உண்மைஒலி, ஆகஸ்ட், செப்டம்பர் 1998, ப . 27.

230. வைரம், பிப்ரவரி, மார்ச் 1997, ப . 14.

231. மேலது, பிப்ரவரி, மார்ச் 1998, ப . 15.

232. ஏழையின் குமுறல், மார்ச், ஏப்ரல் 1997, ப , 14.

233. தேசோபகாரி, பிப்ரவரி 1994, பக். 41-44.

234. தென்ஒலி, ஆகஸ்ட் 1993, ப . 21.

235. தேசோபகாரி, ஜுன் 1997, ப . 21.

236. வைரம், நவம்பர் 1999 ப . 21.

237. ஏழையின் குமுறல், பிப்ரவரி, மார்ச் 1994, பக். 6,7.

238. மேலது, மே, ஜுன் 2000, பக்.3,4.

239. மேலது, செப்டம்பர், அக்டோபர் 2000, பக். 7-9.

240. மேலது, டிசம்பர் 2000, பக். 10,11.

241. புகச்சிற்பி, மார்ச் 2000, (முன் அட்டையின் உட்புறம்).

242. விண்ணரசு, டிசம்பர் 1995, ஜனவரி 1996, ப . 15.